## "லக்ஷ்மி"யின் "பூங்கொடி" வெளியீடுகளில் சில...

| | | |
|---|---|---|
| ஒரு காவிரியைப் போல... (சாகித்ய அகடமி பரிசு பெற்ற நூல்) | 30 | 00 |
| பெண் மனம் (சென்னை அரசாங்கப் பரிசு பெற்ற நூல்) | 21 | 00 |
| மீண்டும் பெண் மனம் | 15 | 00 |
| என் வீடு | 12 | 50 |
| என் மனைவி | 15 | 00 |
| பண்ணையார் மகள் | 26 | 00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே! | 28 | 00 |
| மறுபடியுமா? | 20 | 00 |
| இன்றும் நாளையும் | 19 | 00 |
| காளியின் கண்கள் | 17 | 00 |
| பவளமல்லி | 15 | 50 |
| அதிசயராகம் | 17 | 00 |
| உறவின் குரல் | 12 | 00 |
| மருமகள் | 12 | 50 |
| மீண்டும் ஒரு சீதை | 13 | 00 |
| கழுத்தில் விழுந்த மாலை | 13 | 00 |
| அழகின் ஆராதனை | 18 | 00 |
| பெயர் சொல்லமாட்டேன் | 13 | 50 |
| கங்கையும் வந்தாள் | 30 | 00 |
| அடுத்த வீடு | 40 | 00 |
| அரக்கு மாளிகை | 42 | 00 |
| ஸ்ரீமதி மைதிலி | 34 | 00 |
| உயர்வு | 16 | 00 |
| கோடைமேகங்கள் | 21 | 00 |
| கதாசிரியையின் கதை முதல் பாகம் | 13 | 50 |
| கதாசிரியையின் கதை இரண்டாம் பாகம் | 15 | 00 |
| நீதிக்குக் கைகள் நீளம் | 15 | 00 |
| இரண்டு பெண்கள் | 11 | 50 |
| இவளா என் மகள் | 11 | 00 |
| ராதாவின் திருமணம் | 14 | 00 |

# கதவு திறந்தால்...

இருள்பிரிந்து வெளிச்சம் மிக லேசாகப் பரவிக் கொண்டுவந்த நேரம். சாலையினின்று வண்டி திரும்பி பூரணா அவன்யூவிற்குள் நுழைந்ததுமே மஹிமா ஆச னத்தில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இளஞ் சூரிய ஒளியில் 'சாம்பவி'யின் எழுத்துக்கள் பளிச்சிட்டன பெருமை பொங்கிப் புரள, கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் கேட்டை ஒட்டிய மதில் சுவரின் முகப்பில் பதிக்கப்பட்டிருந்த சலவைக்கல் துண்டை மறுபடியும் பார்த்தாள். 'சாம்பவி'—அந்தப் பெயரைத் தங்கள் வீட் டிற்குச் சூட்டும் ஒரு பொன்னான உரிமையை வசுமதி அவளுக்கு வழங்கி விட்டிருந்தாள்.

"மஹிமா! நீ சொன்ன பேருதான் எனக்குப் பிடிச்சி ருக்கு. அதைத்தான் வைக்கப் போகிறேன்."

அதை நினைத்த போதெல்லாம் மஹிமாவுக்குப் பெருமை பிடிபடவில்லை வீட்டிற்கு வண்ணப்பூச்சு, புதிய விளக்குகள், பெயர் பதித்த கல்—இவை எல்லாம் ஒழுங்காகப் பல தினங்கள் சென்றுவிட்டன. வசுமதி பட்டபாடு வீணாகவில்லை. முன் பகுதிக்கு ஏற்பட்ட புதிய மாற்றத்தில் பங்களா இப்போது மிகவும் அழகாக இருந்தது. இரு பக்கத்துப் புல் வெட்டுக்கள், இடையே ஓடிய கிரேஸிப் பேவிங்மீது வண்டியை வேகமாகச் செலுத்திய பூபதி, தயாராகத் திறந்து வைத்திருந்த அந்தப் பெரிய கராஜிற்குள் கொண்டு வந்து நிறுத்தி

னான். அவனது சாம்ராஜ்யத்திற்குள் வந்து விடட
திருப்தி அவனுக்கு. கதவைத் திறந்து கொண்டு இறங்கி
னான். பெரியவர் காலத்திலிருந்து அவன் அந்த வீட்டில்
டிரைவராக இருந்து அனுபவம் பெற்றவன். அந்தக்
காலத்தில் மேற்கொண்ட சில பழக்க வழக்கங்கள் அவ
னிடம் இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தன. வேலைக்காரி
நாகமுத்துவை அழைத்து வரும்படி அம்மா உத்திரவிட்
டிருந்தாலும் அவனிடம் அதே தர்பார்தான். !ின் ஆச
னக் கதவைத் திறந்து அதைப் பிடித்துக்கொண்டு
முதுகை நிமிர்த்தி விறைப்பாக நின்றான்.

மஹிமா வண்டியினின்று இறங்கினாள். குனிந்து
உள்ளேயிருந்து ஒரு பிளாஸ்டிக் கூடையையும் கைப்
பையையும் அவள் எடுக்குமுன் பூபதி முந்திக்
கொண்டான்.

''இருங்க.'' கையமர்த்தி விட்டுச் சட்டென்று அவை
களை எடுத்துக் கொண்டான்.

கராஜிலிருந்து உள்ளே செல்லப் பின்சுவரில் ஒரு
நகரும் கதவு, அதைத் தள்ளிக்கொண்டு அவன் பின்
பக்கம் சென்று மறைந்துவிட்டான். மஹிமா அவனைப்
பின்பற்றி உள்ளே செல்லவில்லை. வெளியே வந்து
தோட்டத்தைப் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்
றாள். கொஞ்ச நாட்களுக்கு முன்னர் அங்கே காலை
வைக்க முடியாது கற்களும் மண்ணும் இங்குமங்
குவிந்து கிடந்தன. முன்பகுதியை இடித்துப் புதுவிதம
கக் கட்டி முடித்துவிட்டுக் கண்டிராக்டர் கிளம்பியதும்
அவருடன் கல் குவியல்களும் கிளம்பிவிட்டன. வசுமதி
மந்திரக்கோலைச் சுழற்றி மாய ஜாலம் செய்து விட்டது
போல் விரைவில் தோட்டத்திலே எத்தனைமாறுதல்கள்!
பல நாட்களாகக் கற்குவியலடியில் மக்கி மடிந்து கொண்
டிருந்த புல் தரை இப்போது சீராக வெட்டப்பட்டுப் பச்



சைக் கம்பளம் போல் இருமருங்கையும் அலங்கரித்துக் கொண்டிருந்தது. பின்பக்கத் தோட்டத்திலே பத்திரமாக பாதுகாக்கப்பட்டு வந்த ரோஜா மாரிகோல்ட் செடிகள் முன்பக்கத்துத் தோட்டத்திற்கு வந்துவிட்டன. கராஜின் சுவரின் மீது படர்ந்து செழிக்க நட்டு வைத்த நித்ய மல்லிகை அதற்குள் பூக்கத் தொடங்கியிருந்தது, மலர்களின் சுமைதாளாது காற்றில் ஆடிய கொடியருகே சென்று ஒரு கொத்துப் பூவைப் பறித்தாள். மணத்தை முகர்ந்துவிட்டுத் தலையில் சூடிக் கொண்டாள். பின்னர் மெல்ல வாயிற் பக்கம் வந்தாள்.

முன்பு போர்ட்டிகோ இருந்த இடத்தில் இப்போது ஒரு கறுப்புச் சலவைக்கல் சதுக்கம் பரவலாக அமைக்கப்பட்டிருந்தது. அதன் நடுவே மண்டப வடிவில் செம்மண் கரை கட்டிய மாக்கோலம். வேலைக்காரி நாகமுத்துவின் கைவண்ணம். வீட்டிலே இன்று விசேஷம் என்பதன் முத்திரை. கோலத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு சற்று நேரம் அவள் நின்றாள். அந்த விசேஷம் அவள் உள்ளத்திலும் மகிழ்ச்சியை வாரிக் கொட்டியிருந்தது.

வராந்தாவில் குழல் விளக்கு இன்னமும் எரிந்து கொண்டிருந்தது. ''இன்னும் பூஜையிலிருக்கிறாங்க. அதனால்தான் கேட்பாரற்று விளக்கு எரிகிறது'' தனக்குள்ளே சொல்லிக் கொண்டு வராந்தாவைக் கடந்து வாயிற் கதவு முன் வந்து நின்றாள். அகலமும் உயரமுமாக நல்ல வேலைப்பாடுகளுடன் கோபுரக் கதவு போல் கம்பீரமாக இருந்த அதன் முகப்பில் தாமரை வடிவில் ஒரு வெண்கலக் கைப்பிடி பளபளவென்று தொங்கிக் கொண்டிருந்தது. அதன் மேலே தெரிந்த பித்தான்மீது அழுத்தக் கையை நீட்டியபோது கதவு திறந்து கொண்டது. குழல் விளக்கை அணைத்துவிட்டு மேல் துண்டினால் முகத்தையும் மார்பையும் துடைத்துக் கொண்டு வெளியே எட்டிப் பார்த்தார் சேனாதிபதி.

"இந்த ஒரு நாளைக்கு ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு வந்து அம்மாவுக்கு உதவியாக நீ இருக்கக்கூடாதான்னு நினைச்சேன்; நீ வந்திட்டே." மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்.

"உனக்கு ஆயுசு நூறுன்னு ஏன் சொல்லாம விட்டுவிட்டீங்க?" சிரித்துக்கொண்டு உள்ளே வந்தாள்.

"அதை நான் சொல்லவேண்டாம். மனசு நினைச்சு உன்னை வாழ்த்துது" வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு திரும்பினார்.

ஜலக் ஜலக்கென்று கால் கொலுசுகள் சப்திக்க அவள் உள்ளே நடந்தாள்.

"ம்! இன்னிக்கு அலங்காரம் பலமாகத்தானிருக்கு" வியந்தபடி அவளை ஓரக்கண்ணால் அலசினார்.

செழிப்பான அவளது மேனியைத் தழுவிக் கொண்டிருந்த ஆரஞ்சு வண்ணக் காஞ்சிபுரப் பட்டுச் சேலை அவளுக்கு மிக்க எடுப்பாகத்தானிருந்தது. அதன் எழிலில் அவள் ஒரு பிடி உயரமாகக் கூட த்தென்பட்டாள். அவளுடைய புது நிற முகத்தில் தங்க மெருகிட்டது போன்ற ஒரு பளபளப்பு. திடீரென்று ஒரு தனி அழகுக் கலசத்தை அவள் போர்த்துக்கொண்டு புறப்பட்டுவிட்டது போன்ற ஒரு கோலம்.

'வயசும், மனதில் மகிழ்ச்சியும் இருந்தால் அவை ஆளையே எப்படிமாற்றிவிடுகிறது!' எண்ணியபடி அவள் பின்னால் நடந்தார். பூபதி முன்னறையில் கொண்டு வைத்துப் போயிருந்த தனது கைப்பையையும் ஆரஞ்சு வண்ணப் பிளாஸ்டிக் கூடையையும் அவள் தூக்கிக் கொண்டு சமையற்கட்டின் பக்கம் விரைந்தாள்.

'அட! சேலைக்குப் பொருத்தமான கூடை! எல்லாம் பொருத்தமாகத்தானிருக்கிறது. ஆனால் இருக்கும்



இடம்தான் பொருந்தவில்லை...' ஓடியது சிந்தனை. அவரையும் அறியாது எழுந்த ஒரு கோபத்திலே பெருமூச்செறிந்தார்.

வசுமதி அம்மாளின் ஆணையை மேற்கொண்டு பல தடவைகள் அவர் அம்மா கொடுத்த சாமான்களைச் சுமந்து கொண்டு மஹிமாவின் வீட்டிற்குப் போயிருக்கிறார். சமையற்காரர் என்றாலும் அவர் பணக்கார வீட்டு ஆள். முப்பது வருஷத்துக்கு மேற்பட்ட அளவில் பங்களா வாசம். பணக்கார வீட்டுச் சாப்பாடு, பழக்கங்களும் மிகவும் மாறிவிட்டிருந்தன. அவருக்கு ஒண்டுக் குடித்தனம் என்றாலே பிடிக்காத விஷயமாகிவிட்டிருந்தது. வேலைசெய்யமுடியாத நிலை வந்ததும் உடனடியாகத் தமது கிராமத்திற்கு நடையைக் கட்டிவிடுவதென்பது அவர் தீர்மானம்.

'ராக்கப்பன் தெரு—எண் ஏழு' என்று நினைக்கும் போதே மஹிமாவின் வீட்டின் நெருக்கம் அவரை மூச்சுத் திணற வைத்தது. இரண்டு சுவர்களும் தனக்குச் சொந்தமில்லாத ஒரு சந்தில் கட்டிடத்தை முடக்கி அதற்குள் நான்கு குடித்தனக்காரர்களைத் திணித்துவிட்டிருந்தான் வீட்டுக்காரன். எல்லோருக்கும் பொதுவான முற்றத்தில் பரவி நின்ற பாசியில் கால் வைத்தால் தலை மடார். 'தலையை உடைத்துக் கொள்ளாமல் இவர்கள் எப்படி இதில் வளைய வராங்க? ஸ்கேட்டிங் மாஸ்டர்களா!' ஆச்சரியப்பட்டுக்கொண்டு முதல் முதலாக அந்த முற்றத்தில் மெல்ல இறங்கியது அவருக்கு ஞாபகம் வந்தது.

மஹிமா! நல்ல பெண். பொறுப்பு நிறைந்தவள், அடக்கமான குணம். அழகியும்கூட. ஆனால் அவள் அந்த வீட்டில் வசிப்பது சற்றும் பொருந்தாத விஷயம். என்ன செய்கிறது ஏழையாகப் பிறந்துவிட்டால்?

"இன்னுமா பூஜையில் இருக்காங்க?"

அவர் சிந்தனை கலைந்தது. ஆமாம். அது என்ன கூடையில்?'' மேடைமீது கூடையை வைத்துவிட்டுக் கைக்குட்டையினால் விரல்களைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

நகப் பூச்சு விளம்பரத்திற்கென்று படைக்கப் பட்டவை போன்றிருந்த அந்த கைவிரல்களை ரஸனையுடன் உற்றுப் பார்த்த சேனாதிபதி தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ''பாயசமா?''

''சர்க்கரைப் பொங்கல்.'' குரலும் இனித்தது.

''இது பூஜைக்கு இருக்காது. அப்படியிருந்தால் இங்கே வந்திருக்காது. நம்ப ஐயாவுக்கு உன் கை தயாரிப்பா? புரிகிறது...'' பிளாஸ்டிக் கூடையிலிருந்த எவர்சில்வர் டப்பாவைத்திறந்தார். ''பச்சைக் கற்பூரம், ஏலக்காய் வாசனை தூக்கி அடிக்கிறதே ..'' கரண்டியால் கொஞ்சம் அள்ளி வாயில் போட்டுக் கொண்டார். ''பலே ஜோர். உண்மையில் நீயா தயாரித்தே?''

''உங்க ஒருத்தருக்குத்தான் சமைக்கத் தெரியும்னு நினைப்பு? இல்லையா தாத்தா?'' அவள் சிணுங்கினாள்.

செம்மையாக வெற்றிலைக் காவி ஏறியிருந்த பற்களைக் காட்டிப் பகபகவென்று அவர் சிரித்தார்.

''தப்பு! தப்பு! கோவிச்சுக்காதே. இதோ நான் ஐயாவுக்குத் தயாரிச்சிருக்கிற பாதம்கீரைக் கொஞ்சம் ருசி பார்த்துச் சொல்லு.'' வெள்ளி டம்ளரில் பாதம்கீரை நிறைத்துக் கொண்டு வந்து அவள் அருகில் மேடையில் வைத்தார்.

ஒரு வாய் பருகிவிட்டு, ''பலே ஜோர் தாத்தா! பஸ்ட் கிளாஸா இருக்குது.'' புன்னகைத்தாள்.

ஒரு கூடை ரோஜா இதழ்களை வாரி யாரோ தலையில் கொட்டிவிட்டதுபோல் ஒரு கணம் மகிழ்ச்சியில்



திணறிவிட்டார் ''நம்ப ஐயா அமெரிக்காவுககுப்போய் விளையாட்டைப் போல மூணு வருஷமாகிறதல்லவா? நாக்கு செத்துப்போய் வருவார்னு அவருக்குப் பிடிச்ச விஷயங்களைச் செய்து வச்சிருக்கேன். ரசகுல்லா, மைசூர்ப்பாகு, ரவாலாடு...''

''வெளுத்துக் கட்டியிருக்கீங்க.''

''இதெல்லாம் அம்மாவுக்குத் தெரியாம செஞ்சது. அவங்களுக்குத் தெரிஞ்சு செஞ்சது கொஞ்சம் முறுக்கும் ஓமப்பொடியும்தான். ஒரு சங்கதி உனக்குத் தெரியுமில்ல? அம்மாவுக்கு லேசா டயாபடிஸ், பிளட்பிரஷர். அதனாலே நெய், சர்க்கரை ரெண்டையும் யார் கண்ணிலேயும் காட்டுகிறதில்லை. அலமாரியிலே பூட்டி வச்சுடறாங்க. நான் சட்டை பண்றதில்லை, டிரைவர் மூலம் அம்மாவுக்குத் தெரியாமல் சர்க்கரை நெய் கொஞ்சம் வாங்கி வரச் செய்தேன். பலகாரங்களைச் செய்து முடித்தேன். ஹி...ஹி...''

''வேர்க்கடலை உருண்டைகூட ஐயாவுக்கு ரொம்பப் பிடிக்குமே.' இன்பமானதொரு நினைவில் அவள் மெல்ல முணுமுணுத்தாள்.

சேனாதிபதி ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் பூஜையறையிலிருந்து கணீரென்று ''ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை...'' பாடலும் தொடர்ந்து மணியடிக்கும் சப்தமும் கேட்டது.

''போம்மா பூஜை முடிந்து கொண்டிருக்கிறது. போய் நீயும் கலந்துக்கோ, போ...'' உத்தரவிட்டுவிட்டுச் சேனாதிபதி தோள் மீது இருந்த துண்டை உதறிப் போட்டுக் கொண்டார். பரபரப்பாகச் சமையலறைக்குள் வளைய வந்த அவர் வாயும் கூடப் பாடலை முணுமுணுத்தது ''அகிலமெல்லாம் பூத்தாளை மாதுளம் பூ மேனி நிறத்தாளை...''

கரகரத்த அந்தக் குரலைக் கேட்ட வண்ணம் மஹிமா பின் கட்டிற்கு விரைந்தாள். சந்தன ஊதுவத்தியின் மணம் கம்மென்று வீசிய பூஜை அறையின் வாயிற்படியருகே வந்து நின்றாள். உடலை வெளித் தரை மீதும் தலையை வாயிற்படி மீதுமாக வைத்துக்கொண்டு ஒரு கண்ணை மூடிய மோன நிலையில் படுத்துக்கிடந்த ரெக்ஸியின் காதுகள் நிமிர்ந்தன. அரைக் கண்ணால், அவளைப் பார்த்து விட்டுத் தலையை மறுபுறம் திருப்பிக் கொண்டது. அவளது வருகை நல்வருகை என்பது போல் அதன் வால் மட்டும் ஆடியது, கற்பூர ஆரத்தியை முடித்துக் கொண்டு திரும்பிய வசுமதி அவளிடம் தட்டை நீட்டினாள். 'அப்பா எப்படி இருக்கிறார்?'' புன்முறுவலித்தாள் அவள்.

''அப்படியேதான் இருக்கிறார்.'' தாழ்ந்த குரலில் பதிலளித்துவிட்டு மஹிமா கற்பூர ஜோதியை வணங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

''இந்தா பிரசாதம்.'' வசுமதி ஓர் ஆப்பிளை அவளிடம் எடுத்து நீட்டினாள். மஹிமா வாய்விட்டுச் சிரித்து விட்டாள். அறையை விட்டு வெளியே வந்த வசுமதி புருவங்களை உயர்த்திக்கொண்டு, 'என்ன விஷயம்?' என்ற பாவனையில் பார்த்தாள்.

''கோவிச்சுக்க மாட்டீங்கன்னு தைர்யமா கேட்கிறேன். மகன் அமெரிக்காவிலிருந்து வருகிறார் என்று இன்னிக்குச் சாமிக்கு ஆப்பிள் பழ நைவேத்தியமா?'' களுக்கென்று அவள் சிரித்தாள்.

வசுமதியின் குரல் ஏனோ தடைப்பட்டது. ''அப்படி ஒன்றுமில்லை. சேனாதிபதி கொண்டு வந்து பூஜையறையில் வைத்த பழங்கள் அவ்வளவுதான்.'' அவள் முன் கட்டை நோக்கி நடந்தாள்

மஹிமா பின் தொடர்ந்தாள். அதுவரை படுத்துக் கிடந்த ரெக்ஸி எழுந்து உடம்பைச் சிலிர்த்துக்கொண்டு வீட்டின் முன் பகுதியை நோக்கி விரைந்து ஓடியது.



வெள்ளி டம்ளரில் காப்பியை நிறைத்துக் கொண்டு வந்து மேஜை மீது வைத்தார் சேனதிபதி. அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை ''நமக்கெல்லாம் மோட்சம் கிடைக்கிறதோ இல்லையோ இந்த ரெக்ஸிக்கு வானுலகத்திலே ஒரு தனி இடம் கட்டாயம் தயாராகிக் கொண்டிருக்கு. தினமும் அம்மாவோட இதுவும் பூஜையறைகிட்டே உட்கார்ந்து புண்ணியத்தை வாரிக் கட்டிக்குது. இதுக்குத்தான் சொல்லுவாங்க விட்டகுறை தொட்ட குறைன்னு...''

வசுமதி திரும்பிப்பார்த்த ஒரு பார்வையில் சேனாபதி டக்கென்று பேச்சை நிறுத்திவிட்டு, சமையல் அறைப் பக்கம் நடந்தார். பீறிக்கொண்டு வந்த சிரிப்பைக் கைக்குட்டையினால் மஹிமா அடைத்துக்கொண்டாள். யாருக்கும் பயப்படாத வாயாடி சேனாபதிக்கு வசுமதி அம்மாளிடம் கொஞ்சம் பயம்தான். இத்தனைக்கும் அவங்க கடுமையாக எதுவும் பேசவே மாட்டாங்க. மௌனத்திலே அத்தனை கண்டிப்பு தோரணை, பார்வையிலே அவ்வளவு கம்பீரம்...வியந்தபடி அருகில் வந்து மிக்க உரிமையுடன் வசுமதியின் நீண்ட கூந்தலை மெல்ல வருடினாள்.

''என்ன இது! தலையைக்கூடத் துவட்டாமல் அப்படியே பூஜையில் உட்கார்ந்திருக்கிறீங்க?' கடிந்து கொண்டாள்.

இதையெல்லாம் முன்கூட்டி எதிர் பார்த்தவர்போல் வலது கையில் ஒரு டம்ளரில் காப்பியும் இடது கையில் ஒரு புதுத் துவாலையையும் சுமந்துகொண்டு சேனாபதி வந்தார். ''உனக்குக் காப்பி கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறி விட்டு மேஜைமீது வைத்தார். மெல்ல வசுமதியின் பின்னால் வந்து நின்று கொண்டார். ''அம்மா தலையைத் துவட்டி விடு'' என்று மஹிமாவுக்குக் கை ஜாடை செய்து விட்டுத் துவாலையை நாற்காலிமீது போட்டுவிட்டு நகர்ந்து விட்டார்.

எக்ஸ்ரே கண்களால் பார்த்து விட்டவள் போல் வசுமதி லேசாகச் சிரித்தாள். 'சேனாபதி ஒரு தனி காரக்டர் முதல்லே காப்பியைச் சாப்பிடு. அப்புறம் எனக்குப் பணி விடை ஆரம்பிக்கலாம்'' உத்தரவிட்டாள்.

அடர்ந்து இடைவரை தொங்கிக் கொண்டிருந்த கூந்தலைப் புரட்டித் துவாலையினால் துடைத்துக் கொண்டிருந்த மஹிமாவுக்கு மெத்த வியப்பாகத்தானிருந்தது வசுமதியின் உண்மையான வயதைக் கேட்டால் யாரும் நம்ப மாட்டார்கள். அத்தனை இளமைத் பொருந்திய தோற்றம். செயற்கை முயற்சிகளால் ஏற்பட்ட எழில் அல்ல அது. ஐம்பது வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாலும். இங்கு மங்கும் ஒன்றிரண்டு நரைகள் ஓடிய கருங் கூந்தல் புரிந்து கொள்ளமுடியாத ஒரு கவர்ச்சி நிறைந்த முகம். மிடுக்கான நடை. 'இந்த வயதிலேயே இப்படியிருந்தால் அந்த வயதில், இளமை பொங்கிப் பூரித்து நின்ற சின்ன வயதில் எப்படி இருந்திருப்பாங்க...'

சில நாட்களுக்கு முன் சேனாபதி இதைப் பற்றித் தன் கருத்துக்களை அவளிடம் அளந்தது நினைப்புக்கு வரவே, அவளால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

சேனாபதி மஹிமாவிடம் சொன்னார். ''அம்மாவைப் பார்த்தியா? ஸ்நானம் பண்ணிவிட்டு அப்படியே தலையைக் காயவைக்காம பூஜைக்குக் கிளம்பிட்டாங்க இரண்டு மணி கழிச்சுத்தான் வருவாங்க. நிதக்கும் ஈரத தலையோட பூஜையில் உட்கார்ந்தா உடம்பு என்னதுககு ஆகும்? எனக்குச் சொல்ல நா துடிக்குது ஆனா துணிவு இல்லை, ஏன் தெரியுமா? பூஜையை முடித்துக் கொண்டு அவங்க வெளியேறும் போது ஜன்னல் வழியே நான் எட்டிப் பார்ப்பேன். என் வாய் அப்படியே அடச்சுப் போயிடும். ஒண்ணும் பேசவராது. நீ கூடப் பார்த்திருப்பியே ஒரு தமிழ்ப் படம்? கணவன் வந்து கதவைத்



தட்டுவான். கதவை அவள் திறக்கிறாள். அடிக்கிறது ஷாக் அவனுக்கு. ஏன் தெரியுமா? மனைவி உருவில் வந்து நிற்பது சாட்சாத் அம்பாள்.''

மஹிமாவுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

''அந்தக் கதையில் அவன் மனைவியைக் கொன்றுவிட்டு வந்திருந்தான். பழி வாங்க எதிரே நின்றிருந்த பராசக்தியை மனைவி உருவில் பார்த்ததும் அவனுக்கு ஷாக் அடித்தது. நீங்கள் தற்சமயம் என் நேரத்தைக் கொலை செய்கிறீங்க. இப்போ அம்மா பார்த்தால் உங்களுக்கு ஒரு பெரிய ஷாக் அடிக்கப் போகிறது.'' வேடிக்கையாகச் சொல்லிவிட்டு ஓடி விட்டாள். அந்த நினைப்பு வரவே அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''எனக்கும் சொல்லிவிட்டுச் சிரிக்கலாமே?'' வசுமதி திரும்பிப் பார்த்தாள்.

மஹிமா திடுக்கிட்டுப் போனாள். சலனமற்ற வசுமதியின் முகத்தில் சஞ்சலத்தின் நிழல்கள்ஏன்? ஆச்சர்யம் மூன்று வருஷங்களாகப் பிரிந்திருந்த மகன் இன்னும் சில மணி நேரங்களில் வரப் போகிறான். மகன் என்றால் ஹரி சாதாரண மகனா? தாய் என்றால் அவளைப்போல் ஒரு தாய் கிடைப்பாளா? பிள்ளையே தன் உயிர் மூச்சு என்று வாழ்ந்து வருகிறவள். 'ஒரு சமயம் அவருக்கு இன்னிக்குத்தான் பம்பாயிலிருந்து வரும் பிளேனில் இடம் கிடைச்சது போலிருக்கு. உங்களைப் பார்க்க அவரும் ரொமப ஆசையாகத்தான் இருப்பார்...'

வசுமதி அவளை வெறித்துப் பார்த்தாள். தன் உணர்ச்சிப் போராட்டங்களை யாரிடமும் அவள் பகிர்ந்து கொள்ள விரும்பியதில்லை. ''நீ சொல்வது சரிதான். பம்பாய்க்கு வந்து சேர்ந்து ஒரு வாரமாகியும் ப்ளேனில் இடம் கிடைக்கவில்லை. இல்லாவிட்டால்...''

எழுந்து அப்பால் சொல்லி முடிக்காது அவள் எழுந்து அப்பால் சென்றாள்.

மூச்சை அடைத்து மயக்கம் வந்துவிடும்போல் ஒரு கணம் அவளுக்கு இருண்டு கொண்டு வந்தது. நடக்க முடியாது போல் கால்கள் நடுங்கின.

வசுமதி, உனக்குத்தான் இடம் கிடைக்கவில்லை உன் பிள்ளையின் மனத்தில்!—உள்ளுணர்வின் பெருங் கூச்சல் அவள் மேனியைப் பதறச் செய்தது.

''மஹிமா! கொஞ்சம் தண்ணி கொண்டுவா'' உத்தர விட்டு விட்டு நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அவள் அருகி லிருந்த ஆசனமொன்றில் சாய்ந்துவிட்டாள்.

## 2

கூராஜின் ஓரத்தில் அந்தப் பழைய பியட் அனா தைக் குழந்தை போல் கவனிப்பாரற்று நின்று கொண்டி ருந்தது. பூபதி அதன் பக்கம் கூடத் திரும்பிப் பார்க்க வில்லை. அவன் கருத்து முழுவதும் பச்சை வண்ணப் புதிய அம்பாசிடர் மீது லயித்து விட்டிருந்தது. பளபள வென்று அதைத் துடைத்துத் தயார் செய்து கொண்டி ருந்தான். ஹரியின் உபயோகத்திற்காக வாங்கப்பட்டி ருந்த அந்தக் கார் ஒரு முறை திருப்பதி வரை போய் வந் திருந்தது. அதற்குப் பின்னர் அது சென்னையின் எல் லையை விட்டுத் தாண்டியதில்லை.

நேரம் பிற்பகலை நோக்கி நகர்வதை உணர்ந்த சேனாபதிக்கு ஒரே பரபரப்பு. வயதைப் பொருட்படுத் தாது வீட்டின் முன் பகுதிக்கும் பின் பகுதிக்கும் அவர் தாவிக் கொண்டிருந்தார். வசுமதியம்மாள் தன் மகனை வரவேற்கப் பூமாலைக்கு ஏற்பாடு செய்வாள் என்று எதிர்பார்த்து ஏமாந்து விட்டார். முடிவில் பொறுக்க



முடியாது தானே ஒரு கனமான பூமாலைக்குத் தனது செலவில் ஏற்பாடு செய்து விட்டிருந்தார். அதை ரகசிய மாகச் சாமான் அறையில் பத்திரப்படுத்தி வைத்திருந் தார். முப்பது வருஷமாக அவர்கள் வீட்டு உப்பைத் தின்று விட்டிருந்தார். அயல் நாட்டிலிருந்து வீடு திரும் பப்போகும் எஜமானுக்கு ஒரு மாலைபோட்டு வரவேற்க வேண்டியது அவர் கடமையல்லவா? மஹிமா அதைப் பார்த்துவிட்டு, எதற்கு இது என்று கேட்டபோது சிரித்து மழுப்பி விட்டார்.

வசுமதி வெகுநேரம் பெஞ்சியின் மீது படுத்துக் கொண்டிருந்தாள், ஹரி ஒரு முறை கடிதத்தில் குறிப் பிட்டிருந்தான், 'நமது வீடு மிகவும் பழுதாகி விட்டிருக் கிறது. சீர் திருத்தங்கள் தேவை' என்று..

வெளிநாட்டிலிருந்து திரும்பப் போகும் அவன் வியக்க வேண்டும். சுகமாக வாழவேண்டும் என்றநோக் கத்துடன் பணச் செலவை அவள் பொருட்படுத்தவில்லை வீட்டின் முன் பகுதியை இடித்து மிகவும் புதிய பாணியில் கட்டுவித்திருந்தாள். பின்கட்டை இடித்து மாறுதலாக அமைத்துக் கொள்ள அவள் விரும்பவில்லை. பூஜையறை அதனருகே இருந்த பெரிய படுக்கையறை இவைகளைச் சிறிதுகூட மாற்ற அவள் மனம் ஒப்பவில்லை. அவள் கணவன் உபயோகித்த அறை. அவளுக்கு அது ஒரு கோவில். பகல் பொழுதில் ஓய்வாக இருக்க நேரும் சம யமெல்லாம் அந்தப் பெரிய பெஞ்சியின் மீது அவள் வந்து படுத்துக்கொண்டு சிந்தனையில் லயித்திருப்பது வழக்கம். மனத்தில் குழப்பங்கள், வியாபாரத்தில் சிக்கல் கள் ஏற்படும்பொழுது அந்த அறையில் சிறிது நேரம் இருக்க விரும்புவாள்.

எதிரே சுவரில் பெரிய அளவில் அவளது கணவரது படம் மாட்டப்பட்டிருந்தது. காலையில் அவள் அணி வித்திருந்த மல்லிகை மாலை படத்திற்கு மிக்க அலங்கா

ரமாக இருந்தது படுத்த நிலையில் கண்களை அதன்மீது திருப்பினாள். இருபத்தெட்டு வயது இளைஞனாகப் படத்திலிருந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவளது கண்கள் குளமாயின. பல ஆண்டுகளுக்கு முன் மாரடைப்பில் அவர் மறைந்து போய் விட்டார். எனினும் அந்த நிகழ்ச்சி அன்றுதான் நடந்தது போன்ற ஒரு துக்கம். பச்சைப் புண்ணாக இன்னமும் ஆறவில்லை. அதன் வேதனையைத் தாளமுடியாது நெஞ்சு வலித்தது.

கடமைகளுக்காகவே வாழ்ந்த அவள், ஆசைகள் பல வற்றைத் துறந்து ஒரு வைராக்கிய நிலையில்தான் இருந்தாள். ஆனால் இரண்டு விஷயங்களில் அவளது முயற்சிகள் தோல்வி. ஹரி மீது பொங்கிப் புரண்டு வளர்ந்து கொண்டு வந்த பிள்ளைப்பாசத்தை கடுகளவும் அவளால் குறைத்துக் கொள்ள முடியவில்லை. மறைந்து போன கணவனது நினைவில் ஒரு சிறு துளியையும் நெஞ்சினின்று உதற முடியவில்லை அதிசயந்தான். ஆரம்பத்தில் கணவன் மீது அவளுக்கிருந்த அன்பு உயிருடன் கலந்துவிட்ட அந்த உறவு இப்போது ஒரு பக்தியாயிருந்தது.

கவலைகளில் குழம்பித் தத்தளிக்கும் போது அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டு நிற்பாள். அவன் காதுகளில் விழ வேண்டும் என்பதுபோல் தன்னையுமறியாது சில நேரங்களில் உரத்துப் பேசுவாள். அவளுக்கு ஆலோசனை சொல்ல அவன் படத்தினின்று எழுந்து அருகில் வந்து விட்டது போன்ற ஒரு பிரமிப்பு. நம்பிக்கை. அதில் ஒரு தெம்பு...

பம்பாய் வந்து இறங்கியதும் ஹரி அவளிடம் டெலிபோனில் பேசினான்.

"ஹரி! வந்துட்டியா?" மகிழ்ச்சியில் அவள் திணறிப் போனாள்.



"ஆமாம், வந்துவிட்டேன். வராமல் என்னசெய்வது" சலிப்பாகக் கேட்டான்.

மூன்று வருஷப் பிரிவிற்குப் பிறகு தாயிடம் அவன் பேசும் பேச்சா அது? மின்சாரம் தாக்கியது போன்ற அதிர்ச்சி அவளுக்கு.

"டாஜ் ஓட்டலில் தங்கியிருக்கிறேன். எனக்கு இங்கே சில வேலைகள் இருக்கு. வர ஒரு வாரம் ஆகும்."

"வருகிற வெள்ளிக்கிழமை, ஞாபகமிருக்கா? அப்பா மறைந்த நாள், ப லர் இல்லத்தில் வழக்கம்போல் குழந்தைகளுக்குப் பகல் சாப்பாடு. நம் செலவில் ஏற்பாடு பண்ணிவிட்டேன். உன் கையால் அவர்களுக்குப் பரிமாற நீ ஆசைப்படுவியே..." பேச முடியாது தடுமாறினாள். நெற்றியில் துளிர்த்த வியர்வை காதோரங்களில் வழிந்து கழுத்தில் பரவியது. இதயம் படபடத்தது.

"நான் ஊரில் இல்லாதபோது எப்படி நடந்ததோ அதுபோல் இப்போதும் நடக்கட்டும் கிளம்புகிறத்துக்கு முன் மறுபடி டெலிபோன் செய்கிறேன்." டக்கென்று ஹரி போனை வைத்துவிட்டான்.

மயக்கம் வந்துவிட்டது போன்ற அதிர்ச்சி. அவள் செயலற்று உட்கார்ந்து விட்டாள். நல்ல வேளையாக அவன் நடு இரவில் டெலிபோன் செய்தான். சேனாதிபதி உட்பட எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். படுக்கையறையிலிருந்த டெலிபோன் அது. மற்றவர்கள் யாரும் கேட்க வழியில்லை. அவளுக்கு அதற்குப் பின் உறக்கம் ஏது!

சேனாதிபதியின் வாயை அடக்குவது சில சமயங்களில் கடினம். அதனால் அவளே மறுநாள் காலை சொல்லிவிட்டாள். "ஹரி பம்பாய் வந்து இறங்கி விட்டான் அவசர வேலை. வர ஒரு வாரமாகுமாம். கவலைப்

படவேண்டாம் என்றான்'' சேனாதிபதி பதிலுக்கு அவளைப் பார்த்த பார்வை அவள் மனதை உறுத்தியது.

பலவும் எண்ணியபடி அவள் தலையைத் திருப்பி மறுபடியும் கணவரின் படத்தைப் பார்த்தாள். உள்ளத்தை உலுக்கிய துயரத்தைத் தாங்க முடியாது வாய்விட்டுப் பேசி விட்டாள். 'என் மேல் அவனுக்கு என்னவோ திடீரென்று ஒரு கோபம்?' பொங்கி எழுந்து கன்னங்களை நனைத்த கண்ணீரைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். சிறிதளவு மூடியிருந்த கதவின் வெளியே காலடி சப்தம் சேனாதிபதி இருமினார்.

''அதற்குள் என்ன அவசரம்? மூன்று மணிக்கு மேல் தான் ஏர்பஸ் வருகிறது. இப்பவே ஆரத்தி கரைச்சு வைக்கணும்கிறாயா?'' எரிச்சலோடு கேட்டாள்.

''அதுக்கில்லை. இலை போட்டு விட்டேன். எழுந்து வந்து ஒரு வாய் சாப்பிட்டால்...'' தாழ்வாகக் கேட்டுக் கொண்டார்.

''எனக்குப் பசியில்லை. நீங்க எல்லோரும் சாப்பிடுங்க.''

''நேத்திக்கும் பட்டினி. இன்னிக்கும் பட்டினின்னா உடம்புக்கு ஆகுமா? பட்டினி கிடக்கக்கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கிறாரே.''

''அவர் ஆயிரம் சொல்லுவார். அதையெல்லாம் கேட்டு நடந்துவிட்டா அவருக்கு அப்புறம் வரும்படி ஏது?'' வறட்சியாக அவள் சிரித்தாள்.

''நீங்க சாப்பிடாம இருந்தா மஹிமாவும் மத்த பேரும் எப்படி சாப்பிட முடியும்?'' அவர் விடவில்லை. பிடிவாதமாக நின்று கொண்டிருந்தார்.

''சரி, இதோ வந்துவிட்டேன்'' அவிழ்ந்து தொங்கிய கூந்தலை வாரிச் சுருட்டி முடித்துக்கொண்டாள். சரிந்து

"நானும் ஏர்போட்டுக்கு வரலாமா?" முன்கூட்டியே உத்திரவு வாங்கிக் கொண்டிருந்தார் அவர். வேண்டாம் என்று வசுமதி சொல்லியிருந்தாலும் அவர் எதிர்க்கத் தயாராக இருந்தார்.

ஹரிகுமாரின் பாட்டன் நாளிலிருந்து அந்தக் குடும்பத்தில் உழைத்த நன்றி மிக்க ஊழியன் என்ற உரிமை அவருக்கு இருந்தது. பாட்டன் வீட்டில் தாயுடன் வந்து சேர்ந்த நாளிலிருந்து ஹரியை அவர் மார்மேலும் தோள்மேலும் போட்டுக் கொஞ்சி வளர்த்தவர் வசுமதி பிள்ளையைப் பார்க்க எப்படித் துடித்துக்கொண்டு புறப்பட்டாளோ அதேபோல் அவரும் ஆசையுடன் கிளம்பியிருந்தார். தன் கையில் உண்டு வளர்ந்து ஆளாகிவிட்ட பிள்ளை அயல் நாட்டிலிருந்து படித்துப் பட்டங்கள் பெற்றுப் பெருமையுடன் திரும்புகிறான் என்ற ஆனந்தம் அவருக்கு.

மீனம்பாக்கத்தை நோக்கி வண்டி விரைந்து கொண்டிருந்தது மஹிமா கடைக்கண்ணால் வசுமதியைப் பார்த்தாள். எதிரே எதையோ வெறித்துக் கொண்டு அவள் எங்கேயோ நினைவாக இருந்தாள். மகன் வருகிறான் என்று விசேஷ அலங்காரம் ஏதும் இல்லை. கம்பெனியைப் பார்வையிட அவள் கிளம்பும் போது உடுத்திக் கொண்டு செல்லும் அதே வெள்ளைப் பட்டுச் சேலை காதுகளில் எப்பொழுதும் அவள் அணிந்து கொண்டிருந்த அந்தச் சிறு வைரத் தோடுகள். எப்பொழுதும் போல் நெற்றியில் திருநீறு. வெறும் கழுத்து. இடது கையில் மட்டும் கடிகாரம். ஆனால் முகத்தில் எப்பொழுதும் நிறைந்திருக்கும் வழக்கமான அந்த அமைதியைக் காணவில்லை. எதையோ எண்ணிக் கவலைப்படுவதின் சாயை லேசாகத் தோன்றி மறைந்த வண்ணமிருந்தது.

காரணம்? ஹரியின் அசட்டையான மனப்போக்கா? தந்தையின் மறைவு தினம் என்றால் ஹரி தாயாருடன்



கூடப் பட்டினியாக அன்றைய பொழுதை கழித்துவிடுவது வழக்கம். "பச்சைத் தண்ணீர் கூட சாப்பிடாமல் இதென்ன விரதம்?" என்று ஒரு முறை அவள் ஹரியைக் கேட்டுவிட்டாள்.

"நான் என் தந்தையைப் பார்த்ததில்லை. விவரம் தெரியுமுன்பு அவர் இறந்து விட்டார். இருந்தாலும் அம்மாவின் கண்கள் வழியே அவர்கள் சொன்னதன் மூலம் நான் அவரை ரொம்பத் தெரிந்து கொண்டு விட்டேன். வேலை கிடைக்காமல் அவர் மிகவும் கஷ்டப்பட்டாராம். அப்போதெல்லாம் சில நாட்கள் ஒரு வேளை சாப்பாடுகூட இல்லாமல் பட்டினியாகவே படுத்துவிடுவாராம். வறுமையிலே அவர் ரொம்பக் கஷ்டப்பட்டாராம். அவரது நினைவை மதிக்க அம்மா அந்த நாள் முழுவதும் சாப்பிட மாட்டாங்க. பட்டினி இருந்து பசியால் வாடும் அனாதைக் குழந்தைகளுக்கு வயிறாரச் சாப்பாடு போட்டு அதைப் பார்த்துத் திருப்தியடைவதே வழக்கமாக வச்சிட்டிருக்காங்க. அம்மா சாப்பிடாமல் நாள் முழுவதும் விரதமாக இருக்கும்போது நான் மட்டும் எப்படி சாப்பிட முடியும்?" என்றான் அவன்.

அம்மாவுக்கும் பிள்ளைக்கும் இடையே உள்ளத்திலே அத்தனை நெருக்கமான ஒரு அன்பு. இப்போது அதற்கென்ன வந்து விட்டது.

அமெரிக்காவிலிருக்கும்பொழுது மாதம் ஒரு முறையாவது டிரங்க்காலில் அம்மாவுடன் பேசாவிட்டால் அவனுக்கு அமைதி இருக்காது. அப்படிப்பட்ட பிள்ளை இத்தனை அருகில் பம்பாய்க்கு வந்த பிறகு ஒரு வார காலத்தில் இரண்டே முறைகள்தான் டெலிபோனில் தாயுடன் பேசினான். தான் வந்ததைத் தெரிவித்து முதலில் ஒரு மூன்று நிமிஷம். அடுத்த நாள் வரப்போவதாக அறிவிக்க ஒருமுறை ஒரே நிமிஷம். "வேறு எதுவும் பேசவில்லை. அவசரமாகப் போனை வைத்துவிட்டான்"

என்றாள் வசுமதி. பன்னிப் பன்னிக் கேட்க மஹிமாவுக்கு பயமாக இருந்தது. வெட்கமாகவும் இருந்தது.

அவள் நெஞ்சை என்னவோ உறுத்தியது. தான் வரப் போவதாக அவளுக்குக்கூட ஏன் ஒருகடிதம் போடவில்லை.

வண்டி குலுக்கலுடன் குழியொன்றில் தாவி ஓடியது. எதிரே வந்த லாரியைத் தவிர்க்க பூபதி வண்டியை வளைத்ததன் விளைவு, கதவின் மீது சாய்ந்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் சேனாபதி. "ஜாக்கிரதை அப்பா! பார்த்து ஓட்டு. ஏர்போர்ட்டுக்கு பதில் ஆஸ்பத்திரியில் கொண்டு தள்ளி விடாதே' கேலியாகக் கூறிவிட்டு மஹிமாவைத் திரும்பிப் பார்த்தார்.

அவள் சிரிக்கவில்லை. கலவரத்துடன் எதிர்ப்பட்ட சாலையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'ஹரி! ஹரி! ஹரி!' என்பதுபோல் அவள் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டிருந்தது.

## 3

அன்று விமான நிலையத்தில் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. காலியாக இருந்த ஆசனத்தில் வசுமதி உட்கார்ந்து கொண்டாள். ஒரு மணிக்கு முன்னதாகவே எல்லோரையும் துரிதப்படுத்தி நிலையத்திற்கு நெட்டித் தள்ளிக் கொண்டு வந்திருந்த சேனாபதிமீது அவளுக்கு எரிச்சல். கனமானதொரு பூமாலை இடது முன்னங்கையில் ஊசலாட வலது கையில் மைசூர்ப்பாகு டப்பாவைத் தூக்கிக் கொண்டு அவர் வளைய வந்து கொண்டிருந்தார்.

'டெலிபோனில் அசட்டையாகப் பேசிய மகன், இப்போது பலர் முன்னிலையில் சந்திக்கும்போது என்ன



மாதிரி நடந்து கொள்வான்? ஒரு பயங்கர கவலை வசுமதியை உலுக்கிக் கொண்டிருந்தது. சேனாபதியின் அதிகப் பிரசங்கித்தனத்தை அவள் பொருட்படுத்தவில்லை. வேண்டுமென்றே பூமாலையுடன் எதிரே வந்து நின்ற அவரைப் பாராதுபோல் இருந்துவிட்டாள். நிலையத்தில் அவளுக்குத் தெரிந்தவர்கள் பலர் வந்திருந்தனர். அவளுக்கு எப்போதும் ஓர் அலாதி சாமர்த்தியம். அவளது உள்ளத்தை வறுத்தெடுக்கும் துயரத்தின் சாயையை துளிக்கூட வெளியே காட்டமாட்டாள். 'ஹலோ! வணக்கம்! சௌகரியமா? பார்த்து ரொம்ப நாளாச்சு?' என ஆளுக்குத் தக்கபடி அவள் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தாள்.

மஹிமாவுக்கு உட்கார இடம் கிடைக்கவில்லை. கூட்டத்தோடு கூட்டமாக ஒரு புறம் அவள் நின்று கொண்டிருந்தாள். மெல்ல அருகில் வந்து நின்ற சேனாபதியால் பேசாது இருக்க முடியவில்லை.

'மாலையைப் பற்றி ஒரு வார்த்தைகூட நீ சொல்லலை!''

"ரொம்ப அழகாக இருக்கு." அவரது கைமீது தவழ்ந்து கிடந்த அந்தப் பூமாலை மீது அவள் பார்வை படர்ந்தது. உடனடியாக என்னென்னவோ கனவுகள் எழும்பி நின்றன.

"இதை அய்யா கழுத்தில் போட்டதும் அவர் மாப்பிள்ளை கணக்கா ஜம்முனு இருப்பார். இனி அடுத்த அயிட்டம் அதுதானே? அம்மா வீட்டைக்கட்டிப் பார்த்துவிட்டார்கள்—மேற்கொண்டு மகனுக்குக் கல்யாணத்தைப் பண்ணிப் பார்க்க வேண்டியதுதானே?" கண்களை சிமிட்டியபடி அவளை ஏற இறங்கப் பார்த்தார்.

இனம் விளங்காது வருந்திக் கொண்டிருந்த கவலையையும் மீறி இன்ப உணர்வில் அவள் நெஞ்சம் படபடத்தது.

''உங்களுக்குப் பொழுது போகவில்லை. ஏதாவது சொல்லிக் கொண்டிருக்கணும், இல்லையா?'' பொய்யாக் கோபித்துக் கொண்டாள்.

''அம்மா ஊரைக் கூட்டித் தம்பட்டம் அடிக்கிறவங்க இல்லை. மகன் வரப்போவதைப் பற்றி ஒருத்தருக்கும் சொல்லலை—அப்படியிருந்தும் அங்கே பார்! கனக பூஷணம், மகள் சவிதாவுடன் ஆஜராகிவிட்டிருக்கிறார். ஆசாமிக்கு நம்ப ஹரி மேல் ஒரு கண். ஏகப்பட்ட சொத்திற்கு ஒரு பெண். இந்தப்பக்கமும் கொட்டி வச்சிருக்கு. அதனால் அந்த ஆளு நம்ப வீட்டைக் குறி வைச்சிருக்கிறார்னு லேசாகக் காதில் பட்டது. உம்...பணம் பணத்தோடுதானே போய் உறவாடும்?...'' சொல்லிவிட்டு அவர் வேறுபக்கம் நகர்ந்து போய்விட்டார்.

மஹிமாவிற்குத் திக்கென்று இருந்தது. அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. சேனாபதி குறிப்பிட்ட வர்களைப்பார்க்கவும் பிடிக்கவில்லை. கால்கள் தள்ளாடச் சுற்றும்முற்றும் பார்த்தாள். பலத்த ஓசையுடன் கிளம்பிக் கொண்டிருந்த ஒரு விமானத்தை வேடிக்கை பார்க்க ஒருகூட்டம் எழுந்தது. காலியானதொரு ஆசனத்தில் சட்டென்று உட்கார்ந்து கொண்டாள். ஆனால் அவள் சிந்தனை, நினைவு, எண்ணங்கள் உட்கார மறுத்தன. எங்கெங்கேயோ வட்டமிடத் தொடங்கிவிட்டன.

அப்போது பண்ருட்டியில் அவர்கள் வசித்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் காலை ஒரு கார் அவர்கள் வீட்டு வாயிலில் வந்து நின்றது. பழக்கூடையுடன் டிரைவர் முன்னால் வர, கையில் ஒரு சிறுவனைப் பிடித்துக் கொண்டு வந்த பெண்மணியைக் குழந்தை மஹிமா வியப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். உள்ளேயிருந்து வெளிப்பட்ட அவள் தந்தைக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. ''வாங்கோ! வாங்கோ! அந்த நாள் சிநேகி



தத்தை மறக்காம எங்க வீட்டை தேடிக் கொண்டு வந்து விட்டீங்க''

''எப்படி மறக்க முடியும்?'' கூடத்திலிருந்த பிரம்பு நாற்காலியில் அவள் உட்கார்ந்து கொண்டாள். கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த அவள் தாய் ஞானம் பேச்சுக் குரலைக் கேட்டு வேலையைப் போட்டுவிட்டு உள்ளே விரைந்தாள். வந்திருந்த விருந்தாளியைக் கண்டு அவளுக்கும் அடக்கமாட்டா ஆனந்தம் ''ஞாபகம் வச்சுக்கிட்டிருக்கீங்க—இருந்து சாப்பிட்டுவிட்டு சாவகாசமாகப் போகலாம். அவசரப்பட்டா நாங்க விடமாட்டோம்'' உற்சாகமாக வரவேற்றாள்.

''ஆமாம், குழந்தை......?'' என்று மேலே முடிக்காது ஹரியின் பக்கம் சிவராமன் திரும்பினார்.

''நீங்க அங்கிருந்து கிளம்பின கையோடு எனக்குக் கல்யாணம் நடந்தது. பின்னால் அம்மா முடியாம படுத்துட்டாங்க. கொஞ்ச காலத்தில் காலமாகிட்டாங்க. நானும் அவரும் சூரத்திலேயே தங்கி வேலை பார்த்துக் கொண்டிருந்தோம். ஹரிக்கு மூணு வயசிருக்கும். அவர் திடீர்னு மாரடைப்பில் போய்விட்டார். குழந்தையோட நான் எங்க புக்ககத்திற்கு வந்துவிட்டேன்.'' அவள் குரல் தடைப்பட்டது. வருத்தத்துடன் தலையை குனிந்து கொண்டாள்.

''அடாடா! இந்த விவரம் ஒண்ணும் எங்களுக்குத் தெரியாது. என்னென்ன நடக்குமோ அதெல்லாம் நடந்துதானே தீரும்.'' அனுதாபப்பட்ட சிவராமன் ஹரியை வாரி எடுத்து மார்புடன் அணைத்துக்கொண்டு மடிமீது உட்கார வைத்துக் கொண்டார். சிறுவன் முரண்டான். வெடுக்கென்று அவர் கரத்தைத் தட்டிவிட்டு ஓடிவந்து தாயின் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டுவிட்டான். அப்பா அம்மா மற்றக் குழந்தைகள் எல்லோரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்.

"வேற்று முகம் பிடிக்காது போலிருக்கு" சிவராமன் கேலியாகக் கேட்டார்.

"அவன் தாத்தா செல்லம் கொடுத்து அப்படி கெடுத்து வச்சிருக்கிறார். ஒரே பிள்ளை என்று இருந்து விட்டாலே இது மாதிரிதான்..." அவள் சிரித்தாள். ஆனால் முகத்திலே ஒரு பெருமை பொங்கி வழிந்தது. அன்று அவள் வெகுநேரம் அவர்களுடன் தங்கியிருந்து சாப்பிட்டுவிட்டு மாலைப் பொழுதுதான் ஊருக்குக் கிளம்பினாள்.

அவள் போனபின்பு சிவராமன் அவளைப் பற்றி வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். அதற்குப் பின்னர் மஹிமா அவளைச் சந்திக்கவில்லை. ஆனால் பல தடவைகள் அவள் தந்தை பெருமையாக வசுமதியைப் பற்றிப் பேசுவதைக் கேட்டிருக்கிறாள்.

"சூரத்திலே நான் வேலை செய்து கொண்டிருந்தப்போ ஒரே தெருவில் குடியிருந்தோம். எங்களைத் தவிர அந்தத் தெருவில் தமிழர்கள் யாரும் கிடையாது. அவங்க அம்மாவுக்கு என் மேலே ரொம்பப் பிரியம் வசுமதியும் என்னை அண்ணா என்று உறவு வைத்து ரொம்ப மரியாதையாகப் பழகினாங்க! இப்போ நல்ல நிலையில் இருக்கிறாங்க. இருந்தாலும் நம்மையெல்லாம் மறக்கலை!" மிகவும் வியந்து கொண்டார்.

பண்ருட்டியிலிருந்து அவள் தந்தை வேறு வேலை தேடிக் கொண்டு சென்னைக்கு வந்துவிட்ட பிறகு...ஒரு நாள்...நகர வாழ்க்கை அவர்களுக்கு மிகவும் புதிது. அண்ணாசாலையில் ஸிந்திக்காரர் கடையொன்றில் ஒரு ரவிக்கைத் துண்டு வாங்க அவள் வந்திருந்தாள். தோளை யாரோ மெல்லத் தொட்டதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். செக்கச் செவேலென்று வாட்டசாட்டமான தோற்றம். களை சொட்டிய அந்த முகத்தைக் கனவில் எப்பொழுதோ கண்டது போன்ற ஒரு நினைவு. திகைப்புடன் பார்த்தாள். "ஆமாம், நீ சிவராமன் மகள் மஹிமாதானே?" அந்தப் பெண்மணி கேட்டாள்



"ஆமாம் நீங்கள்..." அவள் முடிக்கவில்லை.

"ஹரியின் அம்மா வசுமதி. என்னை மறந்துட்டியா? பார்த்துப் பல வருஷங்களாச்சல்லவா? உங்க வீட்டுக்கு நான் வந்தப்போ உனக்கு ஆறு அல்லது ஏழு வயசிருக்கும்" வரிசைப் பற்கள் தெரிய அவள் மெல்லச் சிரித்தாள். "இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

நான் பி. ஏ. முடிச்சுட்டேன். செக்ரடேரியல் கோர்ஸில் சேர்ந்திருக்கிறேன். ஹாஸ்டலில் தங்கிப் படிக்க வசதி இல்லை. அப்பா இங்கேயே ஒரு வேலை தேடிக் கொண்டு வந்து விட்டார்."

"ஏன் நான் ஒருத்தி சென்னையில் இருப்பது அப்பாவுக்கு மறந்து விட்டதா? எங்கள் முகவரி அவருக்குத் தெரியுமே? என்னுடன் தங்கியிருந்து படிக்க உன்னை அனுப்பியிருக்கக் கூடாதா?" உரிமையுடன் அதட்டிக் கேட்டாள்.

"நான் ஒருத்தி மட்டும் என்றால் ஒரு சமயம் அப்பா உங்களுக்கு எழுதி அனுமதி கேட்டிருப்பார். நாங்க நாலு பேர் படிக்கிறோம. குழந்தைகள் படிப்பை உத்தேசித்து அவர் குடும்பத்தோடு, இங்கே வந்துவிட்டார். நாங்கள் இருக்கிற வீட்டு விலாசத்தைக் கொடுக்கிறேன். நீங்க கட்டாயம் வீட்டுக்கு வரணும். அப்பா ரொம்ப சந்தோஷப்படுவார்."

"நீங்க எல்லோரும் நம்ப வீட்டுக்கு வரணும். ரெநிகிதம் விட்டுப்போகக்கூடாதுன்னு அப்பாகிட்ட சொல்லு..."

சிந்தாதிரிப்பேட்டை ராக்கப்பன் தெருவின் முடக்கத்தில் ஒரு சந்து. அதற்குள் தெரிந்த ஒண்டுக்குடித்தனம். அங்கு அவர்களைத் தேடிக் கொண்டு வந்து வசுமதி உறவு கொண்டாடினாள். சில நாட்களுக்கு பின்னர் தன் வீட்டிற்கு வரச்சொல்லி அவர்களுக்கு அழைப்பு வந்தது.

பங்களா சாம்பவி—அப்பொழுது ஒரு பழைய கட்டிடம். ஆனால் பெரிய மனிதர் வீட்டு தோரணையுடன் போர்டிகோ, பெரிய வராந்தா, வரவேற்பறை பின்கட்டு என்று மிகவும் கம்பீரமாக இருந்தது. மெத்தென்று பாதங்களை அணைத்த ரத்ன கம்பளத்தின் மீது நின்று கொண்டு வரவேற்பறையிலிருந்த அலங்காரப் பொருட்களை அவள் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். இவர்கள் இத்தனை பணக்காரர்களா? அவள் சிறிதும் எண்ணிப் பார்க்கவேயில்லை.

''உட்காருங்கள்'' எல்லோரையும் உபசரித்த வசுமதி ''ஹரி! இங்கே வா. யார் வந்திருக்கான்னு வந்து பார்!'' உரத்த குரலில் கூப்பிட்டாள்

மாடிப்படிகளில் காலடியின் ஓசை. வேகமாக இறங்கி வரவேற்பறைக்குள் வந்து நின்ற அந்த வாலிபனைக் கண்டதும் அவள் திகைத்துப் போனாள். நல்ல உயரம். சிவந்த நிறம், சுருண்ட முடி, அரும்பு மீசை. சில ஆண்டுகளுக்கு முன்னர் பண்ருட்டியில் பார்த்த பத்து வயது சிறுவனா இப்படி வளர்ந்து விட்டிருக்கிறான்? விவரிக்க இயலாத ஒரு இன்ப உணர்வில் நெஞ்சம் துடிக்க வியப்பிலே மெய்பதற அவள் அவனைப் பார்த்துக்கொண்டு அயர்ந்து நின்றாள். நெற்றியின்மீது புரண்ட முடியை இடது கரத்தால் ஒதுக்கிக் கொண்டு அவனும் அவளைப் பார்த்தான் அதிசயமாக.

''ஆமாம், இவங்க?'' தாயிடம் திரும்பிக் குழறினான்.



''வயசில் உன்னைவிட சின்னவள் மஹிமா. அவளைப் போய் இவங்க அவங்கன்னு மரியாதை வச்சுப் பேசாதே...'' கடிந்து கொண்டாள் வசுமதி.

''மஹிமாவை எனக்கு அடையாளம் தெரியவில்லை ரொம்ப வளர்ந்திருக்கிறாள்'' சொல்லிவிட்டு மீண்டும் உற்றுப் பார்த்தான் அவன்

அவள் சட்டென்று வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள். கன்னங்கள் சிவக்க, காதுகளில் சூடேற—நெஞ்சு பதற—கால்கள் தள்ளாட ஒரு போதை உணர்வில் அவள் மயங்கி—மெல்ல அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

''எங்க வீட்டுக்கு வந்தப்போ அம்மாதான் சாப்பாட்டைப் பிசைந்து ஊட்டணும்னு அடம் பிடுச்சியே... அந்தச் சின்னப் பையனாவா நீ இப்ப இருக்கே? நீயும் தான் வளர்ந்திட்டே.'' என்று பரிகசித்த வண்ணம் சிவராமன் அவனது தோள்களை குலுக்கினார். அதற்குப் பின்னர் இரு வீட்டவரின் நட்புத் தொடர்ந்தது.

மஹிமா தேர்வில் வெற்றிபெற்று அந்த மகிழ்ச்சியை முழுவதும் அனுபவிக்குமுன் அவர்கள் வாழ்க்கையில் ஒரு துன்ப நிகழ்ச்சி. ரத்த அழுத்த நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டு சிவராமன் காலும் கையும் வராது படுத்த படுக்கையாகி விட்டார் குடும்பப் பொறுப்பு முழுவதையும் அந்த சின்ன வயதில் அவள் தாங்கிக்கொள்ள வேண்டி வந்துவிட்டது. நல்ல வேளை. தந்தை வேலை செய்த அதே கம்பெனியில் அக்கௌண்ட் செக்ஷனில் அவளுக்கு ஒரு வேலை கிடைத்து விட்டிருந்தது வீட்டுப் பொறுப்பை எப்படி மேற் கொண்டாளோ அதேபோல் தந்தைக்குப் பதில் வசுமதியை அடிக்கடி சென்று பார்த்து விசாரித்து விட்டு வரும் பணியையும் ஏற்றுக் கொண்டிருந்தாள். அதற்கு மற்றொரு காரண

மும் கூட. அங்கே அவள் அடிக்கடி ஹரியைச் சந்திக்க முடிந்தது.

“ஹாய் மஹிமா!” என்றால் கூடப் போதும். ‘ஹலோ ஹரி!’ என்று தாங்க முடியாத இன்பத்தில் அவள் திணறுவாள்.

வசுமதியின் எதிரே அதிகம் பேச அவளுக்குப் பயம் அவனுக்கும் கொஞ்சம் அச்சம். ஆனால் அவன் பார்வை —புன்முறுவல் அவளைக் கண்டதும் முகத்திலே பரவி நிற்கும் பரவசம் எல்லாம் எத்தனையோ இன்ப ரகசியங்களைப் பேசாமல் பேசின. மனம் விட்டு இருவரும் பேசிக் கொள்ள சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை. ஒருபுறம் வசுமதி. மறுபுறம் அவள் குடும்பம் இடையே அந்தஸ்து—வேற்றுமை. அப்பப்பா எத்தனை முட்டுக் கட்டைகள்!

முதன் முதலாக அவர்கள் தங்களது உள்ளத்து எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டதே ஒரு இன்பமான அனுபவம்—மறக்க முடியாத நிகழ்ச்சி, ஒரு சிறு நாடகம்.

ஓர் ஓய்வுநாள். வசுமதியைப் பார்த்துவர அவள் காலையிலேயே வந்திருந்தாள். பங்களாவின் பின்தோட்டத்திலே ஒரு பெரிய மகிழமரம். மலர்கள் தரைமீது பாய்விரித்தாற் போல் பரவிக் கிடந்தன. பூக்கூடையொன்றில் அவைகளைப் பொறுக்கிச் சேர்த்துக் கொண்டிருந்தாள் அவள். பின்னால் காலடி ஓசை கேட்டு எழுந்து நின்றாள். வேகமாக வந்த ஹரி திடீரென்று அவளது கரத்தைப் பற்றிக் கொண்டு விட்டான். திடுக்கிட்டு மெய்சிலிர்த்துப் போன மஹிமா அவனது பிடியினின்று தன் கரத்தை அவசரமாக விடுவித்துக் கொண்டாள்

பயத்தில் அவள் உடல் கிடுகிடுவென்று நடுங்கியது. அப்பொழுதுதான் உணர்ந்தாள். அவளது உள்ளங்



கையில் ஒரு சிறு காகிதச் சுருளை அவன் திணித்துவிட்டு அப்பால் போய் விட்டான்.

வியர்வை ஆறாக வழிய—நெஞ்சும் மார்பும் படபடக்க அந்தக் காகிதச் சுருளைப் பிரித்தாள்.

“நேரில் சொல்ல முடியவில்லை கடிதத்தில் சொல்கிறேன். உன்னை என் உயிராக நேசிக்கிறேன். உன்னையே மணந்துகொள்வது என்ற முடிவு. உன் விருப்பம் அறிய ஆவலில் துடித்துக்கொண்டிருக்கிறேன். நாளை பூஜையறையில் அம்மாவுக்குப் பக்கத்தில் நீ நிற்கும்போது உன் தலையில் ரோஜா மலர் ஒன்றைச் சூடிக்கொண்டிருந்தால் சம்மதம் என்று புரிந்து கொள்வேன் —ஹரி.’

அடுத்த நாள், கற்பூர ஆரத்தியைக் கண்களில் ஒற்றிக்கொண்டு அவன் நிமிர்ந்து பார்த்தான்.

ஏமாற்றத்தில் முகம் வாடிவிட்டது. அதற்குமேலும் அவனைத் தவிக்கச் செய்ய அவளுக்கும் மனம் இல்லை. அர்ச்சனை செய்த மலர்க் குவியலிலிருந்து ஒரு ரோஜா மலரை எடுத்து அவள் கூந்தலில் சூட்டிக் கொண்டு கடைக்கண்ணால் அவனைப் பார்த்து முறுவலித்தாள். அப்பொழுது பார்க்க வேண்டும், ஹரியின் முகத்தை!

வசுமதி மட்டும் அருகில் இல்லாதிருந்தால் வாரி அணைத்துக் கொண்டு விடுவான் போன்ற மகிழ்ச்சி.

ஜார்பஸ் ஆர்ப்பாட்டத்துடன் இறங்கும் ஓசை. கூடத்திலே பரபரப்பு. திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள் மஹிமா.

இன்னும் சில நிமிஷங்களில் அவள் ஹரியைச் சந்திக்கப் போகிறாள்.

அந்த இன்ப உணர்வின் பளுவைத் தாளாது மூச்சுத் திணறியது போல் ஒரு திகைப்பு. வசுமதியின் பின்னால் அவள் நடந்தாள்.

## 4

ங்களா சாம்பவியில் ஒரு பயங்கர அமைதி. காலையில் அங்கு நிலவியிருந்த கோலாகலம் இப்போது மாயமாக மறைந்து விட்டிருந்தது.

மேலும் கீழுமாக வீட்டிற்குள்ளேயே நடந்து அலுத்துப் போனார் சேனாபதி. வியர்வையில் தொப்பலாக நனைந்துவிட்ட பனியன் அவர் நெஞ்சின்மீது ஒட்டிக் கொண்டு உறுத்தியது. விமான நிலையத்திற்கு உடுத்திச் சென்ற ஜிப்பாவை முதலில் கழற்றி எறிந்தால்தான் வேலை ஓடும் என்று ஓர் எரிச்சல். வேகமாகப் பின்கட்டிலிருந்த அவரது குளியலறைக்கு ஓடினார். இரண்டு செம்பு குளிர்ந்த நீரை முகந்து தலையில் கொட்டிக் கொண்டு விரைவாகக் குளியலை முடித்துக்கொண்டார். அங்கு தாழ்வாரத்துக்கொடியில் உலர்ந்துகொண்டிருந்த வேட்டியை இழுத்து அணிந்து கொண்டார். அருகில் கிடந்த சிவப்பு கரைத் துண்டை எடுத்துத் தோள்மீது போட்டுக் கொண்டார். திருநீற்றைக் குழைத்துப் பட்டையாக நெற்றியில் தீட்டிக் கொண்டதும்தான் அவருக்கு அமைதி ஏற்பட்டது.

சாப்பாட்டறை மேஜைமீது புறப்படுமுன்பே பலகாரத் தட்டுகளை பரப்பி ஈ மொய்க்கா வண்ணம்கொசு வலை போன்ற விரிப்பால் மூடிவிட்டுப் போயிருந்தார். பலகாரங்கள் வைத்த நிலையில் அப்படியே இருந்தன. யாரும் தொடவில்லை. ருசி பார்க்கவில்லை. அவரது ஏற்பாட்டின்படி ராசாத்தி ஆரத்தி சுற்றிக் கொட்டி யஜ

'இதென்ன வேடிக்கை! அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சொல்லிவைத்தது போல் தலைவலி? இதில் என்னவோ மர்மம் இருக்கிறது. பணவிஷயமாக ஏதாவது தகராறா இருக்கும் பணம் என்பதற்கு விவஸ்தை கிடையாது. தாய், மகன், அண்ணன், தம்பி, நண்பர்கள் எல்லோரையும் நிமிஷத்திலே பிரிச்சு வச்சுடும் விஷமாச்சே. அடி நாளில் கஷ்டப்பட்டவங்க அம்மா. பணத்திலே ரொம்பக் கண்டிப்பு. ஹரி செல்லமாக சுகமாக வளர்ந்தவர். தாராளமாகச் செலவழிப்பார். இந்தம்மா தான் விட்டுப் பிடிக்கணும். காலத்தோட ஒத்துப் போகணும்...ம்...ம்' என்னென்னவோ எண்ணியபடி வரவேற்பறைக்கு வந்தார்.

சோபா ஒன்றின்மீது சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள் மஹிமா. படிப்பவள் போல் பெமினா ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலும் காலையிலிருந்த தெளிவைக் காணவில்லை.

பூபதி கண்டிப்பான பேர்வழி. அவனுக்கு வேலை தான் குறி. எதிலும் பட்டுக் கொள்ள மாட்டான். மாலை ஐந்துமணியானதும் காரைத் துடைத்துப்பூட்டிச் சாவியைப் பின் கட்டுத் தாழ்வாரத்தில் அதற்கென்று அமைக்கப்பட்டிருந்த கொக்கியில் மாட்டிவிட்டுப் போய் விட்டான்.

இரவு அவசர சமயங்களில் உதவி என்று அமர்த்தப்பட்டிருந்த ஆரோக்கியம், வழக்கம்போல சிறு மூட்டையுடன் கராஜிற்குள் வந்து உட்கார்ந்து விட்டார். ஒரு காலத்தில் அவரும் அந்த வீட்டில் வேலை செய்து ஓய்வு பெற்றுக்கொண்ட ஆள். வசுமதி நீண்ட காலம் தன் காரைத் தானே தானே ஓட்டிக்கொண்டிருந்தாள். பிள்ளை வெளிநாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றபின் அவள் சாரத்தியத்தைக் கைவிட்டு விட்டாள். பிளட் பிரஷர், மனம் ஒரு நிலையில் இல்லாமல் குழம்புகிறீங்க. அவசியம் நீங்க



வண்டி ஓட்டித் தான் ஆகணுமா?' மானேஜர் முருகேசன் கண்டிப்பாகப் பேசித் தடுத்து விட்டார். இரவு வேளையில் தேவைப்பட்டால் என்று ஆரோக்கியத்தை டிரைவராக அமர்த்திபிருந்தார். அப்படிப்பட்ட அவசரத் தேவை இதுவரை ஏற்பட்டதேயில்லை.

கைகளைப் பின்னால் பிணைத்துக் கொண்டு ஜன்னல் வழியே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார் சேனாபதி தோட்டத்துச் செடிகள் மீது வீசிக் கொண்டிருந்த மஞ்சள் வெய்யில் மறைந்து இருள் பரவத் தொடங்கி விட்டது. கராஜில் ஆரோக்கியம் இருமினார். சிந்தனையினின்று விழித்துக் கொண்ட சேனாபதி பரபரப்படைந்தார். இனி அம்மாவின் உத்தரவுக்குக் காத்திருந்து பயன் இல்லை. இரவு சமையலுக்கு நேரம் ஆகிவிட்டது...வாசல் வராந்தாவின் விளக்கைப்போட்டு விட்டு மேல் துண்டை இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டார்...வேகமாக வேலையைக் கவனிக்கச் சமையலறைக்குள்சென்றுவிட்டார்.

வெய்யிலில் வாடிப்போன கீரைத்தண்டு போல் பெஞ்சியின் மீது கிடந்தாள் வசுமதி. அவளது கம்பீரம், மிடுக்கு எல்லாம் காற்றோடு பறந்து விட்டிருந்தன. விமான நிலையத்தில் கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு எதிரே வந்து நின்ற பிள்ளையைக் கண்டதும் அவளது குழப்பம், கவலை எல்லாம் கணப் பொழுதில் மறைந்தோடி விட்டன. முன்னைவிட ஹரி சற்றுப் பருத்து விட்டிருந்தான். கழுத்தின் கீழ் புரண்ட சுருண்ட முடி, கிருதாக்கள், சற்றுத் தாழ்ந்த மீசை, கறுப்புக் கண்ணாடி, லேட்டஸ்ட் கட் ஸூட், தோளில் பை, கையில் காமெரா, கழுத்து நிறையப் பூமாலை, காலோடு தலை வரை மகனை ஆசையுடன் உற்றுப் பார்த்தாள். அவள் கண் கனே பட்டுவிடும் என்ற அச்சம். ஹரி எத்தனை அழகாக இருந்தான்.

க3

அவள் கவலைப்பட்டபடி அங்கு ஏதும் நடத்துவிடவில்லை. "ஹலோ அம்மா!" என்று அழைத்துக் கொண்டு அருகில் வந்து நின்றதும் அவள் அப்படியே மெய் சிலிர்த்து மகிழ்ச்சியில் அமிழ்ந்து போய்விட்டாள்.

பல நாட்களாகப் பாராது ஏங்கியிருந்த கண்களில் ஆனந்தம் நீர் திரை போட்டது. "வந்துட்டியா, பிரயாணம் எல்லாம் சௌகரியமாகத்தானே இருந்தது?" பேச முடியாமல் திணறினாள்.

மஹிமா பக்கம் திரும்பி "ஹாய் மஹிமா!" என்று அவளையும் அன்புடன் அழைத்தான்.

வழி நெடுகிலும் வீடு வரும்வரை அவன் அதற்குப் பின யாரிடமும் பேசவில்லை. அந்த மௌனத்தை வசுமதி பாராட்டவில்லை ஆரத்தி சுற்றிக் கொட்டிய ராசாத்தியின் கையில் இரண்டு ரூபாய்களை வைத்துவிட்டு அவள் திரும்பியபோதுதான் உணர்ந்தாள், அத்தனையும் வெறும் நடிப்பு.

"மாடியில்தானே படுக்கையறை?" என்று பழனியிடம் விசாரித்துவிட்டு அவனைத் திரும்பிக்கூடப் பாராது அவன் வேகமாகப் படிகளில் ஏறிக் கொண்டிருந்தான்.

'ஹரி!' என்று கூவியழைக்க எழுந்த குரல் அவள் தொண்டையிலே உறைத்து போய்விட்டது.

இரண்டு நாட்கள் வெளியூருக்குப் போய்விட்டுத் திரும்பினால்கூட முதல் வேலையாக அவன் வீட்டிற்குள் வந்ததும் பூஜையறைக்குப் போவான். அவர்கள் குல தெய்வமான அபிராமியின் திருவுருவத்தை வணங்கி விட்டு அதற்குப் பக்கத்திலிருக்கும் அறைக்குள் நுழைவான் சுவரை அலங்கரித்துக் தொங்கும் தந்தையின் படத்தின் முன் நின்று கைகூப்பி வணங்கிவிட்டுத்தான்



மற்ற காரியங்களைக் கவனிக்கப் புறப்படுவான். சிறிய வயதிலிருந்து தொடர்ந்து அனுசரித்த பழக்கம். இன்று?

வேலையாட்கள் மத்தியில் வீட்டிற்கு வந்ததும் வராததுமாக அவன் காட்டிய அசட்டையை அவளால் தாள முடியவில்லை. "அழகாக வீட்டைச் சீர்திருத்தியிருக்கிறீர்களே? கார் புதியதாக வாங்கினீர்களா?" இப்படி ஒரு வார்த்தை அவளிடம் பேசியிருப்பானா? பேசக்கூடத் தகுதியற்றவளாகிவிடும் அளவு அவள் செய்த குற்றம்?

உணர்ச்சிப் போராட்டங்களை உள்ளடக்கிக் கொண்டு தெளிந்த முகத்துடன் வளையவரும் சாமர்த்தியக்காரியான வசுமதியாலேயே கட்டுப்படுத்த முடியவில்லை. எத்தனையோ இடர்களைத்தாங்கி, துன்பத்தை தூசியாகக் கருதிய அவளது அஞ்சாத நெஞ்சம் சுக்கல் துகளாகியது ஆசை மகனின் அசட்டையான போக்கை ஏற்க முடியாமல் துன்ப உணர்வின் சுமையைத் தாள முடியாமல் அடிவயிறுறினின்று விம்மல்கள் உடலைக் குலுக்க அவள் வாய்விட்டு அழுதாள். மூன்று வருஷ காலம் மகனது நினைவே மூச்சாக வாழ்ந்த அவளுக்கு, திரும்பி மகன் கொண்டுவந்த பரிசு... கண்ணீரா? அந்தச் சித்திரவதையை அனுபவிக்க அவள் செய்த பாவம்?

ஹரி, முரடன், பிடிவாதக்காரன், அடங்காப்பிடாரி என்று இருந்திருந்தால் இந்த ஏமாற்றம், கண்ணீர், துன்பம் எல்லாம் ஏற்பட்டிருக்காதோ என்னவோ. தாயின் மேல் உயிரை வைத்துக் கொண்டிருந்த தங்கக் கட்டி மகனாயிற்றே ஹரி! திடீரென்று அவனிடம் இந்தத் திருப்பமான மாறுதல் ஏன்? எப்படி ஏற்பட்டது? காரணம்?

அமெரிக்காவுக்கு அவன் புறப்பட்டுப் போகுமுன் அன்று இரவு, 'இரண்டு ஆண்டு காலம் எப்படித்தான் அவன் பிரிவைச் சகித்து வாழப் போகிறேனோ?' என்று

துயரத்துடன் அவள் படுக்கையில் உறக்கமின்றிப் புரண்டு கொண்டிருந்தாள்.

தாளிடாத கதவைத் திறந்து கொண்டு ஹரி உள்ளே வந்தான். சுவர்ப் பக்கம் திரும்பிப் படுத்திருந்தாள் என்றாலும் அவன் படுக்கை அருகே நிற்பதை உணர்ந்து கொண்டாள்,

பரீட்சைக்குப் படிக்கும்பொழுது தாயின் அறைக்குள் வந்து எட்டிப்பார்த்து விட்டுப் போவது வழக்கம் காரணம் கேட்டால், "நீங்கள் தூங்காமல் கண் விழித்து உடம்பைக் கெடுத்துக்கறீங்களோன்னு பயந்து அடிக்கடி வந்து செக்-அப் செய்கிறேன்" என்பான்.

அவள் உடல் நலத்தில் அவ்வளவு அக்கறை. தலைவலி என்று சொல்லிவிட்டால்கூடப்போதும். டாக்டரை வரவழைத்துத் தடபுடல் பண்ணிவிடுவான். மகனுக்கு வீண் கவலை கொடுக்கக் கூடாதென்ற ஆதங்கம் அவளுக்கு. உண்மையாகவே காய்ச்சலில் அவதிப் பட்டாலும் படுக்காமல் நடமாடிக் கொண்டிருந்துவிடுவாள் அவள். மகனுக்காகத் தாய்—தாய்க்காகப் பிள்ளை என்று இருவர் மட்டுமே கொண்ட அந்தச் சிறிய உலகத்திற்குள் அவர்களைப் பின்னிப் பிணைத்த பாசம், நம்பிக்கை இவைகளுக்குள் சந்தேகத்தின் நிழல்கூட அண்டியதில்லை.

மகன் பக்கம் திரும்பி, ஹரி! தூக்கம் வரலையா?" என்று கேட்டாள். கைமீது பொட்டென்று சூடாக விழுந்தது ஒரு கண்ணீர்த் துளி. விசுக்கென எழுந்து விளக்கைப் போட்டாள். "ஹரி! சே! சே! நீ சின்னப் பாப்பாவா?" கடிந்து கொண்டாள்.

"ஆண்பிள்ளை அழக்கூடாது என்றுதானே சொல்லப் போறீங்க? உள்ளமும் உணர்ச்சிகளும் எல்லோருக்கும் பொதுதானே அம்மா...?" படுக்கைமீது அருகில் உட்



கார்ந்து கொண்டான். முந்தானையினால் அவன் கண்ணீரைத் துடைத்தாள். நெஞ்சை அமுக்கி அவள் கண்களைக் கலங்கச் செய்த துன்ப உணர்வைச் சமாளித்துக் கொண்டாள்.

"உன்னைக் கோழையாக வளர்த்துவிட்டேன் என்று தானே குற்றம் சொல்கிறாய்?" விளையாட்டாகக் கேட்டாள்.

"கொஞ்ச காலமாக உங்க ஆரோக்கியம் கொஞ்சம் கெட்டு வருகிறதுன்னு எனக்குத் தெரியும். வியாபாரத்தைக் கூட இருந்து கவனித்து உதவுகிற நானும் போய் விட்டால் பொறுப்பு முழுவதும் உங்கள் தலையில் வந்து விழும். தொல்லைகள் தாங்க முடியாமல் உங்க உடம்புக்கு ஏதாச்சும் வந்து படுத்து விட்டால், ஏன்னு கேட்க நமக்கு யாரம்மா இருக்காங்க?" அவன் முடிக்காமல் துக்கத்துடன் தடுமாறினான்.

"சேனாபதி, மத்த வேலைக்காரங்க எல்லோரும் இருக்கிறாங்களே? நான் என்ன காட்டிலேயா இருக்கிறேன்!" அவள் சிரித்தாள்.

"அவங்கள்ளாம் உங்க ஹரியாகி விடமுடியுமா அம்மா?" அவளது கரத்தைப் பற்றி முகத்தில் வைத்துக் கொண்டான்.

மகனை வாரி அணைத்துக் கொண்டு அழ வேண்டும் போன்ற ஆவேசம், துக்கம், பெருமை எல்லாம் அவள் உள்ளத்தைக் குலுக்கின. சிரமப்பட்டு உணர்வுகளுக்குத் தடை போட்டாள். "நீ படிச்சு, நல்ல பயிற்சி பெற்றுத் திரும்பிவந்து வியாபாரத்தைப்பெருக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் கிளம்பியிருக்கிறாய். அதை மறந்து இதென்ன பச்சைப் பிள்ளைப் பேச்சு?" கடிந்து கொண்டாள். அன்புடன் அவன் முதுகைத் தடவிக்கொடுத்தாள். "ஒரு தடவை நீ ஹாஸ்டலில் தங்கிப் படித்தாயே,

ஞாபகம் இருக்கா? அதை நினைத்துக்கொள். தைரியமா இரு.''

''நினைச்சபோது ஓடிவரக்கூடிய தூரத்தில் அப்போ இருந்தேன். இப்போ பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கப் போகிறேன். பிசகு உங்களுடையது அம்மா. என் மேல் அன்பைக் கொட்டிப் பாசக் கயிற்றால் உங்களோடு பிணைத்துக் கொண்டு விட்டீங்க.''

வசுமதி சிரித்தாள். ''புடவைத் தலைப்பில் உன்னை முடிஞ்சு வச்சுக் கொண்டு விட்டேன் என்ற பழிச்சொல் எனக்கா?''

அதற்குப்பிறகு அவர்கள் இருவரும் தூங்கவேயில்லை. அவன் இல்லாதபோது அவள் தன்னை எப்படிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று ஆயிரம் யோசனைகளை அவன் சொன்னான்.

வெளி நாட்டில் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்று அவள் அவனுக்கு நூற்றுக் கணக்கான புத்திமதிகளைப் போதித்தாள். தாயும் மகனும் பேசினார்கள், பேசினார்கள், பொழுதும் விடிந்துவிட்டது.

அன்று தாய்க்கும் மகனுக்கும் இடையே இருந்த நெருக்கமான அந்த அன்பின் இடையே இப்போது என்ன வந்து குறுக்கிட்டு விட்டது.

திடீரென்று ஆவேசம் வந்தவள் போல் அவள் எழுந்தாள். அடுத்திருந்த குளியலறைக்குள் புகுந்து கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். கண்கள் சிவந்து இமைகள் வீங்கி, கூந்தல் அலங்கி அலங்கோலமாகக் காணப்பட்டாள்.

முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு கூந்தலை வாரி முடித்துக் கொண்டாள். கலைந்து கிடந்த



சேலையைச் சீர்ப்படுத்திக் கொண்டு கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

''மஹிமா!'' கம்பீரமாக ஒலித்த குரலைக்கேட்டுப் பத்திரிக்கையைக் கீழே போட்டு விட்டு அவள் ஓடி வந்தாள்.

''மாடிக்குப் போயி ஹரியை நான் உடனடியாகக் கீழே வரச் சொன்னேன்னு சொல், சீக்கிரம்'' அவள் குரலில் கோபம் தொனித்தது. இடது கரத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு தலையை நிமிர்த்தி ராணிபோல் அவள் மிடுக்காக நின்றாள் மகனின் வரவை நோக்கி.

## 5

மின்னல் வேகத்தில் மாடி வராந்தாவிற்குள் வந்து நின்றாள் மஹிமா. ஒரே மூச்சில் படிகளைத் தாவி ஓடி வந்த சிரமம் ஒருபுறம். தன் அன்புக்கு உகந்தவனைத் தனியே சந்தித்துப் பேச இப்படி ஓர் அருமையான வாய்ப்பு ஏற்பட்டதே என்ற மகிழ்ச்சி ஒருபுறம் அவளுக்கு மூச்சுத் திணறியது. கைப்பிடிச் சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு சற்று நின்றாள். பின்னர் மெல்ல உள்ளே நடந்தாள். மாடியின் அந்தப் பகுதியே ஒரு தனி வீட்டைப் போன்று மிகவும் விரிவாக்கப்பட்டிருந்தது. வராந்தாவை ஒட்டி மேலேயும் ஒரு வரவேற்பறை அதன் மூன்று பக்கத்திலும் மூன்று படுக்கையறைகள். நான்காவது பக்கத்தில் ஒரு பெரிய லிட் அவுட். கட்டும்போது அவள் பல தடவைகள் பார்த்த பகுதிதான். திரைச்சீலை, கம்பள விரிப்பு முதலிய அலங்காரம் செய்த பின்பு அங்கு அவள் வர வாய்ப்பு இருக்கவில்லை.

''போய் மேலேபார்! ஐயாவுடைய படுக்கையறையை அம்மா எப்படித்தான் அலங்கரிச்சு வச்சிருக்காங்க

தெரியுமா? அந்த குளியலறையை இன்னி முழுவதும்
பார்த்துக்கிட்டே இருக்கலாம். டெலிபோன் ஷவர்—
ஸங்கன் பாத் டப். நீலவண்ண டைல்ஸ். ஒரே அமர்க்
களம் போ. அதிலே குளிக்கக்கூட கொடுத்து வச்சிருக்க
ணும் எல்லாத்தையும் போய் நீ நேரில் பார்த்துவிட்டு
வா'' என்று சேனாபதி அவளைத் தூண்டிவிட்டுப் பார்த்
தார்.

ஆசையிருந்தது. ஆனால் வசுமதியிடம் உத்தரவு
கேட்க அச்சமாக இருந்தது. மாடிப் பகுதியின் வேலை
முடிந்ததும் பூட்டிச் சாவியை இடையில் செருகிக்
கொண்டு விட்டாள் வசுமதி. மகன் வீட்டிற்கு வரும்
தினத்தன்று அதைத் திறந்து வைத்து அவனை பிரமிக்கச்
செய்ய வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு

மாடிப் பகுதியைப் பார்க்க வேண்டுமென்ற தன்
விருப்பத்தை வெளிப்படையாகச் சொல்ல மஹிமா அச்
சப்பட்டதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது ஹரியும்
அவளும் ஒருவரையொருவர் நேசிப்பதை இதன் மூலம்
ஜாடையாக வசுமதி புரிந்துகொண்டு விட்டால்?

படிப்பு முடிந்த பின்னர் திரும்பி வந்து தானே
தாயாரிடம் சொல்லி அவர்களது திருமணத்திற்கு உத்த
ரவு வாங்குவதென அவன் தீர்மானித்திருந்தான். அது
வரை அவள் தன் ஆசைகளையும் ஆவல்களையும் உள்ளத்
திற்குள்ளேயே கள்ளத்தனமாகப் புதைத்து வைத்துக்
கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்.

வசுமதி கண்டிப்பு நிறைந்தவள். வாலிப வயதுடைய
தன் பிள்ளையுடன் இளம் பெண்ணான மஹிமாவை
அடிக்கடி சந்திக்கும்படி செய்தால் என்ன நேரும்
என்பதை அறியாதவளா? பஞ்சையும் நெருப்பையும் பக்
கத்திலே வைத்து வேடிக்கை பார்க்குமளவு அவள் அறிவு
மங்கிவிடவில்லை. இரண்டு வீட்டவர்களும் நெருங்கித்



தான் பழகினார்கள். மஹிமா மீது அவளுக்கு மிக்க
அன்பு. தீபாவளி, பொங்கல் முதலிய பண்டிகைகளுக்
குத் தன் பரிசாக மஹிமாவின் வீட்டவர்களுக்குப் புதுத்
துணிகள் எடுத்துக் கொடுத்தாள். படிக்கும் குழந்தைக
ளுக்குப் புத்தகம் சம்பளம் முதலிய பொறுப்பை ஏற்றுக்
கொண்டிருந்தாள். இன்னும் எத்தனையோ வழியில்
அந்தக் குடும்பத்திற்கு அவள் எண்ணற்ற உதவிகள்
தந்தாள். ஆனால் ஒரு விஷயத்திலே மிகவும் கண்டிப்பா
கவேதான் இருந்தாள். 'இனி இவர்கள் நெருங்கிப் பழகு
வது ஆபத்து என்று அவள் மனத்தில் பட்ட தினத்திலி
ருந்து அவள் அவர்களைத் தீவிரமாகக் கண்காணிக்கத்
தொடங்கிவிட்டாள். தாயாருக்குத் தெரியாமல் ஹரி
மூச்சுக்கூட விடமுடியவில்லை. மஹிமா அந்த வீட்டிற்
குள் வந்தபோதெல்லாம் வசுமதியை விட்டு சிறிதும்
அகல முடியாத ஒரு நிலை. ஊசி நுழையும் அளவு கூட
இருவரும் நெருங்கிப் பேச வசுமதி சந்தர்ப்பம் அளித்த
தில்லை, மஹிமாவைத் தன்னுடன் துணையாக எப்
பொழுதேனும் சினிமா, டிராமா, கச்சேரி இவைகளுக்கு
அவள் அழைத்துச் சென்றதுண்டு. ஆனால் மகனுடன்
வெளியே புறப்படுகையில் மஹிமாவை அருகே அண்ட
விட்டதில்லை.

அன்று அவள் சேனாபதியையோ, பழனியையோ,
அனுப்பி மகனைக் கீழே இறங்கி வரச் சொல்லியிருக்
கலாம். அப்படி செய்யாது அந்தக் கண்டிப்புக்காரி
மஹிமாவைத் தன்னந்தனியே இரவின் அந்த நேரத்தில்
மாடியறைக்குப் போகச் சொல்லி அனுப்பியதன்
காரணம்?

மஹிமாவுக்குத் திடீரென்று ஒருவித அச்சம் ஏற்
பட்டது. இது ஒரு விஷப் பரீட்சையா என்ன? துப்புத்
துலக்கி, சந்தேகத்தைத் தெளிந்து கொள்ள வசுமதி
செய்த சூழ்ச்சியா?

அமராவதியும் அம்பிகாபதியும் காதலிப்பதைக் கையும் களவுமாகக் கண்டுபிடிக்க மன்னன் கையாண்டானாமே ஒரு யுக்தி, அது போலவா?

ஒருகணம் பயத்தில் அவள் உடல் பதறிப்போய் நெஞ்சு துடிதுடிக்க நின்று விட்டாள். ஆனால் ஆசை பிடரியைப் பிடித்து உந்தியது. மெல்ல வரவேற்பறைக்குள் நுழைந்தாள். வந்த வேலையை மறந்து வியப்புடன் பார்த்தபடி நின்றுவிட்டாள். சுவரின் வண்ணத்திற்கு ஏற்ற ஸாடின் ஸில்க் திரைகள் ஜன்னல்களை அலங்கரித்துக் கொண்டிருந்தன. உட்கார மிக வசதியான சோபாக்கள். ஒரு சிறு வட்ட மேஜை மீது அன்று அலர்ந்த ரோஜா மலர்களுடன் சீராக வைக்கப்பட்டிருந்த ஒரு பூந்தொட்டி, கால் புதைந்து விடும் போன்ற ரத்னக் கம்பள விரிப்பு.

இடது புறமிருந்த பெரிய அறைதான் ஹரியினுடையது, அதன் அருகே வந்து கதவை மெல்ல விரல்களால் தட்டினாள். பதில் இல்லை லேசாகத் தள்ளினாள்.

படுத்துக் கிடந்த ஹரி எழுந்து விட்டிருக்கிறான் சுற்றிலும் பார்த்தாள். காணவில்லை. குளியலறையிலிருந்து குழாய் வழியே தண்ணீர் கொட்டும் ஓசை கேட்டது.

சேனாபதி போட்ட மாலை அங்கிருந்த ஒரு மேஜை மீது கிடந்தது. அதனின்று லேசாக அறை முழுவதும் பரவி நின்ற மணம் அவளை எங்கெல்லாமோ இழுத்துச் சென்று விட்டது...

வெளிநாட்டிற்கு அவன் புறப்படுவதற்கு முன், ஒரு நாள் மாலை அவள் ஆபீசிலிருந்து பஸ் நிலையத்திற்கு விரைந்து கொண்டிருந்தாள். திடீரென்று வானம் கறுக்கத் தொடங்கியது. சில்லென்று காற்று வீசியது. தொடர்ந்து பெரும் தூறல்கள் விழத் தொடங்கின. மும்



முரமாக மழை கொட்டுமுன் வீடு போய்ச் சேர வேண்டுமென்ற பதைப்பு—

கிரீச்சென்ற சப்தத்துடன் ஒரு கார் வந்து நின்றது.

"உன்னை எப்படியாவது இன்று பிடித்துவிட வேணும்னு ஆபீசிலிருந்து பகல் பொழுதே நழுவிவிட்டேன்" சிரித்துக் கொண்டே ஹரி காரின் கதவைத் திறந்துவிட்டான். "ஏறிக்கொள். வீட்டில் கொண்டு விடுகிறேன்."

கண்டிப்புக்காரியான வசுமதியின் கண்காணிப்பையும் தாண்டி அவர்கள் வெளியே அநேக தடவைகள், பல இடங்களில் சந்தித்தது உண்டு. பேசியதும் உண்டு. காதல் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டதும் உண்டு. ஆனால் ஒவ்வொரு முறையும் ஒரு சில நிமிடங்கள்தான் சந்திக்க முடிந்தது. எதேச்சையாக சந்தித்தவர்கள் போல் பிறர் எதிரில் நடிக்கவும் வேண்டியிருந்தது. சுற்றுமுற்றும் கலவரத்துடன் பார்த்துவிட்டுக் குழப்பத்துடன் அவள் நின்றாள்.

"மழை பலக்கிறது. சட்டென்று ஏறிக்கொள்." அவன் குரலில் ஏகப் பரபரப்பு.

யார் கவனித்தார்களோ தெரியாது. உள்ளத்திலே பொங்கிப் புரண்ட உவகை உந்தித் தள்ள, தன்னையும் மீறிய ஒரு துணிச்சலில் காரில் ஏறி அவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டு விட்டாள். உடல் நடுங்க, பயம் கண்களைக் கட்ட, இதயம் படபடக்க உணர்ச்சி வெள்ளத்திலே தத்தளித்துப் போன அவளுக்கு, கார் எந்தத் திசையில் போகிறது என்று புரிந்து கொள்ளக் கொஞ்ச நேரம் சென்றது.

"வீட்டில் கொண்டு விடுவதாகச் சொன்னீங்க. எதிர்த் திசையில் எங்கே போயிட்டிருக்கிறீங்க?" திகிலடைந்து கேட்டாள்.

"நெடுஞ்சாலையில் போக்குவரத்து அதிகம். உன்னு டன் ஒரு சில நிமிஷங்களாவது தனியாகப் பேச ஆசை. அதனால்..."

தயக்கத்துடன் அவள் அவனைப் பார்த்து விழித் தாள். வெளியே தொடர்ந்து மழை கொட்டிக் கொண் டிருந்தது.

"தப்பா புரிஞ்சு கொண்டு நீ பயப்படுகிறே புரிகிறது. நீ நினைத்துக் கலங்கும் அந்தக் கதாநாயகன் நான் இல்லை." கலகலவென்று சிரித்துக்கொண்டு அவளது இடது கரத்தைப் பற்றினான்.

"என்ன இது?" சிணுங்கிக்கொண்டு அவன் கதவு ஓரமாக ஒண்டிக் கொண்டாள்.

"இன்னும் சில தினங்களில் நாம் வெளிநாடு போக இருப்பது உனக்குத் தெரியும். வரச் சில ஆண்டுகள் பிடிக்கும். அந்த இடைவெளியில் என்னை நீ மறக்காமல் சதா நினைத்துக் கொண்டிருக்க என் அன்பளிப்பு"— பேசிக் கொண்டே தன் விரலில் அணிந்திருந்த மோதிரத் தைக் கழற்றி அவளது இடக்கை விரலில் அணிவித்தான். அவள் மறுப்புத் தெரிவிக்குமுன் இடைமறித்துப் பேசி னான். "நான் சொல்வதை நன்றாகக் கேட்டுக்கொள். எனக்கு நீ—உனக்கு நான் என்று நம் மனம் ஒன்றுபட்டு விட்டது. நம் தீர்மானமும் அதுதான். என் படிப்பு முடித்து நான் திரும்பும்வரை நீ எனக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். வந்ததும் அம்மாவிடம் என் எண்ணத்தை வெளிப்படையாகச் சொல்லி விடுவேன். திருமணத்துக்கு அவங்க மறுப்புச் சொல்ல மாட்டாங்க, என் அம்மாவை எனக்குத் தெரியும். அதுவரை நீ கொஞ் சம் பொறுமையாக இருக்க வேண்டும். பல ஆயிரம் மைல்களுக்கப்பால் எனக்காக ஒருத்தி வழிமேல் விழி வைத்துக்கொண்டு காத்திருக்கிறாள் என்றால் எனக்கு



எத்தனை பெருமையாக இருக்கும்! இருப்பாயா?" அவள் முகத்தை நிமிர்த்தினான்.

மஹிமா அவனை நிமிர்ந்து பார்த்தாள். "ஹரி!" என்றாள். பேச முடியாது நெஞ்சை அடைத்தது.

"மஹிமா, அழுகிறாயா? நான் தவறாக ஏதாவது சொல்லி விட்டேனா?" பதறினான் அவன்.

"இல்லை, சிந்தாதரிப் பேட்டையில், கூட்டத்தோடு கூட்டமாக, தரித்திரத்தில் உழலும் இந்த மஹிமாவை இவ்வளவு ஆழமாக நீங்க நேசிக்கிறீங்களே? ரொம்பப் பெருமையாக இருக்கு. ஆனந்தம் தாங்க முடியாது அழுகையே வந்துவிட்டது. சில ஆண்டுகள் என்ன ஹரி... இந்த ஜென்மம் முழுவதும் வேண்டுமானாலும் உங்களுக் காக நான் காத்திருப்பேன்.' வார்த்தைகளுக்குத் தடு மாறினாள்

"ஒருவரையொருவர் இப்போ நன்றாகப் புரிந்துக் கொண்டு விட்டோம். கண்களைத் துடைத்துக்கொண்டு. கொஞ்சம் சிரி பார்க்கலாம்...'

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். "சிரிக்கப் பயமாக இருக்கிறது. உங்கம்மா பிறந்த நாளுக்குப் பரிசாக உங்களுக்கு கொடுத்த மோதிரம் இது. இந்த விலை உயர்ந்த வைர மோதிரத்தை எனக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டீங்க மோதிரம் எங்கேன்னு அம்மா கேட்டால் என்ன சொல்லுவீங்க? 'இந்த மோதிரம் உனக்கேது'ன்னு எங்கப்பா என்னைக் கேட் டால் என்ன சொல்லுவேன்? துஷ்யந்தன் சகுந்தலைக்கு கொடுத்தது போல..." சட்டென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

"இந்த ஹரி ஒருக்காலும் மறந்து விடமாட்டான் அவனது மஹிமாவை...என்மேல் உனக்கு நம்பிக்கை

வேண்டும். அதுதான் நீ எனக்குக் கொடுக்கப் போகும் பரிசு...'' உணர்ச்சி வசப்பட்டு அவன் பேசினான்.

பின்னர் நேரம் போவதே தெரியாது வெகுநேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். வீட்டிற்கு சற்றுத் தொலைவில் அவள் காரிலிருந்து இறங்கிக் கொண்டாள். தன் உயிரின் பாதியை அவனிடமே விட்டுவிட்டதைப் போன்ற ஒரு பலவீனத்தில் உடல் தள்ளாட, பிரிவுத் துன்பத்தின் சுமையால் உள்ளம் தந்தளிக்க, கண்கள் குளமாக அவள் அன்று பிரிந்தாள்.

அதுதான் முதல் தடவை அவர்கள் நெருக்கமாகச் சந்தித்து மனம் விட்டுப் பேசியது. அதற்குப் பின்னர் சந்தர்ப்பங்களே வாய்க்கவில்லை. ஆனால் கடிதங்கள் மூலம் ரகசியமாக அவர்களது காதல் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது...

குளியலறைக் கதவு திறக்கப்படும் ஓசை. குப்பென்று ஆப்டர் ஷேவ் லோஷனின் இனிய மணம் ஓடிவந்து முகத்தில் மோதியது. பிஜாமா கோட்டின் மீது சைனீஸ் சில்க் டிரஸ்ஸிங் கவுனுடன் அவன் வெளியே வந்தான். அறையின் நடுவே நின்று கொண்டிருந்த அவளைக் கண்டு ஒரு கணம் அயர்ந்து விட்டான்.

''ஆமாம், இங்கே எங்கே வந்தே?'' சற்றுக் கடுமையாகவே அவன் கேட்டுவிட்டான்.

என்னவெல்லாமோ சொல்லப் போகிறான் என்று இன்பக் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு நின்ற அவளுக்கு மெத்த அதிர்ச்சி.

''அம்மாதான் அனுப்பினாங்க. உங்களை உடனடியாகக் கீழே வரச் சொன்னாங்க...''

''உடம்பு சுகமில்லைன்னு முதல்லேயே சொல்லி விட்டேனே. அப்புறம் ஏன் இந்த வற்புறுத்தல்...''



''ஹரி...'' மெல்லிய குரலில் மஹிமா அழைத்தாள். ''நீங்க போகிறதுக்கு முந்தி ஒரே ஒரு கேள்வி கேட்க என் மனசு ரொம்ப நாழியா தவிக்கிறது. சில மாதங்களாக எனக்கு நீங்க கடிதம் போடறதை நிறுத்திட்டீங்களே, ஏன்? நீங்க வரப்போவதைக் கூடத் தெரிவிக்கலையேன்னு நான் ரொம்ப வேதனைப்பட்டேன்...''

''காரணத்தை இன்னும் இரண்டு நாளில் சொல்லி விடுகிறேன். தயவுசெய்து இப்போது என்னை எதுவும் கேட்காதே'' அறையினின்று வெளியேறி அவன் வேகமாக மாடிப்படிகளில் இறங்கித் தாயின் முன் வந்து நின்றான்.

''எனக்குத் தலைவலின்னு சொல்லிவிட்டுத் தானே போனேன்? அதுக்குள்ள தூது அனுப்பிவிட்டீங்களே?'' கோபமாகக் கேட்டான்.

வசுமதி அயர்ந்து போனாள். மகன் வாரிக் கொட்டி இப்படிப் பேசுவது இதுதான் முதல் தடவை.

''தலைவலின்னா மருந்து சாப்பிட்டால் நின்று விடுமே? வெகு தொலைவிலிருந்து வந்திருக்கிறே உன்னோடு பேச ஆள் படையிலிருந்து எல்லோருக்கும் ஆசை இருக்காதா?

'பேச வேண்டியது இருக்கு? நாளைய தினத்தை அதுக்கு ஒதுக்கி வச்சிருக்கிறேன். அதுவரை என்னைக் கொஞ்சம் நிம்மதியாக இருக்க விடுங்க.'' விர்ரெனத் திரும்பி விட்டான்.

சூடான அந்த வார்த்தைகள் வசுமதியின் முகத்தைச் சிவக்கச் செய்தன. ஒருகணம் அவள் தடுமாறிப் போய் விட்டாள் சேனாபதி சமையலறையிலிருந்து அந்தப் பக்கம் வந்து சுவரில் சாய்ந்தபடி காதைத் தீட்டிக் கொண்டு நிற்பதை அவள் கடைக்கண்ணால் கவனித்து

விட்டாள். ஆனால் தனக்கேற்பட்ட அவமானத்தை வேலையாட்கள் முன்னால் அவள் ஒப்புக் கொண்டு விடுவாளா! ஒன்றுமே நடக்காதது போல் கம்பீரமாகப் பார்த்தாள்.

"சேனாபதி, மஹிமாவுக்கும் எனக்கும் இலையைப் போடுங்கள். சாப்பிட்டதும் மஹிமா வீட்டிற்குப் போக வேண்டும் ஆரோக்யத்திற்கு நினைவுபடுத்துங்க. பழனி கிட்ட ஒரு டம்ளர் பாலை மேலே ஹரிக்கு அனுப்பிடுங்க, ரெக்ஸியை மறந்துவிடாதீங்க. அவிழ்த்துவிட்டுச் சாப்பாடு போடுங்க." படபடவென்று உத்தரவிட்டுவிட்டு அவள் மிடுக்காக உள்ளே சென்றாள்.

## 6

பழனி, ஜன்னல் திரைகளை இரு ஓரங்களிலும் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் படுக்கையைச் சீர்படுத்திவிட்டுப் போயிருந்தான்.

"அம்மா தூங்கி விட்டீங்களா? உடம்புக்கு ஒண்ணுமில்லையே?' என்று ஹரி நொடிக்கு நூறு தடவைகள் அறைக்குள் ஓடிவந்து பார்ப்பானே? அதுவும் சில ஆண்டுகள் வெளிநாட்டில் தங்கிவிட்டு வீட்டிற்குத் திரும்பி வருகிறவனுக்குப் பேச எத்தனையோ விஷயங்கள் இருக்கும். கோடியறையை எடுத்துக் கொண்டால் அவன் குறுக்கும் நெடுக்குமாக அலைய நேரும். பக்கத்திலேயே இருந்தால் நினைத்த பொழுது ஓடி வந்து அம்மாவிடம் ஏதாவது பேச விரும்பினால் எளிதாக இருக்கும். பிள்ளைப் பாசத்தில் உருகிய அவளுக்கு இப்படி ஓர் எண்ணம். அதனால் தான் ஹரியின் அறைக்கு அடுத்தபடியாக இருந்த சிறிய அறையைத் தனது படுக்கையறையாகத் தேர்ந்தெடுத்தாள்.



அவள் எப்போதும் எளிமையையே அதிகம் விரும்பினாள். அதனால் அதை அவள் விசேஷமாக அலங்கரிக்கவில்லை. அழுத்தமான தேக்கு மரக்கட்டில் ஒன்று, அதன் மீது கனமில்லாத பஞ்சு மெத்தை, தலையணை, வெள்ளை விரிப்பு, அருகே ஒரு சிறு மேஜை. அதன்மேல் சாய்ந்த வாக்கில் அவளது கணவரது உருவப்படம். ஒரு கூஜா தண்ணீர், டம்ளர், டாக்டர் சாப்பிடச் சொன்ன மருந்துகள் கொண்ட ஒரு சிறு டப்பா, இத்யாதி. தலைமாட்டிலிருந்த ஹெட் போர்டுமீது அவள் தூங்கப் போகுமுன்பு படிக்க விரும்பிய தேவாரத் தோத்திரப் புத்தகம்.

ஜன்னல் வழியே தோட்டத்து வேப்ப மரத்திற்கு மேல் தெரிந்த வானத்தை அவள் சிந்தனையுடன் வெறித்துக் கொண்டிருந்தாள். மேகப் படலத்தின் இடையே இங்கு மங்கும் பளிச்சிட்ட எண்ணிக்கையற்ற விண்மீன்கள்போல் அவளது வாழ்க்கையில் கணக்கிலடங்காத பிரச்சினைகள். அதுவும் இப்போது தோன்றியுள்ளதோ புரியாத திகில் நிறைந்த பெரும் பிரச்சினை. கீழே வரவேற்பறையில் இருந்த பாட்டன் காலத்துப் பாட்டிசைக்கும் கடிகாரம் டிங் டிங் என்று பாட்டின் ஓர் அடியை ஓசையாய் இசைத்துவிட்டு, டாங் டாங்கென்று பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. திடுக்கிட்டு நினைவுகளினின்று விழித்துக்கொண்டு அவள் மறு பக்கத்து ஜன்னலைப் பார்த்தாள். பக்கத்து அறையிலிருந்து விளக்கொளி தோட்டத்திலே வீசிக் கொண்டிருந்தது. ஹரி கூட இன்னமும் தூங்கவில்லை.

"இது ஆண்டிக் பொருள், என்னவோ ஏதோ என்று பழைய சாமான்கள் வாங்கும் கடையில் போட்டு விடாதே. எங்கப்பா லண்டனுக்குப்போய் வந்தபோது என் தாயாருக்கு இந்தக் கடிகாரத்தைப்பரிசாக எடுத்துக் கொண்டு வந்தார்" என்று அவள் மாமனார் அதைப் பற்றி எச்சரித்து இருந்தார். இரவு வேளையில்

தூக்கத்தை கெடுத்துக் கொண்டு பாட்டிசைத்த அதை அவள் எத்தனையோ முறை விற்றுவிடத் தீர்மானித்தது உண்டு.

அமெரிக்காவிலிருந்து ஹரி எழுதியிருந்தான்... நமது புதிய வரவேற்பறையில் தாத்தாவின் கடியாரத்தை மாட்டி வையுங்கள். பழம் பொருள்களுக்கு எப்பொழுதுமே மதிப்பு' மகன் சொல்லிவிட்டான். தட்ட முடியுமா? அவளுக்கு அது வேதவாக்காயிற்றே? அப்படியே செய்து முடித்தாள். நன்றாக உறங்கிக் கொண்டிருக்கும்போது அது தலையில் சம்மட்டியாலடிப்பது போல் டிங்டாங்கென்று பாட்டிசைத்து அவளை நடு இரவில் எத்தனையோ தடவைகள் எழுப்பிவிட்டிருந்தது

கடிகாரம் ஒன்றை மட்டுமா அவளது மதிப்புக்குகந்த மாமனார் அமிர்தலிங்கம் அவள் தலையில் கட்டிவிட்டுப் போயிருந்தார்? தாம் நடத்திவந்த விஜயா அண்ட் கோ என்ற வர்த்தக ஸ்தாபனத்தையுமல்லவா சுமத்திவிட்டுப் போயிருந்தார். நோய் அதிகரித்துப் படுத்த படுக்கையாகிவிட்டபோது அவரிடம் ஒருநாள் அவள் துணிவுடன் கேட்டுப் பார்த்தாள். ''பள்ளிக் கூடத்தில் ஆசிரியை வேலை பார்த்த எனக்கும் வியாபாரத்துக்கும் ரொம்ப தூரம். நீங்களே ஒரு நல்ல விலைக்கு இதை யாருக்காவது வித்து விடுங்க. அந்தப் பணம் உங்க பேரனுக்குப் பிற்காலத்துக்கு உபயோகமாக இருக்கும்.''

வந்ததே கிழவருக்குக் கோபம். "என் பாட்டன் காலத்திலே இரும்பு வியாபாரம்னு தொடங்கினது இப்போ என் காலத்தில் மின்விசைப் பொருள்களின் மொத்த வியாபாரின்னு பிரபலமடைஞ்சிருக்கிறோம். அது உன்னை என்ன கடிக்குதா? திரும்பிப் பாக்கறதுக்குள்ளே ஹரி வாலிபனா வளர்ந்திருப்பான். பாட்டன் வச்ச வியாபாரத்தை ஜாம் ஜாமென்று நடத்திக்கிட்டு வர்ழாது வாழட்டுமே. எங்க பரம்பரையிலே உன் புரு



ஷனைத் தவிர நாங்க யாரும் பிறத்தியாருக்குக் கைகட்டி சேவகம் பண்ணினதில்லை!'' அடித்துப் பேசினார்.

''பிறரிடம் வேலை செய்வது அப்படி ஒன்றும் கேவலமில்லை.''

''பிடிவாதக்காரன்... சொன்ன பேச்சைக் கேட்காத தன் வினையை அனுபவிச்சான்.''

''உங்களுக்கு மட்டும் பிடிவாதம் குறைச்சலா. அவரைச் சொல்லிட்டீங்களே!'' அவள் சிரித்தாள்.

''உன் கணவனைப் பற்றிச் சொன்னால் உனக்குப் பொத்துக் கொண்டு வருகிறதே ரோஷம். அந்தக் கதையை விட்டுத் தள்ளு. உனக்கும் என் பேரனுக்கும் நான் விட்டுப் போகிற இந்த வியாபாரம் ஒரு பொன் சுரங்கம். மறக்காதே... எல்லாத்தையும் பார்த்துக்கிட்டு உதவி செய்ய முருகேசன் இருக்கான். நாணயமானவன். நன்றியுள்ள உழைப்பாளி... அவனை நீ நம்பலாம்.''

அவள் மாமனார் சொன்னது முற்றிலும் உண்மையாகவே இருந்தது — அவர் மறைவுக்குப் பின் மானேஜர் பதவியிலிருந்த முருகேசன் பூரணமாக ஒத்துழைத்தார். தானே வளர்ந்து அது விரைவில் பொன் கொழிக்கத் தொடங்கியது. விஜயா அண்டு கோ மொத்த வியாபார ஸ்தாபனம் அதே நைனியப்ப நாயக்கன் தெருவில் அதே பழைய கட்டிடத்தில்தான் இருந்தது. ஆனால் வளர்ந்தது... இன்ஜினியர் பட்டத்துடன் வெளி வந்த ஹரி சும்மா இருக்கவில்லை — அண்ணாசாலையில் அலங்காரமானதொரு கட்டிடத்தில் விஜயா எலக்ட்ரிகல் குட்ஸ் என்று சில்லறை வியாபாரக் கடை ஒன்றைத் தவணை முறையுடன் கூடியதாக ஆரம்பித்து வைத்துவிட்டான். அதைக் கவனிக்கும் பொறுப்பும் அவள் தலையில்... அதுவும் ஓஹோ என்றுதான் போய்க் கொண்டிருந்தது.

காலை பூஜை முடிந்ததும் அரை டம்ளர் சர்க்கரையில்லாத காப்பி இரண்டு இட்டிலி சாப்பிட்டதும் அவசரமாகக் காரை எடுத்துக் கொண்டு நகரத்திற்கு விரைவாள்—பகல் பொழுது சாப்பிட வரமுடியாதபடி ஆடிட்டர், பாங்க், வக்கீல் என்று அலைய அனேக வேலைகள்—இத்தனையும் அவளுக்குப் பெரும் பாரமாகத் தெரியவில்லை முருகேசன இருந்தவரை—திடீரென்று இரண்டு நாள் காய்ச்சலில் அவர் இறந்து போனதும்தான் அவள் உணர்ந்தாள். அவரது மறைவு ஒரு மாபெரும் இழப்பென்பதை.

அடுத்தபடியாக அந்தப்பதவிக்கு வந்த மோகனசுந்தரம் இந்த இரண்டு ஆண்டுகளில் அவளை எப்படித்தான் ஆட்டிப் படைத்தான்? சொல்லிக் கொள்ள முடியாத துன்பங்களை அனுபவித்தாள். வேண்டிய கண்காணிப்பாளர்கள் இருந்தார்கள்...எனினும் அடிக்கடி விலையுயர்ந்த மின்விசைச் சாமான்கள் களவு போயின...கணக்குகள் தடுமாறின—செலவு விரிந்து வரவு குறைந்தது. வியாபாரம் படுக்கத் தொடங்கியது.

மனிதனுக்குத் திறமைதான் இல்லை என்றால் மரியாதையும் இல்லை...நல்ல நடத்தையுமல்லவா இருக்கவில்லை... ஆபீஸ் குளிர்பானத்தை அருந்திக் கொண்டு அறையில் அவனுக்குப் பிடித்தமான அந்த அழகி ஸ்டெனோவுடன் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான்—கால்களை மேஜை மீது நீட்டிக் கொண்டு அசட்டையாக அவன் ஆசனத்தில் அமர்ந்திருக்கும் கோலத்தையும் அவள் எத்தனையோ முறை பார்த்திருக்கிறாள். பரபரப்படைந்தாலும் பாராட்டாதவள் போல் நடந்து கொண்டிருக்கிறாள்...'இப்போது என்னத்திற்கு பேச்சு? மகன் வரட்டும்' என்று மானேஜரைக் கறுவிக கொண்டிருந்தாள்—ஹரி வருவான்...மாபெருஞ் சாதனைகள் பல புரிவான் என்று என்னென்னவோ கன



வுகள்... அவளது ஆசைக் கனவுகளின் மீது எத்தனை பெரிய இடி!

ஹரியின் இந்த விபரீதமான மாற்றத்திற்குக் கட்டாயம் ஒரு பெரிய பயங்கரக் காரணம் இருக்கத்தானிருக்கிறது... அது மட்டும் அவளுக்குத் தெரிந்தால்?

பலபல எண்ணியபடி அவள் மறுபடியும் பின் பக்கத்து ஜன்னலைப் பார்த்தாள்...ஹரியின் அறையில் இன்னமும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. 'பேச வேண்டியது இருக்கு என்றானே! எப்படி ஆரம்பிப்பது என்ன பேசுவது என்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறானா என்ன?' அவளையும் மீறி இரண்டு சொட்டுக் கண்ணீர் கன்னங்களில் உருண்டு ஓடியது.

வரவேற்பறை கடிகாரம் மீண்டும் சிந்தனையைக் கலைத்தது. ஒன்று...இரண்டு...ஆறு தடவை அடித்து ஓய்ந்தது ஜன்னல் வழியே பார்த்தாள்...கீழ்வானம் சிவந்து பொழுது புலர்ந்துகொண்டு வந்தது—திடுக்கிட்டு எழுந்திருந்தாள். விடிய விடிய அப்படியே உட்கார்ந்துவிட்டாளே?

பூஜையறையின் வெளியே வந்து நின்ற மகனைக் கடைக்கண்ணால் கணித்தாள். குளித்து முடித்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு அவன் தயாராக நின்று கொண்டிருந்தான். எரிந்து கொண்டிருந்த கற்பூரத் தட்டை அவன் முன் மௌனமாக நீட்டினாள்...கண்களில் ஒற்றிக் கொண்டான்—பூஜையறைக்கு அடுத்த அந்த அறைக்குள் அவள் நுழைந்தாள்...மகன் பின் தொடர்ந்தான்—கதவைச் சாத்திவிட்டு பரபரப்புடன் நெஞ்சு படபடவென்று கலவரத்தில் துடிக்கத் தொடங்கியது. மேஜைமீது தட்டொன்றில் வேலைக்காரி கொண்டு வந்து வைத்துப் போன பவளமல்லி பூச்சரத்தைக்கையில் எடுத்துக் கொண்டாள்.

உள்ளத்திலே குமுறிய உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு குரலைத் தாழ்த்திக் கொண்டாள்.

"வந்ததிலிருந்து நீ ஒரு மாதிரியாக இருக்கே. என் மேலே உனக்கு என்னகோபமோ புரியலை. போகட்டும். வெகுதோலைவிலிருந்து வந்தவன் வீட்டுக்குள் நுழைஞ்சதும் நம் குலதெய்வத்தைக் கையெடுத்துக் கும்பிட மறந்து மாடிக்கு ஓடினாய்" அவள் குரல் தடைபட்டது.

"பூஜையறையில் மட்டும் நம்குலதெய்வம் குடியிருக்கவில்லை" காரமாகப் பதிலளித்தான் அவன்.

"அமெரிக்காவிலிருந்து இவ்வளவு தூரம் நீ பக்குவமடைந்து வந்திருப்பதைப் பற்றி ரொம்ப மகிழ்ச்சி. அப்பா படத்தைக் கூட வணங்காமல் அசட்டை பண்ணி விட்டுப் போக அவர் செஞ்ச தப்பு என்ன? இப்பவாவது பெரிய மனசு வச்சு இந்த பூச்சரத்தை அவர் படத்துக்கு உன் கையால் போடு" பேச முடியாது அவள் திணறினாள். கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்கிக் கொண்டு மகன் முகத்தை ஆவலுடன் பார்த்தாள். தாயார் நீட்டிய மலர்ச் சரத்தை வாங்கப் பிடிக்காதவன் போல் ஹரி தன் கரங்களைப் பின்னால் கட்டிக் கொண்டு தலையை நிமிர்த்தியபடி நின்றான்.

"இந்தப் பந்தங்கள் எல்லாம் ஒரு பக்கம் வச்சுட்டு நான் கேட்கிற கேள்விக்கு நீங்க இப்ப பதில் சொல்லுங்க போதும். இந்தப் படத்தில் இருக்கிறவர் யார்? நீங்க யார்? நான் யார்? உண்மை எனக்குத் தெரிந்தாகனும். இதுவரை மூடிவச்சது போதும்..." கோபத்துடன் சீறிய அவன் அவளை எரித்துவிடுவதுபோல் அனல் கக்கிய கண்களால் வெறித்தான்.

கட்டிடமே தலைமீது இடிந்து விழுந்துவிட்டது போன்ற பிரமிப்பு—திகைப்பு—துக்கம்—பயம், "ஹரி..." வசுமதியின் குரல் நடுங்கியது. என்ன கேள்வி இது? அடி



வயிற்றினின்று புறப்பட்ட விசும்பல் உடலைக் குலுக்கியது. கண்ணில் வழிந்த கண்ணீர்பார்வையை அடைகக துக்கம் நெஞ்சைப் பிளக்க நிற்க முடியாது ஆதரவுக்குச் சுவரைப் பிடித்துக் கொண்டு துவண்டு போய் நின்றாள்.

# 7

அந்த வீட்டின் முன்பகுதியில் குடியிருந்தவர் ஓர் அச்சகத் தொழிலாளி. அவர் வீடு திரும்பத் தினமும் கொஞ்சம் நேரம் செல்லும். அதனால் வாயிற்கதவு அடைபடாது கிடக்கும்.

காரிலிருந்து இறங்கிய மஹிமா, கனமான பிளாஸ்டிக் கூடையைத் தூக்கிக் கொண்டு சப்தமிடாது உள்ளே நுழைந்தாள். முற்றத்தில் காலைக் கழுவிக் கொள்ள இறங்கியபோது கவனித்தாள். வழக்கமாகச் சறுக்கி விடும் பாசிப் படலம் மறைந்து முற்றம் மிகவும் சுத்தமாகக் கழுவிவிடப்பட்டிருந்தது. யார் வேலை? அடுத்த பகுதியைத் தாண்டிக் கொண்டு உள்ளே நடந்தாள். அவர்கள் வசித்த பகுதி பின்னாலிருந்தது. எதிர்ப்புறத்துப் பகுதியில் வழக்கம்போல் கணவனுக்கும் மனைவிக்கும் சண்டை. இடையே கைக்குழந்தையின் அலறல். இந்தக் கூச்சலில் அண்ணன் பரீட்சைக்கு எப்படித்தான் படிக்கிறாரோ! கவலைப்பட்டபடி அவள் சப்தமிடாது தாழ்வாரத்தில் வந்து நின்றாள். சுவரோரமிருந்தகயிற்றுக் கட்டிலின்மீது புத்தகத்திற்குள் தலையைக் கவிழ்த்துக் கொண்டிருந்த கணேசன் படிப்பில் மூழ்கிக் கொண்டிருந்தான். அவளைக் கவனிக்கவில்லை. அதற்கடுத்தாற் போலிருந்த சிறிய தடுப்புத்தான் அவர்கள் வீட்டுச் சமையலறை.

காலடி ஓசை கேட்டதும் ஞானம் வெளியேவந்தாள் "வந்துட்டியா? நீ சாப்பிடனுமே, அதுக்குள் சோத்தில் தண்ணியை ஊத்தி வைப்பதான்னு கவலைப் பட்டுக்கிட்டிருந்தேன்..." மகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்

"அவங்க வீட்டுக்குப் போனா சாப்பிடாம அவங்க அனுப்புவாங்களா? சாப்பிட்டுவிட்டேன். போதாததுக்குக் குழந்தைகளுக்குக் கொடுக்கச் சொல்லி ஒரு மூட்டை பலகாரங்களை வேறு கொடுத்தனுப்பியிருக்கிறாங்க" கூடையைத் தாயின் முன் தரையில் வைத்தாள்.

"இப்பத்தான் வந்தியா? உனக்காகத் தூங்காம காத்துக்கிட்டிருக்கிறேன்" சிவராமனின் குரல் அடுத்த அறையிலிருந்து அவளை அழைத்தது.

அந்தப் பகுதிக்கு ஒரே ஒரு படுக்கையறைதான் நோயாளி சிவராமன் அதில்தான் படுத்துக் கிடந்தார். கட்டிலின் மீது அவர் சிரமப்பட்டுக் கொண்டு திரும்பிப் புரள்வதைக் கண்ட மகள் ஓடிச்சென்று உதவினாள். "எங்க யாரையாவது கூப்பிடுங்க அப்பா. உருண்டு கீழே விழுந்து விட்டீங்கன்னா என்ன ஆகிறது?" அன்புடன் கடிந்து கொண்டாள்.

தம்பியும் தங்கையும் நடையில் விரித்துப் போட்டிருந்த பாயில் தூங்கிக் கொண்டிருந்தனர். சமைக்குமிடத்துத் தடுப்பைத் தட்டியினால் மூடிவிட்டு ஞானம் அறைக்குள் வந்தாள். அவள் கையிலிருந்து கிழிந்த பாயைஓரக் கண்ணால் பார்த்த மஹிமா வேதனைப்பட்டாள். இவைகளை ஒழித்துவிட்டுப் புதியவை வாங்கிப் போடவேண்டுமென்று அவள் திட்டமிட்டிருந்தாள். அதற்குள் அண்ணன் கணேசன் ஒரு காய்ச்சலில் படுத்துவிட்டான். படிக்கிற பிள்ளை, வருங்காலத்துச் சுமைதாங்கி. அவனைப் பாதுகாக்க, புதுப் பாய்களுக்குச் சேர்த்த பணம் செலவாகிவிட்டது. இந்த நிலையில் வாழ்க்கை போய்க்



கொண்டிருந்தால்? அவர்கள் எழுந்து நிமிர்ந்து வாழ ஏதேனும் வகை உண்டா?......ம்ம்......

"கொஞ்சம் அந்த வைத்தியசாலை மருந்தை எடுத்து வந்து கைகளுக்குத் தேய்ச்சுவிட்டுக் கொண்டே எல்லாம் சொல்லு கேக்க ஆசையாக இருக்கு" என அப்பா உத்திரவிட்டார்

"விழுந்துவிட்ட கை கால் தசைகளை ஊக்குவிக்கத் தினமும் மருந்து போட்டுத் தேய்க்க வேண்டும். அப்படிச் செய்தால் ஒரு சமயம் அவைகள் புத்துணர்வு பெற்று அவர் கொஞ்ச காலத்தில் மீண்டும் எழுந்து நடக்கலாம்' இப்படி ஒரு நம்பிக்கையை உண்டு பண்ணிவிட்டிருந்தார் அவரைக் கவனித்த வைத்தியர். பிஸியோ தெரபி போன்ற சிகிச்சை முறைக்குச் சிவராமனிடம் பண வசதியில்லை. ஆயுர்வேத வைத்தியசாலையிலிருந்து அவர் மனைவி பாரிச வாயுவைக் கண்டிக்கும் தைலத்தை வாங்கிக்கொண்டு வந்திருந்தாள். தினசரிகருத்துடன் இரண்டு வேளைகள் அந்தத் தைலத்தைத் தடவி மரத்துக் கிடந்த அவரது கையையும் காலையும் அவள் அழுத்தித்தேய்த்துவிடுவது வழக்கம். இன்று அவளால் முடியவில்லை. "தோள்பட்டை நோகுது. வலி தாங்க முடியலை" முணுமுணுத்துக்கொண்டு பாயைத் தரைமீது கட்டிலருகில் விரித்து உட்கார்ந்து கொண்டாள்.

"அந்தத் தைலத்தைப் போட்டு என் கையைக்கொஞ்சம் தேச்சுவிடம்மா. இன்னிக்கு உங்கம்மாவால் எதுவும் ஆகாது அவளுக்கு ஏகப்பட்ட வேலை. பாசிபடர்ந்து கிடந்த முற்றத்தைப் பத்தி யாரும் கவலைப்படலையேன்னு ப்ளீச்சிங் பவுடரைக் கொட்டி அதைத் தேய்ச்சுக் கழுவினதிலேதான் தோள்பட்டை விட்டுப் போச்சு" அவர் சிரித்தார்.

இப்போது மஹிமாவுக்குப் புரிந்துவிட்டது "கைநோவு எடுக்குமளவு, அந்தக் கடினமான வேலையை மேற்

கொண்டிருக்கிறாளே ஏன்? இத்தனை நாளும் செய்திருக்கலாம் இல்லையா? இப்ப திடீர்னு ஏன் செய்தாங்க தெரியுமா? நம்மைப் பார்க்க ஹரி வருவான். அப்போ முற்றம் அசிங்கமாக இருக்கக் கூடாதுன்னு காலையில் ஆரம்பிச்ச வேலை. பகல் பொழுதுவரை எதையும் கவனிக்கவில்லை'' மனைவியைப் பரிகசித்தார் சிவராமன்

ஹரியின் வரவிற்காக அவர்கள் வீட்டில்கூட இப்படி ஏற்பாடுகளா? தைலப்புட்டியுடன் மஹிமா தந்தையின் அருகில் உட்கார்ந்து கொண்டாள். அவர்கள் வீட்டில் ஹரி தன் தாயுடன் சில தடவைகள் வந்திருக்கிறான். 'எங்க வீட்டுக்கு வரும்படி உங்களை அழைக்கக் கூடஎங்களுக்கு ரொம்ப வெட்கமாக இருக்கிறது'' ஒருமுறை சந்திப்பின்போது மஹிமா அவனிடம் சொன்னாள்.

''ஏன் வெட்கப்படணும்? ஏழையாகப் பிறந்தது உன் குற்றமில்லை. பண வசதியுடன் வாழ்வது என் குற்றமுமில்லை. என்னைப் பொறுத்தவரை எனக்கு வேண்டியது உன் அன்பு—நீ அவ்வளவுதான்'' அந்த இனிப்பான வார்த்தைகள் அவள் காதுகளில் ஆயிரம் முறைகள் வந்து திரும்பத் திரும்ப ஒலித்தன. உறக்கமில்லாது படுக்கையில் புரளும் போதெல்லாம் எண்ணி எண்ணி இறுமாந்தாள் பூரித்தாள். பெருமைப்பட்டுக் கொண்டாள். அவனது பிரிவைச்சகித்துக்கொள்ள அந்த வார்த்தைகள் தான் ஒரு மகா மந்திரம் போல் உதவியது. ஏனோ திடீரென்று இப்போது நினைவுக்குவந்தது, உடல் முழுவதும் ஓடிய ரத்தம் குபீரென்று முகத்தில் பாய்ந்து விட்டது போன்ற ஒரு நிலை நெஞ்சு படபடக்க மெய்மறந்து உட்கார்ந்துவிட்டாள்.

''ஹரி எப்படியம்மா இருக்கிறான்? வசுமதியம்மாளுக்குச் சந்தோஷம் கரை புரண்டு போயிருக்குமே? ஹரி தங்கமான பிள்ளை. அம்மாவைக் கண்டு பூரித்துப் போயிருப்பான். எனக்குத்தான் ஏர் போட்டுக்கு வரக்கொடுத்து வைக்கவில்லை'' பெருமூச்செறிந்தார் தந்தை.



திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள் அவள். இதற்கு என்ன பதில் சொல்வாள்? 'நீங்க நினைக்கிறபடி இல்லை. ஹரி ரொம்ப மாறிவிட்டிருக்கிறார். அந்த வீட்டில் ஆனந்தமும் அமைதியும் அஸ்தமித்துவிட்டன.' சொல்ல வேண்டுமென்ற துடிப்பு. தன் உயிரோடு கலந்துவிட்ட ஹரியைப் பற்றி மட்டமாகப் பேசுவதா என்று வேறு ஒரு நினைப்பு. ''நன்றாகத்தானிருக்கிறார் அப்பா. அம்மாவுக்கும் மகனைப் பார்த்து ரொம்பச் சந்தோஷம்தான்'' மெல்லிய குரலில் கூறினாள்.

''ஆமாம், அவங்க அம்மாவுக்கு ஹரி என்ன வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்?'' ஞானம் நடுவில் ஒரு கேள்வியை விடுத்தாள். அவள் ஒரு பத்தாம் பசலி. அதிகம் படித்தவள் இல்லை. கிராமத்தில் வளர்ந்தவள்.

''பட்டணத்துக்கு வந்துகூட உனக்கு இன்னமும் பேசத் தெரியலை. எதை எப்போ எப்படி கேட்கிறதுங்கிற விதரனை தெரியலை'' சிவராமன் மனைவியைக் கடிந்து கொண்டார். ''அம்மா சங்கதிதான் தெரியுமே. விட்டுத்தள்ளு. ஹரி போன காரியமெல்லாம் ஜெயந்தானே? படிப்பெல்லாம் முடிஞ்சு போச்சல்லவா? நான் கூட முட்டாள்தனமாகக் கேட்கிறேன். ஹரிக்குப் பேசக் கூடப் பொழுது இருந்திருக்காது. இன்னிக்கு மத்தியானம் தானே வந்து இறங்கினான்? பெட்டியைத் திறந்து சாமான்களை எடுத்து வைக்கக்கூடப் பொழுதிருந்திருக்காது.''

''ஆமாம். அப்பா வந்ததும் அவருக்குத் தாங்க முடியாத தலைவலி. படுத்துவிட்டார். சாப்பிடக்கூட இல்லை. பால் மட்டும்தான் கொஞ்சம் சாப்பிட்டார்.''

''ஆகட்டும் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கட்டும் பிறகு ஒருநாள் நம்ப வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கலாம்.''

'ஹரி முன்போல் இல்லையே. ஒரு சமயம் இந்த ஏழைகளின் வீட்டிற்கு வர மறுத்தால்...' எண்ணியதும் ஏற்பட்ட திகிலில் அவள் மௌனமாக இருந்தாள்.

சிவராமன் மெல்லத் தமது கரத்தை நீட்டி அவள் நெற்றி மீது புரண்டு விழுந்திருந்த கூந்தலை அன்புடன் ஒதுக்கி விட்டார். "கொஞ்ச நாள் எங்களுக்காகப் பொறுமையா இரும்மா. நான் மட்டும் கையும் காலுடன் இருந்தா நீ உழைச்சுப் போடறதை உட்கார்ந்து கொண்டு தின்பேனா? இப்படி ஒரு துரதிர்ஷ்டம் எனக்கு. கணேஷ் பாஸ் பண்ணினதும் உடனடியாக ஏதாவது வேலை தேடிக்கொள்ளச் சொல்லிடுவேன். அப்புறம் உனக்கு ஒரு நல்ல இடமாப் பார்த்துக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டாதான் என் மனசு நிம்மதியடையும்." வார்த்தைகள் நடுங்க உணர்ச்சி பொங்க அவர் தடுமாறினார்.

மஹிமா திடுக்கிட்டுப் போனாள். 'அப்பாவுக்கு இப்படி ஒரு யோசனை. அவருக்கு மட்டும் உண்மை நிலை தெரிந்திருந்தால்...'

அவள் எழுந்திருந்தாள் "களைப்பாக இருக்குப்பா. தூங்கப் போகட்டுமா? மத்த விஷயங்களை நாளைக்குப் பேசலாம் இல்லையா?" விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தாள்.

நடையின் விளக்கை அணைத்துவிட்டுக் கட்டியிருந்த பட்டுச் சேலையை அவிழ்த்து வீட்டில் உபயோகிக்கும் பழைய சேலை ஒன்றைச் சுற்றிக் கொண்டு படுத்தாள். வெகுநேரம் படித்துக் கொண்டிருந்த கணேசனும் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துவிட்டான். வீடு முழுவதும் இருளில் மூழ்கிக் கிடந்தது. உறக்கமின்றி அந்த இருளில் தனது வருங்காலத்தைத் துழாவிக்கொண்டிருந்தாள் மஹிமா.



'ஹரி ஏன் இப்படி மாறிவிட்டிருக்கிறார்? நாளை மறுநாள் காரணம் சொல்கிறேன் என்றாரே. என்ன சொல்லப் போகிறார்?' அவளால் கேட்டுச் சகிக்க முடியாத பயங்கரமானதொரு காரணமாக இருந்துவிட்டால்...?

மறுநாள்காலை அவளுக்கு ஓய்வுநாள். காப்பி பலகாரத் தட்டுடன் தந்தையை உபசரிக்க அவள் அறைக்குள் நுழைந்தாள். வழக்கமில்லாத அந்த வேளையில் சேனாபதி கட்டிலின் அருகே பிரம்பு நாற்காலியொன்றில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு திகைப்படைந்து போனாள்,

கொண்டு வந்தவைகளை அருகே கிடந்த முக்காலி மீது வைத்துவிட்டு. "தாத்தா, உங்களுக்குக் கொஞ்சம் சூடாகக் காப்பி எடுத்து வருகிறேன்" என்று திரும்பினாள்.

"மஹிமா, அம்மாவைக் கூப்பிடு." சிவராமன் குரலில் பரபரப்பு.

ஞானம் புடவைத் தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டு ஓடி வந்தாள் அங்கே.

'ஞானம்! மஹிமாவை உடனே கையுடன் கூட்டிக் கொண்டு போகக் காரை எடுத்துக்கொண்டு சேனாபதி வந்திருக்கிறார். இந்தச் சமயம் அனுப்பிவைச்சு உதவி செய்ய வேண்டியது நம்ம கடமை. வசுமதி அம்மா கீழே விழுந்து மண்டையில் அடிபட்டு."

"ஐயோ! என்ன ஆச்சு?" திகிலுடன் கூவினாள் ஞானம்.

"டாக்டர் வந்து காயத்துக்கு மூணு தையல் போட்டு விட்டுப் போயிருக்காங்க. கால் வழுக்கிப் பின் கட்டுத் தாழ்வாரத்துத் தூணில் முட்டிக்கொண்டு விழுந்துட்டாங்க. நர்ஸ்கூட அமர்த்தியிருக்கிறோம், நான் ஆண்

பிள்ளை. அம்மாகிட்ட போய் ஆதரவாகப்பேசி எதுவும் செய்ய முடியுமா? கொஞ்சம் மஹிமாவை அனுப்பி வச்சா ரொம்ப உபகாரமாக இருக்கும்...'' அவர் குரல் தழுதழுத்தது

சிவராமன் பதறிப் போனார் மஹிமா கிளம்பும்மா. ஒரு பையிலே உன் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டு சீக்கிரம் புறப்படு. உனக்கு லீவு இருக்குதுன்னு சொன்னியே. மறக்காம நாளையிலிருந்து ஆபீசிற்கு ஒரு வாரம் லீவு எழுதிப் போட்டுவிடு.'

பழக்கடையருகே காரை நிறுத்தச் சொல்லிவிட்டு சேனாபதி இறங்கினார். மஹிமாவைக் கூட வரும்படி ஜாடை காட்டினார்.

“டிரைவர் எதிரில் எதுவும் பேச விரும்பவில்லை. அங்கே வீட்டிலும் பேச முடியாது. அம்மா வழுக்கி விழுந்து தலையில் அடிபடவில்லை.''

“அப்படின்னா?'' திகைப்புடன் வினவினாள் அவள்.

பழங்களைப் பொறுக்கிக் கொண்டு தாழ்ந்த குரலில் அவர் பேசினார். “சின்ன எஜமான் வீட்டுக்கு வந்த வேளையும் சரியில்லை. அவர் போக்கும் சரியில்லை. இன்னிக்கு காலை இரண்டு பேரும் அந்த அறைக்குள்ளே போனாங்க. என்ன பேசினாங்களோ தெரியாது, வேகமா ஹரி வெளியே வந்தார். அம்மாவும் கூட வந்தாங்க' இரண்டு பேரும் பூஜை அறைக்குள்ளே போனாங்க. அது சமயம் நல்ல வேளையா வேலைக்காரங்க ஒருத்தரும் அருகில் இல்லை. சமையலறையிலிருந்து காப்பியை எடுத்துக்கொண்டு நான் வந்து கொண்டிருந்தேன். என் காதுகளில் நன்றாகக் கேட்டது. அம்மா உரத்துப் பேசினாங்க. 'முடியாது. முடியாது'ன்னாங்க. ஹரி என்னவோ பதிலுக்கு அதட்டினார். திடீர்னு ஆவேசம் வந்தவர் போல அம்மா, 'முடியாது, உசிரு போனாலும் முடி



யாது...முடியாது'ன்னு கத்திக்கிட்டு பூஜையறையிலிருந்து வெளிப்பட்டாங்க. அவங்களைப் பார்த்து நான் பயந்துட்டேன். விரிச்சுப் போட்ட தலையும், அழுது சிவந்து போன கண்களுமாக அந்தக் கோலத்திலே அவங்களை நான் இதுவரை பார்த்ததேயில்லை. வெளியே வந்தவங்க நிற்க முடியாமல் தடுமாறினாங்க. 'ஐயா! அவங்களைப் பிடியுங்கோ'ன்னு நான் கத்திவிட்டு ஓடி வரத்துக்குள்ளே அம்மா மயக்கம் போட்டுத் தாழ்வாரக் கல் தூண் மேலே தலைமோதி...''

மஹிமாவின் உடல் பயத்தில் சில்லிட்டுப் போனது. 'அவர்களது திருமண விஷயமாக ஹரி அவசரமாகப் பேசிக் குழப்பத்தை உண்டாக்கியதில் ஏற்பட்ட விபத்தா இது? அப்படியென்றால் வசுமதி அம்மாளுக்குத் தன்னை மருமகளாக ஏற்கப் பிரியம் இல்லையா?'

பழக்கூடையை டிரைவரிடம் கொடுத்துவிட்டு முன் ஆசனத்தில் அமர்ந்த சேனாபதி, திரும்பிப் பார்த்தார். 'மஹிமா! அனுபவப்பட்டவன் சொல்கிறேன், புரிஞ்சுக்கோ. நம்போல இருக்கிறவங்களுக்குப் பணக்காரர்களுடைய சிநேகிதம் பாம்போடு விளையாடறதுக்கு ஒப்பாகும்...''

மஹிமாவின் நெஞ்சும் மார்பும் படபடத்தது. முகத்தில் வியர்வை அரும்பிக் கன்னங்களில் வழிந்து ஓடியது. சேனாபதி என்ன சொல்ல இப்படி மர்மமாகப் பேசுகிறார்? அவளுக்கு ஒரே திகைப்பு.

## 8

வசுமதி லேசாகக் கண்களைத்திறந்து பார்த்தாள். [illegible] நிற்பது போல் சட்டென அவள் பார்வைக்கு [illegible] புலப்படவில்லை. தலை பாரமாகக் கனத்தது.

சிறிது பொழுதில் மெல்ல புகை விலகிக்கொண்டு சூழ்நிலை புலனாவதை அவள் உணர்ந்தாள். நெற்றிமீது புரண்டு கிடந்த கூந்தலைத் தள்ளிக் கொள்ள வலது கையைத் தூக்கினாள். நெற்றி ஓரத்தில் சிலுவை வடிவில் போடப்பட்டிருந்த பிளாஸ்திரி மீது கைபட்டதும், அப்பப்பா! என்ன வேதனை! பளிச்சென்றுஎல்லாம் அவளது நினைவில் எழுந்தன. தலையில் அடிபட்ட காயத்தின் நோவு அதைவிட உள்ளத்திலே ஏற்பட்டிருந்தபுண்ணின் நோவு தாளாது அவள் 'அமமா!' என்று வாய்விட்டு அரற்றினாள். நல்லவேளை அதே அறையில் அவளைப் படுக்க வைத்திருந்தார்கள். அதுவரை அவளுக்கு ஒரு திருப்தி.

"அம்மா!" என்று மீண்டும் வசுமதி வாய்விட்டு அரற்றினாள். புரள முடியாது உடல் புண்ணாக நொந்தது. டாக்டர் அமர்த்திபிருந்த நர்ஸ் ஓடிவந்தாள். "அம்மா! உங்களுக்கு என்ன வேணும்?" குழைவாக விசாரித்தாள்.

வசுமதி இன்னும் சிறிது கண்களை அகலத் திறந்து கவனித்தாள் அவள் பார்வை காலருகே நின்ற மஹிமாவிடம் சென்று வந்தது. ஆமாம்! இவள் இங்கே எப்படி வந்தாள்! சேனாபதி முந்திக்கொண்டார் "உங்களுடன் கூடப் பத்துநாட்கள் இருந்து உதவும்படி சிவராமன் அய்யா அனுப்பிபிருக்காங்க. நாளையிலிருந்து லீவு எடுத்துக்க ஏற்பாடு."

வீட்டின் நிலைமை சாதாரணமாக இருந்தால் அவள் உத்திரவின்றி ஒரு அணுவும் அசையாது—பெயராது—உள்ளே வராது இப்போது வெள்ளம் தலைக்குமேல் ஓடிக்கொண்டிருந்தது. அவளால் இனி எதைதான் கட்டுப்படுத்த முடியும்?...

அதுவரை வராந்தாவிலே தலையைத் தரைமீது பதித்துக்கொண்டு சோகம் நிறைந்த கண்களால் மனிதர்



களை அளந்தவண்ணம் காத்து கிடந்த ரெக்ஸி குபீரென்று பாய்ந்து எஜமானியின் அறைக்குள்ளே வந்துவிட்டது. பெஞ்சியின் அருகே வந்து மிகவும் ஆசையுடன் வசுமதியின் கரத்தை நக்கிக்கொண்டு நின்றது.

'யாரது? ரெக்ஸியா? இது எங்கே வந்தது? வியப்புடன் கேட்ட வண்ணம் அதன் தலையைப் பரிவுடன் தடவினாள். ஏனோ அவள் கண்களில் கண்ணீர் பொங்கிக் கொண்டு வந்தது

"ரெக்ஸி இதுவரை தண்ணீகூட சாப்பிடலைம்மா. பாவம் பட்டினியா கிடக்கு.' சேனாபதி மஹிமா பக்கம் திருப்பினார். "நர்ஸம்மாவை அழைச்சிட்டு டைனிங் ஹாலுக்கு போம்மா. மேஜைமேல் சாப்பிட ஓவல் கலக்கி வைச்சிருக்கிறேன். அவர்களுக்குத் கொடுத்து நீயும் சாப்பிடு."

அவர்கள் இருவரும் வெளியேறியதும் மறுபடியும் கண்களைத் திறந்தாள் வசுமதி. இதுவரை அவள் அடக்கிக் கொண்டிருந்த கண்ணீர்த் துளி கடைவழியே இருபுறமும் வழிந்தது. "ஹரி சாப்பிட்டானா? என்ன பண்ணுகிறான்?" அவள் குரல் கரகரத்தது. பிள்ளைப் பாசத்தின்முன் சுயகௌரவம் தன்மானம் எல்லாம் தூசி போலும்?

எஜமானியின் நெஞ்சின் மீது முகத்தை வைத்துக் கொண்டு ஞொய் ஞொய் என்று கொஞ்சியபடி வாலை ஆட்டிக்கொண்டு நின்ற ரெக்ஸியை சேனாபதி பார்த்தார். துன்பத்துடன் பெருமூச்செறிந்தார். அவர் நினைவில் அந்தக் கவிஞரது பாட்டுதான் சட்டென்று எழுந்தது. 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா...நன்றிகெட்ட பிள்ளையைவிட நாய்கள் மேலடா...' எத்தனை பெரிய உண்மை!

தாயின் மடியில் உட்கார்ந்துகொண்டு அவள் அள்ளி வாயில் ஊட்டிய சோற்றை உண்டு அவர் கண்முன்

வளர்ந்தவன் ஹரி. எத்தனை நெஞ்சழுத்தக்காரனாக மாறி விட்டான். நடுவில் சாப்பிட ஒரு முறை கீழே இறங்கி வந்தான். தாயைப் பற்றி ஏதாவது கேட்பான் என்று அவர் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டுதான் மௌனமாகப் பரிமாறினார். ஊஹூம்.... அவன் வாயைத் திறக்கவேயில்லையே?

காயத்தின் வேதனையில் அரற்றிக் கொண்டிருக்கும் அவளிடம் பிள்ளையின் அசட்டையான நடத்தையைப் பற்றிச்சொல்ல அவருக்கு விருப்பமில்லை. "டாக்டர் வருகிறாப்போல இருக்கு. அவருடைய காரின் ஹார்ன் கேக்குதே..." பேச்சை மாற்றிவிட்டு வெளியே வந்தார். "பழனி, ரெக்ஸியைப் பிடித்து கட்டு" டாக்டரை வரவேற்க முன்பக்கம் விரைந்தார்.

குடும்ப டாக்டர் வாசுதேவன் சுமந்து கொண்டு வந்த மருந்துப் பையை ஓடிச்சென்று பெற்றுக் கொண்டார் சேனாபதி. வாசுதேவனை அவருக்குப் பல வருஷங்களாகப் பழக்கம். பெரியவர் காலத்திலிருந்து அந்த வீட்டுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் இன்னொரு மனிதர் அந்த வைத்தியர். எழுபதை எட்டிக்கொண்டிருந்த போதிலும் அவரிடம் அந்தத் துள்ளு நடை இன்னமும் விட்டபாடில்லை.

'அம்மா எப்படி இருக்காங்க? ம்?'' என்றுகேட்டபடி அவர் மிடுக்காக நடந்தார்.

ஹரி வேகமாகப் படிகளில் இறங்கி வைத்தியரைக் காண வந்து கொண்டிருந்தான். அதே சமயம் அவசரமாக ஓடிவந்த நர்ஸ் உள்ளேசென்று அறையின் கதவைச் சாத்திக்கொண்டு விட்டாள்.

தலையைக் குனிந்துகொண்டு வெளியே நின்ற ஹரி அருகில் நின்று கொண்டிருந்த சேனாபதியையோ மஹிமாவையோ பார்க்கவும் இல்லை. பேசவுமில்லை. சிறிது



பொழுதில் கதவைத் திறந்து நர்ஸ் ஹரியை வரும்படி ஜாடை காட்டினாள். அவன் சென்றான். மற்ற இருவரும் வெளியே நின்று கொண்டிருந்தனர். கதவு சிறிது திறந்தபடியேதானிருந்தது. டாக்டர் உரத்த குரலில் பேசினார் வழக்கமாக நோயாளியிடம் காட்டும் பரிவும் பாசமும் கலந்த குரலில். "ரத்தப் பரிட்சையில் ரத்தம் ஓ.கே. பிரஷர் ஓ கே. மயக்கம் போட்டுவிழுந்ததா உங்கள் பிள்ளை சொன்னான். நிஜமாக மயக்கம் போட்டு விழுந்தீங்களா அல்லது கால் இடறி விழுந்துவிட்டீங்களா? வைத்தியர்கிட்டேயும் வக்கீலிடமும் பொய் சொல்ல கூடாது. தெரியுமல்லவா....?'' அவர் உரத்த குரலில் சிரித்தார்

"என் பிள்ளை தடியால் தலையில் அடித்தான், அப்படித்தான் வைச்சுக்குங்க! அதனால் என்ன?'' கேலியாக அவள் கேட்டாள்.

வாசுதேவன் ஹரியின் முதுகில் செல்லமாகத் தட்டினார்.

"தங்கமான பிள்ளை. இவனைப்போல ஒரு பிள்ளையை அடைய நீங்க கொடுத்து வச்சிருக்கணும்.''

ஹரியின் முகம் ரத்தமாகச் சிவந்தது. குற்ற உணர்வுடன் தரையைப் பாாத்துக் கொண்டு நின்றான்

"என் பேச்சை கேட்பீங்களா அம்மா!'' டாக்டர் முடிவாகக் கேட்டார்.

"எப்பொழுதாவது மறுத்திருக்கிறேனா?''

"ஹரி வந்துவிட்டான். இனிமேலே பிசினஸ் அது இதுன்னு நீங்க அலைகிறதை விட்டுவிட்டுக் கோயில் குளம்னு இருங்க. அத்தோட சீக்கிரம் பையனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டி வச்சுடுங்க.''

"அப்படியே செய்தால் போச்சு.'' அவள் வார்த்தைகள் நெஞ்சினின்று வரவில்லை.

டாக்டர், நர்ஸ் இருவரும் வெளியேறினார்கள். ஹரி ஒரு கணம் தயங்கிவிட்டு அவர்களைப் பின் தொடர்ந்தான்.

மீண்டும் அறையில் காலடிசப்தம். மஹிமா வந்தாள். காலையிலிருந்து மஹிமாவின் மனத்தை உறுத்திய அந்தக் கவலை இப்பொழுது பெரும் திகிலாக மாறிவிட்டிருந்தது. நேருக்கு நேர் தனியே பார்க்க நேர்ந்துவிட்டது. இப்போது வசுமதி என்ன சொல்லப் போகிறாரோ?

''மஹிமா, இப்படி வா...'' பரிவுடன் அழைத்தாள் வசுமதி. அருகில் வந்ததும் அன்புடன் கரத்தைப் பற்றிக் கொண்டாள். ''பணம் இருந்துட்டா மட்டும்போதாது. மனுஷ சகாயம் என்பது பணத்துக்கு மேலே அவசியமானது, உடம்புக்கு முடியாம படுத்துவிடும் போதுதான் இந்த உண்மை தெரியுது. என்னோடு பத்துநாள் தங்கி உதவி செய்யப் பெரிய மனசு பண்ணி உங்கப்பா இங்கே அனுப்பி வச்சிருக்கிறார். ரொம்ப நன்றி...'' அவள் குரல் தடைப்பட்டது.

மஹிமாவுக்கு இப்பொழுது பெரும் நிம்மதி. அன்று காலை ஏற்பட்ட கலவரம் அவர்களது திருமணத்தைப் பற்றியதாக இருக்க முடியாது. அப்படி இருந்தால் வசுமதி அம்மா பரிவுடன் பார்ப்பார்களா, பேசுவார்களா, தங்கியிருக்கத்தான் அனுமதிப்பார்களா?...

''கை கால்களைக் கழுவிக் கொண்டு பூஜையறைக்குப் போய் சுவாமி விளக்கை ஏற்று. ராசாத்தி பூவைக் கட்டித் தட்டிலே வச்சிட்டுப் போயிருப்பா. அபிராமிக்கு ஒரு மாலையைப் போடு. இன்னொரு மாலையை எடுத்துவந்து ஹரி அப்பா படத்துக்குப்போடு. என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. தையல் பிரிச்சு, தலைக்குத் தண்ணி ஊற்றிக்கிற வரைக்கும் நீதான் இந்தப்பூஜை காரியத்தைப் பார்த்துக்கணும்.''



மஹிமாவுக்கு வியப்பும் ஆனந்தமும் தாங்க முடியவில்லை எவ்வளவு பெரிய உரிமையை வசுமதி அவளுக்கு வழங்கிவிட்டிருந்தாள்!

பூஜை அறையின் குத்துவிளக்கை ஏற்றிய மஹிமாவின் கைவிரல்கள் உணர்ச்சி வசத்தில் நடுங்கின. ''இன்றுபோல் என்றும் இந்த விளக்கை ஏற்றும் பாக்கியத்தை எனக்கு நீ அருளவேண்டும் தாயே!...'' மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

இருள் பரவிக்கொண்டு வருவதையுணர்ந்து விடிவிளக்கை ஏற்றிவிட்டுப் போயிருந்தார் சேனாபதி. அதன் மங்கிய ஒளியில் கணவரது போட்டோவை உற்றுப் பார்த்த வசுமதிக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

'உங்கள் மகன் ஹரி என்னை எப்படியெல்லாம் பேசிவிட்டான்! அந்த அவமானத்தைச் சகித்துக் கொண்டு நான் இன்னமும் உயிரோடு இருக்கிறேன்!...'

அன்று காலை அதே அறையில் கண்கள் சிவக்க மூக்கு நுனி துடிக்க, மீசை நடுங்க, பிள்ளை தாயை வெறித்துப் பார்த்துக் கொண்டு கேட்டான்.

''எனக்கு எல்லாம் தெரியும். இனி மறைப்பதில் பயன் இல்லை. நம்ப குடும்ப தெய்வத்துக்கு முன்னால் பொய்சொல்ல மாட்டீங்கன்னு தெரியும். அதனால் கேட்கிறேன். இப்ப சொல்லுங்க, அந்தப் படத்திலிருப்பவர் உண்மையில் என் தந்தையா?'' சீறினான் புலிபோல். விளக்கொளியில் பிரகாசித்த அருள்வடிவின் திருமுகத்தை உற்றுப் பார்த்தாள் வசுமதி அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது.

''என் குடும்பத்திலே பல தலைமுறையாக இவளை வைத்துப் பூஜிக்கிறோம். தொடர்ந்து நீயும் செய்துவா.

கஷ்டம் நேரும்போது கைகொடுப்பாள்...'' அவள் மாமனார் அமிர்தலிங்கம் தங்கள் குலதெய்வத்தை முதன் முதலாக அவ்வாறுதான் அவளுக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார். அவளும் அவ்வாறே செய்து வந்தாள் அவளை அந்த தெய்வம் இன்று வேடிக்கையல்லவா பார்த்துக் கொண்டிருந்தது?

''ஹரி, அபிராமி சாட்சியாகச் சொல்கிறேன், அவர் உன் தந்தை.''

''ஒப்புக் கொள்கிறேன். நீங்கள்?''

புயலில் அடிபட்ட கொடிபோல் உடல் நடுங்க உள்ளம் துடிக்க மகனின் முகத்தை இரக்கமாகப் பார்த்தாள்.

''உன் கண்களுக்கு. உன் மனசாட்சிக்கு நாம் எப்படித் தென்படுகிறேனோ அப்படியே வைத்துக்கொள்...' அவள் வார்த்தைகள் உடைந்தன.

''சுற்றி வளைக்கத் தேவையில்லை. நீங்கள் யார்?'' அவன் கர்ஜித்தான்.

''உன்னைப் பெற்றெடுக்கும் பாக்கியம் செய்யாத ஒரு பாவி!

''என் தந்தைக்கும் உங்களுக்கும் உண்மையில் என்ன உறவு?''

''ஹரி! இப்படி ஒரு கேள்வி கேட்க உனக்கு என்ன துணிச்சல்! கடவுள் சந்நிதியில் உன் தந்தைமீது ஆணையிட்டுச் சொல்கிறேன். என்னைத் திருமணம் செய்து கொண்ட கணவர் அவர்...'' விக்கி விக்கி அவள் அழுதாள்.

''அப்படியென்றால் என் தாயார் இப்போ எங்கே இருக்காங்க? இந்த உண்மை எனக்குத் தெரிந்தாக வேண்டும்....'' உறுமினான் அவன்.



''இது உனக்குத் தேவைப்படாத உண்மை. ஹரி வேண்டாம்...என் பேச்சைக் கேள்...'' புலம்பினாள்.

''பெற்ற தாய் யார்னு தெரிஞ்சுக்க விரும்புவது தேவையில்லாத உண்மையா? என் தாய் அனுபவிக்க வேண்டிய ஆஸ்தியை, சுகத்தை திருடிக் கொண்டு அவங்க மகனையும் அபகரிச்சுக் கொண்டு நீங்க எனக்கு செஞ்சிருக்கிற துரோகம்....அப்பப்பா! இத்தனை காலம் என் தாய்போல வேஷம்போட்டீங்களே-எப்பேர்ப்பட்ட நடிப்பு...''

ஆயிரம் வேல்களாகத் தாக்கிய அந்த வார்த்தைகளின் கொடுமையைத் தாள முடியாது 'ஹரி!' என்று அவள் அலறினாள்.

''என் தாய் எங்கே? உடனடியாக அவங்க முகவரி தேவை''

''முடியாது—சொல்ல முடியாது...'' அலறி அழுது கொண்டு வெளியே வந்தாள். வீடு முழுவதும் அவளுடன் சுழன்று வந்தது. மறுகணம் பொறுக்க முடியாத வலி, தொடர்ந்து பெரும் அமைதி.

## 9

கராஜ் சாத்தப்படும் ஓசை கேட்டது. ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தார் சேனாபதி. அம்பாசிடரை வாசல் முன்னால் கொண்டுவந்து நிறுத்திவிட்டுப் பூபதி பணிவுடன் காத்திருந்தான்.

தோளில் தொங்கிய துண்டை உதறி இடுப்பில் வேட்டி மீது கட்டிக் கொண்டு திரும்பினார். அவர் பார்த்தபடியே வி.ஐ.பி. ஆபீஸ் பையுடன் ஹரி

அங்கு வந்து நின்றான். ஒரே ஓட்டமாக அருகில்
வந்தார் அவர்

"ஆபீஸிற்கு போய் கொண்டிருக்கிறேன். அம்மா
விடம் சொல்லிவிடுங்கள்" அவன் மேலே விடுவிடுவென்று
நடந்தான். கடந்த ஒரு வார காலமாக நடந்து வரும்
நிகழ்ச்சிதான் அது "நீங்களே சொல்லிவிட்டுப் போகக்
கூடாதா?" கேட்க நாக்கு துடிக்கத்தான் செய்தது.
என்னதான் பாசமும் பரிவுமாகப்பூரண விசுவாசத்துடன்
உழைத்த போதிலும் சரிக்குச் சமமாகப் பேசலாமா?
அவர் வேலையாள் அவன் எசமான்!

ஹரி வரப்போகிறான் என்று கேள்விப்பட்டதும்
அவர் என்னென்னவோ எண்ணி மகிழ்ந்து ?பாயிருந்
தார். அதுவரை வெறிச்சென்று கிடந்த அந்த வீட்டில்
நடக்கப் போகும் டீ பார்ட்டிகள் விருந்துகள், மனிதநட
மாட்டம், ஆனந்த ஆர்ப்பரிப்பு, சின்னஞ்சிறு சிட்டுகளின்
புடவைகள் செய்யும் சலசலப்பு, கைவளைகளின் கலகல
ஓசை கலீர் சிரிப்பு—இடையே சேனாபதி! உங்கள்
தயாரிப்பு பலே ஜோர் என்ற பாராட்டுதல்கள், புகழ்
மாலைக் குவியல்கள், இப்படியெல்லாம் ஆனந்தமான
தொரு கற்பனை. ஆனால்?

வேளைக்கு நல்ல உணவு, கை நிறைந்த சம்பளம்,
வசிக்க வசதியான வீடு இவைகள் இருந்துவிட்டால்
போதுமா? சூழ்நிலையும் சுகமாக அமைந்தால்தானே
உழைப்பவன் உள்ளத்திலே ஒரு நிம்மதி ஏற்படும்.

அந்த வீட்டில் இந்தச் சில நாட்களாக ஏற்பட்டி
ருந்த பயங்கர அமைதி, அதன் விளைவான ஒரு திகில்,
அவர் தலையைப் பாறாங்கல்லாக அழுத்திக் கொண்டி
ருந்தது. தாய்க்கும் மகனுக்கும் இடையே ஏற்பட்டிருந்த
பிளவை மற்ற வேலையாட்களிடமிருந்து மூடிமறைக்க
அவர் பட்டபாடு! தன்னைப்பற்றிய ரகசியம் ஏதோ அம்



பலமாகி விடும்போல் அவருக்கு ஒரு பதைபதைப்பு.
தடுக்க வேண்டுமென்ற ஆதங்கம், தவிப்பு. பழனி ஒரு
அப்பாவி, அவன் கண்களில் எதுவும் விபரீதமாகப்பட
வில்லை. ஆனால் ராசாத்தி? கெட்டிக்காரி. துருவித்
துருவிப் பல கேள்விகளைக் கேட்டு அவரைத்துளைத்துக்
கொண்டிருந்தாள். "இந்த ஊர் வெய்யில் அவருக்குத்
தாங்கலை. வந்ததிலிருந்து உடம்பு சுகமில்லை.
அதனால் அப்படியிருக்கார்னு ஒரு தடவை சொன்னால்
போதாதா?..." எரிந்து விழுந்தார் அவளிடம்.

பலவும் சிந்தித்தபடி அடுப்பின் அருகே வந்து
நின்றார். என்ன சமைப்பது என்ற குழப்பம். ஹரி
காலைப் பலகாரத்திற்குப் பின்னர் வீட்டிலேயே சாப்பி
டுவதில்லை. நகரத்து ஃபைவ் ஸ்டார் ஓட்டல்களில்
பகல் உணவு என்பதை அவன் சொல்லத்தெரிந்துகொண்
டிருந்தார். இரவு வேளையில் அவன் தானே காரை
ஓட்டிக் கொண்டு வந்தான். பின்கட்டிற்குள் வர அவ
னிடம் மறு சாவி இருந்தது. என்றாலும் நடு இரவில்
அவன் வரும்வரை வசுமதி உறங்கினாளோ என்னவோ,
அவருக்குத் தூக்கம் இருக்கவில்லை. ஆபீஸ் முடிந்த
பின்னர் இந்தப் பிள்ளை காரை வைத்துக் கொண்டு
வெளியே இவ்வளவு நேரம் என்ன செய்து கொண்டிருக்
கிறார்.

அந்த வீட்டில் வேலைக்கமர்ந்த கொஞ்சகாலத்திற்
குப் பின் அவர் மனைவி டைபாய்டு காய்ச்சலுக்குப் பலி
யாகிவிட்டாள். தனியாக விடப்பட்ட அவர் தமதுஇழப்
பின் துன்பத்தை மறக்கவே அந்தக் குடும்பத்துடன் நட்பு
உறவாடிக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

தம் குலம் விளங்க ஒரு குழந்தையை விட்டுவைக்காது
போய் விட்டாளே என்று எண்ணி அவர் அடிக்கடி வருந்
துவது உண்டு. நல்லபிள்ளையென்று அவர் நம்பிக்கொண்
டிருந்த ஹரி இப்படித் திடீரென்று மாறிவிட்டதைக்

கண்ட பின்னர், பிள்ளை இல்லையென்று உள்ளத்து மூலையில் துளியளவு ஒட்டிக் கொண்டிருந்த அந்தக் குறை மாயமாக மறைந்துவிட்டது. இப்படிப்பட்ட பிள்ளையும் வேண்டாம், பூதம் போன்ற பிரச்சினைகளும் வேண்டாம், வசுமதியம்மாள் எப்படித்தான் சகித்துக் கொண்டிருக்கிறாரோ?

காப்பி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு அவர் அவளது அறையை நோக்கிநடந்தார். காயத்திற்குப் போட்ட தையல்களை டாக்டர் எடுத்துவிட்டிருந்தார். ஸ்நானம் செய்து விட்டுக் கூந்தலைக் காய வைத்துக் கொண்டு பெஞ்சுமீது அவள் உட்கார்ந்திருந்தாள். இந்தச் சில தினங்களுக்குள் அவள் உடல் பாதியாகி இளைத்துக் கறுத்துவிட்டிருந்ததைக் கவனித்த அவர் நெஞ்சம் துணுக்குற்றது.

'பிள்ளைப் பாசம் பெரும் விஷம்' தமக்குள் எண்ணியபடி காப்பி டம்ளரை அவள் அருகே பணிவுடன் வைத்து விட்டு நின்றார். "சமையலைப்பத்தி ஒண்ணும் சொல்லலையே?" பேச்சுக் கொடுத்தார்

"எனக்குக் கோதுமைக் கஞ்சி போதும். மஹிமாவுக்கும் உங்களுக்கும் ஏதாவது செய்து கொள்ளுங்க. அந்தப் பெண் இன்னும் இரண்டு நாள்கள்தான் கூட இருப்பாள். ரொம்ப உதவியாக இருந்தாள். அவள் லீவு முடியும் தறுவாயிலிருக்கு...பாவம்..." பெருமூச்சு விட்டாள் அவள்.

"ஐயா காபி, பலகாரம் சாப்பிட்டுவிட்டு ஆபீஸிற்குக் கிளம்பிட்டாங்க" சொல்ல வேண்டிய கடமை. சொல்லி முடித்தார்.

"பகல் பொழுது சாப்பாடு ஆபீஸிற்கு அனுப்பி வைக்கிறீங்களா?' முதன் முதலாக அவள் கவலையுடன் விசாரித்தாள்.



"நான் கேட்டேன். ஐயா வேண்டாம்னு சொல்லி விட்டார் அவருக்கு சைவ சாப்பாடு பிடிக்கலையாம்"

குற்றம் புரிந்துவிட்டவள்போல் உடலும் உள்ளமும் கூசியபடி அவள் தலை நிமிராது உட்கார்ந்திருந்தாள்.

அதற்குமேல் நிற்கப் பிடிக்காதவராக அவர் வெளியே வந்தார் வசுமதியால் ஒருபக்கம் அவருக்கு இரக்கம். இன்னொரு பக்கம் கோபம். ஆரம்பத்திலேயே கொஞ்சம் பிள்ளையிடம் கண்டிப்பாக அம்மா இருந்திருந்தால் இப்படி அத்துமீறி நடக்க அவன் துணிவானா? அவரது சிந்தனை பின்னோக்கி ஓடியது.

சில ஆண்டுகளுக்கு முன். ஹரி அப்போது என்ஜினியரிங் கல்லூரி மாணவன். சேனாபதிக்கு வாரத்திற்கு அரைநாள் லீவு. அந்த அரைநாள் பொழுதில் அரை நிமிஷத்தையும் வீணாக்காது சினிமா, டிராமா, கச்சேரி என்று கிளம்பிவிடுவது வழக்கம். தமிழ் படமொன்றை பார்த்துவிட்டு அவர் திரும்பிக் கொண்டிருந்தார். அவர் கண்களில் ஹரி அந்த ஒட்டலில் தென்பட்டுவிட்டான். வீட்டிற்கு வந்ததும் விஷயத்தை வசுமதியிடம் தெரிவிக்க வேண்டுமென்ற துடிப்பு, அடுத்த பஸ்ஸைப் பிடித்துக் கொண்டு வீடுவந்து சேர்ந்தார்.

தோட்டத்திலே நின்று கொண்டிருந்தாள் வசுமதி. எப்படி ஆரம்பிப்பது, என்ன செய்வது என்று புரியாது அவர் குழம்பினார்.

"அம்மா, நம்ப ஹரியை சிநேகிதங்களுடன் நான் பார்த்தேன்."

செவ்வந்திமலர் ஒன்றைப் பறித்து அழகு பார்த்துக் கொண்டுநின்ற அவள் திரும்பி அவரை ஒருமாதிரியாக பார்த்தாள்.

"அதனால் என்ன? என்ன கதையை எடுத்துக் கொண்டு இங்கே வந்து நிற்கிறீர்?' என்று கண்களில் பாவனை, அசட்டையாகத் தலையை ஆட்டினாள். சேனாபதிக்கு சட்டென்று பேச முடியாதபடி ஒரு நடுக்கம். சொல்லலாமா வேண்டாமா என்று தயக்கம்.

"புகாரியில் ஹரி சிநேகிதர்களோடு சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்."

வசுமதியின் முகத்திலே கடுமை பரவியது. குரலில் காரம்.

"அதனால் என்ன?" அதட்டிக் கேட்டாள்.

"பரம்பரை பரம்பரையாக இந்த வீட்டில் எல்லோரும் வீர சைவமாச்சே, ஹரி மிலிடரி சாப்பாடு சாப்பிடக் கத்துக்கிட்டாரேன்னு..." முடிக்காது திணறினார். உண்மையைச்சொல்லி இன்னும வேறு பழக்கங்களுக்குத் தாவாதிருக்கும்படி தடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சொன்னால் ஏற்க மறுக்கிறாரே எஜமானி என்ற கோபம். பரபரப்பு அவருக்கு. "எனக்குத் தெரியுமே. ஹரி என்கிட்ட சொல்லிட்டுத்தான் போனான்." அவர் மண்டையிலடித்தாற்போல் கூறிவிட்டு அப்பால் சென்று விட்டாள்.

அசந்து போய் நின்றார் சேனாபதி எத்தனை பெரிய பொய், கணவரானாலும் சரி, பிள்ளையானாலும் சரி, தவறுகள் செய்வதைப் பிறர் வாயால் கேட்கக் கூசி அதற்கு உடனடியாக ஒரு போர்வையைப் போட்டு விடுகிறார்களே—பெண்களுக்கு ஏன் இந்தஒரு பலவீனம்? வியப்படைந்து போனார். அத்துடன் நிற்கவில்லை, அவரது பேச்சு, போக்கு எல்லாம் அளவுக்கு மீறியவை என்பதை உணர்த்துவதுபோல் அவள் அதற்குப்பின் சில தினங்கள் அவரிடம் மிகவும் கடுமையாக நடந்து கொண்டாள்.



அவர் தமது நிலையைப் புரிந்து கொண்டு விட்டார். அதற்குப் பின்னர் அவர் மறுபடி காண நேர்ந்த அந்தக் காட்சியைப் பற்றி அவளிடம் மூச்சு விடவில்லை.

பாதையோரக் கடை ஒன்றில் மஹிமா கைக்குட்டைகள் வாங்கிக்கொண்டு நின்றாள். காதலனைச் சந்திக்க அப்படி ஒரு நாடகம் போலும். ஊரைச் சுற்றக் கிளம்பியிருந்த சேனாபதி தமது நண்பரை பஸ் ஏற்றிவிட்டு விட்டுத் தாம் போகவேண்டிய பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அவர் கண்களில் பட்டு விட்டது. காரை ஓட்டிக்கொண்டு வந்த ஹரி அதை ஒரு சந்திற்குள் நிறுத்திவிட்டு விரைந்து வந்தான். முன்னதாக செய்துகொண்ட ஏற்பாடாக இருக்க வேண்டும். "ஹலோ மஹிமா!" ஆசையுடன் அழைத்தபடி அருகில் வந்து நின்றான்.

தூரத்திலிருந்துதான் கவனித்தார் சேனாபதி. எனினும் அவன் பேசும்பொழுது அவன் முகம், கண்கள் இவைகளில் ஏற்பட்ட மாறுதல்களிலிருந்து புரிந்து கொண்டுவிட்டார். மஹிமாவும் ஹரியும் காதலர்கள்என பதைக் கணப்பொழுதிலே தெரிந்து கொண்டுவிட்டார்.

அவருக்கு அன்று முழுவதும் ஒரே குழப்பம். வசுமதி அம்மாள் அந்த ஏழைக் குடும்பத்துடன் மிகவும் நெருங்கி உறவாடலாம். உதவலாம். அவர்களைக் கைதூக்கிவிட முன் வரலாம். சம அந்தஸ்து இல்லாத அவர்களுடன் சம்பந்தம் செய்துகொள்ள விரும்பாவிட்டால்...

ஹரி செல்வ சுகத்திலே வளர்ந்த பிள்ளை. அவனை எவ்வளவு தூரம் நம்பலாம்? ஏழைப் பெண்தானே என்று துச்சமாகப் பின்னர் உதறி விட்டால்...

வசுமதியிடம் சொல்ல அவருக்கு துணிவில்லை. சிவராமனிடம் இதுபற்றி எச்சரித்தால்...யார் அப்படிச் சொன்னது என்று அவர் கோபித்துக் கொண்டு சண்டைக்கு வந்துவிட்டால்? நமக்கேன் வம்பு?

சமையலறைக்குள் வேலையில் ஈடுபட்டிருந்த போதிலும் அவரது உள்ளத்தில் சிந்தனைகள் அலைமோதிக் கொண்டிருந்தன. அம்மாவுக்கும் பிள்ளைக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறு எதைப் பற்றியதாக இருக்கும்?

பணம் பற்றியது என்று அவர் முதல் எண்ணியது தவறு. இது பெண்ணைப் பற்றிய விவகாரமாகத்தானிருக்க வேண்டும்.

முதல்நாள் மாலை அவர் பழரசத்தை எடுத்துக் கொண்டு அறைக்குள் சென்றபோது பார்த்தார். வசுமதியின் கணுக்கால் நோவுக்கு ஏதோ மருந்தைப் போட்டு மஹிமா தேய்த்துவிட்டுக் கொண்டிருந்தாள்.

'போதும்மா! கை வலிக்கப் போகிறது'' வசுமதியின் அன்புக்குரல். பழரச டம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு அவர் வெளி வந்தார். ஊஹூம் அவர் நினைத்த இரண்டாவது காரணமும் தப்பு.

'மஹிமாவை மகன் காதலிப்பதைக் கேட்டு அவனை ஏற்க முடியாது என்று அன்று மறுத்துவிட்டு மயங்கிக் கீழே விழுந்து விட்டிருந்தால் மறுபடி அந்தப்பெண்ணை அருகில் அனுமதித்திருப்பாங்களா?'

அன்று மாலை வழக்கம்போல் இரண்டாவது முறை குளியலை முடித்துக்கொண்டு வேறு உடுத்திக் கொண்டு அவர் சமையலறைக்கு விரைந்து கொண்டிருந்தார்.

அருகில் ஒலித்த காலடி சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். ஹரி வழக்கத்துக்கு மாறாக ஆபீசிலிருந்து நேரே வீட்டிற்கு வந்துவிட்டிருந்தான்.

ஓடிச்சென்று அவனது கையிலிருந்த ப்ரீஃப் கேசை வாங்கிக் கொண்டார். ''சூடாகக் கொஞ்சம் காப்பி...'' உபசாரமாகக் கேட்டார்.



'தேவையில்லை, மஹிமா இன்னமும் இங்கேதானே இருக்கிறாள்? நான் பார்க்க விரும்புவதாக அவளிடம் சொல்லுங்கள்'' அவன் மாடிப்பக்கம் வேகமாக நகர்ந்தான். ஒருகணம் அயர்ந்து போய் நின்றார் அவர். ஹரிக்கு என்ன துணிச்சல். அவரை அவன் காதலிக்குத் தூதாக அனுப்புகிறானே?

''ஐயா ஆபீஸிலிருந்து வந்து விட்டார்.'' கூறிவிட்டுத் தயக்கத்துடன் நின்றார் அவர். வசுமதி கண்களைத் திறந்து அவரை உற்றுப் பார்த்தாள்.

''மஹிமாவைப் பார்க்கணுமாம். வரச்சொன்னார்'' எஜமானியின் முகத்தைப் பார்க்க அஞ்சித்தடுமாறினார்.

காலருகே உட்கார்ந்திருந்த மஹிமாவிடம் திரும்பிய வசுமதி புன்னகைத்தாள்.

''ஹரி அழைக்கிறான். என்னன்னு போய்க் கேட்டுட்டு வாம்மா'' சேனாபதிக்குத்தாங்க முடியாத வியப்பு. ஆனந்தம். நெஞ்சு படபடக்க மூச்சுத் திணற—வெளியே வந்து நின்றார். மேல் துண்டினால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். மகிழ்ச்சியால் பூத்து மலர்ந்த முகத்துடன் வெளிப்பட்ட மஹிமாவைப் பார்த்தபோது இவள் இந்த வீட்டின் வருங்கால எஜமானியானால்...?' அவருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அடிக்குரலில் சினிமாக் காதல் பாட்டொன்றை மெல்ல முணுமுணுத்துக் கொண்டு அவர் நடையைக் கட்டினார்.

## 10

மூச்சுத் திணற மறுபடியும் அந்த அறைக்குள் வந்து நின்றார் சேனாபதி.

''கனகபூஷணம் போனில் உங்களை அழைக்கிறார்.'' வசுமதியிடம் கூறிவிட்டு முகத்தை ஆவலுடன் பார்த்தார்.

அவிழ்ந்து தொங்கிய கூந்தலை நிதானமாக அள்ளி முடிந்து கொண்டு அவள் எழுந்திருந்தாள்.

''அம்மாவுக்கு உடம்புக்கு முடியாமப் படுத்திருக்கி றாங்களாமேன்னு அவர் கேட்டார்.''

''உம்...'' சூள் கொட்டினாள் வசுமதி.

''உங்களுக்கு ஒரு வாரமாக ஃப்ளு காய்ச்சல் என்றேன்.''

'இந்தப் பொய் சொல்லி என் மானத்தைக் காத்த தற்கு ஒரு தங்கமெடல் எதிர்பார்க்கிறீர்களாக்கும்?' மௌனமாக அவரை வெறித்தன அவளது விழிகள்.

கையில் போட்டுக் கொண்டிருந்த துண்டைத் தோள் மீது போட்டுக்கொண்டு அவர் விரைவாக வெளியேறி விட்டார். அம்மாவுக்கு 'மூட்' சரியில்லை என்று அவ ருக்குப் புரிந்தது.

வசுமதி போனை எடுத்தாள். மறுபக்கத்தில் கனக பூஷணத்தின் தேன் தோய்ந்த குரல் கேட்டது.

''உடம்புக்கு என்ன? கேட்டு ரொம்ப வருத்தப்பட் பட்டேன்.''

''ஒன்றுமில்லை. வெறும் ஃப்ளு.''

''பார்த்துக்கோங்கோ. ஃப்ளுவில் ஆரம்பித்து இப்போதெல்லாம் எங்கேயோ கொண்டு விட்டுவிடுகி றது. ஜாக்கிரதை'' மிகவும் கனிவுடன் எச்சரித்தார்.

''இப்ப தேவலை, கேட்டதற்கு ரொம்ப நன்றி.''

''இந்தச் சனிக்கிழமை சவிதாவின் பிறந்த நாள். அதற்கு ஒரு சிறு பார்ட்டி ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். நீங்களும் ஹரியும் வந்துடணும்.''



''இப்ப வரமுடியாதுன்னு தோணுது. ஹரிக்கும் இரண்டு நாளாய்க் காய்ச்சல்.''

அப்படியா? ஆபீஸிற்குப் போவதாகக் கேள்விப் பட்டேன்?'

''என்னால் போக முடியலை. அவனும் போகாதி ருந்தால் வியாபாரத்தின் கதி? அதனால் ஹரி போய்விடு கிறான். இந்தத் தடவை மன்னிச்சுக்கோங்க.இன்னொரு சமயம் பார்க்கிறேன். வச்சுடட்டுமா?'' போனைக்கீழே வைத்தாள். எரிச்சலை அடக்கமாட்டாது பல்லைக்கடித் துக் கொண்டாள்.

கனகபூஷணம் வியாபார உலகில் பெரியதொரு புள்ளி. நகரத்தில் அரை டஜனுக்கு மேற்பட்ட ஸூப்பர் மார்க்கெட் அவருக்குச் சொந்தமாக இருந்தன. ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கும் அவர் அதிபதி அத் துடன் அரை டஜன் பெண் குழந்தைகளுக்கும் அவர் தந்தை. பணத்தைக் கொடுத்து நல்ல பையன்களைப் பார்த்து அவர்களைத் தள்ளிவிட மனிதன் படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார் என்று கேள்வி. வெகுநாளா கவே ஹரி மீது அவருக்குக் குறி என்பதை வசுமதி அறி வாள், அவர் மட்டும்தானா?

மறுபடியும் டிரிங் டிரிங் என்றது தொலைபேசி மறுபக்கத்தில் பிரபல அறுவைச் சிகிச்சை நிபுணர் ரவீந் திரனின் மனைவி கௌரியின் குரல்.

''என்ன, பிள்ளை ஊருக்கு வந்து சேர்ந்துவிட்ட சந் தோஷத்திலே ஜுரம் வந்து விட்டதா?'' களுக்கென்று சிரித்தாள்.

வீடு, வியாபாரம் என்று தனியே ஒதுங்கி வாழவிரும் பிய வசுமதிக்கு நெருங்கி நண்பர்கள். உறவினர் என்ற கூட்டமே இதுவரை இருந்ததில்லை வியாபார உலகில் அவளும் ஒரு பெரும் புள்ளி ஆகியதும், ஹரியை மருமக

னாக வரிக்க ஒரு க்யூ வரிசையே திரண்டு விட்டிருப்பது அவளுக்குத் தெரிந்த விஷயம். ஆனால் அவள் அவர்களிடமெல்லாம் பட்டும் படாமல் ஒட்டியும் ஒட்டாமல் தாமரை இலைத் தண்ணீராகத்தான் பழகி வந்தாள். முடிந்தவரை அவள் யாரையும் அதிகம் நெருங்க விட்டதில்லை.

"இப்ப எப்படி இருக்கீங்க?" கௌரி இனித்த குரலில் விசாரித்தாள்.

"பரவாயில்லை. டாக்டர் ரொம்ப பிசியோ?"

"அவருக்கு மூச்சு விடப் பொழுது ஏது? நாளைக்கு டெல்லியில் பீடியாட்டிரிக் ஸர்ஜரி கான்பரன்ஸ். இப்பத்தான் கோலாலம்பூரிலிருந்து கான்பரன்ஸ் முடிந்து திரும்பி வந்தார். அடுத்த மாசம் பம்பாயில் ஒரு மீட்டிங்—" அடுக்கிக் கொண்டே போனாள்.

கௌரிக்கு ஒரே மகள். பணம், புகழ், இரண்டையும் வைத்துக் கொண்டு அவள் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தாள்.

"அப்படியா. ரொம்ப சந்தோஷம்." வசுமதி குரலில் உற்சாகம் இருக்கவில்லை.

"ஜலஜாவின் பிறந்த நாளுக்குப் பரிசு கொடுக்க ஒரு மிக்ஸி வாங்கக் கடைக்குப் போயிருந்தேன். அண்ணா சாலை கடையில் ஹரியைப்பார்த்தேன். அடையாளமே தெரியலை—அப்படி மாறியிருக்கிறான்...வியாபாரத்திலே ரொம்பக் கவனம்—பேச்சில் மரியாதை..." விவரித்தாள் அவள்.

போகட்டும்—ஊராருக்காவது நல்ல பிள்ளையாக இருக்கட்டும்...வியாபாரத்தில் அக்கறை இருக்கிறதே அதுவரை பிழைத்தேன்—தனக்குள்ளே எண்ணிக் கொண்



டாள் வசுமதி. "அப்படியா? எல்லாம் உங்க ஆசீர்வாதம்..." என்றாள்.

"இவரோட இங்கிலாந்தில் படிச்சு, சிங்கப்பூரில் தொழில் செய்கிற இரண்டு ஸர்ஜன்கள் இங்கே வந்திருக்கிறாங்க...அவர்களுக்கு நம்ப வீட்டில் ஒரு விருந்து... அதில் நீங்களும் ஹரியும் வந்து கலந்துக்கணும்." அவள் போனில் குழைந்தாள்.

"முடிந்தால் பார்க்கிறோம்—நிச்சயமாக வருவோம் என்று சொல்வதற்கில்லை—அழைத்ததற்கு நன்றி" போனை வைத்துவிட்டுத் திரும்பினாள்.

ஹரிக்கும் அவளுக்குமிடையே ஏற்பட்ட பிளவினால் உண்டான துன்பம் அவளை ஒரு சில தினங்கள் மிகவும் வாட்டி வதைத்துவிட்டது. வேதனை தாங்காது உள்ளம் குமைந்து கண்ணீர் விட்டுத் தூக்கம் இன்றி அவள் தவித்துப் போனாள்—ஆனால் அதற்கு அவள் அஞ்சி ஒரேயடியாக ஒடிந்து போய்விடவில்லை...எத்தனையோ இடர்களைச் சந்தித்துச் சமாளித்துத் தலை நிமிர்ந்து நின்ற அவள் இப்போது கோழையாகிவிடக்கூடாது என்ற ஒரு பிடிவாதம்.

எல்லாத் தாய்களையும்போல ஏற்றஇடத்தில் படித்த அழகான ஒரு நல்ல பெண்ணை மருமகளாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றுதான் அவளும் எண்ணிக் கொண்டிருந்தாள்—ஆனால் அந்தக் கடிதத்தைப் படித்த பின்னர் அவள் தன் முடிவை மாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது.

சிந்தித்தபடியே மாடிப்பக்கம் அவள் கண்களை ஓட விட்டாள். ஹரியின் அறையிலும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இன்னமும் மஹிமா திரும்பவில்லை. பார்ட்டி முடியவில்லை போலும்...

'ஹரி இந்தக் காலத்துப்பிள்ளை. வயசு வந்ததும் ஒரு சமயம் அவன் தன் மனசுக்குப் பிடிச்ச பெண்ணைத் தானே பார்த்துக் கட்டிக்க வேணும்பான். இதில் ஆச்சரியப்படறதுக்கு ஒண்ணும இல்லை. அப்படி நேர்ந்தா நீ பிடிவாதம் செய்யாமல் ஒத்துக்கோ. இல்லாட்டா ரொம்பக் கஷ்டப்படுவே...' அவள் மாமனார் அமிர்தலிங்கம் எச்சரித்துவிட்டுப் போயிருந்தார். அவள் அதை மறக்கவில்லை. அதற்கு மதிப்புக் கொடுத்தாள். அந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு ஒரு முடிவிற்கு வந்திருந்தாள்.

ஹரி வெளிநாட்டிற்குப் போய் ஓராண்டு காலம் சென்று விட்டிருந்தது. அவளைக் கண்டு விசாரித்துப் போக மஹிமா அங்கு வந்திருந்தாள்.

ஒரு நாள் ஆபீஸிற்குப்போகுமுன் மஹிமா அவளைக் காண அங்கு வந்திருந்தாள். கையில் வைத்திருந்த வாரப் பத்திரிகை ஒன்றை அவள் அருகிலிருந்த மேஜைமீது வைத்துவிட்டுக் காப்பி சாப்பிடச் சமையலறைப் பக்கம் போயிருந்தாள். வேகமாகச் சுழன்ற மின்விசிறி எழுப்பிய காற்று பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டியது. உள்ளுர இருந்து ஒரு கடிதம் பறந்து வந்து வசுமதியின் முன்னால் விழுந்தது. அமெரிக்கத் தபால் தலை கொண்ட ஏரோகிராம். வியப்புடன் அதை அவள் கையில் எடுத்தாள். மஹிமாவின் ஆபீஸ் முகவரி. ஹரியின் கையெழுத்து.

அவள் எத்தனையோ கண்டிப்பாகத்தான் இருந்தாள். அவர்களது உணர்வுகளுக்கு இடையே இரும்புத் திரை விடுத்து தடுத்துவிட்டிருந்தாள். ஆனால் பஞ்சும் நெருப்பும் ஒன்றாகி, பற்றிக் கொண்டுவிட்டது. இனி அவள் என்ன செய்ய முடியும்?

காலடி சப்தம் கேட்டதும் கடிதத்தைத் தலையணையடியில் வைத்துக் கொண்டுவிட்டாள், மஹிமா ஆபீஸிற்



குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். அவசரமாக விடைபெற்றுக்கொண்டு பத்திரிக்கையை எடுத்துக்கொண்டு போய்விட்டாள். அவள் சென்றபின் கடிதத்தை எடுத்து வைத்துக்கொண்டு நிதானமாகப் படித்தாள். அவள் செய்கையைப் பற்றி அவளுக்கு வெட்கமாகத் தானிருந்தது. ஆனாலும் உண்மை நிலை தெரிந்தாக வேண்டுமே? ஒரு தடவை படித்த போதிலும் கடிதம் அவளுக்கு மனப்பாடமாகிவிட்டது.

'வீட்டைவிட்டு வேற்று மனிதர்களுடன் வந்து வசிக்கையில் தனிமை பூதமாக என்னைப் பயமுறுத்துகிறது. புத்தகங்களைப் பிரித்து வைத்துக்கொண்டு விளக்கருகே உட்கார்ந்ததும் உன் முகத்தைத்தான் அதில் காண்கிறேன். உடனே என் உணர்வுகள் சுழன்று வெகு தொலைவிலுள்ள உன்னை நாடி ஓடிவிடுகின்றன. கடற்கரையிலும், நடுச்சாலையிலும் ரகசியமாகச் சந்தித்து பேசிக் கொண்ட சுவையான கதைகளை எண்ணி இன்பத்திலே என்னை மறந்து தூங்காமல் சிந்தித்தபடியே உறைந்து போகிறேன். பிரிவு என்பது மிகவும் கொடிய துன்பம் என்பதை உணர்கிறேன். தவறாது நீ அனுப்பும் கடிதங்கள்தான் என்னுடைய தொய்ந்த உணர்வுகளுக்கு உற்சாகம் கொடுக்கின்றன. அதனால் தொடர்ந்து நீ எழுதிக் கொண்டிரு. என் பிரிவு உனக்கு வேதனையைக் கொடுக்கிறது என்பதை அறிகிறேன். மனம் தளர்ந்து உற்சாகம் குறைந்து போகும்போது என் மோதிரத்தை எடுத்து அணிந்து கொள். என் தளராத மன உறுதியை அது உனக்கு உணர்த்தும். காலம் வரும் காத்திரு, ஹரி உன் காதலி மஹிமாவை மறக்க மாட்டான்.

அன்பன் 'ஹரி'

நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவள் வசுமதி. [illegible] தெரியாமல் இருவரும் விஷயத்தை மறைத்து வைத்திருந்தார்கள் என்று ஆரம்பத்தில் ஆத்திரப்பட்

டாள். பதைபதைத்தாள். உணர்ச்சிக் கொந்தளிப்பு அடங்கி அறிவு சிந்திக்கும் நிலைக்கு வந்ததும் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். மஹிமாவையே மருமகளாக்கிக் கொண்டு விடுவது என்பதுதான் அந்தத் தீர்மானம்

பலவும் எண்ணியபடி அறை சுவரிலே பதிந்திருந்த மர அலமாரியைத் திறந்து ஒரு பைலைக் கையில் எடுத்தாள். அந்தக் கடிதம் அதற்குள் பத்திரமாக வைக்கப் பட்டிருந்தது. மஹிமா முன் அதை நீட்டினால் அவள் எப்படித் திடுக்கிட்டுப் போய் நிற்பாள் என எண்ணித் தனக்குள் லேசாகச் சிரித்துக் கொண்டாள். வராந்தாவிலே பரபரத்தது காலடி ஓசை. திரும்பிப் பார்த்தாள் ஆவலுடன். காயமுற்று சிறகொடிந்து தடுமாறிப் பறந்து வரும் பறவைபோல ஓட்டமும் நடையுமாக உள்ளே வந்து நின்ற மஹிமாவைக் கண்டு அவள் அதிர்ச்சியுற்றாள். முகமும் கண்களும் சிவக்க அவள் அழுது விட்டு வந்திருந்தாள். வசுமதியைக் கண்டதும் அவளால் கட்டுக் கொள்ள முடியவில்லை.

''உங்களுக்குத் தெரியாம உங்களுக்குச் செய்த துரோகத்துக்குத் தக்க தண்டனை கிடைத்துவிட்டது அம்மா...'' அவள் விக்கினாள்.

பெரியவள் சின்னவளை அன்புடன் அணைத்துக் கொண்டாள். நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள் திக் திக்கென்று அவள் நெஞ்சு அடித்துக் கொண்டது.

''அப்படியென்றால்? அவன் உன்னையும் உதறி விட்டானா?''

மஹிமா 'ஆம்' என்று பதிலுக்குத் தலையை ஆட்டி விட்டு வசுமதியின் மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு நெஞ்சு வெடித்துவிடும்போல் விம்மி அழுதாள்.

# 11

திறந்து கிடந்த வாயிற்படி அருகே வந்ததும் சற்று முன் பொங்கிப் புறப்பட்ட உற்சாகம் மஹிமாவிடம் மறைந்தோடிவிட்டது. ஆபீஸ் உடுப்புகளைக் களைந்து விட்டுப் பட்டுக்கரை வேட்டியும் ஜிப்பாவுமாக ஹரி ஜன்னல் அருகே தோட்டத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அவளது புடவை சலசலப்பைக் கேட்டு வெடுக்கென்று திரும்பினான். முன் எல்லாம் அவளைக் கண்டதும் அவனிடம் தென்பட்ட அந்தப் பரபரப்பு, கண்களோடு கண்கள் கலந்து சிரிக்கும் அந்தக் காந்தப் பார்வை எல்லாம் எங்கேயோ போய்விட்டிருந்தன. புதிதாக யாரையோ சந்திப்பதைப் போன்று வெறிச்சென்று பார்த்தான்.

மஹிமாவின் நெஞ்சு வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. ஊருக்கு வந்து ஒரு வாரம் ஆகியும் அவளிடம் அவன் பேச முற்சிக்காது பாரா முகமாய் இருந்ததை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கடற்கரையிலும், கடைத் தெருவிலும் கள்ளத்தனமாகச் சந்திக்க ஓடோடி வந்தவன், கடிதங்களில் தனது காதலைப் பக்கம் பக்கமாக வரிந்து தள்ளியவன், அவனை அவள் எப்படி மறக்க முடியும்? நேருக்கு நேர் அவனை மறுபடி தனிமையில் சந்திக்க நேர்ந்ததும் அவளுக்குத் துக்கம் பொங்கிக்கொண்டு வந்துவிட்டது.

''ஹரி! கூப்பிட்டனுப்பினீங்களாமே?'' ஏக்கம்மிகுந்த மெல்லிய குரலில் தடுமாறினாள். உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஊசலாடிய வண்ணம் அறைக் கதவைப்பிடித்துக் கொண்டு நின்றாள்.

''இப்படி உட்கார்!'' ஆசனமொன்றைக் காட்டிவிட்டு அவன் மெல்ல அருகில் நடந்து வந்தான்.

நெஞ்சை அடைத்த வேதனையை விழுங்கிக் கொண்டாள். கண்களை மறைத்த கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு லேசாக முறுவலித்தபடி சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

"உன்னிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டியிருப்பதால் அழைத்தேன்...' சொல்லிக் கொண்டு அருகிலிருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அவனும் உட்கார்ந்து கொண்டான். இந்த அண்மையை வேண்டி அவள் உள்ளம் உருகி ஏங்கிய நாட்கள் எத்தனையோ! வெகு அருகில் அவன் அமர்ந்திருந்தான். ஆனால் ஏதோ வெகுதொலைவிலேயே அவன் இன்னமும் இருப்பது போன்ற ஒரு நினைப்பு—திகைப்பு அவளுக்கு. அவனது பாதங்களையே பார்த்தவண்ணம் உள்ளே குமுறிக் கொந்தளித்த தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த அவள் முயன்று கொண்டிருந்தாள்.

"எப்படி ஆரம்பிப்பது என்று ஒரே குழப்பம். ஆனாலும் நீ என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நினைப்பில் சொல்ல விரும்புகிறேன்'' சுற்றி வளைத்தான்

மெல்லத் தலையை நிமிர்த்தி இரக்கமாகப் பார்த்தாள் அவள். "ஹரி! நீங்கள் பேசுமுன் நான் ஒன்று கேட்க விரும்புகிறேன், சமீபத்தில் கொஞ்ச காலமாக எனக்குக் கடிதங்கள் எழுதுவதை நிறுத்திக்கொண்டுவிட்டீங்க. கேட்டதற்கு, காரணம் பின்னால் சொல்வதாகச் சொன்னீங்க. இப்போ அதைநான் தெரிஞ்சுக்கலாமா'' கேட்குமுன் இதயம் நழுவி வாயில் வந்து அடைத்துவிட்டது போன்ற திகிலில் அவள் தவித்துப் போனாள்.

"அதைச் சொல்லத்தான் அழைச்சேன்...நீ படிச்ச பெண். விஷயம் தெரிந்தவ, அதனால் பதட்டமடையமாட்டாய் என்ற நம்பிக்கை. காரணத்தை ஓரளவு நீயே ஊகித்துக் கொண்டிருப்பாய் என்றும் நினைக்கிறேன்.''



திடுக்கிட்டுப் போனாள் அவள். "ஹரி! புரியும்படி சொல்லுங்க. ரொம்ப மனசைக் குழப்புகிறீங்க...'' அவள் குரல் நடுங்கியது.

ஹரி எழுந்திருந்து அறைக்குள் முன்னும் பின்னும் உலாவத் தொடங்கினான், கைகளிரண்டையும் சேர்த்துக் கொண்டு சிந்தனையுடன் சிறிது நேரம் நின்றான. பின்னர் கைகளை உதறிப் பின்னால் வைத்துக்கொண்டு அமைதியற்ற நிலையில் பேசலானான்.

"மஹிமா! நீயும் நானும் நெருங்கிப் பழகினோம், உண்மை. உனக்கு நான் எனக்கு நீ என்று முடிவு எடுத்தோம். ஒப்புக் கொள்கிறேன். அமெரிக்காவில் வசிக்கத் தொடங்கிய கொஞ்ச காலத்திற்குப்பின் திடீரென்று எனக்குள்ளேயே இந்த முடிவு சரியா என்று ஒரு கேள்வி எழத் தொடங்கியது...''

திகைத்துப்போன மஹிமா அவனை பீதியுடன்பார்த்தாள். அவளால் சட்டென்று உடனே பேச முடியவில்லை. உள்ளே தங்கிவிட்ட வார்த்தைகளை வெளிப்படுத்த இயலாது உதடுகள் துடித்தன. கண்களில் நீர் முட்டிக்கொண்டு வந்தது. நெஞ்சு வெடித்துவிடும்போல் வேதனையால் கனத்தது.

"அப்படி உங்கள் மனசு கேட்கும்படி நான் என்ன தப்பு செய்தேன்?'' அழுகையும் கோபமுமாக முடிவில் கேட்டாள்.

குற்ற உணர்வுடன் ஹரி ஒருகணம் விழித்தான்.

"தவறு என்னுடையது மஹிமா! கலாசாலையில் பெண்களுடன் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு எனக்கு இருந்தது. என்றாலும் யாரிடமும் நான் பேசிப் பழகியதில்லை. என் தாயார் என்னைக் கண்டிப்பும் கறாருமாக வளர்த்துவிட்ட குறை அது. முதன் முதலாக உன்

ஒருத்தியிடந்தான் நான் கொஞ்சம் நெருங்கிப் பழகினேன். இந்த நெருக்கமான உறவை நான் காதல்என்று தவறாகப் புரிந்துகொண்டுவிட்டேன். அதனால் தொடர்ந்து தவறானதொரு முடிவும் எடுத்தேன். ஆணும் பெண்ணும் சந்திக்கும்போது ஒருவருக்கொருவர் இடையே ஏற்படும் இனக கவர்ச்சியைக் காதல் என்று நம்பிக் கொள்வது பிசகு என்று பின்னர்தான் உணர்ந்து கொண்டேன். அமெரிக்காவிற்குப் படிக்கச் சென்றபோது ஆரம்பத்தில் தனிமையில் நான் தவித்துப் போய் விட்டேன். ஓய்வு நாட்களில் நேரத்தை போக்கத் தெரியாது நான் பட்டபாட்டை விவரிக்கத் தேவையில்லை. ஒரு சமயம் விடுமுறையைக்கழிக்க நியூயார்க் நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்தேன். அங்கே நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த நண்பர் ஒருத்தரைச் சந்தித்தேன். பின்னர் அவரது குடும்பத்தாருடன் பழக வாய்ப்புகிடைச்சது ரொம்ப நெருங்கிப் பழகத் தொடங்கினோம். அந்த நெருக்கத்திலேதான் ராதிகாவும் நானும் ஒருவரையொருவர் காதலிப்பதை உணர்ந்து கொண்டோம்...''

''ஹரி!'' வாய்விட்டு அலறவேண்டும் போன்ற ஆவேசம் உடலை உலுக்க—நெஞ்சு பதற மஹிமா எழுந்துநின்றாள். கட்டுக்கடங்காத கண்ணீர் அவளது கண்களை நனைத்தது.

''நீங்களா இப்படிப் பேசுறீங்க!'' துக்கம் தாளமுடியாது அவள் விம்மினாள்.

''நீ இப்படிப் பதட்டப்படுவதிலே யாருக்கும் நன்மையில்லை...உன்னிடம் உண்மையை ஒளிக்காமல் நான் சொன்னதற்கு நீ சந்தோஷப்படணும்...உன்னிடம் நான் கேட்க விரும்பியதெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான்.நமக்குள் ஏற்பட்ட அந்தப் பரிவை—நெருக்கத்தை—ஒரு கனவாக எண்ணி நீ மறந்துவிடணும்...அவ்வளவுதான் அதைச் சொல்லத்தான் உன்னைக் கூப்பிட்டேன்.''



சரவிளக்கு கக்கிய ஒளியின் வெளிச்சத்தில் மூழ்கிக்கிடந்த அறையில் சட்டென இருள் சூழ்ந்துகொண்டுவிட்டது போன்ற ஒரு பிரமிப்பு—தானும் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களும் சுழல்வது போன்ற ஒரு மயக்கம். நிற்க முடியாது தொப்பென்று அவள் சோபாமீது உட்கார்ந்தாள்...முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு உடல் குலுங்க அழுதாள்.

''ஸ்! மஹிமா! நீரொம்ப தைரியசாலின்னு நினைச்சு உன்னிடம் நான் உண்மையை ஒளிக்காமல் சொன்னேன் உன்னைத் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருக்க விரும்பாது உண்மை நிலையை வெளிப்படையாகப் பேசிவிட்டேன். மன்னிச்சுக்கோ...'' மெல்ல ஜன்னல் பக்கம் சென்று நின்று கொண்டான்.

சிறிதுநேரம் அழுது கொண்டிருந்த மஹிமா பின்னர் கண்களைத் துடைத்துக் கொண்டாள். கோர்வையாக பேச முடியாது வார்த்தைகள் தடுமாறின.

''ஹரி! பிரிவு என்பது மனசிலே உள்ள உண்மை அன்பை வளர்த்து' தூயதாகச் செய்யும் என்று பெரியவங்க சொல்லக் கேட்டிருக்கேன். அந்த நம்பிக்கையிலே உங்க பிரிவை வாழ் நாள் முழுவதானாலும் தாங்கிக் கொள்ள மனசைப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்க மனசை இவ்வளவு சுலபமாக வேகமாக மாத்திப்பீங்கன்னு கனவிலேகூட நான் நினைச்சதில்லை. அன்பு என்பது புடவையா, வேட்டியா, நினைச்சப்பமாத்திக்க? நீ மறந்துடணும்னு ஒரே வார்த்தையிலே என் மனசை உடைச்சு, ஆசைகளில் மண்ணைப்போட்டு, என் கனவுகளைச் சிதைச்சு, என் வாழ்க்கையை அழிச்சிட்டீங்களே? இது உங்களுக்கே நியாயமாயிருக்கா? யோசிச்சுப் பாருங்க—'' கேட்டுவிட்டுக் கண்ணீர் மல்கிய கண்களால் அவனை வெறித்தாள்.

நெஞ்சின் மீது கைகளை மடக்கிக் கொண்டு ஜன்னல் மேல் சாய்ந்தபடி நின்ற ஹரி எரிச்சலோடு அவளை உற்றுப் பார்த்தான்.

"உன்னை நான் ஏமாற்றலை. உன் வாழ்க்கையை நான் நாசம் பண்ணவுமில்லை. நாமிருவரும் ரொம்பப் பரிவுடன் நெருங்கிப் பழகினோம். இளமை வேகத்தில் உணர்ச்சி வசப்பட்டு என்னென்னவோ பேசிக் கொண்டோம். அதைத் தவிர விபரீதம் ஒண்ணும் நடந்துவிடவில்லையே?..."

"இதைவிட விபரீதம் என்ன நடக்கணும்" அவள் கோபத்துடன் கேட்டாள்.

"மஹிமா நீ படிச்சவள், தற்காலத்துப் பெண். பத்தாம்பசலி போல் பேசாதே. நன்றாக யோசித்துப் பார். இது புராண காலமில்லை. கந்தர்வன் நிழலைக் கண்டு மனங்கலங்கிப் பெண்மையிழந்து மண்குடம் உருவாகாது உடைந்துபோய்விட்டது என்று அழுவதற்கு..." சற்று ஏளனமாகவே கேட்டுவிட்டான் அவன்.

சாட்டையால் அடிப்பது போன்ற வேதனையால் துடித்துப் போனாள் மஹிமா.

"ஹரி! போதும் விளக்கம். மனம் அழிஞ்சா அதுவே போதும், அந்தப் பெண்ணுக்கு பிறகு வாழ்க்கையே கிடையாது. உங்களுக்குச் சொன்னால் எங்கே புரியப் போகிறது?"

அவளும் அவனை உறுத்து விழித்தாள்.

"தயவு செய்து என்னை மறந்துவிடு. உன் மனசைத் திடமாக்கிக் கொண்டு வேறு வாழ்க்கையை நீ தேடிக்கணும்னு உன்னை ரொம்பக் கேட்டுக்கிறேன். உன் உள்ளம் நோகும்படி பேசியிருந்தால் மன்னிச்சுக்கோ... இவ்வளவுதான் நான் சொல்ல விரும்பியது..." தோட்டப் பக்கம் திரும்பி நின்று கொண்டான்.



மஹிமா எழுந்திருந்தாள். கண்களையும் முகத்தையும் துடைத்துக் கொண்டாள். "ஹரி!" கம்மிய குரலில் அழைத்தாள். "அந்த மோதிரம்?..."

திரும்பிப் பார்த்த ஹரி மெல்ல அவள் அருகே வந்தான்.

"அதை என் பரிசாக வைத்துக் கொள். பரவாயில்லை..."

பொங்கி எழுந்த துக்கத்தை அடக்கும் நிமித்தம் உதட்டை அழுத்திக் கடித்துக் கொண்டாள். அதற்கு மேல் நிற்கப் பிடிக்காதவளாக வேகமாக வெளியேறிப் படிகளில் பறந்தோடிப் பின்கட்டிற்கு விரைந்தாள்.

வசுமதியைக் கண்டதும் அவளால் தாங்க முடியவில்லை. அவளை அணைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதுவிட்டாள்.

"உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டேன் அம்மா! ஏழைகளான எங்களுக்கு நீங்க ஆதரவளிச்சு எவ்வளவோ உதவிகள் செஞ்சீங்க, பதிலுக்கு நான் என்ன செய்தேன்?" அவள் புலம்பினாள்.

புரண்டு கிடந்த அவளது கூந்தலை அன்புடன் ஒதுக்கிவிட்டு முகத்தை நிமிர்த்திக் கன்னங்களில் வழிந்த கண்ணீரைப் புடவைத் தலைப்பால் மெல்லத் துடைத்துவிட்டாள் வசுமதி.

"நீ ஒண்ணும் தப்பு செய்யலையம்மா. எனக்கு எல்லாம் தெரியும்" என்றாள் கனிவான குரலில்.

திகைப்படைந்து போன மஹிமா அழுகையை நிறுத்திவிட்டு வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

"தெரிஞ்சும் உங்களுக்கு என் மேல் கோபம் வரலையா?"

"என் மகனை நீ விரும்பினே. அவன் உன்னை விரும்பினான். நான் ஏன் கோபப்படணும்?"

கழுத்திலணிந்திருந்த மெல்லிய சங்கிலியைக் கழற்றி அதில் கோத்திருந்த மோதிரத்தை உருவி எடுத்தாள் மஹிமா.

"இந்த வைர மோதிரத்தைப் பத்திக்கூடத்தெரியுமா?" துக்கத்துடன் வினவினாள்.

"எல்லாம் தெரியும். ஹரி வரட்டும். எல்லாத்தையும் மங்களமாக முடிக்கலாம்னு காத்திருந்தேன்."

"இந்தாங்க, இந்த மோதிரம் உங்க குடும்ப சொத்து. இதை வச்சிருக்க நான் அருகதையில்லாதவள். எனக்கு நீங்க நினைச்ச மங்கள நாள் கிடையாது...ஹரி இப்போ வேறு ஒரு பெண்ணை விரும்புகிறாராம்..."

மோதிரத்தை வசுமதி கையில் வைத்துவிட்டு மஹிமா இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு நெஞ்சு வெடிக்க ஆற்ற முடியாது அழுதாள்.

# 12

அன்று காலை வசுமதி பூஜையை முடித்துக்கொண்டு ஆரத்தித் தட்டுடன் வெளியே வந்தாள். வராந்தாவில் அவளை எதிர்பார்த்தபடி மஹிமா நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட வசுமதிக்கு அச்சமாக இருந்தது. தான் ஏதோ குற்றம் புரிந்துவிட்டவள் போல் உடல் குறுகி மனம் நாணி அவள் வேதனையுடன் தட்டை அந்தப்பெண்ணின் முன்னால் நீட்டினாள்.

ஜோதியை வணங்கிக்கொண்டே மஹிமா சொன்னாள்.



"இன்று காலை நான் வேலைக்குப் போகணும். உங்ககிட்ட சொல்லிக்கொண்டு போகக் காத்திருக்கிறேன்."

"காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் வா" அன்புடன் சொல்லிக்கொண்டு தட்டை அறையில் வைத்துவிட்டு அவள் நடந்தாள். சாப்பாட்டறை மேஜைமீது தயாராகத் தட்டுக்களைப் பரப்பி வைத்திருந்தார் சேனாபதி. எஜமானி உட்கார்ந்ததும் காப்பி டம்ளர்களை முன்னால் வைத்துவிட்டு வேகமாகத் தட்டுக்களில் இட்டிலியைப் பரிமாறிச் சாம்பாரை ஊற்றினார்.

"எனக்குப் பசிக்கவில்லை" என்று மறுத்த மஹிமாவின் கரத்தைப் பற்றி உட்கார வைத்தாள் வசுமதி.

"சாப்பிட்டுவிட்டுப் போம்மா. வேலை நடுவில் பசிக்கும்," சொல்லிவிட்டுச் சேனாபதி பக்கம் திரும்பினாள்.

அவளது பார்வையைப் புரிந்து கொண்டுவிட்ட அவர் லேசாக இருமினார், "ஐயா சாப்பிட்டாச்சு. ஆபீசுக்கும் கிளம்பிப் போய்விட்டாங்க. உங்களிடம் சொல்லச் சொன்னாங்க..." தயக்கத்துடன் தலையைத் தடவிக்கொண்டு நின்றார். அவருக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. "இந்த பைல்களையெல்லாம் உங்களைப் பார்க்கச் சொன்னாங்க... ஏதாவது முக்கியம் என்றால் ஒரு நாளில் குறிச்சு இதுக்குள்ளேயே வச்சுடச் சொன்னாங்க..." உள்ளே ஓடிச் சென்று ஒரு பைல்கட்டைத் தூக்கி வந்து மேஜைமேல் ஒரு புறம் வைத்தார்.

பொங்கி எழுந்த கோபத்தை அடக்கப் பற்களைக் கடித்துக் கொண்டாள் வசுமதி. 'ஹரி வர வர அத்து மீறிக்கொண்டு போகிறான். நிலைமையை இப்படியே

நீடிக்க விட்டால் தாய்க்கும் பிள்ளைக்கும் மனமுறிவு ஏற்பட்டுள்ள விஷயம் ஆபீஸ்வரை எட்டிவிடும் அந்த நரித்தலையன் மானேஜர் (அவனுக்கு வசுமதியைக் கண்டாலே ஆகாது. பெண் பிள்ளை இவள் நம்மை அடக்குவதா என்ற ஆத்திரத்தில் அவளைத் துச்சமாக நடத்தி வந்தான்.) இப்போது விஷயத்தைக் கேள்விப்பட்டுவிட்டால் அவன் மகிழ்ச்சியைச் சொல்ல வேண்டுமா!' பலவும் எண்ணி அவள் வெகுண்டாள். அவசரமாகச் சாப்பிட்டு விட்டு இருவரும் எழுந்தனர். நிலைமையை ஊகித்துக் கொண்ட சேனாபதி, "மஹிமாவுக்கு ஒரு டாக்ஸி கொண்டு வரவா? அம்பாசிடரை ஐயாவுக்காகப் பூபதி ஓட்டிக் கொண்டு போயிருக்கிறான்" என்று மென்று விழுங்கினார்.

பதிலளிக்காது கீழுதட்டைக் கோபத்துடன் கடித்துக் கொண்ட வசுமதி கையைக் கழுவி விட்டு தன் அறைக்கு விரைந்தாள். சடுதியில் தலையை வாரி முடித்துக் கொண்டு அலமாரியிலிருந்த வெண்பட்டுச் சேலையை எடுத்து உடுத்துக் கொண்டாள். பின்கட்டுச் சுவரில் கொக்கியில் மாட்டியிருந்த சாவியைக் கையில் எடுத்துக் கொண்டாள். கைப்பை, பைல் கட்டு சகிதம் அவள் புறப்பட்டுவிட்டாள்.

எஜமானி வயதிலே அவருக்கு மகளுக்குஒப்பானவள். அந்த நினைப்பில், அந்தப் பரிவில் அவர் தமக்குள்ளேயே சிலசமயம் அவளைக் கடிந்து கொள்வதும் உண்டு.

'தலையில் ஏற்பட்ட காயத்திற்குப்பின் பலவீனமான நிலையில் படுத்துக்கிடந்தவங்க—மூன்று வருஷங்களாகக் காரைக் கையில் தொடாதிருந்தவங்க — இப்போது எங்கே மகாகாளிபோல் கிளம்பிவிட்டாங்க...? தனக்குள் அன்புடன் அவளைத் திட்டினார். ஆனால் வெளியே ஏதும் சொல்லமுடியாமல் விழித்துக் கொண்டு நின்றார்.



"மஹிமாவுடைய சாமான்களைப் பழனியிடம் கொடுத்து அவனை வீட்டுக்கு அனுப்பிவையுங்க. நான் அவளைக் கொண்டுபோய் ஆபீஸில் விட்டுவிட்டு வருகிறேன்" உத்தரவிட்டு விட்டு அவள் கிளம்பிவிட்டாள்.

பூபதியின் தயவால் அந்தப்பழைய பியட் ஓடும்நிலையில் தயாராக இருந்தது காரில் ஏறிக்கொண்டு மஹிமாவை அருகில் அமர்த்திக் கொண்ட வசுமதிக்கு ஒருசில வினாடிகள் கைகளும் கால்களும் பதறின. வண்டியைக் கிளப்பித் தோட்டத்தைத் தாண்டி சாலைக்குள் வந்ததும் எங்கேயோ பறப்பது போன்ற பிரமை. பல மாதங்களுக்குப் பின்னர் வாகனப் புழக்கம் நிறைந்த தெருக்களில் வண்டியை ஓட்டிச் செல்ல அவளையும் அறியாமல் ஒரு சிறு அச்சம், திகில், குழப்பம். சில வினாடிகள்தான். பின்னர் விரைவில் அந்தப் பழைய தெம்பும் திடமும் துணிவும் தானே ஓடிவந்து விட்டன. வேகமாகக் காரை செலுத்திக் கொண்டு அவள் மஹிமா வேலை செய்த கம்பெனியின் வாசலில் கொண்டு வந்து நிறுத்தினாள். 'தாங்க்யூ! எனக்காக நீங்க ரொம்பச் சிரமம் எடுத்துக் கொண்டுவிட்டீங்க!' நன்றி தெரிவித்துவிட்டு இறங்க முயன்ற அவளைக் கையமர்த்தினாள் வசுமதி.

"மஹிமா!" என்று அழைத்தாள். திடீரென்று அலையாக மோதிக் கொண்டெழுந்த உணர்ச்சி வேகத்திலே பேச முடியாமல் ஒருகணம் அவள் திணறிப் போனாள். மஹிமாவின் கரத்தை அன்புடன் பற்றிக் கொண்டாள்.

"வீட்டில் அந்தச் சூழ்நிலையிலே மனம்விட்டு என்னால் எதுவும் பேச முடியவில்லை. ஹரி நடந்துகொள்ற விதத்தைப் பார்த்து மனசு ஒடிஞ்சுபோய் உட்கார்ந்திருக்கிறேன். என்னென்னவோ சொல்லணும்னு நினைச்சேன். உன் முகத்தைப் பார்த்ததும் வேதனை தாங்க முடியாமல் வார்த்தைகள் நெஞ்சுக்குள்ளேயே நின்றுகொண்டிருக்கு. என் மனசு படும் துன்பத்தை உனக்கு
...!

எப்படி விவரிக்கிறதுன்னும் புரியவேயில்லே. ஹரி உனக்குச் செஞ்சிருக்கிற துரோகத்தை நினைச்சு நான்ரொம்ப அவமானப்படுகிறேன்...எனக்காக நீ பெரிய மனசு பண்ணி அவனை மன்னிச்சுடு அம்மா...'' தழதழத்த குரலில் கேட்டுக் கொண்டாள்.

மஹிமாவின் கண்களிலிருந்து முத்துக்கள்போல் கண்ணீர்த்துளிகள் கன்னங்களில் உருண்டன. துன்பத்தின் சுமை தாளமுடியாமல் அவள் பேசாது விசும்பிக் கொண்டிருந்தாள்.

''சே! சே! வேலைக்குப் போகணும் அழுது கொண்டிருந்தால் சரிப்படுமா? கண்களையும் முகத்தையும் துடைச்சுக்கோ. நான் போகுமுன் உன்கிட்ட இரண்டு விஷயங்களைப் பற்றிக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

''இப்படி ஒரு விஷயம் நேர்ந்துவிட்டது யாருக்குமே தெரிய வேண்டிய அவசியமில்லை. இது உன் மனசிலேயே ரகசியமாக இருக்கட்டும். வெளியில் தெரிஞ்சால் இது எல்லார் வாழ்க்கையையும் பாதிக்கும். அதனால் நீ முன் போல எதுவும் நடக்காதது மாதிரி எங்க வீட்டுக்கு என்னைப் பார்க்க வந்து போய்க் கொண்டிரு. அடுத்தபடியாக உனக்கும் ஹரிக்கும் ஏற்பட்ட தொடர்பை ஒரு கெட்ட கனவாக மனசிலிருந்து உதறிவிடு. உனக்குன்னு ஆண்டவன் போட்டிருப்பவன் எங்கேயும்போய்விடமாட்டான். அதனால் இந்த ஆசையை நீ அடியோடு மறந்துடு அம்மா. அதுதான் உனக்கும் எங்களுக்கும் நல்லது. இந்த உதவியை நான் என்றும் மறக்கமாட்டேன்'' சொல்லி முடிக்குமுன் அவமானத்தில் உடல் கூசிக் குறுகி முகம் சிவந்து நெஞ்சு பதறிப் போனாள் அவள். கண்களைத் துடைத்துக்கொண்டு காரின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் மஹிமா. சாதாரணச் சமயமாக இருந்தால் வசுமதியிடம் அவளுக்குத் திநம்பி

இப்போது அவள் மனம் மாறிவிட்டது காரைக் கடற்
கரை சாலை வழியே மெல்ல ஓட்டிக்கொண்டு தொழி
லாளிகள் சிலையருகே வசதியான இடத்திலே நிறுத்திக்
கொண்டாள் வானத்தையும் கடலையும் பார்த்தபடி
உறைந்து போய் உட்கார்ந்து விட்டாள். 'அந்தப்
பெண் ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டவள். நான்
அப்படிப் பேசியிருக்கக் கூடாது. 'பாவம்' என்று
தன்னையே சாடிக்கொண்டு கைக்குட்டையை தேடிய
படி கைப்பையைத் திறந்து துழாவினாள் கடிதங்கள்,
பேனா, கொண்டை ஊசிகள் என்று என்னென்னவோ
அவள் அடைத்து வைத்திருந்த பொருள்கள் காரின்
ஆசனத்தின் மீது வந்து விழுந்தன. அத்துடன் கூட
விழுந்த காகித உறையைக் கண்டதும் அவள் மனம்
திக்கென்றது. அதன் உள்ளேயிருந்த படத்தைக் கையில்
எடுத்துப் பார்த்தாள்.

திருமணமானவுடன் அவளும் ராஜசேகரனும் மாலை
யும் கழுத்துமாக அருகருகே நின்ற கோலத்தில் எடுத்த
படம். பழுப்பாகிவிட்ட போதிலும் உருவங்கள் பளிச்
சென்று தெரிந்தன.

ஹரி அன்று மனம் புண்பட ஒரு கேள்வி கேட்
டானே? அதற்குப் பதிலளிக்க வேண்டுமென்று அவள்
அதைத் தேடி எடுத்துப் பத்திரமாக பைக்குள் வைத்துக்
கொண்டிருந்தாள். அந்தப் படத்தைப் பார்த்ததும்
கடந்தகால நினைவுகள் எல்லாம் துன்பமாகத் திரண்டு
நெஞ்சை அடைத்தன. கண்கள் கலங்கின. சிந்தனை
எங்கேயோ ஓடிவிட்டது.

அப்பொழுது சூரத் நகரில் வாழ்ந்து கொண்டி
ருந்தனர். அவளது விதவைத் தாய் தன் ஒரே மகளைச்
சென்னையில் படிக்கவிட்டுச் சூரத்தில் ஒரு மருத்துவ
மனையில் தியேட்டர் நர்ஸாகப் பல ஆண்டுகள் பணி



புரிந்து வந்தாள். வசுமதி பி. ஏ. பட்டம் பெற்று
ஆசிரியர் பயிற்சியிலும் தேர்ந்து ஊருக்குத் திரும்பிய
பொழுது அவள் தாய் இருதய நோய்வாய்ப்பட்டு
வேலையினின்று ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டாள்.
அவளுக்குக் கிடைத்த சொற்ப உபகாரச் சம்பளம்
குடும்பத்திற்குப் போதாதிருந்தது. நோயாளித் தாயைப்
பாதுகாக்க வேண்டியது தன் பொறுப்பு என்று
உணர்ந்த அவள் மிகவும் முயற்சித்து அங்கேயே தனியார்
பெண்கள் பள்ளி ஒன்றில் கணித ஆசிரியையாக வேலை
தேடிக் கொண்டு விட்டாள். அப்பொழுது ஒருநாள்
அவள் வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம். இருட்டத்
தொடங்கிவிட்டது. லாரிகளும் மோட்டார்களும் சைக்
கிளுமாக வாகனங்கள் நெருக்கமாக அடுத்தடுத்துத்
தெருவில் போய்க் கொண்டிருந்தன. "ஐயோ...அம்மா!"
என்று யாரோ தமிழில் கூச்சலிட்டது கேட்டது. அதற்
குள் பாதையோரத்தில் பெருங்கூட்டம்.

ஹிந்தி, குஜராத்தி, ஆங்கிலம் என்று ஆளுக்கு ஒரு
மொழியில் கத்திக் கொண்டிருந்த கூட்டத்தைப் பிளந்து
கொண்டு பார்த்தாள். கடை முகப்பில் எரிந்த குழல்
விளக்கு வெளிச்சத்தில் நடைபாதை மீது யாரோ
சுருண்டு கிடப்பது புரிந்தது. நெற்றியை அமுக்கிக்
கொண்டு, "அப்பா, அம்மா..." என்று அவன் மீண்டும்
அரற்றினான். "ஒன்றுமில்லை. சின்ன காயம். சைக்கிள்
காரன்மேல் தப்பில்லை" என்று கம்பீரமான குரலில் ஒரு
மனிதன் அதட்டவே, கூட்டம் வேகமாகக் கலைந்து
மறைந்தது. காயம் பட்டவன் நெற்றியை அமுக்கிக்
கொண்டு எழுந்து உட்கார்ந்தான் தாடியும் மீசையும்
அழுக்கடைந்த உடையும் அதில் ரத்தக் கறையுமாக
அனாதை போல் காணப்பட்ட அவனைக் கண்டு ஏனோ
வசுமதியின் உள்ளம் கரைந்தது.

"நீங்கள் தமிழரா?" வியப்புடன் கேட்டாள். 'ஆம்'
எனத் தலையசைத்தான் அவன்.

"எங்கள் வீடு இந்தத் திருப்பத்தில்தான் இருக்கு.
என் தாயார் கூட ஒரு நர்ஸ்தான். என்னோடு வந்தீங்
கன்னா..." அழைத்தாள். வசுமதியின் தாய்உடல்அயர்ச்சி
யைப் பாராட்டாது எழுந்து வந்து அவன் காயத்தைக்
கழுவி மருந்து போட்டுக்கட்டிவிட்டாள். வசுமதி அவசர
மாகத் தேநீர் தயாரித்துக்கொண்டு வந்துஅவனுக்கு உப
சரித்தாள். 'சின்ன வயது தான். இன்ஜினியர் பட்டம்
வாங்கினவனாம். வேலையைத் தேடி இங்கே ஒரு மாச
மாக அலைகிறானாம். காசெல்லாம் செலவாகி இரண்டு
நாள் பட்டினியாம்' அவள் தாய் அவனைப் பற்றிப்
பின்னர் விவரித்தாள் வசுமதியின் நெஞ்சு பாகாய்க்
கரைந்தது. அவன் அன்று அங்கே வெகு நேரம்
தங்கியிருந்து இரவு சாப்பிட்டுவிட்டுத்தான் போனான்
அதற்குப் பின்னர்அவன் பல நாட்கள் சென்றபின் அவர்
களைக் காண வந்திருந்தான். 'அவனா இவன்?' என்று
அதிசயிக்கும்படி ஆளே மாறிவிட்டிருந்தான். வேலை
ஒன்று தேடிக்கொண்டுவிட்ட மகிழ்ச்சியைத் தெரிவிக்க
அவன் வந்திருந்தான். தாடியும் மீசையும் மறைந்து
வாட்டசாட்டமாகச் செக்கச் செவேலென்று சுத்தமான
உடையில்அவன் கம்பீரமாகக் காட்சியளித்தான். வசுமதி
மயங்கிப்போனாள். ஒருநாள் அவன் அவர்கள் வீட்டுக்கு
வந்திருந்தான். வசுமதி அவனுக்குத் தன் கையால்
தயாரித்த டீயையும் பலகாரததையும் தந்தாள்.

"நீ போட்ட டீயா?...கட்டாயம் சாப்பிடுவேன்"
என்று புன்னகைத்த வண்ணம் கோப்பையுடன் சேர்த்து
அவளது கரத்தையும் அவன் ஆசையுடன் பற்றிக் கொண்
டான். அவள் நெஞ்சு பயத்திலும் இன்பத்திலும் வேக
மாக அடித்துக் கொண்டது. வியர்த்து விருவிருத்தது
உணர்வு குழம்பி மயங்கி நின்றாள் அவள். "உன்னிடம்
ஒண்ணு கேட்கக் கொஞ்சநாளா மனசு அடிச்சுக்கிறது
கோவிச்சுக்க மாட்டியே. என்னை நீ கல்யாணம் பண்ணி
கணும். கேட்கத்தான் இங்கே வந்தேன்..." அது சமயம்



அவள் தாய் உள்ளேயிருந்து வந்துவிட்டாள், தன்னை
மறந்து மகள் நின்ற நிலையையும் பார்த்துவிட்டாள்.

அவன் போன பின்பு அவள் வசுமதியிடம் இரைந்
தாள் "இது என்ன பிடிவாதம்? அவன் ஊர் என்ன?
மற்ற விவரம் என்ன? ஒண்ணுமே தெரியாது. கேட்டா
லும் அவன் விவரம் சொல்லாது மழுப்புகிறான்.
அவனைப் போய்க் கல்யாணம் பண்ணிப்பேன்னு பிடி
வாதம் பண்ணுகிறாயே... உனக்கே இது நல்லா
இருக்கா? இந்த ஆசையை மறந்துடு" பன்முறை கடிந்து
கொண்டாள். கெஞ்சினாள் ..பயமுறுத்தினாள்.

வசுமதி கேட்டாளா?

ராஜசேகரனை மறக்கவே முடியாது என்று பிடிவாத
மாக இருந்தாளே! அப்படியிருக்கையில் ஹரியை மறக்கச்
சொல்லி மஹிமாவுக்குப் புத்தி சொல்ல வந்தது என்ன
நியாயம்?

அருகே விளையாடிக் கொண்டிருந்த மீனவச்
சிறுவர்கள் செய்த சப்தத்தில் உணர்வு பெற்று விழித்துக்
கொண்டாள். காரைக் கிளப்பிக் கொண்டு, வீட்டை
நோக்கி அவள் புறப்பட்டாள்.

## 13

அன்று ஆபீஸ் விடுமுறை. வசுமதிக்கு விரதநாள்.
கோதுமைக் கஞ்சிதான் ஆகாரம். வேண்டா வெறுப்
பாக அதைக் குடித்துவிட்டு அவள் அறையைவிட்டு
வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். மகன் மாடியிலி
ருந்தால் வசுமதி கீழ்ப் பகுதியிலும் அவன் முன்னறைக்
குள் வந்தால் அவள் மாடியறைக்குமாக மறைந்து
கொண்டு ஒரே வீட்டில் விரோதிகள்போல் ஓடி ஒளிந்து

பல நாட்களாக கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தனர். இந்த விபரீத நிலை நீடித்துக் கொண்டு போனால் அதனால் விளையும் பயங்கர உணர்வில் தலை சுக்கலாக வெடித்துவிடும் போன்று ஓர் அழுத்தம். அவளால் தாங்க முடியவில்லை. ஹரியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய சங்கதிகளும் இருந்தன. தொடர்ந்து மௌனமாக இருப்பதிலோ சுய மதிப்பை எண்ணி வாயைத் திறக்காமலிருப்பதிலோ பயன் ஏதும் இருப்பதாகப் புலப்படவில்லை.

பகல் உணவிற்குப் பிறகு மாடியறைக்கு விரைந்த ஹரி வெளியே செல்ல அழகாக உடுத்திக் கொண்டு படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தான்.

அவமானத்தை உதறிவிட்டு, ''ஹரி'' என்று அவள் பல நாட்களுக்குப் பின்னர் அவனை உரத்தகுரலில் அழைத்தாள். மணல் படிந்த சிமெண்ட் தரையில் இழுக்கப்படும் தகரப் பெட்டி எழுப்பும் காதுகிழியும் ஓசை போல் அவள் குரல் அவளுக்கே வேதனையாகவும் விசித்திரமாகவும் கேட்டது.

ஹரி திடுக்கிட்டுப் போய் நின்றான். முகம் சிவந்து நெற்றிமீது முத்துக்களாக வியர்வை துளிர்த்து நின்றது. கைக்குட்டையில் மெல்ல முகத்தைத் துடைத்துக் கொண்டு கண்கள் தணலாக அவளை முறைத்துப் பார்த்தான்.

''வெளியே கிளம்பிப் போகுமுன் இப்படிக்கொஞ்சம் வரயா? உன்னோடு முக்கியமான சில விஷயங்கள் பேச வேண்டியிருக்கு'' முடிப்பதற்குள் மூச்சு நின்றுவிடும் போன்ற திகில். அவளுக்கே அவள் மன நிலை மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

சாப்பாட்டறை மேஜைமீது பரத்திக் கிடந்த உணவுப் பாத்திரங்களை எடுக்க வந்த சேனாபதி காதுகளைக்



கூர்மையாகத் தீட்டிக் கொண்டார். அவசரப்படாது மெல்லப் பாத்திரங்களை எடுத்து மரத் தட்டின்மீது அடுக்கிக் கொண்டு அடுத்தபடியாக நடக்கப்போகும் நிகழ்ச்சி என்னவாக இருக்கும் என்று அறியும் ஆவலில் காத்துக்கொண்டு நின்றார்.

''இப்பப் பேசித்தான் ஆகவேண்டுமா?'' சீறினான் அவன் சினம் தாங்காமல்.

''உனக்கும் எனக்கும் கொஞ்சம் பொழுது ஒழிந்திருக்கும்போதுதானே பேச முடியும், இன்று ஆபீஸ் கிடையாது அதனால் '' அவள் நிறுத்திவிட்டுத் துணிவுடன் அவனை உறுத்துப் பார்த்தாள்.

''உங்களுக்கு ஓய்வு இருக்கலாம். ஆனால் எனக்கு அவசரமாக வெளியே போக வேண்டியிருக்கிறது. என் நண்பர்கள் இன்று பகல் பிளேனில் வருகிறாங்க. அவங்களை வரவேற்க ஏர்போர்ட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்...''

''அதைவிட முக்கியமான ஒரு விஷயத்தை உன்கிட்ட பேச வேண்டியிருக்கு...'' அவள் விடவில்லை.

''உங்களுக்கு உங்கள் விஷயம் முக்கியம். எனக்கு என் காரியம் அதைவிட முக்கியம். நாளைக்குக்கூட ஆபீஸ் விடுமுறை நாள்தான். நானே உங்களைத் தேடிக் கொண்டு வருவேன்...'' கோபத்துடன் அவன் கிளம்பி விட்டான்

தன்னையே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்ற சேனாபதியைக் காணப் பிடிக்காதவளாக, அவமான உணர்வு உடலைத் தகிக்க அவள் மெல்ல நடந்து அறைக்குள் வந்து பெஞ்சியின்மேல் உட்கார்ந்து கொண்டாள்.

ஹரி அவளிடம் அதிகம் பேசிவிட வில்லை எனினும் அவள் குறிப்பாக ஒன்றைக் கவனிக்கத் தவறவில்லை. 'அம்மா!' என்று அழைப்பதை அவன் நிறுத்திக் கொண்டிருந்தான். முன்பின் தெரியாத ஒருத்தியைப் பார்ப்பது போல் அவன் அவளை வெறித்தது, அசட்டையாக பதிலளித்தது, அவளது உணர்ச்சிகளை மதிக்காது காலடியில்போட்டு மிதித்ததுபோல் அகங்காரமாக வெளியேறியது...எல்லாவற்றையும் நினைக்க நினைக்க அவள் நெஞ்சை வேதனை வாளாக அறுத்தது. துக்கத்தின் சுமை தாளமுடியாது இருதயம் இரண்டாகி விடும்போல் அவள் துன்பத்தில் தடுமாறினாள். கண்களில் பெருகிய நீர் திரை வழியே அவள் கணவரது படத்தைப் பார்த்தாள்.

ராஜசேகரன் புன்னகைத்துக் கொண்டிருந்தான் அதில்.

"பெற்றால்தான் ஒருத்தி தாயாகி விடுகிறாளா? பெற்றவளைவிட ஆயிரம் மடங்கு அன்பு காட்டி உயிருக்கு உயிராக வளர்த்தவளுக்கு என்ன பெயர்? சொல்லுங்க," வாய்விட்டுப் பேசியவள் தாளமுடியாது திணறினாள். மாலையாக வழிந்த கண்ணீரைச் சமாளிக்கமுடியாது விம்மினாள்.

'அம்மா!' என்ற அந்த ஒரு சொல்லைக் கேட்க அவள் பட்டபாடு, சிரமங்கள், தியாகங்கள் எல்லாம் ஒருங்கே திரண்டு பூத வடிவில் நின்று கொண்டு இரைச்சலிட்டு ஏளனமாக நகைப்பது போன்ற ஒரு பிரமையில் அவள் திகைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள். எண்ணங்கள் எங்கேயோ வட்டமிடத் தொடங்கின.

ராஜசேகரனை அவள் மணந்து ஓராண்டுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது. தான் சம்பாதித்து மனைவியைக் காப்பாற்ற வேண்டுமென்ற கொள்கை அவனுக்கு. திருமணமானவுடன் அவள் வேலையை விட்டு வீட்டிலேயே



தங்கிவிட்டாள். கொஞ்ச நாட்களில் அவள் தாயும் காலமாகி விட்டாள்.

ராஜசேகரனது படிப்புக்கும், திறமைக்கும் அவன் செய்து வந்த வேலைக்கும், சம்பளத்திற்கும் சின்னஞ்சிறு வீட்டில் அவர்கள் இருவரும் மிகவும் ஆனந்தமாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

தீபாவளி நெருக்கத்திலே ஒருநாள். வேலையினின்று திரும்பி வந்தவன் கையில் ஒரு பார்சலுடன் உள்ளே நுழைந்தான்.

வசுமதிக்குப் பொறுமை அதிகம். பதட்டமாகச் சட்டென்று எதுவும் கேட்டுவிட மாட்டாள். மேஜைமீது அவன் வைத்த பார்சலைப் பற்றி அவள் ஒன்றும் கேட்கவில்லை. அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்த அவனும் மௌனமாகவே இருந்தான். சாப்பிட்டதும் கை கழுவிக் கொண்டு வந்தான். துடைக்க அவள் நீட்டிய துண்டை எடுக்காது அவளது புடவை தலைப்பைப் பற்றிக் கையையும் முகத்தையும் துடைத்துக் கொண்டான்.

"புடவையை அழுக்காக்கறீங்க...இதென்ன விளையாட்டு?" பொய்யாகக் கோபித்துக் கொண்டு அவள் தலைப்பை இழுத்துக் கொண்டாள்.

"சீக்கிரம் என் விளையாட்டை முடிச்சுக்கணும் இல்லாட்டி..." என்று கூறிவிட்டு அவள் கன்னத்தை மெல்ல வருடினான். வெட்கத்திலே வசுமதி முகம் சிவந்து போனாள். நெஞ்சிலே இன்ப ஊற்று வரப்போகின்ற நன்னாளை எண்ணிப் பல கற்பனைகள்—மகிழ்ச்சி வெள்ளத்திலே மூழ்கிப் போனாள்.

மேஜைமீது வைத்த பெரிய பார்சலை மெள்ளத்திறந்தான் ராஜசேகரன். அதற்குள்ளே மூன்று தனி பார்சல்களிருந்தன. முதலில் ஒன்றைக் கையிலெடுத்துப் பிரித்தான். 'காலையில் நீ எனக்குச் சொன்ன அந்த மகிழ்ச்சி

யான செய்தியைக் கேட்டபிறகு தொழிற்சாலையில் எனக்கு வேலையே ஓடவில்லை. உனக்கு என்ன பரிசு கொடுக்கலாம்னு நினைச்சு கடையிலே தேடி அலைஞ்சு முடிவில் இதை வாங்கிக்கொண்டு வந்தேன். சிவப்பு வர்ணம் உனக்கு ரொம்பப் பிடிக்கும், அதனால் தீபாவளிக்கு உனக்கு இந்தச் சேலையை எடுத்தேன். உங்கம்மா இருந்திருந்தா பேரப்பிள்ளை பிறக்கப் போகிறான் என்ற ஆனந்தத்திலே பூரிச்சுப் போயிடுவாங்க இல்லையா?'' கேட்டுக்கொண்டு அவளது கரத்தில் புடவைப் பார்சலை வைத்தான்.

வசுமதிக்குத் தாங்கொணா மகிழ்ச்சி... ''தாங்க்யூ!'' என்றபடி அவனது தோள்மீது சாய்ந்துகொண்டாள். அடுத்த பார்சலைப் பிரித்து ஒருமல்வேட்டியையும், துண்டையும் எடுத்து மேஜைமீது வைத்தான். ''இது எனக்கு நானே கொடுத்துக் கொள்ளும் பரிசு...'' சிரித்துக் கொண்டே மூன்றாவதாக இருந்த பார்சலைக் கையில் எடுத்து வேண்டுமென்றே பிரிக்காது ஜாலம் பண்ணினான்.

அதற்குள் என்ன இருக்கிறது என்று அறிய ஆவல் அவளுக்கு. ''போதும் விளையாட்டு. அதைக் கொடுங்க நான் பிரிக்கிறேன்.'' அவள் கொஞ்சிக் குழைந்தாள். பாய்ச்சல் காட்டிக் கொஞ்ச நேரம் அவளை அலைக்கழித்து விட்டு பின்னர் மெல்ல அந்தப் பார்சலை அவன் பிரித்தான். அழுத்தினால் கிரீச்சிடும் ரப்பர் முயல் பொம்மை ஒன்று உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தது. அதை அழுத்தி வீல் வீல் என அவள் காதருகில் கத்தவிட்டுப் பின்னர் சிரித்துக் கொண்டு அவள் கையில் கொடுத்தான்.

'உன் பிள்ளைக்கும் ஒரு பரிசு வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். சரிதானே...'' கேலியாகக் கேட்டான்.



மஞ்சள் வண்ண ரப்பர் முயல்...பளபளத்த அதன் பாசி மணிக் கண்களில் வண்ண வண்ணமாக வருங்காலத்தைக் கண்டு மகிழ்ச்சியில் அவள் பொங்கிப் போனாள்... இன்னும் சில மாதங்களில் தாயாகப் போகிறோம் என்ற பெருமை அவளுக்கு—வாட்டசாட்டமான செக்கச்செவேலென்று பார்க்கக் கண் கவர் கணவன்—சீக்கிரம் தாயாகப் போகிறோம் என்ற மகிழ்ச்சி—தன் அதிர்ஷ்டத்தைப் பற்றி அவள் அடிக்கடி வியந்து கொண்டிருந்தாள்.

சில நாட்களுக்குப் பின்னர் வழக்கம் போல் அன்று காலை அவன் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுப் போனான். வாசலில் நின்று தெருவில் அவன் தலை மறையும்வரை வழியனுப்பிவிட்டு உள்ளே வந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு ஓய்வாகப் படிக்க ஒரு பத்திரிகையுடன் அவள் முன்னறையில் உட்காருவதற்குள் பொழுது நடுப்பகலாகிவிட்டது. மேலெழுந்தவாரியாகப் படித்துக் கொண்டு பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

வாயிற்கதவு பலமாக இடிபட்டது. வெளியே பரபரப்பான குரல். திடுக்கிட்டுப் போய்விட்டாள் அவள். விரைவாகக் கதவைத் திறந்தாள்.

''நீங்கள்தானே மிஸஸ் வசுமதி ராஜசேகரன்?'' வெளியே நின்ற இருவரில் ஒருவர் பதட்டமாகக் கேட்டார்.

''ஆமாம்!'' என்பதற்குள் யுகமாகிவிட்டது போன்ற ஒரு பிரமை. ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்று உள்ளுணர்வின் எச்சரிப்பால் அவள் உடல் நடுங்கியது. வாய் உலர்ந்து அவள் விழித்துக் கொண்டு நின்றாள்.

''உங்கள் கணவர் வேலை செய்யும் தொழிற்சாலையிலிருந்து வருகிறோம். உங்களுக்குத் துக்கமான ஒரு

செய்தியைச் சொல்ல மிக்க வருந்துகிறோம். வேலை நடுவே ராஜசேகரனுக்கு ஹார்ட் அட்டாக் வந்து மயக்கமாக விழுந்து விட்டார்—தாமதிக்காமல் கம்பெனியின் ஆஸ்பத்திரியில் அனுமதித்தோம். டாக்டர்கள் எவ்வளவோ முயற்சித்தார்கள்—பயன் இல்லை. அரை மணிக்கு முன்பு அவர் இறந்துவிட்டார்...''

வானம் தலையில் இடிந்து பூமி நழுவி, எங்கேயோ போய் மோதிக் கொண்டுவிட்டது போன்ற அதிர்ச்சியில் உறைந்து சிலையாகச் சில நிமிடங்கள் அவள் நின்றுவிட்டாள். விழிப்பு ஏற்பட்டதும துக்கத்தின் சுமை தாளாது வாய்விட்டு அலறினாள். துடித்தாள் விழுந்து புரண்டாள். மயக்கமடைந்தாள்..ராஜசேகரன்—அவளது அன்புக் கணவன் அவளை விட்டு மறைந்துவிட்டான் என்ற உண்மை நிலையைக் கதறி அழுது அவள் சிந்திய கண்ணீரால் மாற்ற முடியவில்லை.

சில நாட்களுக்குப் பின்னர்—அழுது புலம்பி, தன்னைத் தானே தேற்றிக் கொண்ட பின்னர்தான் அவளுக்குத் தன் நிலைமையைப் பற்றிய சிந்தனை வந்தது தன் உடல் நிலையைப் பரிசோதித்து, தன்னுள் வளர்கின்ற உயிருக்குப் பாதுகாப்பு அளிக்க ஆலோசனை வேண்டி அவள் அங்கு பிரபலமாகியிருந்த ஒரு பெண் டாக்டரிடம் சென்றாள் வெகுநேரம் பரிசோதித்த பின்னர் அவள் வசுமதியை ஏற இறங்கப் பார்த்தாள்

''சிறிதளவு ரத்த சோகை ஏற்பட்டிருக்கிறது. தக்க மருந்துகள் உணவுகள் மூலம் குணப்படுத்திவிடலாம்.''

''என் குழந்தைக்கு அதனால் தீமை ஏதும் இல்லையே டாக்டர்?'' பரபரப்பாகக் கவலையுடன் விசாரித்தாள் வசுமதி

டாக்டர் அம்மாள் லேசாகச் சிரித்தாள். அன்புடன் அவள் தோளை மெல்லத் தட்டினாள்.

வந்து போய்க் கொண்டிருந்தாள். மூன்றாவது வீட்டில் வசித்த கிறிஸ்தவ நண்பர், "பயப்படாதே அம்மா. பக்கத்தில் நாங்கள் இருக்கிறோம்" என்று ஆறுதல் சொன்னார். ராஜசேகரன் வேலை பார்த்து வந்த தொழிற்சாலையின் அதிபரே நேரே வந்து அனுதாபம் தெரிவித்தார். "எந்த உதவி வேண்டுமானாலும் தயங்காதீர்கள். நாங்களிருக்கிறோம் உதவ" என்று ஆதரவாகப் பேசிவிட்டுப் போனார். அவனுக்குச் சேர வேண்டிய சம்பள பாக்கியையும் அத்துடன் கூடுதலாக ஒருமாச சம்பளத்தையும் கருணை கூர்ந்து ஒரு செக்காக சில தினங்களில் அவளுக்கு அனுப்பி வைத்தார். கூட உழைத்த தொழிலாள நண்பர்கள் அனுதாபக் கூட்டமொன்றை நடத்திவிட்டு, தங்கள் ஆழ்ந்த வருத்தத்தை ஒரு கடிதம் மூலம் அவளுக்குத் தெரிவித்துக் கொண்டனர்

அதற்குப் பின்னர் நாட்கள் வேகமாக நகர்ந்தன. அனுதாபிகளின் கூட்டமும் வேகமாகக் கரைந்தது. ராஜசேகரனின் மறைவு என்ற செய்தி மிகவும் பழையதாகி விட்டது. அவரவர்களுக்கு எத்தனையோ வேலைகள். மறந்துவிட்டனர். ஆனால் அவனது நினைவை இளம் விதவை வசுமதியால் மறக்க முடியவில்லை.

உள்ளத்திலே குமுறிக் கொண்டெழுந்த துயரத்தை அழுது தீர்க்கவும் இயலாது—யாரிடமும் சொல்லிக் கொள்ளவும் புரியாது அவள் தன்னந்தனியே அந்த வீட்டில் ஒரு கைதிபோல் தன் உணர்வுகளுடன் உழன்று கொண்டிருந்தாள். இவ்வளவு விரைவில் தங்கள் வாழ்க்கை இன்பத்தை மரணம் கவர்ந்து கொண்டுவிடும் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை. இறந்து போகுமுன் சில தினங்களாக ராஜசேகரன் எதையோ அவளிடம் சொல்லத் தயங்குவதை அவள் உணர்ந்தாள். தூண்டிக் கேட்க மனம் இன்றி வாளா இருந்துவிட்டாள். அது எத்தனை பெரிய தவறு!



அவன் இறந்து போவதற்குச் சில தினங்களுக்கு முன் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை, காபி பலகாரம் சாப்பிட்டு விட்டு, காலைப் பத்திரிகையுடன் தரைமீது சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்து படிக்கத் தொடங்கினான். பக்கத்திலே வந்து அமர்ந்த வசுமதி அவன் தோள்மீது சாய்ந்தபடி பத்திரிகைக்குள் எட்டிப் பார்த்தாள். முதலாவது பக்கத்தில் ஒரு நகைக் கடை விளம்பரம். அழகானதொரு வைர நெக்லஸின் படம் காணப்பட்டது. விளையாட்டாகத்தான் அவள் கேட்டாள்.

"ராஜ்! எனக்கு இந்த நெக்லசை வாங்கித் தருவீங்களா?" அவள் சிரித்தாள்.

ஏனோ அவன் முகத்தில் துன்பத்தின் சாயை. 'வாங்கித் தந்தால் போச்சு. இந்த அழகான கழுத்திலே இதைவிட உயர்ந்த அட்டிகையைப் பூட்டிப் பார்க்க எனக்கு எத்தனையோ ஆசை. ஆனால் விதிதான் சதி செய்கிறது" அவள் கழுத்தின் மீது முகத்தைப் பதித்துக் கொண்டான். குரலில் துன்ப வேதனை.

இரண்டு பொட்டுக் கண்ணீர் துளிகள் அவள் கழுத்தைச்சுட்டன...பதறிப் போய்விட்டாள். "ராஜ்! விளையாட்டாக நான் சொன்னதுக்கு இப்படி வேதனைப்படுகிறீர்களே!'

"கள்ளங் கபடற்ற பரிசுத்தமான பிறவி நீ. நான் அப்படிச் சொல்லிக்கொள்ள முடியாதவன். உன்னைப்பத்தி எனக்குள்ளேயே எண்ணி அதிசயப்படறேன். உன் தாயாராவது என்னைப் பற்றிய விவரம் தெரிஞ்சுக்க அடிக்கடி ஏதாவது கேள்வி கேட்டுகிட்டிருந்தாங்க. நீ இதுவரை என்னைப்பத்தி ஏதுமே கேட்டதில்லை. என்னை ஆசையா[illegible]னே ஏற்றுக் கொண்டு கல்யாணம் பண்ணிக் கொள்ள ஒப்புக்கொண்டாய், ஒத்துமையாக வாழவும் முன்வந்திருக்கிறே...அதை நினைச்சு..." தழதழத்த குரலில் அவன் பேசினான்.

"என்னைப் பத்தி ஏதுமே கேட்காமத்தானே நீங்களும் கல்யாணம் செஞ்சு கொண்டீங்க?"

"உன்னைப்பற்றி ஏதும் கேட்கத் தேவையிருக்கவில்லை. உன்னைப் பார்த்ததுமே என் மனசில் ஒரு நிறைவு, ஒரு நம்பிக்கை, மகிழ்ச்சி எல்லாம் பொங்கிக் கொண்டு வந்தது...எப்பவோ, எந்தப் பிறவியிலேயோ என்னை விட்டுப் போயிருந்த என் ஆன்மாவின் மறுபகுதியின் சங்கமிப்பு போல ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அதுக்கு மேலே என்ன வேணும்?"

உணர்ச்சி வசப்பட்டுப்போன வசுமதி அவனது தோள்களை இறுகப் பற்றிக் கொண்டாள். "ராஜ்! எனக்குக் கூட உங்களை முதல்ல பார்த்தபோது எங்கேயோ முன்னமே சந்தித்தது போன்ற ஒரு நினைப்புத்தான் வந்தது."

"இப்போது சரி...விட்டுவிடுகிறேன். ஆனால் ஒரு நாளைக்குச் சொல்லத்தான் போகிறேன்—களங்கமாகி விட்டிருக்கும் என் கடந்த காலத்தைக் கேட்டு நீ திகைக்கப் போறே. அப்போ ஒரு சமயம் உனக்கு என் மேலே வெறுப்பு ஏற்பட்டாலும் வியப்பில்லை."

"ஒரு பெண்ணுக்கு வேண்டியது அவளது கணவன், அவன் அன்பு. வருங்காலத்தைப் பற்றிய இனிப்பான நம்பிக்கை அதைத் தவிர அவனது கடந்த காலத்தைப் பற்றி அறிய வேண்டிய தேவையும் இல்லை. உரிமையும் இல்லை. இது என் கொள்கை" வசுமதி மெல்லிய குரலில் பதிலளித்தாள்.

அவளது கரத்தைப் பற்றி ஆசையுடன் கன்னத்திலே அழுத்தி வைத்துக் கொண்டான்.

"எனக்கு வார்த்தைகளால் சொல்ல முடியலை. நான் ரொம்ப கொடுத்துவச்சவன். எந்த ஒரு சக்தியும் நம்மைப் பிரிக்கவே முடியாது. நிச்சயம்..." பெருமூச்செறிந்தான்.



விரைவில் மரணம் என்னும் சக்தி அவனை அவளிடமிருந்து பிரித்துவிடும் என்று அப்போது அவனுக்குத் தெரியாது...

கணவனைப் பற்றியே எண்ணி மருகிக் கொண்டிருந்த அவளுக்குத் தன் வருங்காலத்தைப்பற்றிய சிந்தனை தீவிரமாகிவிட்டது. தொடர்ந்து தனியே இளம் விதவை என்ற நிலையில் அங்கே எவ்வளவுகாலம் தங்கியிருப்பது? அவர்களுக்கு நெருங்கிய நண்பராக இருந்த சிவராமன், குடும்பத்துடன் சில ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்திற்குத் திரும்பி விட்டிருந்தார். அவளும் திரும்பி அங்கே சென்றுவிட்டால்...? அங்கு மட்டும் அவளுக்கு யார் இருக்கிறார்கள்? அவள் தாய் பல வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டை விட்டுத் தன் ஒரே மகளுடன் வேலை தேடிக்கொண்டு சூரத்துக்கு வந்து தங்கிவிட்டவள். நெருங்கிய உறவினர்கள் யாரும் கிடையாது. தூரத்து உறவினரிடம் தொடர்பு கொள்ளாது அவள் தனியாகவே வாழ்ந்து போய்விட்டாள். இப்போது வசுமதி யாரைத் தேடிக்கொண்டு போவது?

படித்த காலத்தில் கல்லூரித் தோழிகள் சிலர் இருந்தார்கள். அவர்கள் யாரையாவது தேடி, எப்படியாவது ஒரு வேலை தேடிக் கொண்டுவிட்டால்......

இந்தத் தீர்மானம் ஏற்பட்டதும் அவள் கொடுக்கல் வாங்கல் கணக்குகளை விரைவில் சீர்ப்படுத்தினாள். அந்தமாத இறுதிக்குள் சென்னைக்குப் பயணமாக ஆயத்தம் செய்யலானாள்.

மணமானதிலிருந்து அதுவரை அவள் தன் கணவரது பெட்டியையோ, புத்தகங்களையோ, அவனது உத்திரவின்றித் தொட்டதில்லை. அவனது சுதந்திர உணர்வை அவள் மிகவும் மதித்து வாழ்ந்தவள். இறந்து போனபின் அவைகளைத் தொட மனமின்றி நாட்களைக் கழித்துக்

கொண்டிருந்தாள். ஊருக்குப் புறப்பட சாமான்களை ஒழுங்குபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் வந்தபோது ஒரு நாள் காலை அவனது பெட்டியைத் திறந்தாள். அவனது உடைகளையும், பொருள்களையும் எடுத்து ஆராயத் தொடங்கினாள். ஒரு கைப் பெட்டிக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சட்டைகளில் ஒன்றைக்கையில் எடுத்தாள். அதனுடன் தொப்பென ஒரு கடிதம் கீழே விழுந்தது.

மரணம் அவனது நினைவுகளுடன் அவளை ஒன்றுபடுத்தி விட்டதால் இனி அவனது பொருள்கள் அவளுக்குச் சொந்தமாகிவிட்டன. கடிதத்தைப் பிரித்துப் படிப்பதில் குற்றமில்லை என்று பிரித்தாள்.

"உங்களுக்குத் திருமணமாகி விட்ட நற்செய்தியைக் கேட்டு நான் திடுக்கிடவில்லை. எதிர்பார்த்த விஷயம் தான். எனக்கு எழுதித் தெரிவித்திருப்பதன் நோக்கந் தான் விளங்கவில்லை. நீங்கள் ஒரு கண்யமான மனிதன் என்று நான் நம்ப வேண்டுமென்ற ஆசையா? எனது அபிப்ராயங்கள் இனியும் உங்களுக்கு வேண்டுமா? என்னைப் பொறுத்தவரை எனக்குத் தங்களைப் பற்றிய நினைவுகள் இனி தேவையில்லை. என் மனம் இசைந்தபடி என் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள ஏற்கனவே முடிவு செய்துவிட்டேன். ஒருசில சந்தேகங்கள். என்னை மருமகளாக ஏற்க மறுத்த உங்கள் தந்தை அவளை மட்டும் ஏற்பாரா? அவரை எதிர்த்து என்னைத் திருமணம் செய்து கொள்ளப் பயந்த உங்களுக்கு இப்போது எப்படித் துணிவு வந்தது? அதைத் தூண்டுமளவு அவள் அப்படி ஒரு பேரழகியா? அல்லது நீங்கள் எதிர்பார்த்த பண்புமிக்க பாவையா? என்னை ஏறெடுத்துப் பார்க்க விரும்பாத கிழவர் அவளை மருமகளாக ஏற்றுக் கொள்ளப் போகும் அந்தக் காட்சியைக் காண ஆவலாக இருக்கிறது!



முதலில் நானும் ஒரு திடுக்கிடும் செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். நமது நெருக்கமான உறவின் அடையாளமாக நமக்கு ஒரு மகன் பிறந்திருக்கிறான் என் நிலையில் அவனை பகிரங்கமாக வளர்க்க முடியாது வேறு ஒருத்தர் பாதுகாப்பில் விட்டு வைத்திருக்கிறேன். அந்த மனிதர் அவனது போஷணைக்குக் கேட்கும் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகிறது என்னால் சமாளிக்க இயலாததினாலும் பல காரணங்களை உத்தேசித்தும் அவனை அனாதை இல்லத்தில் சேர்த்துவிட முடிவு கட்டிவிட்டேன். அவனது பிறப்பின் பாதிப் பொறுப்பு உங்களையும் சேர்ந்ததால் உங்களிடம் தெரிவிக்க வேண்டியுள்ளது...புனிதா..."

முகமெல்லாம் சிவந்து, நெஞ்சு படபடக்க, உடல் வியர்க்க வசுமதி அப்படியே இறுகிப் போய் உட்கார்ந்து விட்டாள். அவள் கணவன் சொல்லத் தயங்கிய அந்தக் கடந்த காலத்துக் களங்கம்தான் இந்தப் புனிதாவா?

கணவன் அருகிலிருந்தால் ஒரு சமயம் அந்தத் திடுக்கிடும் உண்மையை ஏற்க மனத்தைத் திடப்படுத்திக் கொண்டிருப்பாளோ என்னவோ? தன்னந்தனியே அந்தப் பயங்கர உண்மையைச் சந்தித்தபோது எத்தனை விதமான உணர்வுகள்.

இறந்துபோன கணவன்மீது கோபம்! இடையே இனி கோபித்து என்ன பயன் என்று மனத்தின் சாடல். மற்றவர்களுக்குக் கிடைத்த பாக்கியம் தனக்கில்லையே என்று விதியை எண்ணிப் பொறாமை. சீ! இது என்ன பலவீனம் என்று தன்னையே கடிந்து கொள்ளல்—பல விதமான உணர்வுகளுடன் போராடிய வசுமதி அழுதாள். மனம் குமுறினாள். வேதனைப்பட்டாள். அழுது கொண்டே சிரித்தாள்.

ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு மேலே கவனிக்க வேண்டிய வேலைகளில் மும்முரமாக ஈடுபட்

டாள். அன்று மாலை தபால்காரன் ஜன்னல் வழியே ஒரு கடிதத்தை வீசிவிட்டுப் போனான். அது தபால் இலாக்காவால் திருப்பி அனுப்பப்பட்ட கடிதம். ராஜசேகரின் கையெழுத்தைக் கண்டதும் மெய்பதறிப் போய் எடுத்துப் பார்த்தாள். அவள் கணவன் தொழிற்சாலையிலிருந்து புனிதாவுக்கு எழுதியிருந்த கடைசி கடிதம் முகவரியில் அவள் இல்லாததனால் திருப்பித் தொழிற்சாலைக்கே அனுப்பப்பட்டிருந்தது. அதைத் தொழிலாள நண்பர்கள் மறக்காது அவளது முகவரியை எழுதி அனுப்பியிருந்தார்கள். கணவனது கடைசிக் கடிதம். இனி அவன் யாருக்கும் எழுதப் போவதில்லை என்ற எண்ணத்திலே மனம் நெகிழ்ந்து அதைப் பிரித்துப் படித்தாள்.

"என்னை நீ வார்த்தைகளால் சித்திரவதை செய்கிறாய். என் மனம் நோக நடந்து கொள்ளுவதில் எப்பொழுதும் உனக்கு அலாதியானதொரு திருப்தி. பணம், பதவி எல்லாம் போய்த் தரித்திர நிலையிலிருந்ததினால் என்னை மணக்க நீ மறுத்தாய் இப்போது என்மேல் குற்றம் படிக்கிறாய். தயவு செய்து நீ மேற்கொண்டுள்ள அந்தக் கொடுமையான முடிவைக் கொஞ்சம் ஒத்தி வை, என் மனைவியிடம் உண்மையைக் கூற அவகாசம் கொடு. வஞ்சம் தீர்க்கும் எண்ணத்துடன் நம் குழந்தையின் வாழ்க்கையைச் சிதைக்காதே. ராஜசேகரன்."

கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் வசுமதி. அந்தக் கடிதத்தைப் பலமுறை படித்தாள்—யோசித்தாள். யோசித்தாள் அதற்கு அடுத்த தினம் அவள் சென்னைக்குப் பயணமாகிவிட்டாள்.

"கரடிபோல் நான் நடுவில் வந்துவிட்டேனா?" கேலியாகக் கேட்டுக் கொண்டு முன்னறை சோபாவின் மீது சாய்ந்து கொண்டாள் அவள்.

வசுமதிக்கு அடுத்தபடி கனகதுர்க்கா மீது அவருக்கு அபார மதிப்பு' அவள் வீட்டில் வேலை செய்த மலையப்பன் அவருக்கு மிகவும் வேண்டிய நண்பன் என்றதொரு நெருக்கம்.

சின்ன வயசிலே கல்யாணம் என்று நிச்சயிக்கப்பட்டு நிச்சயதார்த்தம் நடந்து கொண்டிருக்கையில் மயங்கி விழுந்த மாப்பிள்ளை மரணமடைந்துவிட்டான். அதற்குப் பின் அவள் யாரையும் மணந்து கொள்ள மறுத்துவிட்டாள். அவள் தந்தை ஒரு பிரபல தொழிலதிபர். பாண்டவரைப் போல் ஐந்து பிள்ளைகள். ஆசைக்கு ஒரே மகள். அவளது வாழ்வு வெறுமையாகி விட்டதை உணர்ந்து அவர் மனம் இடிந்துபோயிருந்தார். தனக்குத் தந்தை கொடுத்த சொத்தில் ஒரு பெரும் பகுதியைப் பாலர் இல்லத்தின் வளர்ச்சிக்கு வழங்கிவிட்டு அவள் சமூக சேவையில் முழு மனதுடன் இறங்கிவிட்டாள்.

இந்தச் சங்கதியை நண்பர் விவரிக்க, தேங்காய் மாங்காய் பட்டாணி சுண்டலைத் தின்றபடி கடற்கரை மணல்மீது அமர்ந்து கொண்டு எத்தனையோ முறை அவர் கேட்டிருக்கிறார். இவங்க 'திலகவதி பரம்பரை போலும்!' அவளது தியாகத்தை எண்ணி மெய் சிலிர்த்துப் போவார்,

பூஜை முடிந்ததும் வசுமதி முன்னறைக்கு வந்தாள். "வாங்கோ. அதிசயமாக என்ன இப்படி...?" கைகுவித்து வணங்கினாள். வரவேற்றாள்.

"புதுக் கட்டிடம் முடிஞ்சு போச்சு. அடுத்த வாரம் திறப்பு விழா உங்களுக்கும் அழைப்பு அனுப்பிச்யாச்சு. கவர்னர் திறக்கிறார். நீங்களும் ஒரு பேச்சாளர் மறக்



காதீங்க. நினைவு படுத்திவிட்டுக் கையோட அழைச்சிட்டுப் போய்க் கட்டிடத்தைச் சுத்திக் காமிக்கலாம்னு வந்தேன். மறுப்புச் சொல்லாம கிளம்பணும்..."

"வாங்கோ, பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் புறப்படலாம்" உபசரித்தாள் வசுமதி.

சிறிது பொழுதில் அவர்கள் கிளம்பினார்கள். சில நாட்களாக எங்குமே போகாமல் வீட்டிலேயே சிறையிருந்த வசுமதிக்கு அந்த அழைப்பு மிக்க ஆறுதலாக இருந்தது.

கனகதுர்க்காவுக்குப் பேச்சிலே இருந்த பரபரப்பு, செய்கையிலும் காணப்பட்டது. வண்டியை வேகமாக ஓட்டிக் கொண்டு வாய் ஓயாது அவள் பேசிக் கொண்டு மகாபலிபுரம் நோக்கி விரைந்தாள்

"அந்தக் காலத்திலே அப்பா வாங்கிப் போட்ட நிலம் இப்போ எத்தனை பெரிய காரியத்துக்கு உபயோகமாக இருக்கு பாத்தீங்களா?"

வண்டியைக் கேளம்பாக்கத்திலிருந்து பாலர் இல்லத்திற்கு ஓட்டினாள். மதில் சுவரைத் தாண்டி மரங்கள் அடர்ந்த தோட்டத்திற்குள் நுழைந்து வண்டி பெரிய தொரு கட்டிடத்தின் முன் வந்து நின்றது.

அவர்கள் இறங்குமுன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் பலர் பெருத்த ஆரவாரத்துடன் ஓடி வந்தனர். "அம்மா வந்துட்டாங்க. அம்மா வந்துட்டாங்க." மழலைக் குரல்களின் ஏகோபித்த கூச்சல். வண்டியை சூழ்ந்து கொண்டு, விட்டனர்.

கபடமற்ற முகங்கள், ஒளி பொங்கிய கண்கள்— அவர்களை உற்றுப் பார்த்தாள் வசுமதி. ஹரியின் நினைப்பு நெஞ்சைப்பாறாங்கல்லாக, துன்பமாக அழுத்தியது. கண்கள் திடீரெனக் கலங்கின.

அவர்கள் வீடு திரும்பும்போது பிற்பகலாகிவிட்டது. வழியே ஒரு பெரிய ஹோட்டலுக்குள் வண்டியைத் திருப்பினாள் கனகதுர்க்கா. வசுமதி ஏதும் பேசுமுன் அவள் முந்திக் கொண்டாள்.

"என் வீட்டுச் சமையற்காரருக்கு இன்னிக்கு ஓய்வு நாள். சாதாரணமாக ஞாயிற்றுக் கிழமைகளில் பகல் சாப்பாட்டுக்கு நான் இந்த ஹோட்டலுக்குத்தான் வருவது வழக்கம். அதனாலே நீங்க மறுக்காம என்னோட இங்கே சாப்பிடணும்" அன்போடு உத்தரவிட்டாள்.

துவண்டு கிடந்த அமெரிக்கன் ஜார்ஜெட் புடவையுடுத்திய ஓர் இளம் பெண் வேலைக்குப் போகிறவள் போல காணப்பட்டாள்—அருகிலே ஒரு நாற்காலியில் வந்து உட்கார்ந்தாள். ஒரு கணம் அவளை ஊன்றிப் பார்த்த வசுமதியின் சிந்தனை விரைவாகக்கடந்த காலத்திற்குள் சென்று முழுவதும் மறைந்து கொண்டது.

ஹோட்டலுக்குத் தனியாக ஒரு பெண் சாப்பிடச் செல்வதை மிகவும் தவறாகக் கருதிய அந்தக் காலம். அப்பொழுது அவளும் ஜார்ஜெட் புடவைக்காரிபோல் இளம் பெண்தான். பார்க்க நல்ல அழகியும் கூட. வேண்டாத சாமான்களைக் கழித்துவிட்டு வேண்டிய சில வற்றைக் கட்டிக் கொண்டு அவள் சென்னைக்குவந்து இறங்கியிருந்தாள். அவள் எடுத்துக் கொண்ட அந்தக் காரியத்தை முடிக்கு முன்னர் ஆரம்பத்தில் எண்ணியபடி சிநேகிதிகளைத் தேடிக்கொண்டு போக விரும்பவில்லை அப்படி ஒரு பிடிவாதம்.

சென்னையிலே பல வருஷங்கள் படித்து ஹாஸ்டல்களில் வாழ்ந்து வழக்கப்பட்டவள். நகரத்தின் மூலை முடுக்குகள் அனைத்தும் மனப்பாடம். பழக்கமான நகரம், பயமென்ன?



பணச் செலவைப் பாராது பிரபலமான பெரிய ஹோட்டல்களில் தங்கினால் கவலையில்லை. மட்டரகமான விடுதிகளில் தங்கினால்தான் அஞ்ச வேண்டும் என்று நினைத்தாள். கட்டிடங்களைப் பார்த்து மனித உள்ளத்தின் மாறுபட்ட எண்ணங்களைக் கணக்கிட முடியாது...வந்த மறுநாளே புரிந்து கொண்டாள்.

எதிர்ப்பக்கத்து அறையில் வைரமோதிரமும், தங்கச் செயினும் அணிந்த சில்க்ஜிப்பா ஆசாமி ஒருத்தன் மனைவி மக்கள் புடைசூழத்தங்கியிருந்தான். அசைப்பில் பார்க்கும் போதெல்லாம் அவன் விழிகள் அவளை அப்படியே வாரிவிழுங்கத் தயாராக இருந்தன. அவள் பதறிப் போய்விட்டாள் சாப்பாட்டறையில் ஒரு கண்ணாடிக்காரன் வெறி வெறி என்று அவளை வெறித்தான் ஊடுருவிய அவனது பார்வைக்கு முன்னால் சாப்பாடு தொண்டையில் இறங்கமறுத்தது.

ஹோட்டல் பையனுக்குக் கூட வியப்பு. அறிய வேண்டுமென்ற ஆவல். ஒரு தனிப் பெண்மணி—விதவை போலிருக்கிறது. வெளியூர்க்காரியோ? சிங்கப்பூர், ஸ்ரீலங்காவாசியோ—ஊர் சுற்றிப் பார்க்க வந்திருக்கிறாளோ...? இத்தனை கேள்விகள். கோடி அறையிலிருந்த பெண்மணிக்குக் கணவன் பக்கத்திலிருக்கிறான் என்ற துணிச்சல். மஞ்சள் கயிறு நெஞ்சில் தொங்குகிற பெருமை. தன்னந்தனியாக ஹோட்டலில் தங்கியிருந்த வசுமதியை அவள் சந்தேகமும் வெறுப்புமாகப் பார்த்த பார்வை...இப்படிப் பல தொல்லைகள். பற்களைக் கடித்துக்கொண்டு பொறுமையுடன் அறைக்குள்ளே உட்கார்ந்தபடி தேட வேண்டிய முகவரிகளைத் தேடி எடுத்துக் க[illegible]ழுதிக் கொண்டிருந்தாள்,

புனிதாவுக்குப் போட்ட கடிதத்திற்குப் பதில் இல்லை. பணம் தண்ணீராகச் செலவாகியது. கையிருப்புக் கரைந்து முடியுமுன்னே காரியத்தைச் சாதிக்க

வேண்டுமென்ற ஆவல் அவளுக்கு. பகல் உணவிற்குப் பின்னர் அறையைப் பூட்டிக் கொண்டு தோளில் பையை மாட்டிக் கொண்டு கையில் குடையுடன் அவள் கிளம்பி விட்டாள்.

தியாகராயநகர்-சுந்தர முதலித் தெரு, எண் எழுபது என்பதன் வீட்டு வாயிலில் வந்து நின்றாள். அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்தது அவர்கள் வீட்டு டெர்ரியர். சாண் உயரம். குரல் வீட்டைப் பிளந்தது. கடித்துக் குதறிவிடும் போல் தாவி எகிறிப் பாய்ந்து குரைக்கத் தொடங்கியது அந்தக் குட்டி நாய். அச்சத்துடன் அவள் வாசலிலேயே நின்றாள்.

"யாரது? வெய்யில் வேளையிலே வந்து பிச்சைக்கு நிக்கிறது!" அதட்டிக் கொண்டு உள்ளே வந்தார் மொட்டைத் தலை ஆசாமி ஒருவர். வீட்டின் சொந்தக்காரர்.

"இங்கே புனிதா ரத்தினம் என்கிறவங்க குடி இருக்கிறாங்களா?" வசுமதி தயக்கத்துடன் கேட்டு முடிக்குமுன் பின்னால் வெளியே வந்த பருத்த அம்மாள் பேசினாள்.

"அவளுக்கு நீ என்ன வேணும்? அந்தச் சனியன் பிடிச்சவ மூணுமாச வாடகை பாக்கியோட கிளம்பிட்டாளே! அவ இப்போ இருக்கிற இடம்..." கணவன் முகத்தைப் பார்த்துவிட்டு நிறுத்தினாள்.

வசுமதியின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது "அவங்க எனக்கு உறவு இல்லை. தெரிஞ்சவங்க. எனக்குக் கொஞ்சம் பணம் பாக்கி. அதனால் தேடிக் கொண்டு வந்தேன்."

பொய். என்றாலும் பலன் உடனடியாகக்கிடைத்தது "அந்த தரித்திரத்துக்கிட்டேயிருந்து பைசா பெயராதுன்னு நாங்க விட்டுட்டோம். சாமர்த்தியமிருந்தா நீ போய் முயற்சி பண்ணு."



"ஆமாம்...அவ எங்கே இருக்காள்ன்னு சொன்னீங்க?"

மறுபடியும் அந்தம்மாள் தன் கணவன் பக்கம் திரும்பினாள். "தேவராஜன் தெரு—பெரம்பூர்—நம்பர் பதினொண்ணு." கதவைச் சாத்திக் கொண்டு அவர்கள் உள்ளே போய்விட்டனர்.

பெரம்பூரில் அவளைத் தேடிக்கொண்டு தேவராஜன் தெருவுக்குள் வந்தபொழுது வெய்யில் தணிந்துவிட்டிருந்தது.

"பத்து நாளைக்கு முன்னாடி இங்கிருந்து காலி பண்ணிக்கிட்டு, பழைய வண்ணாரப்பேட்டைக்குக் குடி போயிட்டாளே அவள். தாயும் மகளுந்தான் இருந்தாங்க. ஆனாலும் அவங்க நடவடிக்கை எங்களுக்குப் பிடிக்கவில்லை. காலிபண்ணச் சொல்லி நான்தான் உபத்திரவம் பண்ணினேன். ஆமாம் நீ அவளை எதுக்காகத் தேடறே..." இருமல் நடுவே விவரித்த வீட்டுக்கார கிழவர் அவளை மேலும் கீழும் ஆராய்ந்தார்.

"கடன் பணம் பாக்கி—வசூலிக்க வந்தேன்." அதே பல்லவியைப் பாடிவிட்டு அவள் வண்ணாரப்பேட்டைக்கு டாக்ஸி ஒன்றில் விரைந்தாள்.

வினாயகக் கோனார் சந்து. உண்மையிலே ஒரு நெருக்கமான சந்து. முகப்பிலே ஒரு குப்பைத் தொட்டி சாககுப் பையுடன் நின்ற இரண்டு வாலிபர்கள் குப்பையைக் கிளறி எதையோ பொறுக்கிக் குவித்துக் கொண்டு, வேண்டாததைத் தெருவில் பரவவிட்டுக் கொண்டிருந்தனர்.

சூழ்நிலையைக் கவனித்த வசுமதிக்கு திடீரென்று ஒரு திகில். தன்னந்தனியாக இருட்டும் சமயம் அவள் புறப்பட்டது சரியா? ஆனால் அந்தப் பிடிவாதம் அவளை நெட்டித் தள்ளிக் கொண்டு ஏழாம் நம்பர் கதவு

அருகே கொண்டு நிறுத்தியது. லேசாகக் கதவைத் தட்
டினாள்.

''தொறந்து கிடக்கு. வா உள்ளே...'' அதிகாரமான
—வயதினால் தளர்ந்துவிட்ட—பெண் குரல் அதட்டியது.

தொண்டையை அடைத்த அச்சத்தை விழுங்கிக்
கொண்டு அவள் உள்ளே வந்தாள். தரையில் பாய்மீது
ஒரு கிழவி, நரைத்த கூந்தல் பரவலாகத் தோள்மீது
கிடக்க, காலை நீட்டிக் கொண்டு கிழிந்த துணி ஒன்றை
ஊசியால் தைத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தாள்.
நிமிர்ந்து பார்த்த அவள் முகத்தைச் சுளித்தாள்.
''புனிதா அம்மா வீடு இதுதானே? அவங்க இருக்காங்
களா?'' என்றாள் வசுமதி.

''என்னைத் தேடிக்கொண்டு யார் வந்திருக்கிறது?''
கடுமையான குரல் எரிச்சலோடு ஒலித்தது.

சாக்குப் படுதாவைத் தள்ளிக்கொண்டு உள்ளேயி
ருந்து வெளிப்பட்டாள் ஓர் இளம்பெண்.

இடைவரை தொங்கிய வாரி முடிக்காத அலட்சியக்
கூந்தல். அழுக்கான நூல் சேலை. கழுத்திலே கருக
மணிமாலை. கைகளில் கண்ணாடி வளைகள். அந்த
வறுமை நிலையிலும் பளிச்சென்று அவள் அழகாகவே
இருந்தாள். வியப்புடன் அவளைப் பார்த்த வசுமதிக்குச்
சட்டென்று பேச முடியவில்லை.

''ராஜசேகரன் கொஞ்ச நாளைக்கு முன் காலமாகி
விட்டார். அவர் மனைவி நான். சூரத்திலிருந்து உங்க
ளைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறேன்.'' முடிக்குமுன்
அவள் உடலும் உள்ளமும் பதறின. நெஞ்சை என்
னவோ அடைத்துக் கொண்டது. கண்களில் நீர்
பொங்கி வழிந்தது.

கீழ் உதட்டை ஆத்திரமாகக் கடித்துக் கொண்டு
புனிதா அவளை உறுத்துப் பார்த்தாள்.



வசுமதியும் அவளை நிமிர்ந்து மீண்டும் உற்றுப்
பார்த்தாள். 'என் ராஜசேகரனின் குழந்தைக்குத்தாயாக
இவளுக்கு என்ன தகுதி?' வசுமதி நெஞ்சம் பதைத்துப்
போனாள்.

'என் ராஜசேகரனின் மனைவியாக இவள் என்னை
விட எந்தவிதத்தில் தகுதியானவள்?' புனிதா பொறாமை
யில் கொதித்தாள்.

இருவரும் ஒருவரையொருவர் ஒரு கணம் பார்த்துக்
கொண்டு நின்றனர். அந்த ஒரு கணம் யுகமாகிவிட்டது
போல் நேரம் நீண்டு கனத்து நின்றது.

## 16

அந்த நிகழ்ச்சி சினிமா காட்சி ஒன்றைக்காண்பது
போன்ற உணர்வைக் கொடுத்தது. இடுப்பிலே இரு கை
களை ஊன்றியபடி தலையை நிமிர்த்திக் கொண்டு அவள்
கலகலவென்று சிரித்தாள் மீண்டும் சிரித்தாள். பெண்
புலியின் சீற்றம் போன்ற சினம் கலந்த சிரிப்பு. கண்க
ளிலே ஆத்திர வெறி. பின்னர் சிரிப்பை நிறுத்திக்
கொண்டு வசுமதியைக் கண்களால் எரித்தாள். உள்ளத்
திலே புகைந்த வெறுப்பு உணர்வு முகத்திலே பரவி
நின்றபோது அவளைப்பார்க்கவும் வசுமதியின் நெஞ்சம்
நடுங்கியது.

''அம்மா, நீங்க உள்ளே போங்க கொஞ்சம்இவங்க
கிட்டே பேசவேண்டியிருக்கு.'' இருவரையும் மாறி
மாறிப் பார்த்தபடி திகைத்துப் போய்க் கை வேலையை
மறந்து உட்கார்ந்திருந்த கிழவியை அவள் அதட்டினாள்
பாயையும், துணியையும் சுருட்டிக் கொண்டு கிழவி முணு
முணுத்துக் கொண்டு படுதாவிற்குப் பின்னால் அறைக்
குள் சென்று மறைந்துவிட்டாள்.

"உன் புக்ககத்தைப் போல் இது ஒரு பங்களா இல்லை. சோபா நாற்காலிகள் கிடையாது அந்த முக்காலி மேல் வேணுமானால் உட்கார்ந்து கொள்." காரமாகப் பேசினாள் புனிதா. ஏளனம், வெறுப்பு, பொறாமை, ஆத்திரம், அப்பப்பா எத்தனை உணர்ச்சிகள் கலந்த குரல்.

"ராஜசேகரன் உண்மையாகவே இறந்துவிட்டாரா? நம்ப முடியவில்லை." வசுமதியின் வெறுமையான நெற்றியை அவள் வெறித்துப் பார்த்தாள்.

"ஹார்ட் அக்டாக்...திடீரென்று வந்தது. போய் விட்டார்."

அனுதாபத்திற்குப் பதில் அவள் மறுபடியும் உரத்த குரலில் சிரித்தாள். வெறி பிடித்தாற் போன்றதொரு பயங்கரச் சிரிப்பு. தாங்கொணா அதிர்ச்சியில் உணர்வுகள் உறைந்து சிலையாக உட்கார்ந்திருந்தாள் வசுமதி.

'எனக்குச் செஞ்ச துரோகம் விஷமாக மாறி அவரது இருதயத்தை அமுக்கிவிட்டது. இயற்கை வழங்கின தண்டனை!' தனக்குள்ளே பேசிக்கொண்டு சீற்றத்துடன் அவள் அறைக்குள்ளே முன்னும் பின்னுமாக வேகமாக நடந்தாள்.

"மரணம் என்பது யாருக்கும் நேரக்கூடிய இயற்கையின் நியதி. அதைத் தண்டனை என்று எப்படிச் சொல்ல முடியும்?" வசுமதி முடிவில் துணிவுடன் கேட்டுவிட்டாள்.

"நீ ரொம்பப் படிச்சவள். தத்துவங்கள் பேசத் தெரிஞ்சவள். பேசுவே. ஏன் பேசமதட்டே. மனைவிங்கிற உரிமையிலே அவரது சொத்தை அனுபவிக்கப் போகிறவள். பணத்திலே புரளப் போகிற திமிர் உனக்கு

"அவர் ஒரு பிரபல வியாபாரியின் மகன், செல்வ வசதியுடன் வாழ்ந்தவர் என்கிற உண்மை கொஞ்ச நாட்களுக்கு முன் தான்—அதுவும் அவர் இறந்த பின்தான் தெரியும். நான் அவரை மணந்து கொண்டபோது அவர் ஏழை, அனாதை, எத்தனையோ நாட்கள் வேலைகிடைக்காது அலைந்து திரிந்து பட்டினியுடன், வறுமையோடு போராடினவர்..." துக்கத்துடன் வசுமதி திணறினாள்.



இகழ்ச்சியுடன் அவளை வெறுப்பாகப் பார்த்தாள். புனிதா. "பேரைச் சொன்னால்கூட உனக்குத் துக்கம் பொத்துக் கொண்டு வருகிறதே! அவர் மறைவைப்பற்றி இன்னுமா உனக்கு வேதனை?" ஏளனமாகக் கேட்டாள்.

பொங்கி எழுந்த கோபத்தை வசுமதியால் கட்டுப்படுத்த முடியவில்லை. "அவரது மரணச் செய்தியைக் கேட்டுச் சிரிக்குமளவு உங்கள் மனம் மாறிவிட்டிருக்கிறது அதிசயமாகத்தானிருக்கு" என்றாள் வெறுப்புடன்.

"அதிசயம் என்ன இருக்கு. விருப்புக்கும், வெறுப்புக்கும் உள்ள இடைவெளி மிகவும்கொஞ்சம். வஞ்சிக்கப்பட்ட பெண் மனசிலே எரிகின்ற நெருப்புக்கு ஈடு நரகத்திலே கூடக் கிடையாது. நீ படிச்சவளாச்சே. உனக்குத் தெரியாதா?" மேலும் கீழும் நடந்தபடி அவள் பேசிக் கொண்டே போனாள். "நாங்களும் ஏழைகள்தான். மெட்ரிக் வரை கான்வென்ட்டில் படிச்சவள்தான் நான். அப்பா இறந்துவிட்டதும், அம்மாவையும் என்னையும் காப்பாத்திக்கொள்ள வேண்டியிருந்தது. டவுன் கடை ஒன்றில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். ஏதோ சாமான்கள் வாங்க வந்த ராஜசேகரனைச் சந்திச்சேன். பின்னர் பல தடவை கடைக்கு வந்தார். எங்களுக்குள் சாதாரண நட்பாக ஆரம்பிச்சு ரொம்ப நெருக்கமான தொடர்பாக வளர்ந்திடிச்சு. புளியங்கொம்பைப் பிடிச்சு விட்ட பெருமை எனக்கு. வசதியாகப் போகிறோம் என்ற கனவு—கல்யாணம் செய்து கொள்வதாக வாக்குக் கொடுத்தார். ஒருநாள் தன் வீட்டுக்கு என்னை அவரது காரிலேயே கூட்டிக் கொண்டு போனார்..." பேசுவதை

நிறுத்திவிட்டு புனிதா வசுமதியை ஏற இறங்கப் பார்த்தாள். வசுமதி மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அவங்க வீட்டு முன்னறையிலே சோபாவிலே திகிலோடு நான் உட்கார்ந்திருந்தேன். மாடியிலிருந்த அப்பாவோடு அவர் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார். படிகளில் நிதானமாக இறங்கிவந்த அந்தக் கிழவரைப் பார்த்ததுமே புரிந்து கொண்டுவிட்டேன்.

"என் மகன் சொன்னான். ஏற்கெனவே நான் கேள்விப்பட்ட சங்கதிதான். அதனால் அதிர்ச்சியடையவில்லை. இரண்டு லட்சத்துக்கு ஒரு செக் கொடுத்துவிடுகிறேன். எடுத்துக் கொண்டு ஓடிப்போ" என்று உறுமினார்.

"முடியாது; பணம் எங்கள் அன்புக்கு முன் துச்சம்' என்று அகங்காரமாகச் சொல்லிவிட்டு நான் வெளியேறினேன். தந்தையிடம் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு அவர் என்னைத் தேடிக்கொண்டு சில தினங்களுக்குப் பின் வந்தார். மணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொன்னார். நான் மறுத்து விட்டேன்."

"நீங்கள் ஒத்துக் கொண்டிருக்கலாம். ஏன் மறுத்தீங்க?"

புனிதா முகத்தில் ஏளனப் புன்னகை. "புரியவில்லைனு நடிக்காதே. ராஜசேகரனை நான் காதலிச்சேன். அதைவிட அவரது பணத்தை, அந்தஸ்தைப் பலமடங்கு காதலிச்சேன். அதுதான் உண்மை. அப்பாவுடன் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு வெளி வந்துவிட்டார். பிள்ளைக்கு செல்லாக் காசு தரப்போவதில்லைன்னு கிழவர் சவால் விட்டிருந்தார். வேலையில்லை, காசில்லை. அவரை அந்நிலையில் கல்யாணம் பண்ணிக்கொண்டு நான்தான் உழைத்துப் போடணும் அதனால் மறுத்துவிட்டேன்..." சிரித்தாள்.



கன்னங்கள் நெருப்பாக எரிய அவமானத்தில் உடல் குறுகித் தரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள் வசுமதி. இப்படியும் ஒருத்தி இருப்பாளா? பணத்தையும் பதவியையும் பார்த்துத் திட்டமிட்டு ஏற்படும் ஆசைக்குக் காதல் என்ற பெயரா?'

"வேலை தேடிக்கொண்டு பின்னர் வருவதாகப் போனார் டெல்லி, பாம்பே என்று பல இடங்களில் அலைந்தார். 'வேலை கிடைக்கவில்லை—பட்டினிக் கிடக்கிறேன். பசியோடு அலைகிறேன்.' புலம்பிய கடிதங்கள் பல அவரிடமிருந்து வந்தன. முடிவில் வேலைக்கமர்ந்து கொஞ்சம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தார். அது எனக்கு மிகவும் தேவைப்பட்டது, தாயாகப் போகும் நிலையிலிருந்தேன் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தேன். நாளடைவில் ராஜசேகரனை மணக்க வேண்டும் என்கிற ஆசை என்னைவிட்டு மறைந்தோடிவிட்டது. பாழாகிவிட்ட என் வாழ்க்கையைச் சீராக்கிக்கொள்ள முயற்சி பண்ணினேன். குழந்தை அதற்கு ஒரு பெரும் இடைஞ்சல். எனது எண்ணங்களுக்கு ஆசைகளுக்கு அவன் ஒரு முட்டுக்கட்டை. அதனால் அவனை வளர்த்து ஆளாக்க ரகசியமாக வேறு ஒரு இடத்தில் ஏற்பாடு செய்தேன். இதுதான் என் கதை..." முடித்துவிட்டு முகத்தில் வழிந்த வியர்வையைக் கையால் துடைத்துக்கொண்டு மூலையில் கிடந்த மோடா மீது உட்கார்ந்து கொண்டாள்.

"கேட்க ரொம்ப வருத்தமாக இருக்கு" பெருமூச்செறிந்தாள் வசுமதி

"என் கதையை விட்டுத் தள்ளு. நீ என்னைத் தேடிக் கொண்டு வந்தநோக்கம்?"

"என் கணவர் இந்த உண்மையை என்னிடம் சொல்லத் துடித்துக் கொண்டிருந்தார். குழந்தையை வளர்க்கத் தக்க ஏற்பாடு செய்வதற்குள் அவர் போய்விட்டார்.

அவர் செய்ய உத்தேசித்த காரியத்தைச் செய்து முடிக்க வேண்டியது என் கடமைன்னு கிளம்பி வந்திருக்கிறேன். நீங்க உத்தரவு கொடுத்தா குழந்தையை வளர்க்கிற பொறுப்பு முழுவதையும் சந்தோஷத்தோடு ஏத்துக்கு வேன்."

புனிதா அவளைச் சந்தேகத்துடன் பார்த்தாள், "உனக்கு முன்னதாக ராஜசேகரன் வாழ்விலே நான் ஒருத்தி இருந்தேன் என்பதைப் புரிஞ்சு கொண்டும் நீ கொஞ்சங்கூட ஆத்திரப்படவில்லை; பொறாமைப்பட வில்லை. உன் போக்கு எனக்குப் புரியவில்லை. ஒரு சமயம் என் குழந்தையை எடுத்துப் போய் உன்னுடை யது என்று கிழவரிடம் சொல்லி முறைப்படி அவர் மகனை மணந்து கொண்டவள் நீ என்று நாடகமாடி அத்தனை சொத்தையும் அபகரிக்க இது ஒரு சூழ்ச்சியா... அதுக்கு முன்னாடி உன்னை எச்சரிக்கிறேன்... அந்தக் கிழவனிடம் எதுவும் நடக்காது" என்றாள்.

திடுக்கிட்டுப் போனாள் வசுமதி. புனிதாவுக்கு இப்படி ஒரு மட்டமான எண்ணமா?

"என் கணவர் செய்து முடிக்க வேண்டிய கடமையை நினைச்சு அதைச் செய்து முடிக்கத்தான் உங்களைத் தேடிக் கொண்டு வந்தேன். சொத்துக்கு ஆசைப்பட்டுப் பெரியவரை ஏமாற்ற உங்க குழந்தை என்னத்துக்கு? வேறு எத்தனையோ வாடகைக்குக் கிடைக்குமே?" கார மாகச் சொன்னாள்.

புனிதா சற்று நேரம் யோசித்தாள். பின்னர் உள்ளே சென்று தன் தாயுடன் சிறிதுநேரம் பேசிவிட்டு வெளியே வந்தாள். "குழந்தையை உன்னிடம் ஒப்புவிக்கச் சம்மதிக் கிறேன். ஆனால் அதற்குச் சில நிபந்தனைகள் உண்டு" என்றாள்.

"சொல்லுங்க. ஒப்புக்கிறேன்." வசுமதிக்கு மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை.



"குழந்தையை வளர்க்கிறவங்களுக்குக் கொஞ்சம் பணம் பாக்கியாக நிற்கிறது. அதைக் கொடுத்தால் தான் அவங்க குழந்தையை அனுப்பச் சம்மதிப்பாங்க. அத்தோட என் கைச் செலவுக்குக் கொஞ்சம் பணம் தேவை. எல்லாம் சேர்த்து இரண்டாயிரம் ரூபா யாகும்..."

வசுமதி திடுக்கிட்டுப் போனாள். இப்படி ஒரு பேரமா?

"என்ன யோசிக்கிறே? பத்து மாதம் சுமந்து பெத்த பிள்ளையைக் கொடுக்க ஒப்புக்கிறேன். நீ பணத்தைப் பிரிய யோசிக்கிறியே?" ஏளனமாகக் கேட்டாள் அவள்.

சட்டென்று வசுமதி ஒரு முடிவுக்கு வந்தாள். "சரி, ஒத்துக் கொள்கிறேன். அவ்வளவுதானே" என்று கேட் டாள்.

"அவசரப்படாதே. இன்னும் இரண்டு நிபந்தனை கள். இப்போ மனசு ஒப்பி அவனை எடுத்துக்கொண்டு போகிறாய். என் நிலைமை மாறி நான் நல்ல நிலைக்கு வந்துவிட்டேன் என்று வச்சுக்குவோம். அப்ப திரும்பி வந்து என்னைத் தொந்திரவு செய்ய மாட்டேன்னு என்ன நிச்சயம்?"

"என் வார்த்தைகளில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட ணும். அவ்வளவுதான்."

"சரி, அவன் வளர்ந்து உண்மை தெரிந்து கொண்டு என்னைத் தேடிக்கொண்டு வந்து என் வாழ்க்கையில் குழப்பத்தை உண்டுபண்ணினால்?"

"அப்படிப்பட்ட ஒரு விபத்து நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது என் கடமை. உங்களது பிற் காலத்தில் உங்கள் வாழ்க்கையில் எங்களால் எந்தவித மான சலனங்களும் ஏற்படவே ஏற்படாது. ஏற்பட

அனுமதிக்கவும் மாட்டேன்...இது சத்தியம்...போதுமா?'' அடித்துப் பேசினாள் அவள்.

''அப்படின்னா நாளைக்குப் பணத்தோட இங்கே வா. எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு போகலாம்'' என்றாள் புனிதா முடிவில்.

மறுநாட் காலை புனிதா கொடுத்த கடிதத்துடன் அவள் ஒட்டேரியிலிருந்த அந்த வீட்டைத் தேடிக் கொண்டு அலைந்தாள். நெருக்கமாக வீடுகள் நிறைந்த பகுதி. அசுத்தமான தெருவின் திருப்பத்திலே இருந்த மாடிக் கட்டிடம், அதில் நாலைந்துகுடித்தனக்காரர்கள். வீட்டையொட்டி இடது பக்கமாகத் திறந்தவெளியில் மேலே சென்ற மாடிப்படிகள் மீது அவள் பார்வை சென்றது.

''சனியன். என் பிராணனை வாங்கத் தலையில் கட்டிட்டுப் போயிட்டா அந்த மகராசி...'' உரத்த குரலில் கத்தினாள் ஒரு பெண்மணி. தொடர்ந்து படார் படார் என்ற சப்தம். ஒரு குழந்தையின் அலறல். திகைத்துப் போய் நின்றுவிட்டாள். கிழிந்த சட்டையைத் தனது இடது கையால் தூக்கிப் பிடித்துக் கொண்டு, 'அம்மா!' என்று அலறி அழுதபடி படிகள் மீது வேகமாக இறங்கி ஓடிவந்த சுருட்டை முடிச் சிறுவன், தடுக்கி படிகள் மீது வேகமாக உருண்டு அவளது காலடியில் வந்து விழுந்து விட்டான்.

வாரி எடுத்து அணைத்துக்கொண்ட வசுமதியின் உடலும், உள்ளமும் பதறின. துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது. கண்ணீர் பொங்கிப் பெருகி, கன்னங்களை நனைத்தது. ''ஹரி! ஹரி!'' என்று அவள் குழந்தையை இறுக்கமாக அணைத்துக்கொண்டு விம்மினாள்..

''யாரது?'' அதட்டிய குரலை நிமிர்ந்து பார்த்தாள். மாடிப்படியின் உச்சியில் நின்று கொண்டிருந்தாள் அரக்கி போன்ற ஒரு பெண்மணி...



கனகதுர்க்கா லேசாக அவளது கரத்தைத் தொட்டாள் ''என்னங்க இது. ஒரு மாதிரியிருக்கீங்க...''

வசுமதி நினைவுகளிலிருந்து விழித்துக்கொண்டாள். ''வடையிலிருந்த பச்சை மிளகாயைக் கடித்துவிட்டேன்...'' கண்ணீரைச் சமாளித்துக்கொண்டு வறட்சியாகச் சிரித்தபடி எழுந்திருந்தாள்.

## 17

கடந்த கால நினைவுகளால் கனத்த உள்ளத்துடன் வசுமதி வீட்டிற்குள்ளே நுழைந்தாள். எஜமானி சாப்பிட்ட பின்னர்தான் சேனாபதி தம்மைக் கவனித்துக் கொள்வது வழக்கம். தொழில் முறைகளுக்கும் விசுவாசத்திற்கும் கட்டுப்பட்ட பழங்காலத்து மனிதர் அவர். பிற்பகல் வெகுநேரமாகி விட்டிருந்தது. வயிற்றைச் சுருட்டிய பசியைப் பொருட்படுத்தாது அவர் கதவைத் திறந்து வைத்து விட்டுக காத்துக் கொண்டிருந்தார்.

வசுமதி கேட்குமுன் அவரே சொன்னார், ''சின்ன எஜமான் சாப்பிட்டாச்சு. ரெக்ஸிக்குகூடச் சாப்பாடு போட்டுட்டேன். அம்மாவுக்குத்தான் நேரம் தாண்டிப் போச்சேன்னு கவலையாக இருந்திச்சு. ரெடியாக வச்சிருக்கேன்...'' பணிவும் பரிவுமாக அவர் குழைந்து வேண்டினார்.

பசியால் வாடிப்போன அவர் முகத்தை கவனித்தாள் வசுமதி. அவளுக்கு நெஞ்சை என்னவோ செய்தது. ''நான் வெளியிலே சாப்பிட்டாச்சு நான் வர நேரமானால் நீங்கள்ளாம் சாப்பிடலாம்னு சொல்லியிருக்கேனே, இப்படி வீம்புக்கு ஏன் பட்டினி கிடக்கிறீங்க...?'' கேட்டுக்கொண்டே அவள் சுற்றுமுற்றும் பார்த்தாள். முன்னறைக்குள் லேசாக சிகரெட் புகைத்த நெடி. டீப்பாய்மீது வைத்திருந்த வெண்கலத் தட்டில் பாதி உப

யோகித்து அணைத்து வைத்த சிகரெட் துண்டம். சோபா மீது தாறுமாறாகக் கிடந்த திண்டுகள். கம்பளத் தின்மீது வீசிப் போட்ட பத்திரிகைகள் அவள் நொடிப் பொழுதில் கவனித்துவிட்டாள்.

"நீங்க வெளியே போனதும் சின்ன அய்யாவைப் பார்க்க ஒரு சிறு பெண்ணும், ஒரு சின்ன பையனும் வந் திருந்தாங்க. அவர்களுக்கெல்லாம் காப்பி பிஸ்கட்டு கொடுக்கும்படி சொன்னார். கொடுத்தேன். இத்தனை நேரம் இருந்துட்டு நம்ப ஐயாவோட அவங்களும் சாப் பிட்டுவிட்டு இப்பத்தான் போனாங்க" விளக்கம் கொடுத்த சேனாபதி குழப்பத்துடன் அவளைப் பார்த் தார். "வேலைக்காரி சாப்பிடப் போயாச்சு. வந்ததும் இதையெல்லாம் ஒழுங்கு பண்ணச் சொல்றேன்' மென்று விழுங்கினார் தொடர்ந்து.

வசுமதி பேசவில்லை. பொங்கி வந்த கோபத்தை அடக்கப் பற்களைக் கடித்துக் கொண்டு அவள் உள்ளே சென்று விட்டாள். மாத்திரை டப்பாவையும், தண்ணீர் டம்ளரையும் கொண்டு வந்து அருகே வைத்த சேனா பதியை அவள் நிமிர்ந்துகூடப் பார்க்கவில்லை.

ஹரியைத் தேடிக்கொண்டு யாரோ ஒரு இளம்பெண் வீட்டிற்கே வந்து விட்டாள். இனி தொடர்ந்து என்ன நடக்குமோ என்ற கவலை அவளுக்கு. சேனாபதி நகர்ந் தார். தன்னைக் குழப்பிய சிந்தனைகளை உதறிவிட எண்ணி முதல் நாள் அவள் கவனிக்காது மேஜைமீது போட்டுவிட்டிருந்த தபால்களை எடுத்து வைத்துக் கொண்டு பெஞ்சிமீது உட்கார்ந்தாள். கனகதுர்க்கா அனுப்பியிருந்த அழைப்பிதழ் அவைகளில் ஒன்று...

வராந்தாவில் வெறுங்காலுடன் நடக்கும் ஓசை கேட்டது. பல வருஷங்களாக அவள் காதுகள் கேட்டுப் பழக்கப்பட்ட ஓசை. வசுமதியின் இதயத் துடிப்பு வேக மாகியது. தொடர்ந்து மெல்லியதாக ஷேவிங்லோஷ



னின் மணம் அறைக்குள்ளே பரவியது. அவள் சட்டென்று நிமிரவில்லை. பெஞ்சியின் அருகே வந்து நின்ற பாதங் கள்மீது அவள் பார்வை சென்றது. ராஜசேகரனது பாதங்களை அச்சில் வார்த்தது போன்ற செக்கச் செவே லென்ற அகன்ற பெரிய பாதங்கள். கட்டை விரலுக்கும் அடுத்த விரலுக்கும் இடையே அதே போன்ற பெரிய இடைவெளி.

சின்ன வயதில் ஹரி காலை வேளையில் நீண்ட நேரம் தூங்கிக் கொண்டிருக்கையில் பாதங்களில் கட்டை விரலுக்கு அடுத்த அந்த இடைவெளியிலே லேசாக விரல்களால் அவள் வருடி, "ஹரி...நண்டு கடிக்குது... நண்டு கடிக்குது—ந்தக் குஞ்சு பாதத்தை நண்டு வந்து கடிக்குது, சீக்கிரம் எழுந்துடடா கண்ணு..." என்று கொஞ்சி எழுப்புவாள்.

"நீங்க பொய் சொல்லி விளையாடுறீங்க—போங் கம்மா..."சிணுங்கிக்கொண்டு படுக்கையினின்று விருக் கென்று எழுந்த சிறுவன் தன் சுருண்ட முடியை அவள் நெஞ்சிலே புதைத்துக் கொண்டு இறுக்கமாக அவளை அணைத்துக் கொண்டபோது உடல் முழுவதும் இன்பத் தில் பூரிக்க, தாய்மை உணர்வு பொங்கிப் புரள அவள் அடைந்த ஆனந்தம். அப்பப்பா! யாருக்குச் சொன்னால் புரியப்போகிறது? கண்ணனை எடுத்து வளர்த்த யசோதை ஒருத்திக்குத்தான் அது புரியும்.

அவளது பார்வை பாதங்களைத் தொட்டபட்டுக் கரை வேட்டிமீது ஓடி—பூ வேலைப்பாடு செய்த குரு ஷர்ட்டின்மீது படிந்து—முடிவில் கோபத்தில் சிவந்தி ருந்த முகத்தின் மீது மெல்ல வந்து நின்றது. ஒரு கணம் அவள் நெஞ்சம் துணுக்குற்றது என்றாலும் மிடுக்குக் குறையவில்லை. அச்சமின்றி அவனை ஏறிட்டு நன்றாகப் பார்த்தாள்.

"ஞாயிற்றுக்கிழமை...உங்களைத் தேடிக் கொண்டு நானே வருகிறேன்னு சொன்னேன் இல்லையா? காலை யிலே கீழே இறங்கி நான் வந்தப்போ நீங்க வெளியே போயிட்டிருந்தீங்க..." குற்றம் படித்தான் அவன்.

"நேத்து உனக்கு வேலையிருந்தாப்போல் எனக்கு இன்னிக்குக் காலையில் வேலையிருந்தது. வந்ததிலி லிருந்து நானும் பார்க்கிறேன். உனக்கு நிற்கவோ பேசவோ நேரமேயில்லை. நீ பெரியமனுஷனாகிவிட்டே அப்படி...உட்கார்."

அவள் காட்டிய ஆசனத்தில் அவன் உட்காரவில்லை" அமைதியில்லாது கையால் அடிக்கொரு தடவை தலை முடியைச் சரிப்படுத்திக்கொண்டு அவன் நின்று கொண் டிருந்தான்.

அவனது அந்தரங்க விஷயங்களில் தலையிட்டுப் பேச வேண்டியிருக்கிறதே என்று அவளுக்குச் சிறிது வெட்க மாகத்தானிருந்தது. ஆனால் தவிர்க்க முடியாத நிலை. தொண்டையைக் கனைத்துக்கொண்டு முடிவில் சிறிது துணிவுடன் கேட்டுவிட்டாள்.

"ஆமாம், நீ அந்தப் பெண் மஹிமாவிடம் அன்னிக்கு என்ன சொன்னே?"

திகைத்துப்போன ஹரி, அவளை உக்கிரமாக உறுத் துப் பார்த்தான். பரபரப்பாக மீண்டும் தன் முடியைக் கையால் ஒதுக்கி விட்டுக்கொண்டான். உணர்ச்சி வசத் தில் அவனது உதடுகள் துடித்தன. நெஞ்சிலே தங்கிய எதையோ விழுங்கிக் கொண்டான்.

"எங்களுக்குள் என்னென்னவோ பேசுவோம். நான் என்னவோ சொன்னேன்—அதைப்பத்தி நீங்க ஏன்கேட் கணும்?"



"கேட்க நான் யார்? அப்படின்னுதானே உன் நினைப்பு. உன் விஷயத்திலே நான் உன் கண்களுக்கு இப்போ தாயாகப் படவில்லை. போகட்டும். ஆனால் மஹிமா எனக்கு மிகவும் வேண்டியவள். எங்க குடும் பத்து நண்பரின் பெண். அவள்கிட்ட முறை தவறிமனம் போனபடி நீ நடந்தால் அதைக் கேட்க எனக்கு உரிமை உண்டு." உரத்த குரலில் கடுங் கோபத்துடன் அதட்டிப் பேசினாள் வசுமதி.

ஹரியின் குரலும் தடித்தது." உங்களுக்குத் தெரிய வேண்டியது அவசியமில்லேன்னு சொல்லலை."

"நீ மூடி வைக்கிறதிலே லாபம் இல்லை. எனக்கு எல்லாம் தெரியும்."

"என்ன தெரியும்?"

"நீ அவளைக் கல்யாணம் பண்ணிப்பதாக உறுதி சொன்னது, மோதிரம் கொடுத்தது, காத்திருக்கச் சொல்லி, கடிதங்கள் போட்டது எல்லாமே எனக்குத் தெரியும்."

"மஹிமா உங்ககிட்ட சொன்னாளா?"

"அவள் தங்கமான பெண். உன்னை என்னிடம் காட்டிக் கொடுக்கலை. நானே யதேச்சையாக நீ எழுதின கடிதத்தைப் படிச்சு தெரிஞ்சு கொண்டேன்."

"ஒரு பெண்ணை விரும்புகிறது, கல்யாணம் பண் ணிக் கொள்கிறது. இதெல்லாம் ஒருத்தருடைய தனிப் பட்ட உரிமை. நீங்க உங்க வயசை மறந்து இதைத் துப்புத் துலக்கிக் கொண்டு போவது வெட்கப்பட வேண் டிய விஷயம்."

"ஒரு பெண்ணைக் காதலிச்சு கல்யாணம் பண்ணிக் கொள்வதாக வாக்குக் கொடுத்துவிட்டுப் பின் கோழை

போல் நழுவ நினைக்கிறியே அதை நினைச்சு நீதான் வெட்கப்பட வேண்டியவன்."

"இப்ப என்ன செய்யச் சொல்றீங்க?" கோபமாகக் கேட்டான் ஹரி.

"எனக்கு நீ ஒண்ணும் செய்ய வேண்டாம். உன்னி டம் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அந்த மஹிமாவை நீ இப்படி உதறி எறிய நான் சம்ம திக்க மாட்டேன். பெண்கள் ஒன்றும் கிள்ளுக்கீரை இல்லை. அதனால் நீ அவளைக் கல்யாணம் செய்து கொள்கிறதுதான் முறை. படிச்சு பட்டம் வாங்கிவிட் டாள் மட்டும்போதாது, பணம் இருந்துட்டா எதுவேண் டுமானாலும் செய்யலாம்னு நினைக்காதே. கண்ணிய மானவனாக வாக்குத் தவறாதவனாக நடந்தாத்தான் நீ மனுஷன்னு நாளைக்கு நிமிர்ந்து நடக்க முடியும்...மறக் காதே" படபடத்தாள் வசுமதி.

"சின்ன வயசிலிருந்து இந்த அறுவையை நான் எத்த னையோ தடவை கேட்டுக் கொண்டுதான் வரேன். உங் களுக்கு நான் ஒண்ணு சொல்ல ஆசைப்படுகிறேன். உங்க புடவைத் தலைப்பிலே என்னை இன்னமும் முடிச்சு வச்சி ருக்கலாம் என்கிற எண்ணத்தை மறந்துடுங்க. என் உணர்ச்சிகளுக்கு, என் உள்ளத்து முடிவுகளுக்கு நீங்க ஒண்ணும் உத்தரவு போட முடியாது. புரிஞ்சுக்குங்க. முடிவா சொல்லிட்டேன். உங்களுக்கு என் வாழ்க்கை யிலே எந்தவிதமான சம்பந்தமும் இனி கிடையாது...' காரமாக வார்த்தைகளைக் கொட்டினான.

அவமானத்திலே உடல் குறுகிப்போன வசுமதிக்குச் சட்டென்று பேசவே முடியவில்லை. "இந்த முடிவுக்குநீ வந்தது பற்றி சந்தோஷம். மஹிமாவுக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறே? அது மட்டும் எனக்குத் தெரிஞ்சால் போதும்..." மெல்லிய குரலில் கேட்டாள்.



"நானும் ராதிகாவும் விரைவில் திருமணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்திருக்கிறோம். அதனால் மஹிமாவுக்கு இனி சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை" எரிச்சலோடு பதிலளித்தான்.

பொங்கிவந்த கோபத்தை அடக்கிக் கொண்டாள் வசுமதி "காலையில் இங்கே வந்து போனவள்தான் ராதிகாவோ?"

ஹரிக்குத் தாங்கமுடியாத வியப்பு, "உங்களுக்கு எப் படித் தெரியும்?"

"முன்னறை இருந்த அலங்கோலம் சொல்லியது? தெரிஞ்சு கொண்டேன்."

"அமெரிக்காவிலிருந்தபோது நான் சந்தித்த தமிழர் குடும்பத்துப் பெண்தான் ராதிகா. அவள் தந்தை அங்கே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார், தாத்தா வுடன் தாய் நாட்டுக்கு அவள் வந்திருக்கிறாள். அவர்க ளைச் சந்திக்கத்தான் சனிக்கிழமை நான் விமான நிலை யத்திற்குப் போனேன்...ராதிகாவின் தாத்தா சொன்ன தினால்தான் எனக்கு என் வாழ்க்கை ரகசியமே தெரிய வந்தது."

வசுமதி திடுக்கிட்டுப் போனாள். "ராதிகாவின் தாத்தாவா?"

"ராதிகாவின் தாத்தா வேதகிரிதான் சொன்னார்."

"வேதகிரிக்கும் அமெரிக்காவிற்கும்..." அவள்முடிக்க வில்லை.

"ஆச்சரியமாக இருக்கா? அவர் மகன் அங்கே நியூ யார்க்கில் பெரிய வேலையில் அமர்ந்திருக்கிறார், ராதிகா பெற்றோர்களோடு இங்கேதான் இருந்தாள்... தாத்தா மகனோடு தங்க வந்திருந்தார்—அப்போதுதான் அவர்களை நான் சந்தித்தேன். அவர் சொன்ன பிறகு தான் உங்க வஞ்சகம், சூழ்ச்சி எல்லாம் தெரிய வந்தது

இந்த நிலையிலே..." முடிக்காது குரோதம் பொங்கிய விழிகளால் அவளை உறுத்துப் பார்த்தான்.

வசுமதியின் நெஞ்சும் உடலும் பதறின.

வேதகிரியின் விஷம்மா இது! அட கடவுளே! விதி இப்படியெல்லாம் புகுந்து விளையாடணுமா? தனக்குள் குமைந்தாள்.

"இப்போ சொல்லுங்க...என் தாய் எங்கே? அவங்க முகவரி எனக்குத் தேவை...அவங்களை நான் பார்த்தாகணும்!" அதிகார மிக்க குரலில் அதட்டிக்கேட்டான் ஹரி.

மூக்குக் கண்ணாடியை அருகிலிருந்த மேஜை மீது வைத்துவிட்டு மெல்ல எழுந்தாள் வசுமதி. ஹரியைஏற இறங்கப் பார்த்தாள்...என்னவோ நினைத்துக் கொண்டு அவள் ஆரம்பித்த காரியம் எங்கேயோ போய் முடிந்து விட்டதே என்ற திகைப்பு...தவிப்பு...துக்கம்...அவிழ்ந்து தோள்மீது விழுந்த கூந்தலை அள்ளி முடித்துக் கொண்டாள்.

"வேதகிரிதானே இந்த ரகசியத்தைச் சொன்னவர்? இனி அவரிடம் போய் மீதியெல்லாம் கேட்டுக்கொள். இனி என்னிடம் இந்தக் கேள்வியைக்கேட்க வேண்டிய அவசிய மில்லை..." கண்டிப்பான குரலில் கூறிவிட்டு, நெஞ்சு படபடக்க, கால்கள் தள்ளாட அவள் அறையைவிட்டு வெளியே நடந்துவிட்டாள்.

# 18

ஆன்று இரவு வசுமதி உறங்கவே இல்லை. அமைதியின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். யாரை அவள் மறுபடியும் சந்திக்க விரும்பவில்லையோ, அதே மனிதர் இப்பொழுது மறுபடியும் அவர்கள் குடும்ப



விஷயத்தில் புகுந்து குழப்பங்கள் உண்டாக்கப் புறப்பட்டிருப்பதைக் கண்டு அவள் அதிர்ந்து போய்விட்டிருந்தாள். வேண்டாமென்று நினைவினின்று அவள் ஒதுக்கிவிட்டிருந்த வேதகிரியை இப்போது ஹரி அமெரிக்காவிலிருந்து பிடித்துக்கொண்டு வந்து நிற்குமளவிற்கு உலகம் அப்படி என்ன சிறியதாகப் போய்விட்டது.

வேதகிரி ஒரு வழியில் அவள் மாமனார் அமிர்தலிங்கத்திற்குத் தூரத்து உறவுக்காரர். கிழவருக்கு உடல் நலன் குன்றிவிட்டபோது உதவி புரிவதாக வீட்டிற்குள் வந்து புகுந்து கொண்டவர். தமது வஞ்சகப் பேச்சுக்களாலும் சூழ்ச்சிகளாலும் தந்தையையும் பிள்ளையையும் நிரந்தரமாகப் பிரித்துவிட்டு வேடிக்கை பார்த்தவர். கிழவரின் பலவீன உணர்வுகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அவரது சொத்தில் கணிசமான ஒருபகுதியைச் சாப்பிட்டு ருசி கண்டவர். வசுமதியை மருமகளாக அந்த வீட்டிற்குள் சேர்த்துக் கொள்வதை எதிர்த்துத் தடுக்க மிகவும் பாடுபட்டவர். முடிவில் அமிர்தலிங்கத்தின் மனஸ்தாபத்திற்கு ஆளாகி வீட்டைவிட்டு வெளியேறினார். அப்படிப்பட்ட வேதகிரி மறுபடியும் அவர்களது வாழ்க்கையில் புகுந்து குழப்புவதா? இதை எப்படி அவள் ஹரியிடம் கூறித் தடுக்க முடியும்? அவன்தான் அவர் விரித்த வலைக்குள்ளே மயங்கி விழுந்து கிடக்கிறானே!...

ஹரி வசுமதியின் பிள்ளை இல்லை என்பதை வேதகிரி எப்படியோ அந்த நாளிலேயே ஊகித்துக் கொண்டு விட்டிருந்தார். தமது ஊகத்தைத் தெளிவு செய்து கொள்ள அவர் பட்டபாடு எத்தனையோ? வசுமதி சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. அந்த உண்மையை அவள் மாமனார் அமிர்தலிங்கத்திடம் கூடச் சட்டென்று சொல்லிவிடவில்லையே? பல ஆண்டுகளாக மனத்தை உறுத்திக் கொண்டிருந்த அந்த சந்தேகத்தை இப்போது தெரிந்து கொள்ளப் புறப்பட்டு விட்டாரா? அதனால் என்ன லாபம்? வசுமதியின் மீது வஞ்சம் தீர்த்துக்

கொள்ள எடுத்த முயற்சியா? இருக்கலாம். அவள் வீட்
டிற்குள் வந்து சேர்ந்த பின்னர்தானே அவர் வெளியேற
நேர்ந்தது? அந்த ஆத்திரமாக இருக்கலாம்...பலவற்றை
யும் எண்ணி அவள் படுக்கைமீது புரண்டாள்

புனிதாவைத் தேடிக்கொண்டுபோன அந்த இள
வயதுப் பெண் வசுமதி அல்ல அவள் இப்போது—நடுவய
தைத் தாண்டி முதுமையின் அருகாமையை நெருங்கிக்
கொண்டிருக்கிறவள். சின்ன வயதிலே கணவனை
இழந்த துயரத்தில் உற்சாகம் ஒடுங்கிப்போன உள்ளம்.
வாழ்க்கையில் பல பிரச்சினைகளைத் தனியே நின்று
போராடிச் சமாளிக்க நேர்ந்ததில் ஏற்பட்ட மன அயற்சி.
காலப் போக்கில் வந்து பற்றிக் கொண்ட வியாதிகளி
னால் பலவீனப்பட்ட உடல்...அவள் இதுவரை தன்னைப்
பற்றியே நினைத்துப் பார்த்தவள் இல்லை. அன்று திடீ
ரென்று வருங்காலத்தைப் பற்றியதொரு சிந்தனை ஏற்
பட்டது.

வேதகிரியின் கைப்பொம்மையாக ஆடப் போகிற
ஹரி...அவளை மதிக்காது நடத்தும் ஹரி...அவனுடன்
அவளுக்கு வருங்காலத்தில் அமைதியானதொரு
வாழ்க்கை அந்த வீட்டில் இனி கிட்டப் போகிறதா? எண்
ணிய மாத்திரத்தில் விவரிக்க முடியாத திகில் உடல்
சிலிர்த்துப் போனாள். இருள் படிந்து நின்ற தன் வருங்
காலத்தை எண்ணித் துன்பப் பெருமூச்செறிந்தாள். கண்
இமைகளை எரித்துக் கொண்டு சூடான கண்ணீர் பொங்
கித் தலையணைமீது வழிந்தோடியது.

சில தினங்களுக்குப் பின்னர் ஒருநாள் மாலை. தங்கள்
கம்பெனியைப் பார்வையிட்டுவிட்டுக் காரைத் தானே
ஓட்டிக்கொண்டு வசுமதி வீட்டை நோக்கி வந்துகொண்
டிருந்தாள். சற்றுத் தொலைவில் பஸ் நிலையத்தை
நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்த மஹிமாவை
அவள் கவனித்துவிட்டாள். வேகமாகக் காரைச்செலுத்தி



மஹிமா அருகில் கொண்டு வந்து நிறுத்தினாள். "ஏறிக்
கோம்மா. உன்னை வீட்டில் கொண்டுபோய் விடுகி
றேன்" அன்புடன் உபசரித்தாள்.

திடுக்கிட்டுப் போன மஹிமா அவளைத் திரும்பிப்
பார்த்தாள். அந்தச் சில நாட்களில் அவள் மிகவும்மாறி
விட்டிருந்தாள். சிரிப்பு விளையாடிய களைபொருந்திய
அந்த முகத்தில் இப்போது சோகம் திரைகட்டியது கண்
களில் ஏக்கம் நிறைந்த பார்வை. வாடிக் கறுத்து
இளைத்துப் பாதி உருவமாக நின்ற அந்தப் பெண்ணைக்
கண்டு வசுமதி நெஞ்சு நெகிழ்ந்து போனாள். "உங்க
ளுக்கேன் வீண் சிரமம்!" என்று மறுத்த மஹிமாவை
அவள் வற்புறுத்தினாள். "ஏறிக்கோம்மா..." மறுபடி
யும் உபசரித்து தன் அருகே அமரச் செய்து கதவைச்
சாத்தினாள். "உங்க வீட்டுக்கு வரணும்னு நான் முயற்சி
பண்ணிக் கொண்டிருக்கிறேன். அவகாசம் கிடைக்கலை.
அப்பா எப்படியம்மா இருக்கிறார்?' கேட்டபடி அவள்
வண்டியை மெதுவாக செலுத்திக் கொண்டு போனாள்.

"எப்பவும் போலத்தான் இருக்கிறார்" சுருக்கமாகப்
பதிலளித்த மஹிமா, தனக்கு முன் தெரிந்த சாலையை
வெறித்துக் கொண்டிருந்தாள். வசுமதிக்கு மேலே என்ன
பேசுவதென்றே சங்கடமாக இருந்தது.

"நேத்து வேலைக்காரி கூடை நிறையச் சம்பகப்
பூவைப் பறித்துக் கொண்டு வந்து வைத்தாள். அப்போ
எனக்கு உன் நினைப்பு வந்துவிட்டது. உனக்குச் சம்பக
பூமேலே ரொம்ப ஆசையாச்சே..." பரிவுடன் சொல்லி
விட்டு ஓரக்கண்ணால் அவளைப் பார்த்துக் கொண்டு
மெல்ல வண்டியை ஓட்டிச் சென்றாள்.

பல நாட்களாகப் பாடுபட்டு பள்ளத்திலே புதைத்து
வைத்துக் கொண்டிருந்த துக்கம் திடீரென்று பொங்கிக்
கொண்டு வந்துவிட்டது. மஹிமாவால் சமாளிக்க முடிய
[illegible]

வில்லை. "சம்பகப் பூ ஒண்ணு மேலே மட்டுமா எனக்கு ஆசை?" கண்களில் நீர் துளிக்க உணர்ச்சிக் கொந்தளிப்பில் உதடுகள் துடிக்க—அவள் கேட்டுவிட்டுச் சாலைமீது மீண்டும் பார்வையைத் திருப்பினாள்.

அதன் பொருளை உணர்ந்து கொண்ட வசுமதிக்கு மேலே பேசத் தோன்றவில்லை. வேதனையோடு மௌனமாக அவள்வண்டியைச் செலுத்திக்கொண்டு சென்றாள். சிந்தாதிரிப் பேட்டை பக்கம் வண்டி விரைவதைக் கண்டதும் திடீரென்று மஹிமா அவள் பக்கம் திரும்பினாள். "அம்மா! நேத்திக்கு நான் அவரைப் பார்த்தேன்."

"அப்படியா?" தொடர்ந்து என்ன கேட்பது என்று வசுமதிக்குக் குழப்பம்.

"அவர் தனியாக இருக்கவில்லை. காரில் அவருடன் ஒரு பெண்ணும் கிழவரும் ஒரு பையனும் இருந்தார்கள். அந்தப் பெண்தான் அவர் சொன்ன ராதிகாவா இருக்கும்னு நான் நினைச்சேன். அவர் என்னைப் பார்க்கவில்லை. ஆனால் நான் பார்த்தேன். அவரை மறந்துடுன்னு அன்னிக்கு நீங்க கேட்டுக் கொண்டீங்க, நான் மறக்க ரொம்ப முயற்சி பண்ணிக் கொண்டுதான் இருந்தேன். நேத்து அவரைப் பார்த்ததும் ஒரு நீர்வீழ்ச்சி போல் நினைவுகள் வந்து என் நெஞ்சிலே சுமையா—கனமா—என்னால் தாங்கவே முடியாம..." சொல்லிக் கொண்டு வந்தவள் முடிக்காமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தாள்.

வசுமதி ஓரமாகக் காரைத் தெருவில் ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு இரக்கத்துடன் மஹிமாவின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

"மஹிமா! அழாதேயம்மா! உங்க வீட்டுக்குக் கிட்டக்க வந்துட்டோம். கண்களைத் துடைச்சுக்கோ... உன் மன நிலையையும் நீ படுகிற வேதனையையும் என்



னால் புரிஞ்சுக்க முடிகிறது. தைரியமா இருன்னு சொல்வதைத் தவிர வேறே என்னம்மா சொல்ல முடியும்?"

மனம் ஆறும்மட்டும் அழுதுவிட்டு மஹிமா கண்களைத் துடைத்துக் கொண்டாள். "மன்னிச்சுக்கோங்க—அதனாலே உங்களைக் கண்டதும் எனக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்துவிட்டது. வீட்டில் யார்கிட்டேயும் சொல்லாம எனக்குள்ளேயே துக்கத்தை வச்சுக்கொண்டு குமைந்து கொண்டிருந்தேன். வேதனையிலே என் மனசே வெடிச்சிடும்போல பாரமா இருந்தது. இப்போ உங்களைப் பார்த்ததும் கொஞ்சம் அழுததும் மனம் லேசாகப் போயிடுச்சு...கொஞ்சம் ஆறுதலாகவும் இருக்கு..." மெல்லியதாகப் புன்னகைத்தாள் மஹிமா.

"இரு, வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு வசுமதி வண்டியினின்று இறங்கி அருகிலிருந்த கடைக்குச் சென்றாள். கொஞ்சம் பழங்களும் மிட்டாய்களும் வாங்கிக் கொண்டு திரும்பி வந்தாள்.

சிவராமனுக்கு வசுமதியைக் கண்டதும் ஒரே மகிழ்ச்சி. "வாங்க—வாங்க" என்று உபசரித்த வண்ணம் படுக்கையினின்று வாட்டத்திலிருந்த கையை ஊன்றிக் கொண்டு சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அடுப்பில் வேலையாக இருந்த ஞானம், ஈரக் கையை புடவையில் துடைத்துக்கொண்டு ஓடோடியும் வந்தாள். "வாங்கோ, வாங்கோ! உட்காருங்க" மகிழ்ச்சியுடன் மூலையில் கிடந்த பிரம்பு நாற்காலியை இழுத்துப் போட்டு உபசரித்தாள்.

கொஞ்ச நேரம் பேசி இருந்துவிட்டுக் காப்பி தயாரித்துக் கொண்டு வர ஞானம் எழுந்து உள்ளே சென்றாள். தாயாருக்கு, கூட உதவி செய்ய மஹிமாவும் உள்ளே சென்றுவிட்டாள்.

"ஹரி சுகந்தானே அம்மா? பார்க்கணும்னு ஆசையாயிருக்கு வந்ததும் அவனுக்கு ஏகப்பட்ட வேலை இருக்

கும். ஒழுங்காகிக் கொஞ்சம் அவகாசம் கிடைக்கிற போது நம்ப வீட்டிலே ஒரு சின்ன விருந்து வைக்கலாம்னு யோசனை...'' முடிக்காமல் அவர் வசுமதியின் முகத்தைப் பார்த்தார்.

கலக்கத்துடன் அவள் சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். நோயாளியாக இருக்கும் அவரிடம் மூடி மறைத்துப் பேச அவளுக்கு மனமில்லை. ''ஹரி நீங்க நினைக்கிறதுபோல இப்போ இல்லை. ரொம்ப மாறிவிட்டிருக்கான். அவன் உங்களைப் பார்க்க வருவானோ என்னவோ சந்தேகம். உங்ககிட்ட ஒளிக்க விரும்பவில்லை. வந்ததிலிருந்து ஹரி என்னிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. எங்களுக்குள்ளே பெரும் மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கு'' சொல்லி முடிப்பதற்குள் அவள் குரல் கரகரத்தது.

திடுக்கிட்டுப் போனார் சிவராமன். ''இதென்னம்மா வேடிக்கை. பிள்ளைக்காகவே வாழ்ந்துகிட்டிருந்த உங்களுக்கு இப்படி ஒரு சோதனையா? காரணம்?''

''அமெரிக்காவிலிருந்த ஒரு தமிழ் குடும்பத்துப் பெண்ணை அவன் விரும்புகிறான்.''

''புரிகிறது. அது உங்களுககுப் பிடிக்கலை. அதனால் மனத்தாங்கல். பெண்ணு பார்க்க நல்லாவும், நல்ல குணமாகவும் இருந்தா நீங்க ஒப்புக்கொண்டு விடுங்கோ. இந்தக் காலத்திலே பிள்ளைகள் மனசுப்படிதானே பெத்தவங்க நடக்கணும்? உங்களுக்குத் தெரியாதா?''

''நான் மன்சிலே வேறுவிதமாகத் தீர்மானிச்சிருந்தேன். என்னைப் புரிந்து கொண்டு எனக்கு உதவியா வீட்டை நிர்வகிக்கப் பொறுமையும் பொறுப்பு உணர்ச்சியுமான பெண்தான் வேண்டுமென்பது என் ஆசை. அப்படிப்பட்டவள் மஹிமான்னு என் மனசிலே தேர்ந்



தெடுத்து வச்சிருந்தேன். மஹிமாவை எனக்குச் சின்ன வயசிலிருந்தே தெரியும். அவளுககு என் மேல் கொள்ளை ஆசை. ஹரி வந்ததும் ஒரு நல்ல நாள் பார்த்து உங்ககிட்ட வந்து பெண் கேட்கலாம்னு நினைச்சேன். என் ஆசையெல்லாம்...'' குரல் தடைப்பட்டது.

சிவராமன் லேசாகப் புன்முறுவலித்தார். ''நாம் நினைக்கிறதெல்லாம் நடந்துட்டா உலகிலே துன்பமும் துயரமுமே இருக்காதம்மா. உண்மையைச் சொல்றேன். அந்த மாதிரியான ஒரு ஆசை எங்க மனசிலே ஏற்பட்டதே கிடையாது. மஹிமாவை உங்களுக்குப் பிடிச்சிருக்கு. பழைய நாள் சிநேகிதத்தை மறக்காமல் நீங்க எங்களுடன் பழகறீங்க. உதவுறீங்கன்னு நாங்க நன்றி பாராட்டுகிறோமே தவிர வேறு எந்தவிதமான யோசனையுடனும் உங்களை நெருங்கினதேயில்லை. நாங்கள் இத்தனை பெரிய சௌபாக்கியத்தை எதிர்பார்க்கவேயில்லை. அதனால் ஏமாற்றமும் இல்லை. மஹிமாவுக்கு எங்க வசதிக்குத் தகுந்த இடத்திலே வரன் கிடைச்சா போதும். நீங்க இதுவரை செஞ்சிருக்கிற உதவிக்கு நன்றி உங்களை எங்கள் உயிர் உள்ளவரை மறக்க மாட்டோம். நீங்க இதுக்காக மனக் கஷ்டப்படாதீங்க. உங்க மகன் இஷ்டப்படியே முடிச்சு விடுங்கோ...'' அவர் பேசிக் கொண்டே போனார்.

ஒரு கணம் வசுமதி உணர்ச்சி வசத்தில் தன் உள்ளத்தை வேதனையில் ஆழ்த்தித் துன்புறுத்திய அந்த ரகசியத்தைச் சொல்லி விடலாமா என்று துடித்தாள். மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். புனிதாவைப் பற்றிய ரகசியத்தைப் பிறரிடம் சொல்ல அவளுக்கு உரிமை இல்லை என்ற நினைவு உறுத்தியது. பேச்சைச் சட்டென்று லேசான வேறு விஷயங்களில் திருப்பினாள். சிறிது நேரம் அங்கே அவர்களுடன் தங்கியிருந்துவிட்டு அவள் வீட்டிற்குக் கிளம்பினாள்.

வழியில் கண்ணாடிச் சாமான்கள் விற்கும் கடையருகே வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்றாள். பித்துக்குளி முருகதாஸின் சமீப கால ரிக்கார்டு ஒன்று அவளுக்குத் தேவைப்பட்டது ஞாபகத்திற்கு வந்தது. ரிகார்டுகளை இசைக்கச் செய்யும் அறை போன்ற தடுப்புக்குள்ளே சென்று அவள் உட்கார்ந்து கொண்டாள். அதே சமயம் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்து நின்றவளைக் கண்டதும் அப்படியே அதிர்ந்துவிட்டாள் வருஷங்கள் பல இடையே ஓடிவிட்டது. அதனால் அவள் வசுமதியை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் வசுமதிக்கு அவள் யார் என்று புரிந்துவிட்டது. அவளால் மறக்க முடியாத உருவம்—ராஜசேகரன் அன்பை முதல் முதலாக அள்ளிக் கொண்ட பாக்கியவதி—அவன் காதலி—ஹரியைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவள்—அந்தப் புனிதாவின் மறக்க முடியாத உருவம் அவள் அடி மனநிலையில் அச்சாகக் குடி கொண்டிருந்ததைக் காலம்கூட அழிக்க முடியவில்லையே!

''என்ன வேணும்?'' கேட்டுக்கொண்டே அருகில் வந்த பெண்ணிற்குப் பதிலளிக்காது அவள் வேகமாகக் கடையை விட்டு வெளியே வந்தாள். அவள் இருந்த மனநிலையில் எப்படித்தான் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தாளோ தெரியாது.

வீட்டிற்குள் நுழைந்ததும் குளியலறைக்குச் சென்று கை கால்களைப் பரபரப்பாகக் கழுவிக்கொண்டு பூஜையறையிலே புகுந்து கொண்டாள்.

நடுங்கும் கரத்தால் விளக்கை ஏற்றிவிட்டு அபிராமியின் திருவுருவத்தை உற்றுப் பார்த்தாள்

அவள் நெஞ்சம் பதைபதைத்தது. உடல் நடுங்கியது. யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாத எண்ணங்கள், ரகசியங்கள், வேதனைகள்...எல்லாவற்றையும் அவள்



ஒருத்தியிடம் தாராளமாக முறையிட்டுச் சொல்லிக் கொள்ளலாமே!

''வேதகிரியின் வரவு—புனிதாவின் சந்திப்பு—இதெல்லாம் ஏதேச்சையாக நடக்கும் சம்பவங்கள் இல்லை. புரிகிறது அம்மா! நீ உன் சோதனையைத் துவங்கிவிட்டாய்—தாயே பராசக்தி! ஒரே ஒரு வரம் இந்த ஏழைக்கு வேண்டும். இனி என் வாழ்விலே ஏற்படப்போகிற திடீர்த் திருப்பத்தைச் சகித்துக்கொள்ள எனக்கு மன உறுதி மட்டும் கொடு. போதும்; வேறு ஒன்றுமேவேண்டாம்.'' மனமுருகப் பிரார்த்தித்துக் கொண்டு அபிராமியின் காலடியில் தன் கவலைகளைச் சமர்ப்பித்துத் தலை வணங்கினாள் வசுமதி. அதற்குக் காணிக்கை போல் அவளது கண்ணீர் பொல பொலவென்று முத்துக்களாக தரையில் கொட்டியது

## 19

அந்திப் பொழுது. முன் பக்கத்துத் தோட்டத்தில் மஞ்சள் வெய்யில் படிந்த புல்தரைமீது சேனாபதி நின்றுகொண்டிருந்தார். அவர் வீசிப்போட்ட பந்து உருண்டு முல்லைப் புதருக்குள் ஓடி மறைந்து கொண்டு விட்டது. அதைத் தேடிக் கொண்டு ரெக்ஸி இங்குமங்கும் குதித்துக் கொண்டிருந்தது. அவர் பந்தை வீசிப் போடுவதும் ரெக்ஸி எடுத்தோடி வந்து கொடுப்பதுமான விளையாட்டில் இருவரும் வெ நேரம் ஈடுபட்டிருந்தனர்.

முடிவில் பந்தைக் கண்டு பிடித்துப் புதருக்குள் நுழைந்து கவ்வி எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியுடன் இரைக்க இரைக்க ரெக்ஸி ஓடிவந்து அவர் முன்னே நின்றது. ''போதும் போ...ரொம்பக் களைச்சுவிட்டே''

ளாக அவள் சரியாகவே சாப்பிடுவது கிடையாது. வழக்கமான அரை டம்ளர் காப்பியில் ஒரு வாய்தான் சாப்பிட்டாள். அவர் கொண்டு வந்த இரண்டு இட்லிகளில் ஒன்றிலிருந்து ஒரு துண்டுதான் பிட்டு வாயில் போட்டுக் கொண்டாள். இரவு வேளையில் அவள் அதிகம் தூங்குவதுமில்லை என்பதை அவள் அறையில் வெகுநேரம் எரிந்து கொண்டிருந்த விளக்கைப் பார்த்துத் தெரிந்து கொண்டிருந்தார்.

எதற்கும் அசையாது கல்தூண்போல் நிற்கத் தெரிந்து கொண்டிருந்த வசுமதி இப்போது உள்ளம் வெடித்துப் பொடிப் பொடியாகி நிலை குலைந்து ஒடுங்கிக் கொண்டு வருவதை அவரால் உணர முடிந்தது. "இப்படியே போகவிட்டால் அம்மாவுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால்...?" என்ற கவலை அவருக்கு.

வெளியே போகுமுன் அவள் சொல்லிவிட்டுத்தான் கிளம்பியிருந்தாள். "பழனியைக் காவல் வச்சுட்டு நீங்க வழக்கம்போல் ஓய்வாகப் போய் வாருங்க. நான் வர நேரமாகும். எங்களுக்குச் சாப்பாடு வெளியில் ஏற்பாடாகியிருக்கிறது..."

அவர் வெளியே போயிருந்திருக்கலாம். சின்ன எஜமான் தூங்குகிறாரே, அவர் எழுந்த பிறகு போகலாம் என்று தயங்கினார். அதன் விளைவு பெருத்த அவமானம்.

ஹரி முதல்நாள் இரவு வெகுநேரம் வெளியே சுற்றிக் கொண்டிருந்துவிட்டு நடு இரவுக்கு மேல்தான் வீட்டுக்கு வந்திருந்தான். விடிந்து வெகு நேரமாகியும் அவன் உறங்கிக் கொண்டிருந்தான்.

பலகாரம் சாப்பிட அவன் கீழே வருவதற்குள் காலை மணி பத்தாகிவிட்டது. பலகாரம் சாப்பிட்டதும் முன்னறையில் கிடந்த பத்திரிகைகளை வாரிக் கொண்டு

மறுபடியும் மாடிக்குப் போய்விட்டான். இடையே அவரிடம் தன் தாயைப் பற்றி ஒரு வார்த்தைகூட விசாரிக்கவில்லை. வீடு என்பது அவனைப் பொறுத்தவரை ஒரு தங்குமிடம்—ஓட்டல் இல்லை—ஒரு சத்திரம்...நினைத்த போது வருவது—சாப்பிடுவது—தூங்குவது! சே! சே! என்ன பிள்ளை இவன்! அவர் மனம் கசந்துவிட்டிருந்தார்.

மனத்திற்குள் பற்பல எண்ணியபடி அவர் வெளியே கிளம்ப ஆயத்தமானார். வாயில் மணி ஒலித்தது. கதவைத் திறப்பதற்குள் மறுபடியும் ஒரு முறை ஒலித்தது. பொறுமை இல்லாதவங்க போலிருக்கு, தெற்கு வந்திருப்பாங்க. எதாவது நிதி திரட்ட டிக்கெட் விற்க வந்திருப்பாங்க...எரிச்சலோடு கதவைத் திறந்தவர் அயர்ந்து போய் நின்றுவிட்டார்.

சில நாட்களுக்கு முன்வந்த இளம் பெண்ணும் பையனும் வாயிற்படியருகே நின்று கொண்டிருந்தனர். முதல் விஜயத்தின் போது புடவை அணிந்திருந்த அந்தப்பெண் வெளிர் நீலவண்ண ஸ்லாக்ஸூட்டில் காட்சிஅளித்தாள். தலையை வாரிப் பின்னாமல் முடியை முதுகின் மீது பரவலாகப் புரள விட்டுக் கொண்டிருந்தாள். கூட வந்த பொடிப் பையன் பாதி புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை வலது கையில் பிடித்துக்கொண்டு அசட்டுச் சிரிப்புடன் நின்றான். அவர் திடுக்கிட்டது அந்தக் காட்சியைக் கண்டு அல்ல. அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த கிழவரைக் கண்டதும் சேனாபதிக்கு ஒரு படபடப்பு. ஒருவிதத் தவிப்பு.

பல வருடங்களுக்குப் பின் இந்தச் சந்திப்பு என்றாலும் அவரால் பார்த்தவுடனே வேதகிரியை அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. காதோரங்களில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு விழித்தபடி



கதவை நன்றாகத் திறந்துவிட்டு அவர்களுக்கு வழிவிட்டார்.

தோட்டத்தையும், வீட்டின் முன் பகுதியையும் ஆராய்ந்தபடி உள்ளேவந்த வேதகிரியின் கண்களில் வியப்புத் தாண்டவமாடியது.

''யாரது? நம்ப சேனாபதியா? என்னய்யா இப்படிக் கிழடு தட்டிப் போயிட்டீங்க. ரிடையர் ஆகாமல் இன்னுமா இந்த வீட்டில் உழைக்கிறீர்?'' வேடிக்கையாகப் பேசிக் கொண்டு பக்கவாட்டில் பொக்கையாகிவிட்ட பற்களைக் கோரமாகக் காட்டிக் கொண்டு பகபகவென்று சிரித்தார். சில்க் ஜிப்பா மறைத்துக் கொண்டிருந்த அவரது தள்ளிய வயிறு கூடவே குலுங்கியது. அவரது நரைத்த தலையையும் ஒடுங்கிப்போன கன்னங்களையும் முகவாய்க்குக் கீழ் தொங்கிக் கொண்டிருந்த சதையையும் பார்த்த சேனாபதிக்கும் கேட்க வேண்டும் போல் எரிச்சலாகத்தானிருந்தது. 'நீர் மட்டும் என்ன? வாலிபன் என்ற நினைப்பா? கண்ணாடியில் போய் உம் லட்சணத்தைப் பார்த்துக் கொள்ளும்...' என்று கூற வேண்டும் என்ற ஆத்திரம் ஆனால் அப்படி அவர் பேசிவிட முடியுமா?

அம்மா உத்தரவிட்டதும் வெளியே போகாது இருந்தது தப்பு என்ற வரைக்கும் அவர் தம்மையே நொந்து கொள்ள நேர்ந்தது. அவர்களைக் கண்டதும் ஹரி பரபரப்பாகக் கிழே இறங்கி ஓடி வந்தான்.

பேச்சும் சிரிப்பும், இடையே ரிகார்ட் ப்ளேயரிலிருந்து மேல்நாட்டுச் சங்கீதமும் முன்னறையை இரண்டுபடுத்திக் கொண்டிருந்தன. கூட வந்த பையன் தொடர்ந்து ஊதிக் கொண்டிருந்த சிகரெட்டின் புகை மண்டலம் வீடு முழுதும் பரவிக் கொண்டது.

ஹரி எப்படியோ வளர்ந்த பிள்ளை. இப்போது எப்படியோ மாறி இவர்களுக்குச் சரியாகக் கூத்தடிக்

கிறானே! தமக்குள் எண்ணித் தவித்தபடி வந்த விருந்தினர்களுக்கு அவசரமாகக் காப்பி தயாரிக்கத் தொடங்கினார் அவர்.

மரத்தட்டில் காப்பி கெட்டிலையும் கோப்பைகளையும் அடுக்கித் தூக்கிக்கொண்டு முன்னறைக்கு விரைந்தார். அது சமயம் பத்திரிகை ஒன்றைப் பிரித்துக் கையில் வைத்துக் கொண்டு ஹரியுடன் சிரித்துப் பேசியபடி நின்று கொண்டிருந்த ராதிகா வேகமாகத் திரும்பினாள். சேனாபதி கையிலிருந்த தட்டுடன் அவள் மீது மோதிக்கொண்டு விட்டார். படீர் என்ற சப்தத்துடன் கலகலவென்று பீங்கான் தட்டுகள் தரையில் விழுந்து நொறுங்கின. கெட்டிலில் இருந்த சூடான காப்பி ராதிகாவின் புத்தம் புதிய ஸ்லாக் ஸூட்டின் மீது கொட்டி அவளது கால்களைச் சுட்டது.

"ஐயோ அம்மா!" அவள் கிரீச்சிட்டு அலறினாள்.

"என்ன நடந்தது ...?" "காயம் பட்டுவிட்டதா?" ஏக காலத்தில் பதறிக் கொண்டு ஹரியும் வேதகிரியும் அருகில் ஓடி வந்தனர்.

"ஸ்டுபிட் ஓல்ட் மேன்! என்ன செய்துவிட்டார் பாருங்க தாத்தா!" காப்பிக் கறை பட்டு வீணாகிவிட்ட தனது ஆடையைக் காட்டி அவள் விசும்பினாள்.

"இடியட் பார்த்து வேலை செய்யக் கூடாது? பாவி! தறந்தை மேலே கொதிக்கிற காப்பியைக் கொட்டி விட்டாயே?" வேதகிரி ருத்ரமூர்த்தியாகி இரைந்தார்.

"வெளியிலே போகிற அவசரம்னா இப்படியா செய்வாங்க—ஏன் நிக்கிறீங்க—முதல்லே வேலைக்காரியைக் கூப்பிட்டு அறையை ஒழுங்கு பண்ணச் சொல்லுங்க..." தாங்க முடியாத கோபத்தில் ஹரி அவரைப் பார்த்துக் கத்தினான்.



"மன்னிக்கணும். தான் வேணுமின்னு செய்யலை... கை தவறி—" அவமானம் தாங்க முடியாது சுருண்டு போன சேனாபதி குமுறினார். அதை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"வேறு கொஞ்சம் காப்பி மறுபடியும் தயாரித்து இதோ கொண்டு வரேன்..." மெல்லிய குரலில் தாழ்வாகப் பேசினார்.

"உங்க உபசாரம் ஒண்ணும் தேவையில்லை. அவங்களை நான் கவனிச்சுக்கிறேன். நீங்க போகலாம்..." கடுமையான குரலில் ஹரி அவரை அதட்டினான்.

கோபத்தை அடக்க முடியாமல் மேல் துண்டினால் முகத்தைத் துடைத்துக்கொண்டு பதைபதைப்போடு வெகு நேரம் அடுப்பருகே அவர் நின்று கொண்டிருந்தார். வாயிலில் கார் புறப்படும் சப்தம் கேட்டது. ஜன்னல் வழியே பார்த்தார். வந்தவர்கள் அங்கே தங்கியிருக்க விருப்பமின்றி கிளம்பிவிட்டனர், அவர்களுடன் ஹரியும் புறப்பட்டு விட்டிருந்தான். பாட்டன் அமிர்தலிங்கத்தையே ஆட்டிப்படைத்தவர் வேதகிரி. அது சேனாபதிக்குத் தெரிந்த சங்கதி. இப்போது பேரனை அழிக்க எங்கிருந்தோ முளைத்து வந்திருக்கிறார் மனிதர்.

விரைவில் அந்த வீட்டில் எழப்போகும் சூறாவளிக்கு முன்னால் வசுமதியைத் தனியே தவிக்கவிட்டு அவர் போய்விடுவது கோழைத்தனமல்லவா...

முதல் முதலாக வசுமதி அமிர்தலிங்கத்தைக் காண அந்த வீட்டிற்கு வந்தபோது நடந்தவை யாவும் அவரது ஞாபகத்திலே பளிச்சென்று எழுந்தன. இன்றுபோல் அவர் எல்லாவற்றையும் நன்கு நினைத்துப் பார்க்க முடிந்தது. அமிர்தலிங்கத்தின் மனைவி விஜயா அம்மாள் தன் பிள்ளையை நினைத்து உருகிப் போனவள்

பொழுதுதான் புகுந்து கொண்டார் வேதகிரி. அழுக்கு வேட்டியும் கிழிந்த சட்டையுமாக வந்தவர் ஆறே மாதத்தில் மல் ஜிப்பாவும், குண்டங்கி வேட்டியும், வெள்ளி வெற்றிலைப் பெட்டியுமாக ஒரேயடியாக மாறிவிட்டார். அத்தோடு தூள் பறக்கும் அதிகாரம் வேறு. வெற்றிலைப் பாக்கைக்கூடத் தொடாத அமிர்தலிங்கம் குடிப்பதுவரை பல விஷயங்களைக் கற்றுக்கொண்டு விட்டிருந்தார். அத்துடன் அந்த வயதில் இரண்டாவது கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற நப்பாசை. அதைக் கிளப்பி விட்டவர் வேதகிரி. அந்தச் சமயம்தான் அவரைத் தேடிக்கொண்டு வசுமதி அங்கே முதன் முதலாக வந்தாள்.

"ராஜசேகரன் மனைவின்னு நீ சொல்றே. அதுக்கு என்ன அத்தாட்சி? உன்னைப் போலச் சொல்லிக் கொண்டு பெரியவரைப் பார்க்க நினைக்கும் எத்தனையோ அனாமதேயங்கள் வந்து போய்க்கொண்டு இருக்கின்றன. நாங்க எப்படி நம்ப முடியும்..." உரத்த குரலில் வேதகிரி கேட்டார்.

சேனாபதி நின்ற இடத்திலிருந்து வசுமதியைப் பார்க்க முடிந்தது. சிவந்துபோன முகத்தில் அரும்பிய வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்

"இந்தக் கேள்வியைக் கேக்கிற நீங்க யாருன்னு நான் கேட்கலாமா? நீங்க யார்? நான் பெரியவரைப் பார்க்க வந்திருக்கிறேன். வரச்சொல்லிக் கடிதம் போட்டார்" அவள் கோபத்துடன் சொன்னாள்.

"யாரது! இப்படி வரச் சொல்." அமிர்தலிங்கம் உள்ளிருந்தபடி உறுமினார். வசுமதி உள்ளே எழுந்து சென்றாள். வேதகிரி கூடவே அவளைத் தொடர்ந்தார்.

இப்படி உள்ளே மாறி மாறிக் கேட்டதின் விவரம் ஒன்றும் சேனாபதிக்கு விளங்கவில்லை.

கொஞ்ச நேரம் சென்றதும் அறையைவிட்டு வெளிப்பட்டாள் அவள். அவள் முகத்தைப் பார்த்ததும் சேனாபதிக்கு திக்கென்று இருந்தது. அந்தப் பெண்ணின் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

வராந்தாவில் விட்டிருந்த செருப்புகளில் கால்களைத் திணித்தபடி வேகமாக நடந்து கேட்டைத் தாண்டிக் கொண்டு மறைந்து விட்டாள். வீட்டுக்குள் மருமகள் என்ற உறவோடு வர முயற்சித்தவளைத் துரத்தி அடித்த வேதகிரி—இப்போது என்ன செய்யப் போகிறாரோ?

அன்று இரவு கோதுமைக் கஞ்சியை வசுமதியருகே கொண்டு வந்து வைத்துவிட்டு, குற்ற உணர்வுடன் சேனாபதி தயங்கியபடி நின்றார். "என்ன?" என்பது போல் அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

"போன மாதம் பெங்களூரிலிருந்து நீங்கவரவழைச்ச அந்த புது டீ ஸெட்டை நான் கை தவறிப்போட்டு உடைச்சுட்டேன். அவங்கள்ளாம் வந்ததைப் பார்த்ததும் என் மனசு குழம்பிப் போயிடுச்சு. அதுவும் அவர் அந்தக் காலத்திலே எனக்குக் கொடுத்த சிரமத்தை நினைச்சதும்—"

"எவர்?"

"அவர்தான்—வேதகிரி! அவர் தன் பேத்தி பேரனுடன் நம்ப ஹரி அய்யாவைப் பார்க்கக் காலையில்இங்கே வந்திருந்தார்."

வசுமதியின் நெஞ்சு படபடத்தது.

"டீ செட்தானே உடைந்து போச்சு. போனால் போகட்டும் நீங்க போய்ச் சாப்பிட்டுவிட்டு மத்த காரியத்தைக் கவனியுங்க."

'இப்போ என் மனசே உடைஞ்சு போச்சு. டீ செட்டு உடைஞ்சால் குடியா முழுகிவிடும்? கவலைப்படாதீங்க!' அவள் சொல்ல நினைத்ததை சேனாபதியால் புரிந்து கொள்ள முடிந்தது. வராந்தாவிலே வந்து நின்றவர் கண்களை மறைத்த கண்ணீரைத் துண்டால் துடைத்துக் கொண்டார்.

## 20

விளக்கு மெல்லியதாகப் படுக்கை அருகே எரிந்து கொண்டிருந்தது. வசுமதி சாய்ந்த வாக்கில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். கையில் பிரித்து வைத்துக்கொண்டி ருந்த புத்தகத்தை அவள் படிக்க முயன்றாள்—ஆனால் ஏடுகளிலிருந்த எழுத்துக்கள் நிலைபெயர்ந்து கூத்தாடிக் கொண்டிருந்தன. எத்தனை முயற்சித்தும் அன்றுகாலை பாலர் இல்லத்திலே அவள் காண நேர்ந்த காட்சி— தொடர்ந்து உள்ளத்திலே அலைமோதிக் கொண்டு எழுந்த பலநினைவுகள், ஒன்றையும் அவளால் உதறிவிட முடியவில்லை.

விழா துவங்கச் சிறிது நேரம் இருந்தது. அவளும் கனக துர்காவும் கட்டிடத்தின் பல பகுதிகளையும் பார் வையிட்டுக் கொண்டு சுற்றி வந்தனர். குளியலறை போன்ற பகுதியில் மூன்று வயதுச் சிறுவனொருவனைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள் இல்லத்து சேவகி. கட் டிடமே அதிரும் வண்ணம் அவன் ஓலமிட்டுக் கொண்டி



ருந்தான். "காலையில் வந்த கேஸ். கவனிப்பு குறைவு— உடம்பில் ஒரே அழுக்கு. தலையில் சிக்கு—அடம் பிடிக் கிறான்" சேவகி விளக்கம் தந்தாள். இடுப்பில் கையை வைத்துக்கொண்டு புன்னகைத்த வண்ணம் கனகதுர்கா அந்தக் காட்சியைச் சிறிது நேரம் நின்று அனுபவித்து விட்டு மேலே நகர்ந்தாள். ஆனால் கூடவந்த வசுமதிக்கு நினைப்பு எங்கேயோ ஓடிவிட்டது.

புனிதாவின் கடிதத்தையும் சேரவேண்டிய தொகை யையும் கொடுத்த பின்னர்கூட அந்தப் பெண்மணி சமா தானமடையவில்லை. என்னென்னவோ செலவுகளைச் சொல்லி பேரம் செய்தாள். முடிவில் இன்னும் ஒரு இரு நூறு ரூபாய்களைப் பெற்றுக் கொண்ட பின்னர்தான் குழந்தையை வசுமதியிடம் ஒப்படைத்தாள்.

குழந்தைக்கு அணிவிக்கப்பட்டிருந்த கிழிந்த சட்டை யில் ஒரே அழுக்கு. குளிப்பாட்டிப் பல தினங்கள் ஆகி விட்டது போன்ற தோற்றம். சிடுக்கும் சிக்கலுமாகி விட்ட தலைமுடியில் வியர்வை நாற்றம், கொள்ளைப் பேன்.

ஒரு சிலதினங்களில் அந்தக் குழந்தையின் தோற்றத் திலேதான் எத்தனை அருமையான மாறுதல்கள்!

ஆனால் தொடர்ந்து அந்தப் பெரிய ஹோட்டலில் குழந்தையுடன் தங்கியிருக்க அவளது பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை. குழந்தை ஹரியின் போஷணை அவனது கல்வி இரண்டிற்கும் பணம் தேவைப்பட்டது வேலை இல்லாமல் அவைகளை நிறைவேற்றுவதுமிகவும் சிரமம் என்று எண்ணி அவள் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினாள். அப்பொழுது ஏற்பட்ட ஒரு எண்ணம் மாமனாரின் விலாசத்தைத்தேடியெடுத்து துணிவுடன் அவருக்கு ஒரு கடிதம் எழுதித் தபாலில் போட்டு விட்டாள்.

சில தினங்களுக்குப் பின்னர் பதில் வந்தது.

" என்னைக் கேட்காமல்—அழைக்காமல் நடந்த திருமணம் என்றாலும் எனக்கு என் மருமகளையும் பேரனையும் பார்க்க ஆவலாக இருக்கிறது. உடனடியாக மேற்கண்ட முகவரிக்கு வரவும்."

கடிதத்தில் கண்ட கையெழுத்து மனிதன் மகா முரடன் என்று அச்சுறுத்தியது. குழந்தையைச்சிநேகிதியிடம் விட்டு விட்டு அவள் மட்டும் மாமனாரைச் சந்திக்கக் கிளம்பினாள்.

அந்த வீட்டின் முன்னறைக்குள் வந்துநின்ற வேதகிரி வியப்புடன் அவளை மேலும் கீழும் வெறித்துப் பார்த்தார். அவளும் அவரை அதுசமயம் கண்களால் அளந்தாள். அவருக்கு அப்போது நாற்பது வயதிற்குக் கொஞ்சம் கூடுதலாக இருக்கும். மார்பில் தொங்கிய மைனர் சங்கிலி—மல் ஜிப்பா—வெற்றிலையைக்குதப்பிய வாய்—பேராசை ததும்பிய கண்கள் அந்த வீட்டிலே அவர் ஒரு புல்லுருவி என்பதை வினாடியில் அவள் புரிந்து கொண்டு விட்டாள். அமிர்தலிங்கம் அழைத்ததைக் கேட்டு அவள் எழுந்து உள்ளே சென்றாள்

அது ஒரு விஸ்தாரமான அறை. நடுவிலே கிடந்த ரத்ன ஜமக்காளத்தின் மீது சோபாவை நிறைத்துக் கொண்டு அமிர்தலிங்கம் அமர்ந்திருந்தார். ராஜசேகரின் தந்தை என்று தமுக்கடித்தது முகச்சாயல். ஆனால் கண்களில் வழிந்த கடும் பார்வை வசுமதியைச் சற்று நடுங்கத்தான் செய்தது.

"நான் தனியாக என் மாமனாரிடம் பேச வந்திருக்கிறேன்" வசுமதி வெட்டிவிடுவதைப் போல் வேதகிரியைப் பார்த்தாள்.

"இந்த வீட்டில் எனக்குத் தெரியாத விஷயங்கள் ஒன்றும் கிடையாது. என்னிடம் எதுவும் ஒளிக்க வேண்டிய



தில்லை நீங்க தாராளமாக என்முன்னால் பேசலாம்." அதட்டிவிட்டு வேதகிரி விஷமப் புன்னகையுடன் பெரியவரைப் பார்த்தார். அதை ஆமோதிப்பதைப் போல்அவர் மௌனமாக அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மறுபடியும் ஒரு தடவை தொண்டையைக் கனைத்தார் அமிர்தலிங்கம். "குழந்தையொன்று இருப்பதாகக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தியே. இப்போ நீ மட்டும் தனியா வந்திருக்கியே? அவன் எங்கே...?" அதிகாரமாகக் கேட்டார்.

"எனக்குக் கிடைக்கும் வரவேற்பைத் தெரிஞ்சு கொண்டு பின்னாடி அழைத்து வருவதாக உத்தேசம்."

அவர் முகத்திலே வியப்புக் கலந்த கோபம். "ஏன் நிக்கறே? அந்த நாற்காலியில் உட்கார். மாமனாருக்கு அத்தனை மரியாதை தேவையில்லை..." உறுமினார்.

"அப்படிச் சொல்லுங்கோ, பேஷ்!" வேதகிரி கடகடவென்று சிரித்தார்.

"ஹார்ட் அட்டாக்கில் போய்விட்டான என்றுமுன்பு நீ போட்ட கடிதம் கிடைச்சது. அப்பா பிள்ளை என்ற உறவே முறிஞ்சு போன பிறகு அந்தச் சங்கதியைத் தெரிந்துகொள்வதுகூடத் தேவையான்னுதான் எனக்குப் பட்டது" அவர் மீசையை மறுபடியும் தடவிக் கொண்டார்

வசுமதி திடுக்கிட்டுப் போனாள். ராஜசேகரன் மீது தந்தைக்கு அத்தனை வன்மமா? தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும் என்பார்களே? மலைபோலப் பிள்ளையைப் பறி கொடுத்துவிட்டு மனிதன் நெஞ்சைப்பஞ்சால் துடைத்துக் கொண்டு பேசுகிறாரே? இப்படியும் ஒரு தந்தை இருப்பாரா?

அவளது எண்ணங்களைப் புரிந்து கொண்டவர் போல் அமிர்தலிங்கம் வறட்சியாகச் சிரித்தார்.

"ஈவு இரக்கமில்லாத பாவின்னுதானே யோசிக்கிறே? நீயும் ஒரு பிள்ளைக்குத் தாய்—நாளைக்கு நீயும் புரிஞ்சுக்குவே. தகப்பன், பிள்ளை, தாய், மகன் என்ற உறவுக்கெல்லாம் ஒரு வரம்பு இருக்கு. அதை மீறிவிட்டால் பிறகு அப்பனாவது பிள்ளையாவது—அம்மாவாவது—மகனாவது—அவ்வளவுதான். அவன் என் பேச்சைக் கேட்டிருந்தால் இப்படி வேறு ஒரு ஊரில் பஞ்சத்துக்கு அடிபட்டு—செத்து மடிந்திருக்க வேண்டாமில்லையா?"

"கடந்து போனதைப் பேசி பயன் என்ன? அவர் போய்விட்டார். இப்ப நீங்க சிந்திக்க வேண்டியது உங்கள் பேரனைப் பற்றித்தான்."

"பேரன்! அவன் எங்கிருந்து முளைச்சான்? பெற்ற பிள்ளையே எனக்கு உறவில்லைன்னு உதறிவிட்டபின் பேரனுக்கு என்ன சொந்தம் வச்சுகிடக்கு?" அவர் சீறினார்.

இடையே வேதகிரி குறுக்கிட்டுப் பேசினார். "முதல்லே, நீங்கதான் ராஜசேகரனின் மனைவி என்கிறதுக்கு ஆதாரமே தகராறாயிருக்கு அதுக்கப்புறம்தானே உங்க பிள்ளையைப் பத்திய விவகாரம்?"

வசுமதியால் தாளமுடியவில்லை. "ஐயா! நீங்க கொஞ்சம் சும்மா இருங்கோ. இது எங்க குடும்பத்துப் பிரச்சினை. உங்களுக்கு இங்கு சகல உரிமையும் இருக்கலாம். ஆனால் என் விஷயத்தில் தலையிட நான் ஒரு உரிமையும் உங்களுக்கு வழங்கவில்லை. ஞாபகமிருக்கட்டும்..." கோபத்தை அடக்கமாட்டாது காரமாகப் பேசிவிட்டாள்.



வேதகிரியின் முகம் சுண்டிப் போயிற்று. "இப்படியெல்லாம் ஓங்கிப் பேசிவிட்டால் பொய் உண்மையாகிவிடாது...மறக்காதீங்க..." சவால் விட்டார்.

"நீ பார்வைக்குப் புத்திசாலி போல தென்படறே. பேச்சும் நீ கெட்டிக்காரின்னு சொல்லுது. கொஞ்சம் சாமர்த்தியக்காரின்னும் ஊகிக்க முடியறது. அப்படியிருந்தும் என்னை நீ நல்லா புரிஞ்சுக்காமல் எந்தத் துணிவில் புறப்பட்டு வந்திருக்கிறே..."

வசுமதி திகைத்துப் போனாள். "நீங்க அழைச்சுக் கடிதம் போட்டீங்க. வந்தேன்..."

"உண்மை. அழைச்சேன். என் பிள்ளை ஒரு பெண்ணுக்காக என்னையும் அவள் தாயையும், இத்தனை சொத்தையும் உதறிவிட்டு வெளியே போனவன்... அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் வேறு ஒருத்தியை மணந்து கொண்டது எனக்கு வியப்பாகத் தானிருந்தது. எல்லோரையும் மறக்கச் செய்த அந்த மோகினி எப்படிப் பட்டவள்னு நேரே பார்க்கணும்னு ஒரு அற்ப ஆசை. அதுக்காகத்தான் வரச் சொன்னேன்" ஏளனமாக அவர் நகைத்தார்.

துடித்துக் கொண்டு அவள் எழுந்துவிட்டாள்.

"எனக்கு உங்கள் உதவியோ—பணமோ தேவையில்லை வசதியாக வாழ்கிறவரின் மகன் என்று எண்ணிக் கொண்டு உங்கள் பிள்ளையை நான் மணந்து கொள்ளவில்லை. வயதுகாலத்திலே பெற்ற மகனைப் பறிகொடுத்த துன்பத்திலே மனம் கரைந்து நீங்கள் மாறிவிட்டிருக்கலாம்—பேரனுக்காவது கடமைகளைச் செய்து மன அமைதியடையட்டும்னு நல்ல எண்ணத்தோடு உங்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கப் புறப்பட்டு வந்தேன். என்னதான் நீங்க நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டாலும், உங்க மனச்சாட்சி உங்களை

உறுத்துகிறதுன்னு எனக்குப் புரியுது. இல்லாட்டா இந்தப் படத்தை உங்கள் பார்வையில் படும்படி இந்த அறையில் ஏன் மாட்டிவச்சிருக்கிறீங்க?''

எதிர்ப்பக்கத்துச் சுவரை அலங்கரித்த ராஜசேகரின் புகைப் படத்தை அவள் சுட்டிக்காட்டினாள்.

பரபரப்புடன் அமிர்தலிங்கம் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

''இன்னமும் உங்கள் மகன் மேல் உங்களுக்கு வெறுப்புன்னா இந்த மாலையும் மரியாதையும் அந்தப் போட்டோவுக்கு எதுக்கு?...'' கோபமாகக் கேட்டுவிட்டுக் கையைக் குவித்து வணங்கிவிட்டுத் திரும்பினாள்.

கேட்டைத் திறந்து கொண்டு வெளியே சாலைக்கு வந்தாள். பின்னால் காலடி சப்தம். திரும்பிப் பார்த்தாள். மூச்சு இரைக்க வேதகிரி ஓடி வந்து கொண்டிருந்தார்.

''நில்லுங்கோ, ஒரு விஷயம்...'' கூவிக்கொண்டு அருகில் வந்தார்.

''உங்க நன்மைக்குச் சொல்கிறேன். பெரியவர் மகா பொல்லாதவர். அவரோட கதை தெரிஞ்சா பின்னால் கஷ்டப்படுவீங்க. உங்க கடிதமே உங்களுக்கு எதிரியாக இருப்பதை மறந்துட்டீங்க. குழந்தைக்கு மூணு வயசு முடிஞ்சுவிட்டதுன்னு அதில் குறிப்பிட்டிருந்தீங்க. ராஜசேகரன் வீட்டைவிட்டுப் போய் இரண்டரை வருடங்கள்தானாகிறது. அதற்குள் மூன்று வயதில் அவருக்கு எப்படி ஒரு குழந்தை இருக்க முடியும்? பெரியவர் நம்புவாரா?

திடுக்கிட்டுப் போனாள் வசுமதி. அவளையுமறியாத ஒரு சிறு தவறு. இப்போது சிக்கலாகிவிட்டதே?



ஆயினும் அவள் தன் பதட்டத்தை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

''உங்களுக்கு இதில் சம்பந்தமில்லை. அதனால் விளக்கம் தேவையில்லை.'' மனத்தில் தைக்கும்படி சொல்லிவிட்டு அவள் வேகமாக விரைந்தாள்.

மாமனாரிடம் உதவி கிடைக்காது என்ற விளங்கிய பின் அவள் சளைத்து விடவில்லை. தொடாந்து முயற்சி செய்தாள் சேலத்நில் தனியார் பள்ளியொன்றில் கணித ஆசிரியர் வேலை கிடைத்ததும் குழந்தையுடன் பயணமாகிவிட்டாள்.

இரண்டு வருஷங்கள் சென்றன. ஒருநாள் வேலையினின்று அவள் திரும்பி வரும்பொழுது அவளுக்கு ஒரு கடிதம் காத்துக் கொண்டிருந்தது. எங்கெங்கோ சுற்றி முடிவில் சரியான முகவரிக்குத் திருப்பி அனுப்பப்பட்ட அடையாளம் உறை மீது. பிரித்துப் படித்தாள்.

''கடந்த ஆறுமாத காலமாக நான் நோய்வாய்ப் பட்டுப் படுக்கையிலிருக்கிறேன். உன்னை மறுபடியும் பார்க்கவேண்டும், பலவும் பேசவேண்டும் என்ற ஆவல். குழந்தையைக் கையுடன் அழைத்து வா. சாகுமுன் என் பேரனை ஒரு முறையாவது தொட்டுப் பார்க்க உள்ளம் துடிக்கிறது. மற்றவை நேரில்—அமிர்தலிங்கம்.''

வெகுநேரம் அந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டு வசுமதி சிந்தித்தாள்.

## 21

அமிர்தலிங்கம் தமது மருமகளை வரவேற்க ஸ்டேஷனுக்குக் கார் அனுப்பியிருந்தார். ஆரோக்கியம் சொன்னதைச் செய்துவிட்டு மீதியைத் தனக்குள்ளேயே சிந்தித்துப் புரிந்து கொள்ளப் பயிற்சி பெற்றவன்.

இருக்கும் போலிருக்கு. ஹெல்த்தி ஃபெல்லோ. பள்ளிக் கூடத்திலே போட்டிருக்கிறீர்களா?'' தாத்தாவின் கண்கள் அப்பாவின் முகவாய். குடும்பத்துப் பரம்பரைச் சாயலைக் கூடவே கொண்டு வந்திருக்கிறான். அந்தப் பிடிவாதத்தைக் கொண்டு வராதிருந்தால் சரி...'' சிரித்துக் கொண்டே அவளை மீண்டும் பார்த்தார்.

குற்ற உணர்விலே வசுமதியின் நெஞ்சுபடபடத்தது. லேசாக வியர்வை அரும்பு கட்டியது. ஆனாலும் அவளுக்கு டார்டர் வாசுதேவனைப் பார்த்த அளவிலேயே பிடித்து விட்டது. நம்பிக்கைக்கு உகந்த மனிதர் என்ற மதிப்பும் உடனடியாக உள்ளத்திலே எழுந்தது. கை குவித்து வணங்கினாள். ''அவருக்கு இப்போ உடம்பு எப்படி இருக்கு?'' கவலையுடன் விசாரித்தாள்.

''இந்த வீட்டில் ஒன்றன்பின் ஒன்றாக பல துக்க நிகழ்ச்சிகள் ஏற்பட்டன என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கும். ஒரே பிள்ளை, மகன் மீது கொள்ளை ஆசை. ஒரு பெண்ணுக்காக எல்லாத்தையும் விட்டு விட்டுப் 'பிள்ளை வெளியேறியதும் மனிதர் ரொம்பத்தான் ஆடிப் போய்விட்டார். அடுத்தபடியாக மனைவியும் இறந்து போனதும் உற்சாகம் ஒடுங்கி நிலை குலைந்து போய் விட்டார். ஆனால் வெளியே காட்டிக் கொள்ளாமல் போலியான மிடுக்குடன் நடமாடிக் கொண்டிருந்தார். வெளியே சென்ற மகன் மாரடைப்பிலே மரணம் அடைந்துவிட்டதுக்கம் பெரிய இடியாகத்தாக்கிவிட்டது. கவனிப்புக் குறைவு, கெட்ட சகவாசம். துயரம் எல்லாம் ஆரோக்கியத்தைக் குடித்துவிட்டன. விவர் கெட்டு விட்டிருக்கிறது. நல்லவேளை, நீங்க இந்தச் சமயம் வந்து சேர்ந்தீங்க. தினமும் உங்கள் கடிதத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டுதான் இருந்தார்...இப்படி வாங்கோ...'' தன்னுடன் கூட அவளை அழைத்துக் கொண்டு அடுத்த அறைக்குள் சென்றார் வாசுதேவன்.

பேசிக் கொண்டே குழந்தையை மீண்டும் தன் அருகில் இழுத்துக் கொண்டார்.

சில நாட்களுக்குப்பின்னர் வெளியூரிலிருந்து திரும்பி வந்தார் வேதகிரி. முன்னறையில் தமது மார்போடு ஒரு சிறுவனை அணைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அமிர்தலிங்கத்தைக் கண்டு அவர் அதிர்ச்சியடைந்து போனார்.

சில தினங்களில் செத்துவிடுவார் போலிருந்த மனிதர் பிழைத்து எழுந்து உட்கார்ந்து கொண்டதுடன் யார் இந்தச் சிறுவன்? யோசித்து முடிக்குமுன் காலடிச் சப்தம் கேட்டது. காப்பி, பலகாரத்தை ஒரு மரத்தட்டில் ஏந்திக் கொண்டு உள்ளே வந்து நின்ற வசுமதியைக்கண்டதும் திடுக்கிட்டுப் போனார்.

'பாட்டனும் பேரனும் விளையாடியது போதும் முதல்லே சாப்பிடுங்கோ.'' அன்புடன் கடிந்துகொண்டு தட்டை டீப்பாய் மேல் வைத்துவிட்டுத் திரும்பியவளது கண்கள் அனலைக் கக்கின.

அதிகாரம் கைமாறி விட்டது என்பதை உணர்ந்து கொண்ட வேத்கிரியின் உற்சாகம் படுகுழியில் படுத்து விட்டது. மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று அவர் யோசித்து முடிவு எடுக்கக் கூட வசுமதி அவகாசம் அளிக்க வில்லை. அடுத்த நாளே பெரியவர் அவரைக் கூப்பிட்டனுப்பியிருந்தார். மோடா மீது கால்களை நீட்டிக்கொண்டு சோபாவில் உட்கார்ந்தார் அமிர்தலிங்கம். மௌனமாக வசுமதி நின்றபோதிலும் அவள் தான் விசையை அழுக்குகிறாள் என்றவரைக்கும் புரிந்து விட்டது.

"இத்தனை நாட்களும் கூட இருந்து உதவினதுக்கு ரொம்ப நன்றி. உனக்குச் சேர வேண்டிய தொகைக்கு ஒரு செக் இதில் வைத்திருக்கிறேன். ஆபீஸ் கணக்குகள் வீட்டு வரவு செலவுக் கணக்குகள் எல்லாத்தையும் குழப் ியிருக்கே. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க நான் விரும்பவில்லை. அதனாலே நீ பேசாம போய் விடுகிறது மேல்'' கொஞ்சம் சூடாகவே கிழவர் எச்சரித்துவிட்டார்.



தமது பதவிக்கு இப்படி ஒரு திடீர் மாற்றம் ஏற்படும் என்பதைக் கனவில்கூட நினைக்காத வேதகிரிக்கு மெத்த அதிர்ச்சி. இது வசுமதியின் வேலை. அவள் லேசுப்பட்டவள் இல்லை, தமது உண்மை நிலையும் அவருக்குத் தெளிவாகிவிட்டது. வேதகிரியின் வெளியேற்றம் சண்டை சச்சரவின்றி அமைதியாக நடந்துவிட்டது.

பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவர் கிளம்பிய போது கடைசியாக அவளைப் பார்த்த பார்வை! கண்களால் சாம்பலாக்க முடிந்திருந்தால் காரியத்தை அப்பொழுதே முடித்து வசுமதிக்கொரு சமாதி கட்டிவிட்டிருப்பார் அவர். அவருக்கு அவள்மீது அத்தனை வெறுப்பு.

இப்பொழுது அதைச் செயலாக்கத்தான் புறப்பட்டு வந்திருக்கிறாரா?...

வசுமதியின் வரவால் அமிர்தலிங்கத்தின் வாழ்க்கையில் ஒருபெரும் திருப்பம் ஏற்பட்டுவிட்டது. வேதகிரியின் தோழமையால் அவரைப் பற்றிக்கொண்டிருந்த கெட்ட பழக்கங்களை வைராக்கியமாக உதறிவிட்டார். அதனால் உடல் தேறத் தொடங்கியது, படுத்த படுக்கையாகிவிட்டிருந்த அவர் எழுந்து நடமாடினார். சில மாதங்களில் ஓரளவு குணமடைந்து வியாபாரத்தை முன்போல் உற்சாகத்துடன் தாமே கவனிக்கத் தொடங்கினார். இத்தனைக்கும் காரணமாக இருந்த மருமகள் மீது அவருக்கு அபார மதிப்பு. பெற்ற மகளைப் போன்ற பாசம். பேரன் மீது உயிர். ஐந்து வருஷங்கள் இவர்களிடையே இனிதாக ஓடி மறைந்தன.

மறுபடியும் அமிர்தலிங்கம் நோய்வாய்ப்பட்டுப் படுத்துவிட்டார். இந்த முறை தனக்கு முடிவு நெருங்கி விட்டதென்ற நினைப்பு அவருக்கு. தமது உயிலைப் புதுப்பித்து எழுதவேண்டி அவர், தமது குடும்பத்து வக்கீலைக் கலந்து ஆலோசிக்கத் தொடங்கினார்.

ஒருநாள் காலை. நோயாளிக்கு வேண்டிய உணவைத் தானே தயாரித்து எடுத்துக்கொண்டு வசுமதி அறைக்குள் சென்றாள். சில நாட்களாக அவர் உடல் மிகவும் நலிந்து கொண்டு வருவதைப் பற்றி அவளுக்கு உள்ளூர மனவேதனை. "அப்பா கஞ்சிகொண்டு வந்திருக்கி றேன். ஒரு வாயாவது சாப்பிடணும்" உபசரித்து அருகில் வந்து நின்றாள்.

கண்களைத் திறந்து பார்த்தார் கிழவர். அவர் முகத் திலே தெளிவானதொரு புன்னகை. "என் பேரன் பள்ளிக்கூடம் போகுமுன் பல உத்தரவுகள் போட்டு விட்டுப் போயிருக்கான். நான் நல்லாச் சாப்பிட்டுத் தெம்பு வரவழைத்துக் கொண்டு எழுந்து உட்காரணு மாம் இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே நல்லாகி அவ னோடு தோட்டத்தில் பந்து விளையாடணுமாம். குழந் தைக்கு என்மேல் எத்தனை ஆசை குணத்திலே அவன் அப்படியே உன்னைக் கொண்டு வந்திருக்கிறான். போகட்டும். ஒரு ஐந்து வருஷமாவது என் செல்வத்தின் மழலையைக் கேட்டு அனுபவிச்சேன். கடைசி காலத் திலே என் பேரனை என்கிட்ட கொண்டுவந்து சேர்த் துட்டே. அதுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டிருக் கேன் அம்மா" தழுதழுத்த குரலில் பேசினார்.

குற்ற உணர்வில் கண்கள் பனிக்க, நெஞ்சு பட படக்கக் குழப்பிப் போய் நின்றாள் வசுமதி, இன்னமும் அவரிடம் உண்மையைச் சொல்லாதிருப்பது தவறா யிற்றே! மனச்சாட்சி உறுத்தியது. "அப்பா, உங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லப் போகிறேன். இத்தனை நாளும்

அவர் கூறியதுபோல் கடமைகள் பலவற்றையும் நிறைவேற்றி, பாசத்தைக் கொட்டி வளர்த்து அவள் ஹரிக்குத் தாயாகி நின்றாள்

ஆனால் அவன் அவளைத் தாயாக இப்போது பாவித்தானா?

## 22

அன்று காலை வசுமதி வெளியே கிளம்பிக் கொண்டிருந்தாள். படுக்கையினின்று எழுந்திருக்கு முன்பே அவளுக்குத் தாங்க முடியாத தலைவலி. இரவு முழுவதும் உறங்காததன் விளைவு. முதல் நாள் மாலை ஹரி ஆபீஸில் அவளிடம் நடந்துகொண்ட முறை அவள் உள்ளத்தை வெகுவாக வருத்தி விட்டிருந்தது. எதை அவள் விரும்பவில்லையோ அதை ஹரி செய்து விட்டிருந்தான். இருவருக்குமிடையே ஏற்பட்டிருந்த மனத்தாங் கலை ஆபீஸ் வரைக்கும் எட்டவிடாது இதுவரை இரு வரும் காப்பாற்றி வந்தனர். வீட்டில் பேச்சுவார்த்தை யின்றி இருந்த அவர்கள் ஆபீஸில் பலர் முன்னிலையில் வியாபாரத்தைப் பற்றி சகஜமாகப் பேசிக்கொண்டனர் தங்கள் குடும்பத்து விஷயங்கள் என்று அவளுக்கு இது வரை ஒரு தனி மதிப்பு இருந்தது. அதையும் காற்றில் விட்டவன் போல் அவன் நடந்து கொண்ட முடிவு—அவளை அவமானத்தில் துடிக்கச் செய்தது.

முதல் நாள் மாலை அவள் ஆடிட்டரைச் சந்திக்கும் முன் கம்பெனி கணக்குகள் சிலவற்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். இடையே சில சந்தேகங்கள். தெளிந்து கொள்ள ஹரியைக் கூப்பிட்டு அனுப்பினாள். கதவைத் திறந்து கொண்டு கையில் பைல்களுடன் மானேஜர் மோகனசுந்தரம் வந்து நின்றான். "ஹரியைக் கூப்பிட்டு அனுப்பினேனே?" அழுத்தமாக அவள் கேட்டாள்.



"அவருக்கு வர நேரமில்லை வேண்டியதை எடுத்துச் சொல்ல என்னை அனுப்பியிருக்கிறார்" நரிப் பற்களைக் காட்டியபடி மானேஜர் புன்னகைத்தபோது வசுமதி குன்றிப் போய்விட்டாள். இந்த ஒரு விஷயம் அவனுக்குப் போதுமே? வசுமதிக்கும் அவள்பிள்ளைக்கும் மனத்தாங்கல் என்று ஊரே தெரியத் தண்டோரா போட்டுவிடுவானே?

ஹரிக்கு ஏன் இப்படிப்பட்ட விபரீத புத்தி? வீட்டிலே முகத்தில் அடித்து வார்த்தைகளால் சாடி அவளை வதைப்பது போதாதென்று இப்போது பலர் முன்னிலையில் அவமானப்படுத்தத் துணிந்துவிட்டானே?

இதையெல்லாம் அனுபவிக்க அவள் செய்துவிட்ட மாபெரும் தவறு?

"பைல்களை வைத்துவிட்டுப் போங்க—ஹரிக்கு ஒழியும் போது கேட்டுக் கொள்கிறேன்" உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அவள் உத்தரவிட்டாள். மானேஜர் கதவை மூடிக்கொண்டு வெளியேறினார். வாயைக் கையால் பொத்திக் கொண்டு அவன் சிரித்துக் கொண்டு செல்வது போன்ற ஒரு பிரமை. வெகுநேரம் சென்றும் நெஞ்சத்தின் படபடப்புக் குறையவில்லை. நெருப்பாக உடல் முழுவதும் பரவித் தகித்த அவமான உணர்வும் அடங்கவில்லை. இரவு பலவற்றை எண்ணித் தமக்குள் குமைந்துகொண்டு அவள் உறங்கவேயில்லை.

உள்ளே வந்த சேனாபதி தண்ணீர் டம்ளரை முக்காலிமீது வைத்துவிட்டு தயங்கிக் கொண்டுநின்றார். டப்பியைத் திறந்து இரண்டு மாத்திரைகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு அவள் தண்ணீரைக் கொஞ்சம் குடித்தாள்.

சில நாட்களாக அவர் சொல்ல விரும்பியதைத் துணிவுடன் அன்று சொல்லி விட்டார். "இப்போதெல்லாம் தலைவலி மாத்திரைகளை ரொம்பச் சாப்பிடுறீங்க. நல்லதில்லை. டாக்டர் ஐயாவைக் கூப்பிட்டு உடம்பைக் கொஞ்சம் கவனிச்சுக்கணும்..."

முந்திய நாட்களில் அவர் இப்படிப் பேசியிருந்தால் அவள் கண்களாலேயே அவரை வெட்டிவிட்டிருப்பாள். மேல் துண்டைக் கையில் முறுக்கிக் கொண்டு கவலையோடு நின்ற அந்தக் கிழவரின் முகம் அவள் நெஞ்சை நெகிழ்த்தியது.

பாவம். அவருக்குத்தான் அவளைப்பற்றி எத்தனை அக்கறை!

"இன்றைக்கு நான் திரும்புமுன் வாசுதேவனைப் பார்த்துவிட்டு வருகிறேன். கவலைப்படாதீங்க..." வரட்சியாக சிரித்துக் கொண்டு புறப்பட்டாள்.

முன்னறைக்குள் நுழைந்ததும் ஞாபகத்திற்கு வந்தது. ஆபீஸ் வக்கீலிடம் பேச வேண்டிய விஷயம் ஒன்று இருந்தது. அவசரமாக அங்கிருந்த டெலிபோனை கையில் எடுத்தாள். மாடியில் ஹரி யாருடனோ பேசிக் கொண்டிருப்பது போனில் கேட்டது காதைக் கிழித்து விடும் போன்று உரத்து மறுபுறத்திலிருந்தவன் பேசினான். கேட்டுத் திடுக்கிட்டு ரிசீவரைக் கையில் எடுத்தபடி அவள் நின்றுவிட்டாள்.

"நீ இதுக்கெல்லாம் தளர்ந்து போகக் கூடாது. சாம தான பேத தண்டம் என்று எல்லா முறைகளையும் ஒரு கை பார்க்க வேண்டியதுதான். எனக்கு முகவரி தெரிஞ்சா இத்தனை நாழி நானே உன்னை அழைச்சிட்டுப் போயிருப்பேனே? அவங்க பேர்—ஊர்—என்ன செய்து கொண்டிருக்காங்கன்னு விவரம் ஒண்ணுமே எனக்குத் தெரியாதே. இதைப் புரிந்து கொண்டுதான் வசுமதியம்மா உன்னை அப்படி ஆட்டி வைக்கிறாங்க..."



"பார்க்கலாம்—யார் ஜெயிக்கிறாங்கன்னு?"—ஹரியின் குரல் சீறியது. அடுத்த கணம் கிளிங்கென்று ரிஸீவரை ஸ்டாண்டின் மேல் வைக்கும் சத்தம் தொடர்ந்து கேட்டது. உறைந்துபோய் நின்ற வசுமதியின் உணர்வுகள் தெளியச் சில வினாடிகள் பிடித்தன.

போனை வைத்துவிட்டு மெல்ல அவள் வாயிலுக்கு வந்தாள். காரில் ஏறி அமர்ந்து கொண்டு முகத்தைத் துடைத்துக் கொண்டாள். மூச்சே நின்றுவிடும் போல உள்ளத்திலே ஒரு திகில். எதிரே வந்த வாகனங்கள் மோதிவிடும் போன்ற ஒரு மருட்சி. இடையே பார்வைக்குத் திரை கட்டிய கண்ணீர். நெஞ்சைப் பிளந்த வேதனை. எப்படியோ காரை விரைவாகச் செலுத்திக் கொண்டு பூந்தமல்லி நெடுஞ்சாலைப் பக்கம் திருப்பினாள் கார் பங்களா துருவாவின் நடைபாதை மீது விரைவாக ஓடிப் போர்டிகோ முன்னால் வண்டி நின்றது வசுமதி கீழே இறங்கினாள். பங்களாவின் பின் பகுதியில் டாக்டர் வாசுதேவன் வசித்துக் கொண்டிருந்தார். முன் பகுதியில் தான் அவரது கிளினிக் இருந்தது. வரவேற்பறையிலிருந்த நர்ஸ் அவளை ஆசனத்தில் அமரச் சொல்லி உபசரித்தாள். அதுசமயம் வந்த வாசுதேவனுக்கு மிக்க வியப்பு.

"என்னம்மா இங்கே..." அவர் முடிக்கவில்லை.

"சில நாட்களாக உடம்பு சரியாகவேயில்லை. கம்பெனிக்குப் போகுமுன் கொஞ்சம் கவனித்துக் கொண்டு போகலாமென்று வந்தேன்." அவள் பரபரப்பாக எழுந்து நின்றாள்.

"போன் பண்ணியிருக்கலாம். நானே வீட்டுக்கு வந்திருப்பேன்—இப்படி வாருங்கள்." அவர் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். சிறிது நேரம் கவனமாக உடல் நிலையைப் பரிசோதித்து விட்டு அவர் மெல்ல முடிவில் சிரித்தார்.

''பிரஷர்கூட அப்படி அதிகமில்லை—பத்தியமாகத் தானே சாப்பிடுகிறீங்க—நல்லா தூங்குகிறீர்களா?—முன்னமேதான் சொன்னேனே — இந்த வியாபாரம் வீட்டுத் தொல்லை எல்லாவற்றையும் பிள்ளை கையிலே ஒப்படைத்துவிட்டு...'' சிரித்துக்கொண்டே அவர் வாஷ் பேஸினில் கையைக் கழுவிக் கொண்டு திரும்பினார். திடுக்கிட்டுப் போனார்.

நிற்க முடியாது அருகில் இருந்த ஆசனமொன்றில் உட்கார்ந்துவிட்ட வசுமதி கைகளால் முகத்தை மூடிக் கொண்டு உடல் குலுங்க விம்மி அழுது கொண்டிருந்தாள்.

'அம்மா! என்ன இது! உங்க மனசிலே ஏதோ பெரிய குழப்பம் இருக்காப்பல இருக்கு' பதறிக்கொண்டு அருகில் வந்தார். இதுவரை அவளை அத்தகைய ஒரு துயர நிலையில் அவர் கண்டதேயில்லை அவருக்கு ஆச்சரியம்! கேட்டுக் கொள்ளவில்லை.

கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள் வசுமதி. அவளுக்கு அவள் செய்கை சிறிது வெட்கமாகத்தானிருந்தது ''கொஞ்ச நாளா மனசுதான் சரியில்லை டாக்டர். உங்ககிட்ட ஒரு யோசனை கேட்கத்தான் நேரே ஓடி வந்தேன்'' என்றாள் தயக்கத்துடன்.

இரு கைகளையும் கட்டிக்கொண்டு எதிரே வந்து நின்றார் வாசுதேவன்.

'விஷயத்தை நான் தெரிஞ்சுக்கலாமில்லையா?'' புன்னகைத்தபடி கனிவோடு அவளைப் பார்த்தார்.

''என் மாமனார் காலத்திலிருந்து உங்களுக்கு எங்க குடும்பத்தோடு நெருக்கமான பழக்கம். உங்களைக் குடும்ப டாக்டர் என்பதைவிட எங்கள் நண்பர் என்கிற நெருக்கம் அதிகம். அதனால் தான் தக்க ஆலோசனை



சொல்வீங்கன்னு உங்களைத் தேடி வந்தேன். ஹரியைக் குழந்தையிலிருந்து உங்களுக்குத் தெரியும்...'' பேச முடியாது வார்த்தைகளை விழுங்கிக்கொண்டு துக்கத்துடன் இணறினாள். கண்களில் நீர் ததும்பியது.

''என்னம்மா நடந்தது? விஷயத்தை மறைக்காம சொல்லுங்க...ப்ளீஸ்...' அன்புடன் கேட்டார்.

''வைத்தியர்கிட்ட உண்மையை மறைக்கக்கூடாதுன்னு அன்னிக்குக் கேலியாச் சொன்னீங்க. நினைப்பிருக்கா? உங்ககிட்ட அன்னிக்கு நான் உண்மையைச் சொல்லலை...'

''அப்படி அது என்ன விஷயம்?''

''ஹரி வெளிநாட்டிலிருந்து வந்ததிலிருந்து என்னுடன் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. எங்களுக்குள் மனத்தாங்கல். ஒரே வீட்டில் விரோதிகளாக வாழ்கிறோம். எங்களுக்குள் பெரிய சண்டை. அதிலே ஏற்பட்ட குழப்பத்திலேதான் மயங்கி விழுந்து மண்டையைக் காயப்படுத்திக் கொண்டுவிட்டேன். உசிரையே வச்சு வளர்த்த பிள்ளை இப்படி மாறிவிட்டானேங்கிற அதிர்ச்சியை என்னால் ஏற்க முடியலை... நிலைமை இப்படியே நீடித்துக் கொண்டு போனால் என் மனசு வெடித்து...'' பேச முடியாது விம்மினாள் அவள்.

''சே! சே! நீங்ககூடவா இப்படி கோழையாகிப் போய்விடுவீங்க. என்னால் ஒப்புக்கொள்ள முடியாத சங்கதி... ஹரிக்கு மனத்தாங்கல் ஏற்படக் காரணம்?''

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வசுமதி மௌனமாகத் தரையைப் பார்த்தாள். பின்னர் தயக்கத்துடன் மெல்லிய குரலில் சொன்னாள். ''ஹரி என்னுடைய பிள்ளை இல்லை டாக்டர்!...''

சொல்லி முடிப்பதற்குள் துக்கம் தொண்டையை அடைத்தது. மேஜைக்குப் பின்னால் இருந்த தமது

ஆசனத்தை அணுகி அமர்ந்து கொண்டார் வாசுதேவன் தொண்டையைக் கனைத்துக்கொண்டு அவளைப் பரிவுடன் பார்த்தார்

"எனக்கு ரொம்ப நாளைக்கு முன்பே தெரியுமே?" என்றார்.

வசுமதிக்குத் தாங்க முடியாத வியப்பு.

"எப்படித் தெரியும்?"

"உங்கள் மாமனார்தான் சொன்னார்."

"அப்படியென்றால் உங்களுக்கு அவனுடைய தாயின் முகவரி, மற்ற விவரங்கள் எல்லாம் தெரியுமா?" அவசரத்தில் அவள் நெஞ்சு வேகமாகத் துடித்தது.

"உங்களைப்பற்றிப் பெருமையாகப் பேசியபொழுது உங்கள் மாமனார் உணர்ச்சி வசப்பட்டு இந்த உண்மையை என்னிடம் சொன்னார். ஆனால் ஹரியின் தாயார் யார்—பெயர் என்ன, எங்கிருக்கிறார்கள் என்ற மற்ற விவரங்களையெல்லாம் அவர் சொல்லவில்லை. அதனால் என்ன அம்மா? எங்கள் கண்களுக்கும் உலகத்தின் பார்வைக்கும் நீங்கள்தான் அவன் தாய்."

"ஹரி அப்படி நினைக்கவில்லை. தவறாக என்னைப் புரிந்து கொண்டிருக்கிறான். இந்த சொத்து சுகத்திற்கு ஆசைப்பட்டு அவனை மோசம் செய்யத் தாய் வேஷம் தாங்கிக் கொண்டிருப்பதாக என்னை வெறுக்கிறான். தன்னுடைய தாயைப் பார்க்கணும்னு என்னை ரொம்பவும் வதைக்கிறான். இந்த ரகசியத்தை வெளியே சொல்வதில்லையென்று நான் அவர்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். இந்தச் சிக்கலைத் தவிர்க்க நீங்கதான் வழி சொல்லணும்..."

"ஆமாம், இது அவனுக்கு எப்படித் தெரியும்?"



"என் மாமனார் உறவினரான வேதகிரியை உங்களுக்கும் ஏற்கனவே தெரியுமே—அமெரிக்காவில் ஹரி அவரைச் சந்தித்தான். அவர் மறுபடியும் எங்கள் குடும்பத்திலே புகுந்து குழப்புகிறார்... ஆனால் அவருக்கும் அவன் தாய் யார் என்று தெரியாது..."

வாசுதேவன் தாடையைத் தடவிக்கொண்டு யோசித்தார். "இது பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டிய பிரச்சினை. அதனாலே சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு மனமொடிந்து போகாமல் நீங்க தைரியமாக இருக்க முயற்சி பண்ணணும். யோசித்துப் பதில் சொல்ல எனக்குக் கொஞ்சம் அவகாசம் தேவை. இப்போ உங்களுக்கு ஒரு இஞ்செக்ஷன் தேவை—நான் கொடுக்கப் போகிறேன்—நேரே நீங்க வீட்டிற்குப் போய் ஓய்வாகப் படுத்துக் கொள்ள வேணும்—அது தான் இப்ப நான் சொல்லப் போகிற ஆலோசனை..." எழுந்திருந்து அவர் அடுத்த அறைக்குச் சென்றார்.

சிறிதுநேரம் சென்றதும் விடை பெற்றுக்கொண்டு அவள் கிளம்பினாள். அமைதி பெற்று மனம் சிறிது லேசாகிவிட்டது போன்ற ஒரு பிரமை. ஆனால் அந்த அமைதியை விதி நீண்டநேரம் விட்டு வைக்கவில்லை. போர்டிகோவிற்குள் ஓசையிடாது ஊர்ந்து ஓடிவந்து நின்றது ஒரு வெள்ளை நிற பென்ஸ். டிரைவர் இறங்கி மிகவும் பணிவுடன் காரின் பின் கதவைத் திறந்துவிட்டு நின்றான், முனகிக் கொண்டு பலத்த இருமலுடன் தவித்துத் தள்ளாடிக்கொண்டு மெல்லக் காரினின்று ஒரு கிழவி இறங்கினாள்.

"டாக்டர் கொடுத்த மருந்தைச் சாப்பிட்டாத்தானே இருமல் நிற்கும்? பெரிய தொண தொணப்பு. எல்லாத்துக்கும் கூடவே நான் வரணும்னா எப்படி முடியும்?..." கடுமையாக அதட்டிய குரலை எங்கேயோ கேட்ட நினைவு. வசுமதி திரும்பினாள்.

காதுகளிலும் கழுத்திலும் வைரங்கள். பட்டுப் புடவை சரசரக்க வண்டியை விட்டு இறங்கி நடந்த அவளைக் கண்டு வசுமதி அதிர்ச்சியடைந்து போனாள். அவளது உடலும் உள்ளமும் ஒருங்கே நடுங்கின. நெஞ்சை என்னவோ அடைத்தது...இரண்டாவது முறையாகப் புனிதாவுடன் எதிர்பாராது ஏற்படும் இந்தச் சந்திப்பின் உட்பொருள்?

## 23

ஒரு சில தினங்களுக்குப் பின்னர் ஒரு மாலை. பிற்பகல் தம்மைத் தேடிவரும் நோயாளிகளைக் கவனிக்கும் நிமித்தம் டாக்டர் வாசுதேவன் உள்ளேயிருந்து வந்தார். வழக்கம் போல் வரவேற்பறையிலிருந்த கூட்டத்தை கண்களால் ஆராய்ந்த வண்ணம் தமது அறைக்குள் சென்று உட்கார்ந்து கொண்டார். திடீரென்று அவரது மனத்திற்குள் ஒரு கேள்வி. ஜன்னல் ஓரமாகக் கிடந்த பிரம்பு நாற்காலியை அடைத்துக் கொண்டிருந்த மல் ஜிப்பா ஆசாமியை எங்கேயோ பார்த்த நினைவு. எங்கே? மண்டையைக் குடைந்த அந்தக் கேள்வியை ஒதுக்கிவிட்டு அவர் தமது வேலையில் ஈடுபட்டார். நர்ஸ் பெயரிட்டு அழைத்து வரிசையாக நோயாளிகளைக் கூப்பிட்டு அவரது பார்வைக்கு அனுப்பிக் கொண்டிருந்தாள். நேரம் வேகமாக நழுவிக் கொண்டிருந்தது. பொழுது அமரும் வேளை. அவள் குழல் விளக்குகளைப் பொருத்தினாள். கையைக் கழுவிக் கொண்டு உட்கார்ந்தார் வாசுதேவன். தொழிலின்மீது அவருக்கு மட்டற்ற உற்சாகம். ஆனால் வயதிற்கு வலு குறைந்துவிட்டிருந்தது. இன்று அவர் மிகவும் களைத்து விட்டிருந்தார். மேஜை மீதிருந்த கண்ணாடி கூஜாவினின்று சிறிது குளிர்ந்த நீரை டம்ளரில் ஊற்றிக் குடித்து விட்டுப் பெருமூச்செறிந்தார். கண்களை மூடிக்கொண்ட



படி சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டார், சில தினங்களாக அவர் மனத்தை உறுத்திக் கொண்டிருந்த அந்தப் பிரச்சினை அவர் உடலைத் தளரச் செய்து விட்டிருந்தது போன்ற ஒரு திகைப்பு. மென்மையாக ஒலித்தது காலடிச் சப்தம். தொடர்ந்து பணிப் பெண்ணின் மெல்லிய குரல் அவரைத் தட்டி எழுப்பியது

''இன்னும் சில கேஸ்கள் தான் பாக்கி. அதில் ஒரு மல் ஜிப்பாக்காரர் ரொம்ப அவசரப்படுகிறார்.''

''அவரை முதலில் உள்ளே அனுப்பு பார்க்கலாம்'' வாசுதேவன் உத்தரவிட்டார். நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

கதவை மெல்லத் திறந்து கொண்டு மல் ஜிப்பா உள்ளே வந்தார். அவரைத் தொடர்ந்து ஒரு பதினெட்டு வயது பருவக் குமரியும் உள்ளே வந்து நின்றாள். 'டாக்டர் சுவாமிகளே! தெரிகிறதா என்னை?'' வெற்றிலைக் காவி மண்டிய பொக்கை வாயைப் பிளந்து இளித்தார் வந்தவர்.

மிகவும் வேண்டியவர்கள் தவிர நோயாளிகளின் நெருக்கமான உறவை வாசுதேவன் விரும்பியவர் அல்ல. எனவே முகத்தைச் சிறிது சுளித்தார். புருவங்களை உயர்த்தியபடி யோசனையுடன் மல் ஜிப்பாவை வெறித்தார். திடீரென்று ஞாபகம் பளிச்சிட்டது. அந்த வளைந்த மூக்கு, ஜிப்பாவுக்குள் மின்னிய மைனர்செயின். வசுமதி சில தினங்களுக்கு முன் சொன்னவை எல்லாம் தொடர்ந்து ஒன்று சேர அவர் ஊகித்துக் கொண்டு விட்டார்.

''யாரது...மிஸ்டர் வேதகிரியா?...உட்காருங்கள்' என்றார் மிடுக்காக.

''பரவாயில்லை. பேஷ்! இத்தனை வருஷங்களுக்குப் பின்னர் கண்டுபிடித்து விட்டீர்களே. நீங்கள் கெட்டிக் காரர்தான்... ஹி...ஹி.''

வாசுதேவனின் கூரிய கண்கள் கிழவருக்குப்பின்னால் நின்ற அந்தப் பெண்ணை அளந்து கொண்டிருந்தன. வெள்ளை நிற ஸ்லாக் ஸூட்டில் ஒடிய உயரமாக நின்ற அந்தப் பெண் பார்க்க அழகாகத்தான் இருந்தாள் செழுமையான தோற்றம், பரபரத்த கண்கள். நுனியில்சிறிது வளைந்த மூக்கு—முதல் பார்வைக்குக் கவர்ச்சிகரமான தோற்றம்—தொடர்ந்து நோக்கும்போது என்னவோ குறை என்ன அது?

"என் பேத்தி ராதிகா. இவளைக் காட்டத்தான் அழைச்சிட்டு வந்தேன். உங்க கைராசிதான் ரொம்பப் பிரசித்தியாயிற்றே...ஹி...ஹி."

"இப்படி உட்கார்." டாக்டர் அந்தப் பெண்ணிற்கு உத்தரவு போட்டார்.

"என் பிள்ளை அமெரிக்காவில் வேலை செய்கிறான். அவனுடன்தான் எனக்குக்கொஞ்ச வருஷங்களாக வாசம். உங்க ஞாபகம் வந்தது. உங்களைப் பார்த்துட்டு அப்படியே குழந்தைக்கு வந்திருக்கும் கம்ப்ளெயின்டையும் காட்டிட்டு" மறுபடியும் இளித்தபடி அவர் கையில் கொண்டு வந்த சிறு பிஸ்கட் டப்பாவை மேஜை மீது வைத்தார்.

"இதெல்லாம் என்னத்துக்கு?" டாக்டர் மறுத்துக் கூறியதை அவர் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"சாப்பிட்டுப் பாரும் இங்கேயும் நம்மூரிலும் செய்கிறான்களே பிஸ்கட்...மரத்தூளைத் திங்கிறாப்போல இருக்கு. குழந்தைக்கு இங்கே ஒண்ணும் பிடிக்கலை. இந்த வெய்யில் புழுக்கம்..."

அவர் முடிக்குமுன் பேத்தி துணிவுடன்குறுக்கிட்டாள் "டாக்டர்! இங்கே தெருக்களை ரொம்ப டர்டியா வச்சி



ருக்காங்க. எனக்கு இந்தக் குப்பைகளைக் கண்டால் வாந்தி வருகிறது .." சிணுங்கினாள்.

"அது யாருக்குமே பிடிக்காத விஷயமாச்சே. அதனால்தான் அதற்குக் குப்பைன்னு பேர். போகட்டும் விட்டுத் தள்ளு. தெருவைச் சுத்தமாக வைத்துக் கொள்வது இங்கே வாழ்கிறவர்களின் பிரசினை. உனக்கேன் கவலை? கொஞ்ச நாள் கழித்து நீ மறுபடி அமெரிக்கா கிளம்பிவிடப் போகிறாய்" சூடான குரலில் சொன்னார்.

வேதகிரி உரத்துச் சிரித்தார். "அங்கேதானே பிரச்சினையே ஆரம்பிக்கிறது? உங்ககிட்ட சொல்வதிலே ஆட்சேபணை இல்லை. நம்மவிஜயா எலக்ட்ரிகல்ஸ் அமிர்தலிங்கம் இருந்தாரே அவர் பேரன் ஹரி...நீங்க கூட இன்னமும் அவர் வீட்டு டாக்டர்னு கேள்வி—அந்தப் பையனுக்குப் பேத்தியைக் கொடுப்பதாக முடிவு செஞ்சிருந்தோம். சிறுசுகள் ரெண்டுக்குமே கொஞ்சம் ஒரு இது— ஆனால் எனக்கு மட்டும் லேசா சிறிது கவலை. குழந்தைக்கு இங்கே இருக்கவே பிடிக்கலை..."

"அமெரிக்காவிலே பிறந்த குழந்தையா?..."

"இல்லே இங்கேதான் பிறந்தவள். பத்து வருஷத்துக்கு மேலே அங்கேயே தங்கிவிட்டாள். லண்டனில் ஏ லெவல் வரை படிச்சுவிட்டு இப்போ ஸோஷல் சயன்ஸ் பண்ணிக் கொண்டிருக்கு. அங்கெல்லாம் இருந்துட்டு இங்கே வந்ததும் பிடிக்கலை. ஹி...ஹி..."

"பணம் பதவிக்கு ஆசைப்பட்டுக் கொண்டு குழந்தையைக் குப்பையில் தள்ளப் பார்க்கிறீர்களே?" வேண்டுமென்றே கேட்டுக் கொண்டு வாசுதேவன் எழுந்தார் "எங்கேம்மா இப்படி வா. உன் உடம்புக்கு என்ன?" தொழில்முறை தோரணையில் பேசினார்.

வேதகிரிக்கு முகத்தில் அடித்தாற் போலிருந்தது அந்தப் பதில். எனினும் வாயை மூடிக்கொண்டிருக்க முடியவில்லை.

வாசுதேவன் ராதிகாவைப் பரிசோதித்துவிட்டு வெளியே வந்தார் கைகளைக் கழுவிக்கொண்டு துண்டால் துடைத்தபடி வேதகிரியைப் பார்த்தார்.

''உடம்புக்கு ஒண்ணுமில்லையே, ஆரோக்கியமாக இருக்கிறாளே?''

''குழந்தை! கைகளைக் காட்டவில்லையா? முன்னங் கையில் சிகப்பா என்னவோ கொட்டியிருக்கிறதே?''

வாசுதேவன் சிரிப்பை விழுங்கிக் கொண்டார். ''அமெரிக்கா போனதும் உங்களுக்கு உள்ளூர் கொசுக்களைக்கூட மறந்து போச்சு. அது கொசுக் கடியில் ஏற்பட்டது. அவ்வளவுதான். மருந்து தேவையில்லை, மவுண்ட்ரோட்டில் ஸிந்திக்காரர் கடையில் கொசுவலைகள் கிடைக்கும். வாங்கிக்கோங்க, இல்லாட்டி ராத்திரி முழுவதும் ஃபானை சுத்த விடுங்கோ...''

வேதகிரியின் முகம் சிறுத்துப் போயிற்று. வயது ஆகியும் மனிதனுக்கு அந்தக் காலத்து மிடுக்கும் தோரணையும் திமிரும் கடுகளவும் குறையவில்லையே என்று வாசுதேவனைப் பற்றி உள்ளூரக் கொதிப்பு. ஆனாலும் வந்த காரியத்தை அவர் மறக்க விரும்பவில்லை.

''நான் என்னவோ ஸ்கின் அலர்ஜின்னு நினைச்சேன்...''

வாசுதேவன் அவரை வெட்டிவிடுவது போல் முறைத்தார். 'எனக்கு நீர், வைத்தியம் சொல்லிக் கொடுக்கிறீரா?' அவரது கண்கள் கனலாகப் பேசின.

எக்கச்சக்கமான மனிதன் இவனிடம் எப்படிக் கேட்பது? ஒருகணம் வேதகிரிக்கு உள்ளூரக் கலக்கம், எனினும்பிடிவாதம். சாம தான பேத தண்ட முறைகளை கையாளப் புறப்பட்டிருந்த வேகம் முன்னே தள்ளியது.



அதற்குள் பரிசோதனை அறையினின்று வெளிப்பட்டு அங்கு வந்தாள் ராதிகா.

''நீ கொஞ்சம் வெளியே போய் உட்கார்ந்துக்கோ. நான் இவர் கிட்ட ஒரு சங்கதி பேசணும்.'' பேத்தியை மெல்ல எச்சரித்தார் வேதகிரி.

''உங்களுக்கு வேலையில்லை தாத்தா. இங்க வந்து உட்கார்ந்திட்டீங்க. நான் இன்னும் ஷாப்பிங்கை முடிக்கவேயில்லை.'' கோபத்தில் சிவந்த முகத்துடன் அவள் சிணுங்கிக் கொண்டு வெளியே சென்றாள்.

'ஊஹும். வசுமதியம்மாவின் பொறுமைக்கும் இந்தப் பொண்ணுக்கும் ஒத்து வராது போலிருக்கே.' வாசுதேவன் உள்ளம் கணக்குப் போட்டது.

''டாக்டர் ஸார். உங்களைத்தான் நான் பூரணமாக நம்பிக்கொண்டு வந்திருக்கிறேன். நீங்க பெரிய மனசு பண்ணி ஒத்தாசை செய்யணும், கல்யாணங்கறது ஆயிரங்காலத்துப் பயிர். அதனாலே...'

வாசுதேவனின் புருவங்கள் வியப்பில் நெற்றிமீது உயர்ந்தன.

''பேத்தியை ஹரிக்குக் கொடுத்து விடுகிறதுன்னு தீர்மானம். ஆனால் பாருங்கள். அதில் ஒரு சிக்கல். என்னதான் அமெரிக்கா போய் வசிச்சாலும் நம்ம பழக்க வழக்கம் பண்பாடு இவைகளைச் சுலபமாக மாத்திக்க முடியவில்லை. எனக்குச் சாதிப்பற்று ரொம்ப அதிகம்.'

டாக்டர் வாசுதேவன் வேண்டுமென்றே சொன்னார்.

''ஹரி விஷயத்திலே இந்தச் சிக்கல் இல்லையே. நீங்க ஓரளவுக்கு அவங்களுக்கு உறவுக்காரராச்சே?''

வேதகிரி நிமிர்ந்து உட்கார்ந்தார். ரகசியம் பேசும் பாவனையில் இன்னும் சிறிது நெருக்கமாகத் தலையை நீட்டிக் கொண்டு தாழ்ந்த குரலில் சொன்னார்.

"உண்மையாகவே உங்களுக்குத் தெரியாதா? ஹரி வசுமதியம்மாளின் பிள்ளையில்லை. காசு பணத்தைக் கையில் போட்டுக் கொள்ள எங்கிருந்தோ ஒரு குழந்தையைப் பிடிச்சுக்கொண்டு வந்துவிட்டாங்க எனக்கு இதைப் பத்தி ரொம்ப நாளாகச் சந்தேகம்.''

வாசுதேவன் முகத்தில் ஆச்சரிய பாவம். "அப்படியா? அப்ப நீங்க வசுமதி அம்மாளிடமே நேரிடையாக இதைப் பத்திக் கேட்டுத் தீர்மானிப்பது நல்லதாச்சே?''

'ஐய்யோ! அந்த அம்மாள் மகா பொல்லாதவள். மகனுக்கே உண்மையைச் சொல்ல மறுக்கிறாங்க. உங்ககிட்ட அவங்களுக்கு ரொம்ப மதிப்புண்டு. உண்மையை ஒரு சமயம் நீங்க கேட்டா சொல்லிடுவாங்க. அதனால்...''

"அதனாலே நான் விசாரித்துச் சொல்லனுமா? என் தொழிலையே மாத்துறீங்களே. என்னைக் கல்யாணத் தரகராக்க முடிவு பண்ணிட்டீங்க...இல்லையா? இது என்ன யோசனை. கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கிற கதை. எங்களைப் பொறுத்தவரை ஹரி வசுமதி அம்மாளின் பிள்ளை. அவ்வளவுதான். இப்போ நீங்க ஏன் நதி மூலத்தைத் தேடிக் கொண்டு அலைகிறீங்க. ஒரு சமயம் உண்மை உங்களுக்குக் கேட்கப் பிடிக்காதபடி இருந்துவிட்டால்...'' வாசுதேவன் கடுமையாக வெறித்தார்.

"ஒத்துவராத இடம் என்றால் என் பேத்தியைக் கொடுக்க முடியாது. ஒரு சாக்கடையிலிருந்து இந்தப் பிள்ளையைத் தூக்கிட்டு வந்திருந்தால் நானும் அதுக்காகச் சாக்கடையில் விழுந்துவிடுவேனா?'' வேதகிரி தலையைப் பலமாக அசைத்தார்.



"அப்போ சின்னஞ்சிறுசுகளுக்குள் ஒரு இதுன்னு சொன்னீங்களே அதன் கதி?''

"காதலாவது கத்திரிக்காயாவது? எனக்கு பாக்…ரவுண்ட் முக்கியம்.''

"மிஸ்டர் வேதகிரி, என்னிடம் கேட்டதுபோல இந்த விஷயத்தை வேறு யார்கிட்டேயும் கேட்டு வைக்காதீங்க. வசுமதியம்மாள் கண்டிப்பானவங்க. பின்னால் வம்பு வழக்கில் மாட்டிக் கொள்வீங்க. நான் ஒரு வைத்தியர். வசுமதியம்மாள் வீட்டு குடும்ப விஷயங்களில் தலையிட்டுக் குழப்ப முடியாது மன்னிக்கவும்'' கடுமையாகப் பேசியவர் கைகூப்பி வணங்கினார். "இந்தாங்க! இந்த பிஸ்கட் டின்னைத் தயவு செய்து எடுத்துக்கிட்டுப் போங்க.''

அவமானத்தில் குன்றிப் போனார் வேதகிரி, …டப்பாவை எடுத்துக்கொண்டு வெளியேறினார்.

கடைசி நோயாளியைக் கருத்துடன் கவனித்துவிட்டு வெளியே வந்தார் டாக்டர் வாசுதேவன். அவரது கோபம் சட்டென்று அடங்கவில்லை. காரை எடுத்துக் கொண்டு நேரே அண்ணாசாலைக்கு விரைந்தார்.

மானேஜர் உள்பட எல்லாருக்கும் டாக்டர் வாசுதேவனைத் தெரியும். அவர் கேட்குமுன் ஆபீஸ் பையன் அவரை ஹரி இருந்த அறைக்கு அழைத்துச் சென்றான். பைல்களைப் புரட்டிக் கொண்டு ஹரி மட்டும் தனியே அறையில் இருந்தான். அவரைக் கண்டதும் அவனுக்கு வியப்பு.

"வாங்கோ, உட்காருங்கோ, என்ன வேணும்?'' பலமாக உபசரித்தான்.

"என் டேப் ரிகார்டருக்கு இரண்டு காசட் தேவைப்பட்டது. ஷோ ரூமுக்கு வந்ததும் வாங்கிவிட்டேன்.

அப்படியே உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்.'' பார்சலை மேஜை மீது போட்டுவிட்டு நாற்காலியில் அமர்ந்தார்.

''காப்பி? கூல் ட்ரிங்?'' புன்னகையுடன் விசாரித்தான் ஹரி.

''வேளை கெட்ட வேளையில் நான் இதெல்லாம் சாப்பிடுவதில்லை. உனக்குத்தான் தெரியுமே? முக்கியமாக நான் உன்னைப் பார்த்து உங்க அம்மாவைப்பத்திப் பேசத்தான் வந்தேன். அவங்களுக்குக் கொஞ்ச நாளா உடம்பு சரியில்லை. அது உனக்குத் தெரியுமில்லையா?''

ஹரியின் முகம் சிவந்து போயிற்று.

''அவங்களுக்கு உடம்புக்கு என்ன?'' எரிச்சலோடு கேட்டான்.

''உங்களிருவருக்குமிடையே தோன்றியிருக்கும் மனத்தாங்கல் அவங்களுடைய ஆரோக்கியத்தைக் குறைக்கிறது...''

ஹரி கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான். பொங்கிக் கொண்டு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டான் ''அவங்க உங்களை தூதாக அனுப்பினாங்களா?'' ஏளனமாகக் கேட்டான்.

''இல்லை. வேதகிரிதான் சற்றுமுன் உன் சார்பில் என்னிடம் தூது வந்தார். 'ஹரியின் பிறப்பின் ரகசியம் தேவை, கேட்டுச் சொல்லுங்கள்' என்று கெஞ்சினார். உன்னைப் பெற்றவளின் முகவரி அவருக்கு அவசியம் வேண்டுமாம்.''

''உண்மை உங்களுக்குத் தெரியுமா டாக்டர்?'' ஆவலுடன் அவன் கேட்டான்.

''வசுமதியம்மாள் உன்னை பெற்ற தாய் அல்ல என்று மட்டும்தான் தெரியும். மேலே தெரிந்து கொள்ள



நான் முயற்சிக்கவில்லை. என்வரைக்கும் வசுமதி அம்மா தான் உன் தாய் என்ற நினைப்பு.''

''நான் உண்மையைத் தேடி அலைவது உங்களுக்குத் தவறாகப்படுகிறதா?''

''சில சமயங்களில் உண்மை மிகவும் கசப்பாக இருக்குமே. அதனால் தேடாது இருப்பது நலம் இல்லையா?''

''டாக்டர்! உங்களுக்கு மனவியல் நன்கு தெரியுமே. ஒரு குழந்தை தன்னைப் பெற்றவளைத் தேடி அறிந்து கொள்ள நினைப்பது இயற்கை. அந்தத் தவிப்பு எப்படிப்பட்ட உணர்ச்சிப் போராட்டம் என்பதும் உங்களுக்குப் புரியுமே.''

''உன் பாட்டன் காலத்திலிருந்து தொடர்பு கொண்ட நண்பன் என்கிற முறையில் சொல்கிறேன். வேதகிரியின் தூண்டுதல் பேரில் நீ காரணத்தைத் தேடிக் கொண்டு புறப்பட்டிருக்கிறே. அவரைப் பொறுத்த வரை இது அவருக்கு ஒரு வஞ்சக விளையாட்டு. உனக்கு இது முடிவில் பெரும் மனவேதனை. உனது பாக்ரவுண்டு வேதகிரி நினைக்குமளவுக்குப் பொருந்தாவிட்டால்...,'

''என்ன சொல்றீங்க?''

''அவர் சொன்னதைச் சொல்கிறேன். உண்மை தெரிந்து நீ வந்த இடம் சரியானதாக இல்லாவிட்டால்நீ ராதிகாவை மறந்துவிட வேண்டும். வேதகிரிக்கு பாக்ரவுண்ட்தான் முக்கியம். நீ முக்கியமல்ல...இல்லாததைத் தேடிக் கொண்டுபோய் நீ இருப்பதையும் இழக்கப்போகிறாய். முட்டாள் நீ...''

''என்ன சொல்றீங்க?'' மறுபடியும் பதட்டமாகக் கேட்டான் ஹரி.

"இந்த நிலை நீடித்தால் வசுமதி அம்மாளை மறுபடியும் நீ பார்க்க மாட்டாய்......" ஆத்திரத்துடன் கூறிவிட்டு வாசுதேவன் அறையை விட்டு வெளியேறினார்.

## 24

பூபதிதான் காரை ஓட்டிக் கொண்டு வந்தான். வேலை நேரம் பற்றிக் கண்டிப்பான கொள்கை கொண்டிருந்த பூபதிக்கு மேலும் தாமதிக்க மனம் இல்லை. டாக்டர் வாசுதேவன் பங்களாவிலேயே பொழுது அதிகமாகி விட்டதென்று ஒரு பரபரப்பு. ஹோட்டலுக்குள் நுழைந்ததும் அருகிலேயே அவர்களை இறக்கிவிட்டுக் காரைத் திருப்பிக்கொண்டு வேகமாகச் சென்று விட்டான்.

"தாத்தா, ஷாப்பிங்? கார் போயிட்டதே!" அலறினாள் ராதிகா.

"ஹாய் தாத்தா...என்ன இத்தினி நேரம்! காத்துக்கிட்டு நின்று கால் ஒடிஞ்சி போச்சு" கேட்ட வண்ணம் அங்கே வந்து கலந்து கொண்டான் அவரது அருமைப் பேரன் அஸ்வின்.

வேதகிரிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. வாசுதேவனின் ஏளனச் சொற்கள் இன்னமும் நெஞ்சைக் கிள்ளிக் கொண்டிருந்தன. பேரப் பிள்ளைகளின் உபத்திரவம் எரிச்சலை ஊட்டியது. அமெரிக்காவிலிருந்து வந்ததிலிருந்து ஆளுக்கொரு மூலையாக இழுத்து இருவரும் அவரை அலட்டிக் கொண்டிருந்தனர்.

"தாத்தா, காருக்கு இப்ப நாம் என்ன செய்வோம்?" மறுபடியும் பேத்தி ஞாபகமூட்டினாள். வீட்டுக்கு ஒரே பெண் என்று அதிகச் சலுகைகள். அதில் வளர்ந்த பிடிவாதம் அவளுக்கு.



எத்தனையோ விஷயங்களைத் தாத்தா சமாளிப்பதில் கெட்டிக்காரர். ஆனால் பேரப் பிள்ளைகளைச் சமாளிக்கத் தெரியாமல் இந்தச் சில தினங்களில் திண்டாடிக் கொண்டிருந்தார்.

அமெரிக்காவிலிருந்து வந்த மறுநாளிலிருந்து நாள் முழுவதும் ராதிகாவுக்கு ஷாப்பிங் போவதுதான் முக்கியமான காரியமாக இருந்தது.

அஸ்வினுக்குப் புகை பிடித்துக் கொண்டு சோம்பேறியாகத் திரிவது பெரிய பொழுதுபோக்கு.

"முதல்லே சாப்பிடுவோம் வாங்கோ!" எரிச்சலை அடக்கிக் கொண்டு அவர் நடந்தார்.

"மசாலா தோசையா? வேண்டாம் தாத்தா. வேறு ஹோட்டலுக்குப் போகலாம். ஃபிரைட் ரைஸ் அண்ட் சிக்சன் கர்ரி சாப்பிட எனக்கு ஆசையாக இருக்கு' நகத்தைக் கடித்தாள் ராதிகா.

"தாத்தா, இந்தச் சாப்பாடு, இந்த ஹோட்டல் ஒண்ணுமே பிடிக்கலை. வேறு பெரிய ஹோட்டலுக்கு நாம் மாத்திக்குவோம்" அஸ்வின் தங்கையுடன் ஓலமிட்டான்.

பிறர் பணத்தைத் தின்று வாழ்ந்து பழக்கப்பட்டவர் வேதகிரி. வசமாக யாராவது அவர் பிடியில் அகப்பட்டுக் கொண்டு விட்டால் இடுப்பிலே செருகிக்கொண்டிருக்கும் அவர் மணிபர்ஸ் பின்னர் வெளியில் வராது. பலரைக் கொள்ளையடித்துச் சேர்த்த பணத்தில் அவருக்கு மாம்பலத்திலே ஒரு வீடு இருந்தது. அதை பாங்கிற்கு வாடகைக்கு விட்டிருந்தார். இப்போது ஹரியின் செலவில் ஒரு ஹோட்டலில் மூவரும் தங்கியிருந்தனர். போதாதற்கு வேண்டியபோதெல்லாம் ஆயிரம், ஐந்நூறு என்று அவளிடம் கடனாகத்தான் பணம் வாங்கிக் கொண்டிருந்

தார். எத்தனை பணம் கையிலிருந்தாலும் பேரப் பிள்ளைகளின் அபாரச் செலவுகளைச் சமாளிக்க முடியாத நிலை.

''இன்னிக்கு இங்கேயே சாப்பிடுவோம்.''

மசாலா தோசை கொண்ட தட்டுக்களை வைத்து விட்டு ஹோட்டல் சர்வர் நகர்ந்தான். அடக்கமாட்டாத பசியுடன் வேதகிரி ஜிப்பாவின் கையை மேலே மடக்கிக் கொண்டு சாப்பிடுவதில் முனைந்தார். விரல்களைச் சப்பிக்கொண்டு கோபத்துடன் தட்டைப்பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் ராதிகா. வேண்டா வெறுப்பாகப் பிட்டு வாயில் திணித்துக் கொண்டிருந்தான் அஸ்வின். தோசையை ஒரு வழியாக விழுங்கி விட்டுக் காப்பியைக் குடித்த பின்னர்தான் அவருக்கு நிதானமும் தெம்பும் வந்தது. தட்டிற்கு முன் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பேரப் பிள்ளைகளை உற்றுக் கவனித்தார்.

''இந்த ஸ்லாக் ஷர்ட் எனக்கு போரடிக்கிறது.போய் ரூமில் வேறு மாத்திட்டு வரேன்'' ராதிகா கிளம்பினாள்.

அவளுக்கு ஆடை அலங்கார மோகம் மிகவும் அதிகம். நாளைக்கு மூன்று தடவை உடை அலங்காரத்தை மாற்றாவிட்டால் தலை வெடித்துப் போகும். பொங்கி எழுந்த எரிச்சலை அடக்கிக்கொண்டு பேரனை நிமிர்ந்து பார்த்தார். சாப்பிட்டு முடித்துவிட்டுக் கையைக் கழுவ எழுந்தவன் தாத்தாவைப் பார்த்துப் புன்னகை செய்தான். ''என்ன அப்படிப் பாக்கிறீங்க?''

''நீ குளிச்சு எத்தனை நாளாச்சுன்னு கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''எச்சில் கையைப் பேப்பரில் துடைக்காமல் போய்த் தண்ணீரில் அலம்புகிறேனே அது போதாதா?'' வேடிக்கையாகப் பேசிவிட்டதுபோல் அவனுக்குச் சிரிப்பு.



அவன் குளித்து முழுகி வாரத்திற்கு மேல் ஆகிவிட்டிருந்தது. தண்ணீரைக் கண்டால் பையனுக்கு அலர்ஜி. தலையை வாரி யுகமாகிவிட்ட தோற்றம். சிங்கப் பிடரி போல் தோளில் புரண்ட சிகை. காதோரத்துக் கிருதாக்களுடன் கலந்து காடாகிவிட்ட மீசை, தாடி, சிகரெட் கறை படிந்த விரல் இடுக்கு. அவருக்குத் தலையில் அடித்துக் கொள்ளாத குறை. இந்தப் பேரப் பிள்ளைகளுடன் மீதி நாட்களை எப்படித்தான் ஒப்பேற்றப் போகிறோமோ என்ற திகிலில் தமக்குமுன் தெரிந்த ஹோட்டல் தோட்டத்தை வெறித்தார்.

டாக்டர் வாசுதேவன் பயமுறுத்தியதைக் கேட்டு அசந்து விடுவதா? அந்தக் கேள்வி அவர் உள்ளத்திலே வட்டமிட்டது.

தூங்கிக் கொண்டிருந்த சிங்கத்தைத் தட்டி எழுப்பி விட்டதைப் போன்று ஹரியின் ஆவலைத் தூண்டிவிட்டிருந்தார். வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டி வசுமதியின் மேல் அடி மன நிலையில் இன்னமும் நெருப்பாகக் கனன்று கொண்டிருந்த ஆத்திரத்தினால் அவர் தமது சந்தேகத்தை அவனிடம் சொல்லி மனத்தைக் குழப்பிக் கொண்டார். இப்போது முற்றிலும் விஷயத்தை அவராலேயே தெரிந்து கொள்ளமுடியாத நிலை. கேட்டபொழுதெல்லாம் பணத்தைத் தாராளமாகக் கொடுத்தான் ஹரி. பாட்டன் அமிர்தலிங்கத்தைவிட தாராளமான கை. ஆனால் அவன் தன்னைப் பெற்றவளைப் பற்றிப் பேசாத நாள் இல்லை. விவரம் வேண்டி அவரை கிண்டிக் கிளறாத பொழுதில்லை. ஏன் இந்தப் பிரச்சினையை ஆரம்பித்தோம் என்ற வரைக்கும் அவர் தலை குழம்பி சுற்றியது.

ஹரி வசுமதியின் மகன் இல்லை என்று அவர் கொண்டிருந்த ஊகம் இப்போது உண்மை என்ற வரைக்

கும் புலனாகிவிட்டது. வசுமதியே தன் வாயால் மகனிடம் ஒப்புக் கொண்டுவிட்டிருந்தாள். ஆனால் அவ தாயார் யார்? இதைப் பற்றி அறிய அவர் அந்தக் காலத்திலேயே எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏதும் பயனளிக்கவில்லையே? வசுமதி குழந்தையுடன் அந்த வீட்டிற்குள் வந்தவுடனேயே அவர் தமது துப்புத்துலக்கும் பணியைத் தொடங்கி விட்டிருந்தார். குடிமயக்கத்திலே தம்மை மறந்து பேசிய அமிர்தலிங்கத்திடமே விஷயத்தை அறிய முற்பட்டார்.

''இந்தப் பயல் ஹரி உங்கள் பேரன் என்றா நினைக்கிறீர்கள்? என்னால் நம்ப முடியவில்லை'', என்று சந்தேகத்தைக் கிளப்பிவிட்டார்.

மீசையைத் தடவிக் கொண்டு சிவந்த கண்களால் வெறித்தார் கிழவர். ''வேதகிரி, நாவை அடக்கிப் பேசு. அவன் என்னுடைய ரத்தம். என் உயிர் — எத்தனை காத தூரத்திலே மறைஞ்சு கொண்டிருந்தாலும் என் பேரனை எனக்கா தெரியாது? என்னய்யா இது புதுக் கதை?'' எரித்து விடுகிறவர்போல் அவர் விழித்ததைக் கண்டு வேதகிரி நடுங்கி வாயை மூடிக் கொண்டு விட்டார்.

பின்னர் ஒருநாள் தோட்டத்து வேப்பமரத்தடியில் கிடந்த சிமெண்ட் ஆசனம் அருகே வந்தார் வேதகிரி. பகல் உணவிற்குப் பிறகு வெற்றிலையுடன் அமர்ந்திருந்த சேனாபதி அவர் கண்களில் பட்டுவிட்டார். வேலையாட்களுக்கு எப்பொழுதுமே எஜமானரின் வீட்டு வம்புகளில் கவனம் அதிகம் இருக்குமே! ராஜசேகரன் அந்த வீட்டைவிட்டு கிளம்பு முன்பே அங்கு வேலை பார்த்து வந்த சேனாபதிக்கு விஷயம் ஓரளவு கட்டாயம் தெரிந்திருக்கும் என்பது அவர் நினைப்பு. அருகில் சுவாதீனமாக உட்கார்ந்தார். சேனாபதி மரியாதையுடன் எழுந்து நின்றார்.



''சும்மா உட்காரப்பா. நீயும் நானும் இந்த வீட்டில் ஒரே ஸ்தானத்தில் இருக்கிறவங்கதான். நமக்குள் என்ன மரியாதை வச்சுக் கிடக்கு? உனக்குச் சினிமான்னா உசிராச்சே! கிரவுன் தியேட்டரில் நேத்தியிலிருந்து ஒரு தமிழ்ப்படம் கவனிச்சியா?'' பேசிக் கொண்டு ஆசனத்தின் ஓரத்தில் அமர்ந்தார். மிக்க உரிமையோடு சேனாபதியின் கரத்தைப் பிடித்து இழுத்துப் பக்கத்தில் அமரச் செய்தார். சட்டைப்பையைத் துழாவி இரண்டு ரூபாயை எடுத்தார். 'ஞாயிற்றுக்கிழமை அந்தச் சினிமாவுக்குப் போய்விட்டு வா...'' பணத்தை அவர் உள்ளங்கையில் வைத்து அழுத்தினார்.

''வேண்டாங்க. இதெல்லாம் எதுக்கு? ''பிழைக்கத் தெரியாத ஏமாளி சேனாபதி அதை வாங்க மறுத்து விட்டார்.

ஆசாமிக்குக் கொஞ்சம் முரட்டுச் சுபாவம். வேதகிரி சோர்ந்து விடவில்லை. ஊர்க் கதைகள் பலவற்றைச் சுவைபடப் பேசி சேனாபதியின் கவனத்தைச் சிறிது கவர்ந்து கொண்டார்.

சுற்றி வளைத்துவிட்டு விஷயத்திற்கு வந்தார். ''ஆமாம், நம்ப சின்ன ஐயா ராஜசேகரன் ஒரு பெண்ணைக் காதலிச்சாரே, அவள் பெயர் என்ன? நீ அந்தப் பெண்ணை எப்பவாவது பார்த்திருக்கிறியா?''

சேனாபதி பற்களைக் கடித்துக் கொண்டார். மெல்ல இடத்தை விட்டு எழுந்து நின்றார். ''எனக்கு இந்த மாதிரிக் கதை எதுவும் தெரியாதய்யா, தெரிய வேண்டிய அவசியமும் இல்லை. என் வேலை உண்டு நான் உண்டுன்னு விழுந்து கிடக்கிறேன்...மத்தியான டிபன் காரியத்தைப் போய் நான் கவனிக்கணும். நான் வரேன்'' ஆசாமி மிடுக்காக நமஸ்கரித்துவிட்டு உள்ளே போய்விட்டார்.

அதற்குப் பின் நேரத்தை ஒரு கணமும் வேதகிரி வீணாக்க விரும்பவில்லை. கட்டுப் பார்சல்களுடன் வந்த பேத்தியுடன் காரில் ஏறிக்கொண்டு சிந்தாதரிப்பேட்டைக்கு விரைந்தார்.

“இப்போ நாம் எங்கே போகிறோம்?” பேத்தி கேட்டது அவர் காதுகளில் விழவில்லை.

முத்து நாயக்கன் தெருவுக்குள் வண்டி நுழைந்ததும் அவர் நெஞ்சு வேகமாக வெற்றி முரசு கொட்டியது. ஐந்தாம் நெம்பரைத் தேடி மேலும் கீழும் அலைந்த பின்னர் வரிசையாகக் கடைகளிருந்த ஒரு பகுதிக்கு வந்தார்.

“இங்கே ஐந்தாம் நெம்பர் வீட்டில் வசிக்கிற புனிதா அம்மாளைத் தெரியுமா?” காய்கறிக்கடையில் உட்கார்ந்திருந்த கிழவரிடம் கேட்டார்.

“அஞ்சாம் நெம்பரா?...பல பேர் கையிலே மாறி முடிவிலே இப்படி கடையாக் கட்டி விட்டுட்டாங்க. புனிதாவா? அந்தப் பேர்லே இங்கே யாரும் இருந்ததாக ஞாபகம் இல்லையே” கையை விரித்தார்.

“போகட்டும் பெயரையாவது தெரிந்து கொண்டு விட்டோமே” என்ற பெருமை அவருக்கு.

“வாங்க, தோட்டத்திலே போய் நிற்போம். உங்க பேத்தி அலங்காரம் முடிய ஒரு வருஷம் பிடிக்கும். எனக்கு அதுவரை சிகரெட் பிடிக்காம இருந்தா பித்துப் பிடிச்சுடும்” வெளியே நடந்தான் அஸ்வின்.

கோபத்தை விழுங்கியபடி பின்னால் நடந்தவேதகிரி தோட்டத்திலிருந்த பெரிய மரத்தடியில் வந்து நின்றார் குப்பென்று அவன் ஊதிய சிகரெட் புகையின் நாற்றத்தை ஊடுருவிக் கொண்டு வீசிய ஃபாரின் சென்ட் மணம் பேத்தியின் வருகையை எச்சரிக்கவே திரும்பிப்



பார்த்தார். ஆரஞ்சு வண்ண பிரெஞ்சு ஷிபான் புடவையில் அவள் நெளிந்து அசைந்து கொண்டு அருகில் வந்தாள். அரை சென்டி மீட்டர் அளவு முகத்திலே பவுடர் பூச்சு. தலை முடியை வாரிச் சுருட்டி மடக்கி உயரமாகக் கட்டிக் கொண்டிருந்தாள்.

“தாத்தா, ஷாப்பிங்கிற்கு நீங்கதான் இப்ப பணம் தரணும். என்கிட்ட பைசாகூடக் கிடையாது.” கொஞ்சினாள் அவள்.

வேதகிரிக்கு பகீர் என்றது. இந்தப் பெண் பணத்தை என்னன்னு நினைக்கிறா? “ஹரிதான் உனக்குச் சரியான கணவன். அவன் கிட்டத்தான் உன் அடாபிடி செலவுக்குப் பணம் கொட்டி வச்சிருக்கு.” எரிச்சலை அடக்கிக் கொண்டு புன்முறுவலித்தவர் இடுப்பிலிருந்த பர்ஸைத் துழாவினார்.

“ஹரியா! அவனுக்கு ரொம்ப ஷார்ட் டெம்பர் தாத்தா. அடிக்கடி எரிந்து விழுகிறான். அவனோடு ஒத்து வருமான்னு யோசிக்கிறேன்.”

பேத்தி கூறியதைக் கேட்ட வேதகிரி அதிர்ந்து போனார். அவரது முயற்சிகளில் இப்படி ஒரு முட்டுக்கட்டையா! இப்படி ஏதாவது அறிவு கெட்டு அவனிடம் பேசி வைக்கப் போகிறதே இந்தப் பெண்...

வேகமாகத் தோட்டத்திற்குள் நுழைந்த கார் அருகில் வந்து நின்றது. ஹரி அதனின்று இறங்கினான்.

## 25

வெளியே கோடையின் கொடும் வெயில். உள்ளே உதகையே வந்துவிட்டது போன்ற குளுமை. ஏ.சி. அறை, மெத்தென்ற ஆசனம். இருந்தும் கோடை வெய்

யிலுக்கு மேல் கடுமையானதொரு நெருப்பு கோப உரு
வில் ஹரியின் உள்ளத்திலே மண்டிக் கொண்டிருந்தது
ஆசனம் முள்ளாகக் குத்தியது. சுண்ணாம்புக் காள
வாய்க்குள் அகப்பட்டவன் போல் வேதனையில் அவன்
துடித்தபடி உட்கார்ந்திருந்தான். அவனது விபரீத
மனப்போக்கு அவனுக்கு புரியாததொரு புதிர்.

கதவைத் திறந்து கொண்டு மெல்ல உள்ளே வந்த
ஆபீஸ் பையன் காப்பி நிறைந்த கோப்பையை மேஜை
மீது வைத்து விட்டுத் திரும்பினான். மறுகணம், "தரித்
திரம்! சொல்லக் கூடாதா? கொதிக்கிற காப்பியைக்
கொண்டு வந்து வச்சுட்டான்?" என்று ஆத்திரத்துடன்
ஹரி உதட்டைத் தடவிக் கொண்டான்.

"கந்தசாமி, உன்னைத்தான்! உள்ளே வந்தால்
பின்னர் கதவை மூடிக் கொண்டு போகணுங்கிற அறிவு
எங்கே போச்சு?" உரத்த குரலில் இரைந்தான்.

ஆபீஸ் பையன் நடுநடுங்கி விட்டான். சின்ன எஜ
மானை இப்படி ஒரு கோபநிலையில் அவன் இதுவரை
பார்த்ததேயில்லை. "ஸாரி ஸார்!..." கதவைச் சாத்திக்
கொண்டு அவன் வேகமாக மறைந்தான்.

ஹரி அடக்கமாட்டாத சினத்துடன் மேஜைமீது அது
வரை கிறுக்கிக் கொண்டிருந்த அந்தக் காகிதத்தைப்
பார்த்தான். குறுக்கும் நெடுக்குமாகப் பல கோடுகள்.
நட்சத்திரங்கள் போன்ற பல வடிவங்கள் உருண்டைகள்
இத்தியாதி. திடீரென்று ஆவேசம் வந்தவன் போல்
இருக்கையை விட்டு எழுந்து சென்று அறையின் சுவரோ
ரமாக இருந்த ஸ்டீல் காபினெட்டைச் சாவி கொண்டு
திறந்தான். பைல்கள் அடியே கிடந்த புத்தகமொன்றை
எடுத்துக் கொண்டு மேஜையருகே வந்து உட்கார்ந்து
கொண்டான். அதுசமயம் ஒரு பெரிய கட்டு பைல்களு
டன் மானேஜர் மோகனசுந்தரம் அறைக்குள் தலையை
நீட்டினான். கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு முகம்



சிவக்க எதையோ வெறித்துக் கொண்டிருந்த ஹரியைப்
பார்க்க அவனுக்கு அச்சமாகத்தான் இருந்தது.

"ஊஹூம். ஐயாவுக்கு மூட் சரியில்லை. மணியும்
ஐந்தடிக்கப் போகிறது...நாளைக்குப் பார்க்கலாம்..."
தனக்குள்ளே சொல்லக் கொண்டுவந்த சுவடு தெரியாது
அவன் மறைந்து விட்டான்.

ஹரியின் மனம் ஒரு நிலையிலும் இல்லாமல் தவியா
கத் தவித்துக் கொண்டிருந்தது உண்மை. அமெரிக்கா
வில் தங்கியிருந்த கடைசி ஆண்டின் போதுதான் அவ
னுக்கு வேதகிரியின் சந்திப்பு—அவர் அவன் உள்ளத்திலே
விதைத்து விட்டிருந்த சந்தேகம்—நாளடைவில் பலப்
பட்டு அசுர வடிவெடுத்து அவனை ஆட்டிப் படைத்துக்
கொண்டிருந்தது. அதைத் தெரிந்து கொள்ள அவன்
செய்த முயற்சிகள் யாவும் பயனற்றவைகளாக இருந்தன
—எப்பக்கம் திரும்பினாலும் தோல்வி. அதனால் ஏற்
பட்ட ஏமாற்றத்தில் வெகுண்டு போய்ப் பொறுமை
தேய்ந்து அவன் எந்தச் சின்ன விஷயத்திற்கும் சீறிக்
கொண்டிருந்தான்.

அன்றுபகல் ஆபீஸ் துவங்கியதும் ஆசனத்தில் வந்து
அமர்ந்த போதுதான் ஹரி கவனித்தான். மேஜைமீது
அவன் கையெழுத்திற்காக வைக்கப்பட்டிருந்த லீவு
கோரிக்கை கொண்ட கடிதம். ஷோரூமில் மேற்பார்வை
யாளராக வேலை பார்த்து வந்த கோவிந்தன் அடுத்த
நாள் முழுவதும் தமக்கு லீவு வேண்டுமென்று பணிவுடன்
விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். புதிதாக வந்து
இறங்கியிருந்த சாமான் பார்சல்கள் பிரிக்கப்படாத
நிலையில் ஸ்டோர் ரூமில் குவிந்து கிடந்தன. அவை
களை எடுத்துப் பிரித்து கணக்குப் பார்த்து ஷோரூமில்
வைக்க வேண்டிய இடத்தில் வைத்து சிங்காரிக்க வேண்
டிய வேண்டிய அவருக்குத் தலைக்குமேல் கிடந்தது.
அதை விட்டுத் திடீரென்று லீவு எதற்கு?

கோபத்துடன் மேஜை மீதிருந்த மணியை அடித்தான்.

"கோவிந்தனைக் கூப்பிடு பார்க்கணும்."

மெல்லக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து நின்றார் கோவிந்தன்.

"நாளைக்கு லீவு கேட்டு எழுதியிருக்கிறீங்களே. கட்டாயம் தேவையா?" அதிகாரமான குரலில் சற்று அதட்டலாகவே கேட்டான்.

தலையைச் சொறிந்து கொண்டு நின்ற கோவிந்தனின் முகத்தில் அசட்டுப் புன்னகை. "திடீர்னு செய்த ஏற்பாடு. அதனால் லீவு போட்டேன். நாளைக்கு என் பையனுக்குப் பெண் பார்க்க உகந்த நாள்னு வீட்டிலே அது தீர்மானிச்சதால் என்னால் மறுக்க முடியலை. காலைப்பொழுது மட்டும் லீவு கொடுத்தால் போதும். பகல் வேளைக்கு வந்து விடுகிறேன்..."

ஹரி மௌனமாக அவரை வெறித்தான். அவருக்கு அவனைப் பார்க்கவும் அச்சமாக இருந்தது. எனினும் விடாமல் மேலே விவரிக்கத் தொடங்கினார்.

"பெண் வீட்டவங்களும் சென்னையிலேதான் இருக்காங்க. சிந்தாதிரிப் பேட்டையிலே வாசம். பெண் தகப்பனார் பெயர் சிவராமன். கையும் காலும் விளங்காம பாவம் ரொம்ப நாளா படுக்கையாகி விட்டார். ஏழைக் குடும்பம், நானும் என் மனைவியும் ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டு வந்தோம். என் மனைவிக்குப் பெண் ரொம்ப பிடிச்சு விட்டது—மஹிமான்னு பேர். வேலை செய்துகிட்டிருக்கு. பையனும் பார்த்து சரின்னுட்டா முடிக்கலாம்னு யோசனை...அதனாலே..."

திடுக்கிட்டுப் போன ஹரியின் நெஞ்சு படபட வென்று துடித்துக்கொண்டது. உடம்பெல்லாம் அனலாக எரிவது போன்ற ஒரு பிரமிப்பு. அவன் கீழே வேலை



பார்க்கும் ஒரு சாதாரண தொழிலாளி கோவிந்தன். அவனுடைய மகனுக்கு மஹிமா மனைவியாவதா? நெஞ்சே வெடித்துவிடும் போன்றதொரு ஆத்திரம் விவரிக்க முடியாத ஒரு பொறாமை. பொங்கிப் புறப்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஒருகணம் அவன் நிலை குலைந்து போனான். மிகவும் கஷ்டப்பட்டுச் சமாளித்தான். "ஓகே. நீங்கள் போய் வரலாம..." உத்தரவு கொடுத்தான்.

கதவைச் சாத்திக் கொண்டு அவர் போனதும் அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். நெஞ்சின்மீது பெரும் பாறாங்கல் அழுத்துவது போறன்தொரு துன்பச் சுமை. இவ்வளவு நாட்களாக அசட்டையாக உதறிவிட்டிருந்த அவளது நினைவு திடீரென்று காட்டாற்று வெள்ளமாக.

கடற்கரையிலே யாருமில்லாத சமயம் தன் அருகே காரில் அமர்ந்து கொண்டு—கூந்தலில் அவள் சூடிக் கொண்டிருந்த மல்லிகை மலரின் மீது முகத்தைப் பதித்துக் கொண்டு கொஞ்சி விளையாடியபோது ஏற்பட்ட இன்ப உணர்வுகளின் நினைவு—இப்பொழுது ஞாபகத்தில் வந்து மனத்தை ஏன் குழப்ப வேண்டும்?

மேஜைமீது விசிறிப் போட்ட அவளது புகைப்படத்தை உற்றுப் பார்த்தான். அவனைப் பிரிந்துவெளி நாட்டிற்குப் புறப்பட்ட பொழுது துணையாக எடுத்துச் சென்ற படம் அது. ஆயிரம் முறைகள் பார்த்து மகிழ்ந்திருக்கிறான்—கொஞ்ச காலமாக அது அந்தப் புத்தகத்திற்குள்ளேயே அசட்டையாக வைக்கப்பட்டிருந்தது. இன்று அதை மீண்டும் பார்த்தபோது, சரவிளக்கு கக்கிய ஒளியில் மாடியறையில் அவள் குனிந்த தலையுடன் நின்றதும் கொடுமையாக அவன் வழங்கிய தண்டனையைக் கேட்டு நெஞ்சே வெடிக்க அவள் தள்ளாடியதும்...

அவனுக்கு ஆபீஸில் இருப்புக் கொள்ளவில்லை. காரை எடுத்துக் கொண்டு நேரே வேதகிரியைத் தேடிக்

கொண்டு அவர்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு விரைந்தான். காரைக் கண்டதும் ராதிகாவுக்கு உற்சாகம். ஹரியைப் பார்த்ததும் ஓயாத செலவுகளால் ஓட்டையாகி விட்டிருந்த தமது பர்சின் கவலையை மறந்தார் வேதகிரி. அடுத்த ஓட்டலில் என்ன சாப்பிடுவது என்று அஸ்வின் அவசரமாக மெனுவை மனத்திற்குள் வரைந்து கொண்டான்.

ஆனால் ஹரி உற்சாகம் இன்றிக் காணப்பட்டான் ஓட்டல் தோட்டத்துக் கல்யாணமண்டபத்திலே ஒரு திருமண வரவேற்பு நடந்து கொண்டிருந்தது

நாளைக் காலை கோவிந்தன் மகனுக்குப்பெண்ணை பிடித்து விட்டால்? கட்டாயம் பிடிக்கும். அமைதி நிறைந்த அந்த அழகு முகத்தைப் பிடிக்காமலா போகும்? கல்யாணம் நிச்சயமாகிவிடும். சில தினங்களில் அவனுடைய மஹிமா இன்னொருத்தன் அருகே கழுத்து நிறைய மாலையுடன் நெருக்கமாக நின்றபடி...அவனால் சிந்திக்கவே முடியவில்லை. இதயம் உடைந்து சுக்கலாகி விட்டது போன்றதொரு துன்பம்...வேண்டாம் என்று உதறிவிட்டவள் மேல் ஏன் அந்த ஆழமான நினைப்பு—தவிப்பு—தவிர்க்க முடியாத சொந்த உணர்வு? அப்படியென்றால்?...பற்களைக் கடித்துக் கொண்டான் அவன்

"ஷாப்பிங் போகணும். வராம போயிடுவீங்களோன்னு பயந்துட்டேன்." கொஞ்சலாகப் பேசிக்கொண்டு எதிரே வந்து நின்ற ராதிகா அவனுக்கு யாரோ பழக்கமில்லாதவள் போல் தோன்றினாள்.

"ஷாப்பிங்கிற்கு அழைச்சிட்டு போறீங்களா?" அவன் தோள்பட்டையைக் குலுக்கினாள் ராதிகா.

"அயாம் வெரி ஸாரி—எனக்கு இன்னிக்கு ரொம்ப வேலை இருக்கிறது...நேரமில்லை." எரிச்சலோடு பதிலளித்துவிட்டு வேதகிரி பக்கம் திரும்பினான்.



புதிதாக சிகரெட் ஒன்றை பெட்டியினின்று உருவிப் பற்ற வைத்துக் கொண்டு அருகில் வந்தான் அஸ்வின். புஸ் என்று எழுந்தது ஒரு புகை மண்டலம். ஹரிகோபத்துடன் அவனை உறுத்து விழித்தான். "முகத்திலே புகையை ஊதாதேன்னு எத்தனை வாட்டி சொல்கிறது? சுத்த மடையனா இருக்கியே?" சீறினான். முகம் சுண்டிப் போன அஸ்வின் சகோதரியின் முகத்தைப் பார்த்தான். அவள் வாயைத் திறந்து ஏதாவது தாறுமாறாகப் பேசி விடப் போகிறாளே என்ற அச்சம் வேதகிரிக்கு ஹரியை வேகமாக அப்பால் அழைத்துச் சென்றுவிட்டார்.

'இன்றைக்கு ஒரு முக்கிய விஷயம் காதில்பட்டது. குழந்தைகளுக்குத் தெரிய வேண்டாம்னு தான் உடனே சொல்லலை. உங்கப்பா வசுமதியம்மாளைக்கல்யாணம் செய்து கொள்வதற்கு முன் புனிதான்னு ஒரு பெண்ணோட சிநேகிதமாக இருந்துவிட்டு—அவளைக் கல்யாணம் செய்து கொள்ள மறுத்துக் கைவிட்டு விட்டாராம். அவங்க முகவரியைத் தேடி அலைஞ்சேன், கிடைக்கலை. ஆனாலும் விடப்போவதில்லை. தொடர்ந்து தேட ஏற்பாடு பண்ணியிருக்கிறேன்—அதுக்கு ஒரு இரண்டாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது! ஏற்பாடு செய்ய முடியுமா?'

ஹரி திகைத்துப் போனான் சில தினங்களுக்கு முன்புதான் இது சம்பந்தமான முயற்சிகளுக்குக் கணிசமானதொரு தொகைக்கு அவன் அவருக்கு ஒரு செக் எழுதிக் கொடுத்திருந்தான். மீண்டும் பணமா?

ஆமாம், அந்த புனிதா, அவங்க யார்?"

"அதுதான் புரியலை. அதைப்பற்றி விசாரிக்கணும் அதுக்கு..."

அரை மனத்துடன் கோட்டுப் பையில் கையைவிட்டு [illegible] ரூபாய்களை எடுத்து அவரிடம் நீட்டிவிட்டுப் [illegible]ான்.

வீட்டிற்குள் வந்ததும் மாடியறைக்குள் சென்றுமுகம் கழுவி வேறு உடை மாற்றிக் கொண்டான் அவனது உடல்—உள்ளம் உணர்வு ஆன்மா எல்லாவற்றினின்றும் ஒரு பாதி கழன்று மறைந்துவிட்டது போன்ற ஒரு வெறுமை உணர்வு.

கீழே இறங்கினாள். இருள் பரவி விட்டதால் வசுமதியின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தாயும் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு சில தினங்களாகிவிட்டிருந்தன.

காலடி சப்தம் கேட்டு அவள் நிமிர்ந்தாள். அவள் முகம் வெளிறடைந்து உடல் நலிந்து மிகவும் சோர்ந்து காணப்பட்டாள்.

"புனிதா என்கிறவங்க யார் என்றாவது சொல்ல முடியுமா?"

திகைத்துப் போனாள் வசுமதி. பிறகு வறட்சியாகப் புன்முறுவலித்தாள்.

"வேதகிரி வேகமாகத்தான் வேலை செய்கிறார். என் வாயாலே கேட்டு அதை உறுதி பண்ணிக்கணும்? அது தானே உன் ஆசை? புனிதா என்கிறவள் உன்னைப் பெற்ற தாயார். நீ தேடிக் கொண்டிருக்கும் உன் சொந்தத் தாய்."

திடுக்கிட்டுப் போன ஹரி—தொடர்ந்து கேட்க வாயைத் திறக்கு முன் சேனாபதி பரபரப்பாக வந்தார்.

"டாக்டர் அய்யா வந்து கொண்டிருக்கிறார்." ஹரி அது சமயம் டாக்டர் வாசுதேவனைச் சந்திக்க விரும்பவில்லை. எனவே அவன் மாடி பக்கம் விரைந்து விட்டான்.

# 26

மறுநாட் காலை. வெளியே செல்லத் தயாராகி விட்டிருந்த ஹரி, ப்ரீஃப் கேசுடன் கீழே வந்தான். இரவு அவன் சரியாகத் தூங்கவேயில்லை.

வேதகிரி தேடிக்கொண்டு வந்து சொன்ன விஷயம்:

'உன் தந்தை புனிதான்னு ஒரு பெண்ணோட சிநேகிதமாக இருந்து, கல்யாணம் செய்து கொள்ளாது கைவிட்டு விட்டாராம்.'

'புனிதா என்கிறவங்கதான் உன்னைப் பெற்ற தாய்.' வசுமதியின் வறட்சியான புன்முறுவல்.

மாறி மாறி இந்த உண்மைகள் அவனைச் சித்திரவதைக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன. இரவு முழுவதும் அவனால் உறங்கவே முடியவில்லை. அப்படியென்றால் அவன் சட்டத்திற்கும் சமுதாயத்தின்கட்டுப்பாடுகளுக்கும் புறம்பாக—புழுதியிலே தவழப் பிறந்தவனா? இல்லெஜிடிமேட் குழந்தையா? நினைக்க நினைக்க நெஞ்சு பதறியது.

உறக்கமில்லாததன் விளைவு தலை பாரமாகக் கனத்தது. அதைவிட நெஞ்சிலே வேதனையின் சுமை கனத்துக் கொண்டிருந்தது. கண்களில் எரிச்சல். மெல்ல அவன் வராந்தாவிலே நடந்தான். குப்பென்று முகத்திலே...மோதிய சந்தன ஊதுவத்தியின் மணம் ஒருகணம் அவன் மேனியைப் புல்லரிக்கச் செய்தது. வேகமாகப் பூஜையறைப் பக்கம் வந்தான்.

அறைக்குள் குத்துவிளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. வெண்கல பீடத்திலே ஊதுவத்தி கத்தை புகைந்து கொண்டிருந்தது. அபிராமியின் திருவுருவம் தெரியாது தோட்டத்து மலர்கள் அவளது

காலடியில் குவிந்து கிடந்தன. ஆனால் வசுமதியை அங்கு காணவில்லை.

சேனாபதி காலைப் பலகாரத்தை அவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தார் வாடிவிட்டிருந்த அவனது முகத்தை ஜாடையாக அவர் கவனிக்கத் தவறவில்லை. "காப்பிக்கு இன்னும் கொஞ்சம் ச்ர்க்கரை தேவை." குரலில் வழக்கமான அந்த அதிகாரத்தை இன்று காணவில்லை. ஏன்? அவருக்கு வியப்பு. இட்டிலியைப் பிட்டு விழுங்கி கொண்டே ஹரி அவரைப் பார்த்தான்.

"அம்மா இன்னிக்கு பூஜையைச் சீக்கிரம் முடிச்சுட்டாங்களா?" ஹரி கேட்டதும் சேனாபதிக்கு ஆச்சரியம் கட்டுக் கொள்ளவில்லை. அவர் சொன்னார்:

"பாதி ராத்திரி அம்மாவுக்கு உடம்பு ரொம்ப முடியாம போயிடுச்சு. டாக்டருக்குப் ஃபோன் பண்ணினேன். அவர் வந்து ஏதோ ஊசி போட்டார். அந்த மயக்கத்திலே அம்மா இன்னமும் தூங்கிக்கிட்டிருக்காங்க. அவங்களை யாரும் தொந்தவு செய்யக்கூடாதுன்னு டாக்டர் உத்தரவு."

"பூஜை அறையிலே விளக்கு எரியுதே?"

"அம்மாவுக்கு உடம்புக்கு முடியாம படுத்து இருக்கச்சே பூஜை அறையை கவனிக்காம போட்டு வைக்க எனக்கு மனசில்லே. ஸ்நானம் பண்ணியதும் முதல் வேலையா நான் தான் விளக்கேற்றி வைத்தேன்."

இத்தனை நாளுமில்லாமல் தன்னுடன் சரிக்குச் சமமாக அவன் வார்த்தையாடுவதை உணர்ந்த சேனாபதிக்கு மிக்க வியப்பு. அதில் விளைந்த துணிச்சல்.

"அதுக்குத்தான் நீங்க வெளியூரிலிருந்து எப்ப வருவீங்கன்னு அம்மா ரொம்ப ஆவலாகக் காத்திருந்தாங்க. இந்த வீட்டுக்கு விளக்கை ஏற்ற ஒரு பெண் வந்துட்டா அவங்க பொறுப்பெல்லாம் குறைஞ்சுடு



மில்லையா? அதைப்பத்தி யோசிச்சு நீங்கதான் இனி [illegible]ம் வைக்கணும்."

டிபன் சாப்பிட்டதும், ஹரி மெல்ல ஓசைப்படாது வசுமதியின் அறைப்பக்கம் சென்றான்.

தன்னை மறந்து ஒரு மயக்க நிலையில் வசுமதி தூங்கிக் கொண்டிருந்தாள். காலடியில் பெஞ்சியின் அருகே தரை மீது தலையைப் பதித்துக் கொண்டு கிடந்த ரெக்ஸி அவனைக் கண்டு வாலைச் சுழித்து ஆட்டியது.

"ஹரி!" முணுமுணுத்தபடி புரண்ட வசுமதி கண்களைத் திறந்து மருள விழித்தாள். மருந்தின் மயக்க நிலையில் வெளி உலகின் நினைப்பு அவளுக்கு மங்கி விட்டிருந்தது. எனினும் உள் நிலையில் உறங்காத சில எண்ணங்கள், சில நினைவுகள் "ஹரி! என்னப்பா வேணும்? சாப்பிட்டாயா?—" மயக்க நிலையில் அவள் பிதற்றினாள். மறுபடியும் கண்களை மூடிக் கொண்டு விட்டாள்

தொண்டையை அடைத்த என்னத்தையோ விழுங்கிக் கொண்டான் ஹரி. கதவை மெல்லச் சாத்திக் கொண்டு வெளியே வந்தான். வாயிற்படியருகே கைகளைக் கட்டிக் கொண்டு பணிவுடன் நின்று கொண்டிருந்தார் சேனாபதி. அவரை நிமிர்ந்து பார்க்கவும் அவனுக்குக் கூச்சம்

"அம்மாவைக் கொஞ்சம் பாத்துக்குங்க. ஏதாவது தேவையானால் எனக்குப் போன் பண்ணுங்க," சொல்லி விட்டு அவன் வேகமாக நடந்தான்.

தூக்கி வாரிப் போட்டது சேனாபதிக்கு—அவர் இது உண்மையா? ஹரிக்கு அம்மா மேல் நினைப்பு வரத் தொடங்கிவிட்டதா? அவர் வேகமாக பூஜையறைக்குத் திரும்பினார்

"அபிராமி ஆத்தா! ஒரே ஒரு நாளைக்கு என் கையால் விளக்கேற்றி மலர் தூவிக் கும்பிட்டேன். இத்தனை அற்புதம் பண்ணிட்டே. தினமும் விளக்கேற்றி உன்னை வழிபட்டுகிட்டு வராங்களே அந்தப் புண்ணியவதி அவங்களை இனியும் சோதிக்காதே தாயே...' கண்களை மறைத்த நீரைத் துண்டால் துடைத்துக் கொண்டு வேலையைக் கவனிக்க அவர் சமையலறைப் பக்கம் விரைந்தார்.

காரை பூபதி செலுத்திக் கொண்டு சென்றான். ஹரி பின் ஆசனத்தில் சாய்ந்தபடி கண்களை மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்துவிட்டான். அவன் சின்னவனாக இருக்கையில் ஒருநாள் இரவு பரீட்சைக்குப் படிக்கும் நினைவில் மூழ்கியிருந்தபோது வசுமதி அவன் அறைகுள் வந்தாள்.

"ஹரி ஹரின்னு எத்தனை தடவை கூப்பிட்டேன். கேட்கலையா? பாலைச் சாப்பிடாமல் வச்சுட்டு வந்துட்டியே" அருகில் வந்து பால் டம்ளரை மேஜை மீது வைத்தாள்.

புத்தகத்தை மூடிவிட்டுக் குறும்பாக அவளைப் பார்த்தான்.

"உங்க கிட்ட ஒண்ணு கேட்கணும். இப்படி உட்காருங்க."

"உனக்கு வேறே வேலை கிடையாது. அப்புறம் விளையாட்டு" சிரித்தபடி அவள் அருகில் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"ஆமாம்! ஹரின்னு எனக்கு ஏன் பேர் வச்சீங்க? தாத்தா வீர சைவமாச்சே. அவருக்கு சிவநாமங்கள் மேல் தானே பற்றுதல்?"

"பரீட்சைக்குப் படிப்பதைவிட்டு இப்ப பெயர் ஆராய்ச்சியா?" அவள் மறுபடியும் சிரித்தாள். "உங்க



அப்பாவுக்கு மீரா பஜன் பாடல்கள் ரொம்பப் பிடிக்கும். அதில் முக்கியமாக 'ஹரி துமஹரோ ஜனகி பீர' என்று துவங்குகிற பாடல் ரொம்பப் பிடிக்கும். என்னை அதைப் பாடச் சொல்லிக் கேட்டு ரொம்ப ஆனந்தப்படுவார். பிள்ளை பிறந்தால் ஹரி என்று பேர் வைக்க என்று சொல்லிக் கொண்டிருந்தோம்" அதற்கு மேல் பேசாது அவள் சட்டென்று வெளியே போய்விட்டாள்.

'உன்னைப் பெற்றெடுக்கும் பாக்கியம் செய்யாத ஒரு பாவி...' என்று அன்று புலம்பித் துடித்தாள். பெற்றவள் இல்லை என்ற உண்மையை ஒப்புக் கொண்டாள். ஆனால் "ஹரி" என்று மருந்தின் மயக்க நிலையில்கூட அவள் அழைத்த போது அந்தப் பெயர், பெற்றவளின் மடியிலிருந்து பாசத்தை அள்ளிக்கொண்டு குரலில் குழைந்து ஒலித்ததே ஏன்? அப்படியென்றால் வசுமதி அவனைப் பெற்ற தாய்க்கும் மேலாக உண்மையிலே நேசிக்கிறாளா? இதை ஏன் அவன் புரிந்து கொள்ளவில்லை. அவன் சித்தம் குழம்பியது. ஆபீஸ் அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டான்.

மதிய உணவு நேரத்தின்போது அவன் வெளியே செல்லவில்லை, வீட்டிலிருந்து அனுப்பிய டிபன் செட்டைப் பழனி கொண்டு வந்து மேஜை மீது வைத்து விட்டுப் போயிருந்தான். ஏதோ யோசனையுடன் கையிலிருந்த பேனாவின் தலையைக் கடித்துக் கொண்டிருந்தான். அது சமயம் கதவைத் திறந்து கொண்டு உள்ளே உரிமையுடன் நுழைந்தார் வேதகிரி.

"உஸ்! அப்பா! என்ன வெயில்!" ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டார். "குழந்தைகள் வெயில் தாளாது தவிக்கப் போய் விட்டாங்க அவங்களை ஓட்டலிலேயே விட்டுவிட்டு நான் இப்படி வந்தேன். ஆமாம், சாப்பாடு ஆறிப் போகிறது. சாப்பிடாம அப்படி என்ன வேலை?" டிபன் செட்டின் மீது கண்களை ஓட்டினார் அவருக்கு

நல்ல பசி. வீட்டுச் சாப்பாட்டைக் கண்டதும் வாய்
ஊறியது.

"நீங்க வேணும்னா சாப்பிடுங்க. எனக்குப் பசி
யில்லை."

அதற்கு மேல் அவருக்குச் சொல்லத் தேவையிருக்க
வில்லை. பைல்களை ஒரு புறம் தள்ளிவிட்டு இலையைப்
பிரித்துப் போட்டுக் கொண்டு செட்டைத் திறந்தார்.
மசாலா குழப்பின் மணம் முகத்திலே மோதியதுதான்
தாமதம் — மளமளவென்று காரியத்திலே கண்ணாகி
விட்டார். கையைக் கழுவிக்கொண்டு உண்ட திருப்தி
யில் ஏப்பம் விட்ட வண்ணம் ஆசனத்தில் அமர்ந்து
கொண்டார். ஜிப்பாவின் பையிலிருந்த வெற்றிலைப்
பெட்டியைத் திறந்து வைத்துக்கொண்டு முறுவலித்
தார்

"சேனாபதியின் சமையல் நளபாகம்தான். ஆசாமிக்
குக் கொஞ்சம் அசட்டுக் குணம் உண்டு. ஆனால் சமைய
லில் மன்னன். மைசூர் ரசம் எப்படி இருந்தது தெரியுமா?
பாவம், ஒரு வாய் ரசம் சாதமாவது சாப்பிட்டிருக்
கலாம்..."

ஹரி அவரது பேச்சுக்களைக் காதில் போட்டுக்
கொள்ளாமல் மணியை அடித்தான். ஆபீஸ் பையன் ஓடி
வந்து மேஜையிலிருந்த பாத்திரங்களை அகற்றி விரை
வாகச் சுத்தம் செய்து முடித்து விட்டுப் போனான். அது
வரை வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவி வாயில்
திணித்துக் கொள்வதில் ஈடுபட்டிருந்த வேதகிரி வெற்
றிலை வாயோடு பேசத் துவங்கினார்.

"புனிதா எனகிறவங்க யாருன்னு வசுமதியம்
மாளைக் கேட்டியா?" குழறினார்.

சில விஷயங்களைப் பற்றி ஹரிக்கு மெத்த அரு
வருப்பு. வெற்றிலை குதப்பிய வாயோடு யாராவது
பேசினால் அவனால் சகிக்க முடிவதில்லை



"நீங்கதான் துப்பு கண்டுபிடிப்பதாக ஒப்புக் கொண்
டிருக்கையில் நான் ஏன் சிரமப்படணும்?' எரிச்சலோடு
கேட்டான்.

உள்ளே சென்று வெற்றிலைச் சாறை உமிழ்ந்து
வாயைக் கழுவிக் கொண்டு வந்த வேதகிரி உட்கார்ந்து
கொண்டார்.

"ஆமாம் வாஸ்தவம். அந்தப் பொறுப்பு என்னு
டையது. எனக்கு உதவி செய்கிறவன் மீதி ஆயிரத்து
ஐந்நூறு ரூபாயும் உடனடியாக வேணும்னு தொந்தரவு
செய்கிறான். அதைப் பற்றிப் பேசத்தான் வந்தேன்"
தலையைத் தடவிக் கொண்டார்.

பணம் என்றதும் ஹரிக்கு மின்விசை தாக்கிய
அதிர்ச்சி. உடனடியாக ஒரு விழிப்பு உள்ளத்திலே ஒரு
எச்சரிக்கை உணர்வு. மேஜை அறையைத் திறந்து
குறிப்புப் புத்தகம் ஒன்றை எடுத்தான். ஏடுகளைப்
புரட்டி மனத்திற்குள் கணக்கிட்டான்.

"இதுவரை இது சம்பந்தமாக இருபது ஆயிரத்துக்கு
மேல் செலவாகிவிட்டிருக்கிறது" காரமாகச் சொன்
னான்.

தூக்கிவாரிப் போட்டது வேதகிரிக்கு. பையன்
லேசுப்பட்டவன் இல்லை. விழித்துக் கொண்டால்
விரியன் பாம்பு! உள்ளூர நடுங்கினார்.

"எனக்காகவா செலவழிச்சே. உன் காரியத்துக்
காகத் தான் இந்த செலவெல்லாம்...?"

ஹரியின் முகம் ரத்தமாகச் சிவந்தது "மிஸ்டர்
வேதகிரி! ஓட்டல் பில், அவ்வப்போது என்னிடம் கை
மாற்றாக வாங்கிய இவைகளே பன்னிரண்டாயிரத்துக்கு
மேல் ஆகிவிட்டது. இது எப்படி என் செலவாகும்?"

''கணக்குக் கேட்கிறான் பாவிப்பயல்! வேதகிரி எழுந்தார்.

''ஆமாம் அதெல்லாம் கை மாற்றாக வாங்கிக் கொண்டது. ஒப்புக் கொள்கிறேன்'' மெல்ல நகரத் திரும்பினார்.

ஹரி மறுபடியும் மணியை அடித்தான். எட்டிப் பார்த்தான் பையன்.

''மானேஜரை வரச் சொல்' சீறினான்.

சில நொடியில் மானேஜர் மோகனசுந்தரம் வந்தான்—'லஞ்ச் டைம் போது ஏன் அழைக்கிறார்?' என்ற கேள்விக்குறி அவன் முகத்தில்.

''மிஸ்டர் வேதகிரிக்கு செலவுக்கு ஆபீஸ் பணத்திலிருந்து கொடுத்த கணக்கு உங்ககிட்ட இருக்கு. அதுக்கெல்லாம் அவர்கிட்ட முறைப்படி ஒரு கடன் பத்திரம் எழுதி வாங்கிக் கொள்ளுங்கள். அமெரிக்காவிலிருந்து அவர் மகன் பணம் அனுப்பிக் கடனைத் தீர்த்துவிடுவார். எதற்கும் செக்யூரிடிக்கு மாம்பலத்தில் அவர் பெயரில் இருக்கும் வீட்டை அடமானம் வைக்க ஏற்பாடு செய்து ஒழுங்கு செய்துவிடுங்கள். இது கம்பெனிபணம். அதனால் கறாராக இருக்க வேண்டியிருக்கிறது'' புன்னகைத்தான் ஹரி.

இடி விழுந்தாற் போலாயிற்று வேதகிரிக்கு. 'இந்தப் பொடிப் பயலுக்கு திடீரென்று என்ன வந்துவிட்டது? ஆத்திரம் தாளமுடியாது அவர் எரிமலையாகப் பொங்கிப் போனார்.

மானேஜருக்குக் கையைக் காட்டிவிட்டு கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்தார். ஹரியை எரித்து விடுகிறவர் போல வெறித்தார்.



''இப்படி என்னை அவமானப்படுத்தின பிறகு நீ ராதிகாவைக் கல்யாணம் பண்ணிக்க முடியும்னு நினைக்கிறியா?'' ஆத்திரத்துடன் கேட்டார்.

ஹரி நிமிர்ந்து அதே அளவு கோபத்துடன் உறுத்து விழித்தான். ''உங்களுக்குப் பாக்கிரவுண்ட் முக்கியம் என்கிறது எனக்குத் தெரியும். நான் ஒரு சாக்கடையிலிருந்து வந்தவன் உங்கள் பேத்திக்கு ஒவ்வாத வரன். என் நிலைமையை நன்றாகப் புரிந்து கொண்டுவிட்டேன்.''

என்னவோ சொல்ல வாயைத்திறந்த வேதகிரி படக்கென்று மூடிக் கொண்டார்.

''இப்படி வருகிறீர்களா?' மானேஜர் தலையை நீட்டி நச்சரித்தான். 'பாவி டாக்டர் வாசுதேவன இப்படிப்பட்ட கிராதகனாகவா இருப்பான். யதார்த்தமாகச் சொன்னதை உடனே பையனிடம் சொல்லித் தூபம் போட்டுவிட்டிருக்கிறானே...' தமக்குள் வெகுண்டபடி வெளியேறினார்.

மாலைவீடு திரும்பியபோது ஹரியின் வரவிற்காக [illegible] முன்னறையிலே காத்துக் கொண்டிருந்தாள்.

'உங்களுக்கு உடம்பு இப்போது எப்படி இருக்கு?' கேட்க வேண்டுமென்ற ஆவல். ஆனால் அவனுக்கு துணிவிருக்கவில்லை.

அந்த உரிமையை இழந்து விட்டோமே என்றதொரு நினைப்பில் வெட்கம்.

''என் அறைக்கு வர முடியுமா? உன்னிடம் சில முக்கிய விஷயங்களைப் பேசணும்'' அவளைப் பாராமலே சொல்லிவிட்டு [illegible] எழுந்து மெல்ல முன்னால் சென்றான். பிரீப் கேசைப் பணியாளிடம் கொடுத்துவிட்டு அவள் தொடர்ந்தாள்.

வசுமதி பெஞ்சியில் அமர்ந்து கொண்டாள். அவள் அருகே வந்து பணிவுடன் நின்றான். அந்த மிடுக்கு, திமிர், அகங்காரம் எல்லாம் மாயமாக மறைந்துவிட்டிருந்தன. அவள் அவனைப் பார்க்கவில்லை. சுவரில் தொங்கிய கணவனது படத்தைப் பார்த்துக் கொண்டு பேசினாள்.

''புனிதாவுடன் டெலிபோனில் பேசினேன். என்னை நேரில் அவங்க வீட்டுக்கு வரச் சொல்லியிருக்காங்க. என்றைக்கு எப்போ என்கிற விஷயம் இரண்டு நாளில் தெரியும். அதுவரை கொஞ்சம் பொறுமையாக இருக்கணும். நான் உனக்குச் செய்திருக்கும் துரோகத்திற்கு ஈடாக அபிராமி முன்னால் செய்த சத்தியத்தை மீறித்தான் இதைச் செய்கிறேன். அதற்காக அவள் என்னைஎப்படி வேண்டுமானாலும் தண்டிச்சுக்கட்டும். இப்போ நான் அனுபவிக்கிற தண்டனையைக் காட்டிலுமா அதிகமாக அபிராமி எனக்குக் கொடுக்கப் போகிறாள்?'' இரு கரங்களால் முகத்தை மூடிக் கொண்டு அவள் விம்மி அழுதாள்!

ஹரி துடிதுடித்துப் போனான். 'அழாதீங்க அம்மா! எனக்கு அந்த உண்மை வேண்டாம்...நீங்க ஒருத்தரே போதும்' என்று கூக்குரலிட்டு அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கதற வேண்டுமென்ற ஆவேசம்.

ஆனால் அவர்களுக்கிடையே பல நாட்களாகஎழுந்து விட்டதொரு இரும்புச் சுவர் அவனது உணர்ச்சிகளுக்குத் தடை போடவே, ஊமை போல், ஓங்கி உயர்ந்தமரம் போல் அவன் வாளா நின்றான்.

# 27

மங்களா சாம்பவியினின்று வசுமதி காரைச் சாலைக்குத் திருப்பினாள். மஞ்சள் வெய்யில் மங்கும் வேளை. மெல்லிய சூரிய ஒளி கண்களைக் கூசியது. ஒளித் தடுப்பைச் சற்று இறக்கிவிட்டுக் கொண்டு நிதானமாக வண்டியைச் செலுத்திக் கொண்டு போனாள். ஜன்னல் வழியே காற்று சுகமாகத்தான் வீசிக் கொண்டிருந்தது. மாலை வேளையின் போக்குவரத்து நெரிசல் குறைந்து சாலை கூடச் சற்று அமைதியாகக் காணப்பட்டது. அவள் மனத்தில்தான் அமைதி இருக்கவில்லை.

''இன்னிக்கு ஆறரை மணிக்குமேல் வரமுடியுமா? அப்போத்தான் சாவகாசமாகப் பேச எனக்குக் கொஞ்சம் ஒழியும்' அன்று காலை புனிதா அவளை டெலிபோனில் அழைத்துக் கேட்டாள். வசுமதி ஒருகணம் மௌனமாக யோசித்தாள். அதற்குள் புனிதாவின் பொறுமை கரைந்துவிட்டது. ''டெலிவிஷனில் ஏதாவது முக்கிய நிகழ்ச்சி இருக்கோ? தயங்கிறியே!'' ஏளனமான குரலில் சிரிப்பு.

பணம், பதவி, பல வசதிகள் எல்லாம் புனிதா பெற்று விட்டிருந்தாள். இடையே காலம் ஓடிவிட்டிருந்தது. ஆனாலும் அந்தப் பழைய நாளைய திமிர், ஏளனம் இவை குறையவில்லை. வசுமதிக்கு மெத்த வியப்பு. அவளை மீண்டும் சந்தித்துப் பேசி எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்றதொரு திகைப்பு 'உங்களிடம் பேச வேண்டியதைவிட எனக்கு இன்று வேறு முக்கிய விஷயம் ஒன்றுமே கிடையாது.''

''அப்படியா?'' மறுபடியும் காதை ராவிய அந்தச் சிரிப்பு ''பங்ச்சுவலாக ஆறரைக்கு வந்துவிடு' அட்ரஸ் தெரியுமில்லையா? மறுபடியும் கேட்டுக்கோ. இடம் தெரியாமல் தேடிக்கிட்டிருந்தேன் என்கிற கதை வேண்டாம்.

பூந்தமல்லி ஹைரோடிலே நேரே வந்துகிட்டே இரு. கடைசி முடிவிலே சுத்தி மதில் சுவரோட கூடின பெரிய தொரு தோட்டம் ஒண்ணு தென்படும். வெளிப் பார் வைக்குப் பங்களா சட்னு தெரியாது. கேட்டருகே சுவ ரில் பித்தளைத் தகட்டில் 'ஸரயூ'ன்னு பேர் மின்னுக்கிட் டிருக்கும். கூர்க்கா நிற்பான். அவன்கிட்ட சொல்லிவச் சுடுறேன். விஜயா எலக்ட்ரிக்கல்ஸிலிருந்து வரலங் கன்னு சொன்னா போதும். உள்ளே விட்டு விடுவான். போர்ட்டிகோவிற்கு வந்ததும் சட்னு காரை விட்டு இறங்கிவிடாதே. ஹௌண்ட் ஆப் பாஸ்கர்வில்போல என் ரோஸி ரொம்பப் பொல்லாத அல்சேஷியன். ஹார்ன் அடி. வேலைக்காரப் பையன் அதைப் பிடிச்சுக் கட்டிவிடுவான், இப்ப இறங்கலாம்னு அவன் சொன்ன பிறகு உள்ளே வா. கூடத் துணைக்கு யாரையும் கூட்டி வராதே. நீ எதுக்கு வரேங்கிறது யாருக்கும் தெரியக் கூடாது. ஞாபகமிருக்கட்டும்.''

''நானே காரை ஓட்டிக்கொண்டு தனியாகத்தான் வருவேன். கவலைப்படாதீங்க.''

''உன்னைப் பார்க்க எனக்கும் ஆவலாகத்தானிருக்கு வச்சுடட்டுமா?'' போனை டக்கென்று வைத்தாள் புனிதா.

சிறிதும் மரியாதையின்றி ஏக வசனத்தில் அவன்பேசி யதைக் கேட்டு வசுமதிக்குக் கோபம் முகம் சிவக்க, நெஞ்சு படபடக்க உதட்டைக் கடித்துக் கொண்டு யோச னையுடன் நின்றாள். அன்றுமாலை அவளுக்கு எப்படிப் பட்டவரவேற்புகிடைக்குமோ? அச்சமாகத்தானிருந்தது. துணிந்து இறங்கியாயிற்று. இனி துக்கப்படுவதில் லாபம்? அவள் கிளம்பிவிட்டிருந்தாள்.

கடிகாரத்தைப் பார்த்தாள் சந்திப்புக்கு நீண்ட நேரம் இருந்தது. புனிதா வீட்டு வாசலில் முன்னதாகச்



சென்று ஏன் நிற்க வேண்டும்? வெகுண்டபடி காரை மெல்ல ஓட்டிக் கொண்டு போனாள்

சாலை ஓரத்திலே ஒரு கிழவன் மாடு ஒன்றை ஓட்டிக் கொண்டு மெல்ல நடந்து போய்க் கொண்டிருந்தான். இடையில் மட்டும் முழங்காலைத் தொடுமளவுக்கு வேட்டி மேலே வெற்றுடம்பு...வறுமையிலே வாடி வற் றிக் குச்சியாகக் காய்ந்து விட்ட உடம்பு. எண்ணிக் கொள்ளச் சொல்லும் மார்பு எலும்புகள்.

அவளுக்குத் திடீரென்று மாமனார் அமிர்தலிங்கத் தின் நினைப்பு வந்தது...நோய் முற்றிப் போனதும் எழுந்து நடக்கச் சக்தியின்றி அவர் படுக்கையிலேகிடந்த போது அவரும் இந்தக் கிழவனைப்போல் எலும்பும் தோலுமாக இருந்தார். வெகு நாட்களாக அவள் மனத்தை ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டிருந்தது. அதைப்பற்றி ஒருநாள் அவள் அவரிடம் பேசிவிட்டாள்!

''ஒரு சமயம் புனிதா திரும்பி வந்து தன் பிள்ளை யைத் தன்னிடம் கொடுக்கும்படி வற்புறுத்துவா ளோன்னு அடிக்கடி எனக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. அதை நினைச்சு ராத் தூக்கமில்லாம கவலைப்படறேன்'

பலவீன நிலையிலும் கிழவரால் காரமாக, கோபமா கப் பேச முடிந்தது...''அவள் வர மாட்டாள். அவள் இப்போ எங்கே யாரோட வாழ்ந்துகிட்டு இருக்காள்னு எனக்குத் தெரியும், ஒரு நாள் நான் நம்ப டவுன் கடை யைப் பார்வையிடப் போனபோது பார்த்தேன். அந்தக் கார், நகைகள், அதையெல்லாம் விட்டுவிட்டுப் பிள்ளை யைத் தேடிக் கொண்டுவர அவளுக்கென்ன பைத்தியமா? என் மகனோட என் வீட்டுக்குள்ளே வந்தாளே அன்னிக்கே அவளை நான் எடை போட்டுவிட்டேன். ராஜசேகரன் மடையன். அவளுக்காக உசிரைவிட்டான். அவள்? நல்லா வாழ்ந்துகிட்டு இருக்காள்.'' வசுமதி

மௌனமாக இருந்தாள். கிழவர் கோபத்தோடு பேசிக் கொண்டு போனார். என் மகன் மேல் அவள் உண்மையான அன்பு வச்சிருந்தால், பணம் காசு இல்லாட்டாப் போகட்டும். நாமிருவரும் பாடுபட்டு உழைச்சு வாழ்வோம்னு அவனுக்குத் தைரியம் சொல்லி அவனைக் கட்டிக் கொண்டிருப்பாள். என் பிள்ளையை விட்டுத் தள்ளு என் பேரனுக்காகவாவது ராஜசேகரனை மணந்து கொண்டாளா? காதலிச்சவனைப் பத்தியும் கவலையில்லை. பிறக்கப் போகிற குழந்தையைப் பற்றியும் அக்கறை இல்லை. பணம் பதவிதான் குறின்னு இருந்தாள். அவள் ஒரு பெண்ணா? என் வரைக்கும் அவள் ஒரு பேய்...'' கிழவருக்கு மூச்சு தடுமாறியது.

வசுமதி திடுக்கிட்டாள். உங்க உடம்புக்கு நல்லதில்லை. நான் இந்தக் கேள்வி கேட்டது தப்பு. மன்னிச்சுக்கோங்க...'' சமாதானப்படுத்தினாள்.

கிழவர் மிகவும் சிரமப்பட்டு நிமிர்ந்து படுக்கை மீது சாய்ந்து கொண்டார். கோபத்திலே அவரது கண்கள் பளிச்சிட்டன. சுக்காக உடல் காய்ந்து கிடந்த போதிலும் உள்ளத்து உணர்ச்சிகளின் உஷ்ணம் குறைந்ததாகத் தெரியவில்லை. ''நானே இவையெல்லாம் பத்தி உங்கிட்ட பேசத்தான் நினைச்சேன். அதனாலே பரவாயில்லை. பேசினதாலே நான் ஒண்ணும் செத்துவிட மாட்டேன். பயப்படாதே'' அவர் சற்று நிதானித்து விட்டுத் தொடர்ந்தார் ''திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையில் என் மகனோடு அவள் வாழ்ந்து விட்டு செத்தபின் பிள்ளையைக் கையில் பிடிச்சுக்கிட்டு வந்து கேட்டிருந்தால் நான் மறுத்திருக்க மாட்டேன். ஆதரவு கொடுத்திருப்பேன்.''

''இதையெல்லாம் பற்றி இப்ப என்ன ஆராய்ச்சி? போதும் பேசாம மருந்தைச் சாப்பிட்டுவிட்டு...''



''உன்னோட பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கு. இனி எனக்கு அதுக்கெல்லாம் நேரம் இருக்குமோன்னு சந்தேகம். ஒண்ணு சொல்றேன். நல்லாத் தெரிஞ்சுக்கோ. நான் பிறவியிலேயே வியாபாரி. என் வியாபாரம் தழைக்க பொய் பித்தலாட்டத்திலே கொஞ்சம் புரண்டு எழுந்து வந்தவன். அரிச்சந்திரன் வாரிசு இல்லை. என் பேரன் உனக்கும் ராஜசேகரனுக்கும் பிறந்த பிள்ளைன்னு ரிஜிஸ்டர் பண்ணி எல்லாத்தையும் சட்ட ரீதியாக ஒழுங்கு பண்ணி வச்சிருக்கிறேன். இனி அவள் வந்து எட்டுக் கோர்ட்டு ஏறினாலும் உன் கிட்டேயிருந்து சின்னவனைப் பிரிக்க முடியாது. நீ தான் அவனது சட்டபூர்வமான தாய்...''

வசுமதியின் கண்கள் கலங்கின. ''அப்பா, என்ன சொல்றதுன்னு எனக்கே தெரியலை. ஹரியைப் பிரிய நேர்ந்தா என் உயிரே போயிடும்...''

''நீ சுத்த பைத்தியக்காரி அம்மா. அழாதே. அவனை உன்கிட்டேயிருந்து யாரும் பிரிக்க முடியாது. பிரிக்க மாட்டாங்க. அவன் உன் பிள்ளை இல்லைங்கிற ரகசியம் நமக்கு மட்டும்தான் தெரியும். பெத்தவ, நீ, நான், நம்ப அபிராமி இந்த நாலு பேருக்குத்தான் தெரியும்.''

''ஒருத்தருக்கு மட்டும் தெரிஞ்சதுன்னாத்தான் அதுக்கு ரகசியம்னு பேர்'' வசுமதி புன்னகைக்க முயன்றாள்.

''இந்தச் சங்கதி என்னோட இன்னும் கொஞ்சம் நாளில் மண்ணோடு மறைஞ்சு போகப் போவுது. புனிதா தன் நிலைக்கு பங்கம் வரும்னு பயந்துகிட்டு வாயைத் திறக்க மாட்டாள். நீ உன் நினைவில், உன் உணர்ச்சியில் ஹரியோடு ஒன்றிப்போய் உண்மையிலே அவனது தாயாக மாறிட்டே எல்லாத்தையும் பார்த்து

கிட்டு, நீக்கிற அபிராமி சத்தியத்துக்குக் கட்டுப்பட்ட வளாச்சே. அவள் உன் பக்கம்...''

வசுமதி கண்களைத் துடைத்துக் கொண்டு அவரை நன்றியுடன் பார்த்தாள்...''

அந்த ரகசியம் இப்போது வேதகிரிவரை பரவி விட்டது. ஊர் முழுவதும் தெரிய எவ்வளவு காலம் பிடிக்கப் போகிறது?

பங்களா ஸரயூவின் வாசலில் கார் வந்ததும் கூர்க்கா தெரிந்தவன்போல் சலாம் அடித்தான். கேட்டில் தொங்கிய பூட்டைத் திறந்து தள்ளிக் காருக்கு வழி செய்தான்.

பங்களா சாம்பவியின் தோட்டத்தைவிட அது பத்து மடங்கு பெரியதொரு தோட்டம். டெக்னிக் கலர் படம் போல் வண்ண வண்ண மலர்கள், கண் கொள்ளாக் காட்சி. எங்கிருந்தோ பயங்கர குரைப்புச் சத்தம். போர்ட்டிகோவில் கார் வந்து நின்றதும் அவள் சொன்னபடியே கொழுத்ததொரு அல்சேஷியன் ஆக்ரோஷமாகப் பாய்ந்தோடி வந்து கதவின் மேல் முன்னங்கால்களை ஊன்றிக் கொண்டு பயங்கரமாகக் குரைத்தது.

''ரோஸி!'' வேலையாள் கூப்பிட்டதும் ஒரே வினாடியில் ஆர்ப்பாட்டம் அடங்கிப் பூனையாகி தலையைத் தாழ்த்திக் கொண்டு அவன் பக்கம் நகர, அதை அவன் இழுத்துப் போனான்

''நீங்க இப்போ இறங்கி உள்ளே வரலாம்...'' டீக்காக உடுத்திக் கொண்டிருந்த கிருதா மீசை இளைஞன் ஒருத்தன் தன் பிடரிமீது புரண்ட முடியை நாசூக்காகத் தடவிக் கொண்டு புன்னகையுடன் வரவேற்றான்.

சலவைக் கல் படிகள் மீது மெல்ல ஏறி—சலவைக் கல்லிழைத்த வராந்தாவில் செருப்புகளைக் கழற்றி ஒதுக்குப்புறமாக வைத்துவிட்டு வசுமதி மெல்ல உள்ளே சென்றாள்.



அந்த வாலிபன் ''உட்காருங்கள்' என்று உபசரித்தான்.

மின்விசிறியைச் சுழலவிட்டான். விளக்கைப் போட்டான். பளீரென்று வெளிச்சத்தைப் பரவலாகச் சிதற விட்ட அந்த ராட்சஸ ஷாண்டலியரை நிமிர்ந்து பார்த்த வசுமதிக்கு வியப்பு. பளிங்குத் தரைமீது பரவிக் கிடந்த பாரசீகக் கம்பளத்தை நோட்டம் விட்டபடி மெல்ல ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள்.

''நான் அம்மாவுடைய பர்சனல் செக்கரெட்டரி. என் பெயர் மதன்.'' தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் அவன். ''அவங்க இப்பத்தான் ஒரு ஷூட்டிங்கிலிருந்து திரும்பி வந்தாங்க. உங்களை இங்கே உட்கார வைக்கச் சொன்னாங்க. டிரெஸ் மாத்திக்கிட்டு வர பத்து நிமிஷம் ஆகும்.'' பேசிக்கொண்டே அருகிலிருந்த மேஜைமீது கட்டு சினிமாப் பத்திரிகைகளை வைத்துவிட்டு அவன் மறைந்து விட்டான்.

மெல்ல நிமிர்ந்து மறு பக்கத்துச் சுவரைப் பார்த்தாள் வசுமதி. யாரோ ஓர் ஓவியன் தீட்டிய புனிதாவின் படம். பெரிய அளவில் சுவரை அலங்கரித்துக் கொண்டிருந்தது இன்னொரு பக்கம் சுவரை யொட்டி ஒரு பியானோ. அதன் அருகே உயரமானதொரு மேஜை. அதன் மேல் கைகளைத் தூக்கிக் கொண்டு சிரித்தபடி நின்ற சிரிக்கும் புத்தர் சிலை. விளக்கொளியில் பளபளத்த சிலையின் சிரிப்பு வசுமதியை என்னவோ செய்தது. நெற்றியில் துளிர்த்துக் காது ஓரங்களில் வழிந்த வியர்வை கழுத்தை நனைத்தது. விவரிக்க இயலாத ஒரு திகிலில் நெஞ்சு பக்பக் என்று அடித்துக் கொண்டது. நிமிஷம் யுகமாக நகர்வது போன்ற ஒரு பிரமிப்பில் அவள் பத்திரிகை ஒன்றின் ஏடுகளைப் புரட்டினாள். மாடிப்படிகளில் மெல்லிய காலடி ஓசை. நிமிர்ந்து பார்த்தாள். அவளால் நம்ப முடியவில்லை.

புனிதாவா!

படங்களில் மேகப்படலத்திலிருந்து கனவுக் காட்சியில் வெளிப்படும் கதாநாயகி போல் உடலோடு ஒட்டிய ஊதா வண்ண ஷிபான் சேலையின் ஓரம் படிகளில் உறவாடி அசைய ஒய்யாரமாக அவள் மெல்ல இறங்கி வந்த காட்சி—

இன்னமும் அதே இளமை—அதே அழகு!

வசுமதி திகைப்புடன் புனிதாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 28

அருகில் வந்தாள் புனிதா. எழுந்திருக்க முயற்சித்த வசுமதியைக் கையமர்த்திவிட்டு எதிரே ஓர் ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள்.

"பல வருடங்களுக்குப் பின்னர் நம் சந்திப்பு. அந்த வீட்டின் அறைக்கும் இந்த வரவேற்பறைக்கும், பழைய புனிதாவுக்கும் இந்த நிஷாதேவிக்கும் எத்தனை வித்தியாசம் பார்த்தியா?" கேலியாகக் கேட்ட புனிதா கலகலவென்று நகைத்தாள்.

'முன்னர் முதல் சந்திப்பின்போது சிரித்த சிரிப்பிற்கும் இப்போது சிந்திய சிரிப்பிற்கும் கூடத்தான் எத்தனையோ வித்தியாசம். அப்போது உங்கள் சிரிப்பில் நெருப்புக் கலந்திருந்தது. இப்போது குளுமையாக மகிழ்ச்சியுடன் சிரிக்கத் தெரிந்து கொண்டிருக்கீங்க!' —சொல்ல வேண்டும் போல் வசுமதியின் நா துடித்தது. ஆனால் வந்த காரியம் முக்கியமாயிற்றே?' வார்த்தைகளை விழுங்கிக் கொண்டு மெல்ல நிமிர்ந்து அவளைப் பார்த்து வணக்கம் தெரிவித்தாள்.



"வியப்பிலே நீ வாயடைச்சுப் போய் உட்கார்ந்திருக்கேன்னு புரியுது. காலம் செஞ்சிருக்குற ஜாலத்தைப் பார்த்தியா? வினாயகக்கோனார் சந்திலிருந்த புனிதாவுக்கு எத்தனை பெரியதொரு வாழ்வு! காலம் வேகமாக சுழன்று ஓடும்போது யார் யாரோ எப்படியெல்லாமோ மாறிப்போகிறாங்க இல்லையா? அன்னிக்கு நான் அடுத்த நாள் சாப்பாட்டைத் தேடி அலைய வேண்டியிருந்தது. இன்னிக்கு என்னைப் பார்க்க அப்பாய்ன்மெண்டைத் தேடிக் கொண்டு பெரிய படாதிபதிகள் எல்லோரும் அலைகிறாங்க."

வசுமதி வாளா இருந்தாள்.

முதலில் என்னைப் பார்த்தப்போ நான் ரொம்ப கஷ்ட நிலையில் இருந்தேன். அதற்குப் பின் சில மாதங்களிலேயே என் வாழ்க்கையில் ஒரு திடீர் திருப்பம். எனக்கு அதுசமயம் பங்களூரைச் சேர்ந்த பிரபல எண்ணெய் வியாபாரி மல்லிகார்ஜுனன் அறிமுகமானார். என்னை வைத்து சினிமாப் படங்கள் தயாரிக்க விரும்பினார். எனக்கும் நடிக்க மிகவும் ஆசையாகத்தானிருந்தது. அதிர்ஷ்டத்தின் கண் வீச்சு என் பக்கம் திரும்பிவிட்டது. அவ்வளவுதான். முதல் படத்திற்கு அமோக வெற்றி தொடர்ந்து மல்லிக் புரொடக்ஷன் எடுத்தபல படங்களில் நான் கதாநாயகியானேன். புகழையும் பணத்தையும் வாரிக் கொட்டினேன். இன்னமும் புகழின் சிகரத்திலேதான் இருக்கிறேன். ஆரம்பத்திலே நான் அவருடைய ஆதரவில் அவரது வாழ்க்கையில் மற்றொருத்தியாக வாழ்ந்து கொண்டிருந்தேன். சில வருடங்களுக்குப் பின் அவரது மனைவி நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாங்க. அதற்குப் பின்னர் அவர் என்னைச்சட்டபூர்வமாகத் திருமணம் செய்து கொண்டு விட்டார் சமூக அந்தஸ்திலே நான் பிரபல வியாபாரி மல்லிகார்ஜுனனின் மனைவி. சினிமா உலகிலே புகழ்மிக்க நட்சத்திரம்.

அவருடைய ஒரே பெண் பெயர்தான் ஸரயூ. இந்தப்பங்
களாவுக்கு அதைத்தான் வச்சிருக்கோம். நீ கூட எல்லாம்
கவனிச்சிருப்பே. மூணு வருடத்துக்கு முன்பு ஸரயூவின்
கல்யாணத்தை நாங்கள் விமரிசையாக நடத்தினோம்.
என் கணவர் தற்சமயம் பிஸினஸ் விஷயமாக ஜப்பான்
போயிருக்கிறார். என்னைக்கூட வரச் சொல்லி வற்
புறுத்தினார். இங்கே எனக்கு ஷூட்டிங் எக்கச்சக்கம்,
முடியலை. சுருக்கமாக இதுதான் என் கதை. நான் என்
வாழ்க்கையைப் பற்றிக் குறைபட்டுக்கொள்ள ஒன்றுமே
யில்லை. உன் மாமனார் அமிர்தலிங்கம் என்னை ஏற்க
மறுத்தது ஒரு வழியில் நல்லதாகப் போச்சு. அவர் ஏற்
றுக் கொண்டிருந்தால் இந்தப் புகழ், பணம், அந்தஸ்து,
அன்பான கணவன்...எல்லாம் கிட்டியிருக்குமா?''

தன்னைப் பற்றியே மூச்சு விடாது பேசிய புனிதா
அருகிலிருந்த ஒரு பித்தானை அழுத்தினாள் சப்தமி
டாது கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள் ஓர்
இளம்பெண். சுமந்து கொண்டு வந்த பெரிய தட்டை
அருகிலிருந்த வட்டமேஜை மீது வைத்துவிட்டு அவள்
மறைந்து விட்டாள். தட்டை மூடியிருந்த கொசுவலைத்
துணியை எடுத்துவிட்டுப் பீங்கான் கெட்டிலைத் தூக்கி
னாள் புனிதா. இரண்டு கோப்பைகளில் காப்பியை
நிறைத்தாள். பகாசுரனுக்குப் படையல் போட்டது
போன்று சிறு வெள்ளித் தட்டுகளில் கேக், பிஸ்கட்,
சமூசா போன்று பல்சுவைப் பலகாரங்கள் மரத்தட்டை
நிறைத்துக் கொண்டிருந்தன. ''அன்னிக்கு நம்ப முதல்
சந்திப்பின்போது ஒரு வாய் பச்சைத் தண்ணி கூடக்
கொடுக்காம அனுப்பினேனே என்ற ஆதங்கம், இவை
களை உனக்காக இன்று தயாரிக்கச் சொன்னேன்.
காப்பிக்கு எத்தனை ஸ்பூன் சர்க்கரை?''

பல்வேறு உணர்ச்சிகளில் குழம்பி முகம் இறுகி
அயர்ந்து போய் உட்கார்ந்திருந்த வசுமதி விழித்தாள்.



''நான் அந்தி வேளையில் எதையுமே சாப்பிடுவ
[illegible]ல்லை, மன்னிக்கவும்...'' தடுமாறினாள்.

சமூசா ஒன்றைக் கையில் எடுத்துக் கடித்துக்
[illegible]ண்டு காப்பியை மெல்லப் பருகினாள் புனிதா.
[illegible]யே வசுமதியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''உன் மனசிலே என்ன இருக்குன்னு எனக்குப் புரிஞ்
[illegible]து. இத்தனை வருடங்களாகியும் இவள் இன்னமும்
[illegible]மையாகவே இருக்கிறாளே இதன் ரகசியம் என்ன
[illegible] ஆச்சர்யத்திலே திகைச்சுப் போய் ஊமையாய்உட்
[illegible]ந்திருக்கிறே? உன்கிட்ட சொல்றதற்கு எனக்கு பயம்
[illegible]ல்லை. எத்தனை பெரிய ரகசியத்தையும் ஜீரணித்துக்
[illegible]ண்டு மௌனமாக இருப்பதில் நீ கை தேர்ந்தவள்.
[illegible]டன் நானும் என் கணவரும் இரண்டு வருடங்க
[illegible] முன் ஆறுமாச காலம் ஜெர்மனியில் தங்கியிருந்
[illegible]. அப்போ அங்கே ஒரு பிரபல பிளாஸ்டிக் ஸர்ஜ
[illegible] நான் பேஸ் லிப்டிங் ஆபரேஷன் பண்ணிக்
[illegible]ன்.'

[illegible]சுமதி மௌனமாகப் புன்முறுவலித்தாள்.

''என் கதையைச் சொல்லி விட்டேன். நீ எப்படி
[illegible]? அந்தக் கிழவன் கடைசியில் உன்னைத் தன் வீட்
[illegible]ள் அனுமதித்து விட்டான்னு கேள்விப்பட்டேன்...
[illegible]ரி. என்னைக் கட்டாயம் பார்க்கணும்னு அன்னிக்கு
[illegible]போனில் கூப்பிட்டு நிர்ப்பந்தம் பண்ணினேல்.
[illegible] தேவிதான் புனிதான்னு உனக்கு எப்படித் தெரி
[illegible] என்பெயர் மாற்றம் பரம ரகசியமாச்சே?''

''[illegible]னிமாப் பத்திரிகை ஒன்றில் உங்கள் படத்தை ஒரு
[illegible] பார்க்க நேரிட்டது. புரிஞ்சு கொண்டு
[illegible]ன்.''

''[illegible]ட்டிக்காரி! மேலும் உன்னால் என்னை மறக்
[illegible] முடியாது, இல்லையா?'' ...வேடிக்கையாக மீண்டும்
[illegible]த்தாள்.

பொங்கிக் கொண்டு எழுந்த அவமான உணர்வை வசுமதி விழுங்கிக் கொண்டாள். "நீங்க சொல்லுவது உண்மைதான்..."

"போனில் உன் குரலைக் கேட்டதும் புரியலை—பெயரைச் சொன்னதும் முதலில் கொஞ்சம் அரண்டு போய்விட்டேன். நேரில்தான் சொல்ல முடியும்னு சொன்னே. விஷயத்துக்கு வா. ஏதாவது டொனேஷன் சம்பந்தமா வந்திருக்கிறியா? பண உதவி வேணும் என்கிற கதையா?" புனிதாவின் குரல் கடுமையாகத் தொனித்தது.

வசுமதி ஒருகணம் தயங்கினாள். சிறிது அச்சமாகவும் இருந்தது.

"ஹரி உங்களைச் சந்திக்க விரும்புகிறான்."

"ஹரி?" புனிதா புருவங்களை வியப்புடன் உயர்த்தினாள்.

"உங்க மகனுக்கு நான் வைத்த பெயர் ஹரி."

புனிதா ஒருகணம் திடுக்கிட்டுப் போனாள். விவரிக்க இயலாத ஒரு உணர்விலே உடலில் ஒரு பதட்டம். தன் தடுமாற்றத்தை மறைக்க ஏளனமாக உரக்கச் சிரித்தாள்.

"பெற்றவள் நான். அதுசமயம் எனக்கிருந்த மனக் கசப்பில் அவனுக்கு நான் ஒரு பெயர்கூட வைக்கவில்லை. சும்மா பேபின்னு கூப்பிட்டுக்கிட்டு இருந்தேன். அவனை வளர்க்க ஒப்புக் கொண்ட அந்த அம்மாதான் மாணிக்கம்னு பேர் வச்சிக் கூப்பிட்டுக்கிட்டிருந்தாங்க. இப்போ உன் வீட்டில் அவன் ஹரி."

"நீங்க பார்த்தா ரொம்ப சந்தோஷப்படுவீங்க. பெருமைப்படுவீங்க. அழகான வாலிபனாக வளர்ந்து



நிற்கிறான். நல்லா படிச்சு இஞ்சினியர் பட்டம் பெற்று சமீபத்தில்தான் அமெரிக்காவிலிருந்து திரும்பிவந்தான்"

"நான் ஏன் அவனைப் பார்க்கணும்?"

"அவன் உங்களை நேரில் சந்தித்துப் பேச ஆசைப்படுகிறான்."

புனிதாவின் முகத்திலே பரவி நின்ற சிரிப்பு மறைந்தது. அலையாகப் பொங்கி எழுந்த சினத்தில் கண்கள் சிவக்க, குரல் உரக்க கடுமையாக உறுத்து விழித்தாள்.

"அவனுக்கு என்னைப் பத்தின விவரம் எப்படித் தெரியும்..." புலியாகச் சீறினாள்.

"அமெரிக்காவில் வாழும் உங்கள் தூரத்து உறவினர் ஒருத்தர் அவன் மனசில் சந்தேகத்தை உருவாக்கி விட்டிருந்தார். அது உண்மையான்னு தெரிஞ்சுக்க அமெரிக்காவிலிருந்து வந்தது முதல் ரொம்பப் பாடுபட்டான். என்னைக்கேட்காத கேள்விகள் கேட்டு ஆட்டி வைத்தான். அப்போ கூட நான் உண்மையைச் சொல்லலை. ஆனால் ஒருநாள் அவன் அபிராமியின் முன்னால் கேட்டதும் தான் என்னால் பொய் சொல்ல முடியலை."

"யாரந்த அபிராமி?"

"எங்க குலதெய்வம். அவள் முன்னால் என்னால் பொய் சொல்ல முடியலை. நான் அவனது தாய் இல்லை என்கிற உண்மை தெரிஞ்சதிலிருந்து அவன் உங்களைத் தேடி அலைகிறான். உங்க முகவரி வேணும்னு என்னை ரொம்பத் துன்பப்படுத்திவிட்டான் இதனால் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லாத அளவு விரோதம்."

"என்னை எதற்காகப் பார்க்கணும்?"

"பெற்றவளைப் பார்க்கணும்னு பிள்ளைக்கு ஏற்படும் இயற்கையான துடிப்பு. அதைத் தவிர வேறு எந்த

விதமான கெட்ட எண்ணமும் இல்லை. சத்தியம்— என்னை நம்புங்கள்!"

"உன் சத்தியத்தை உடைப்பில் போடு. என் நிபந்தனைகளுக்கெல்லாம் ஒப்புக்கொண்டு அன்று சத்தியம் செய்தாய். உன்கிட்ட அவனை ஒப்படைச்சதுக்கு பதில் ஆரம்பத்திலே நான் தீர்மானித்தபடி ஒரு ஆசிரமத்திலே விட்டிருந்தால் இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பமே ஏற்பட்டிருக்காதே அவன் யாரோ நான் யாரோன்னு போயிருப்போம் இல்லையா?'

"பெற்றவங்க நீங்க. இப்படிக் கடுமையாகப் பேசக்கூடாது. குழந்தை உங்களைப் பார்க்கத் துடிக்கிறான். அவன் மன வேதனை எனக்குப் புரிகிறது...கொஞ்சம் தயவு பண்ணுங்க." வசுமதி கெஞ்சினாள். நெஞ்சே வெடித்துவிடும் போன்றதொரு துயரத்தில் அவளால் மேலே பேசமுடியவில்லை. பொங்கி எழுந்த கண்ணீரைச் சமாளிக்கத் திணறினாள்.

"தவமிருந்தா அவனைப் பெற்றேன்? என் வரைக்கும் அவன் என் அவமானத்தின் அடையாளம். அதை மறந்து என் களங்கத்தைத் துடைச்சு தூர எறிஞ்சிட்டு நான் நிம்மதியாக இருக்கும்போது இப்படி ஒரு இடியா? உன் வார்த்தைகளை நான் நம்பமாட்டேன். ஒரு சமயம் உனக்குப் பணம் தேவையோ என்னவோ? இது ஒருவகை பிளாக் மெயிலா? என்னைப் பகைச்சுக் கொள்வது உனக்கு நல்லதில்லை. எச்சரிக்கிறேன்.'' கோபத்துடன் புனிதா எழுந்து நின்றாள்.

அவமான உணர்விலே மெய் பதறி வசுமதியும் எழுந்து நின்றாள்.

"என்னைப் பத்தி நீங்க தப்பா நினைக்கிறீங்க... காசு பணம் எதுவும் எனக்குத் தேவையில்லை. ஒரேஒரு



தடவை ஹரியைப் பார்க்க நீங்க அனுமதிகொடுக்கணும். கெஞ்சிக் கேட்டு உங்க அனுமதியை வாங்கத்தான் நான் நேரில் வந்திருக்கிறேன். பெரிய மனசு பண்ணி நீங்க ஒப்புதல் கொடுக்கணும்..."

புனிதா அவளை வெறுப்புடன் வெறித்தாள். வசுமதி கெஞ்சினாள்.

"எத்தனையோ அபிமானிகளுக்கும் பத்திரிகை நிருபர்களுக்கும் நீங்க தினசரி பேட்டி கொடுக்கிறீங்க— நீங்க பெற்ற பிள்ளை ஒரு தடவை உங்களைப் பார்க்க ஆசைப்பட்டுக் கேட்கிறான். தயவு செய்து சரின்னு சொல்லுங்க..."

'என் அபிமானிகளும் நிருபர்களும் என்னைப் பார்த்தால் என் புகழ் ஓங்கும். ஹரி என்னை சந்தித்தால்...? முடியாது. அவனைப் பார்க்க நான் மறுக்கிறேன். மரியாதையாகச் சொல்கிறேன்...இங்கிருந்து போய்விடு..."

உரக்கக் கத்திவிட்டுப் புனிதா உள்ளே செல்ல வேகமாகத் திரும்பினாள். திடீரென்று அவள் காலில் விழுந்து வசுமதி குமுறி அழுதாள்.

## 29

புனிதாவின் காலில் விழுந்த வசுமதி கதறினாள். "அவனுக்காக இல்லாவிட்டாலும் எனக்காக ஒரே ஒரு தடவை நீங்க அவனைப் பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசி விடுங்கள் போதும். தப்போ தவறோ அவன் உங்க மகன். மறுக்க முடியாத உண்மை. வாழ்க்கையில் என்னை முந்திக் கொண்ட மூத்தவங்க நீங்க. அந்த உரிமையில் உங்க காலில்..."

செயலற்று திகைத்து நின்று விட்டாள் புனிதா. உணர்வுகள் விழிப்படையச் சில வினாடிகள் சென்றன.

"எழுந்திரு! நான் என் நடிப்பால் பலமுறை படம் பார்க்கிறவங்க கண்களைக் கலங்க வச்சிருக்கேன். எதுக்குமே தளராத என் மனசையும் கண்களையும் நீ கலங்க வச்சுட்டியே! கெட்டிக்காரி...!'

கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்றாள் வசுமதி.

"ஒரே ஒரு நாள்—ஒரு தடவை மட்டும் ஹரியைப் பார்க்க ஒப்புக் கொள்கிறேன். நேரம் காலம் பின்னால் தெரிவிக்கிறேன்."

"மிக்க நன்றி" கைகுவித்து வணங்கி வசுமதி வெளியே வந்து காரில் அமர்ந்தாள்

"அபிராமி உன் பாதங்களை மட்டும் தொட்ட இந்தத் தலையை அவள் காலடியில் வைச்சுப் புலம்பும்படி என்னைக் கீழே தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்கிறியே! பலி சக்ரவர்த்தி போல உண்மையைப் புரிஞ்சுகொண்டு என் தலையைத் தாழ்த்திட்டேன். உன் பாத கமலத்தை வச்சு என்னை நீ பாதாளத்தில் தள்ளினாலும் சரி...நான் கீழே இறங்கத் தயார்...."

இருளைக் கிழித்துக்கொண்டு கார் வீட்டைநோக்கிப் பறந்தது!

அன்று காலை வீட்டை விட்டுக் கிளம்பியிருந்த வசுமதிக்கு சிறிதளவும் ஓய்வு இருக்கவில்லை. முதலில் அவள் குடும்பத்து வக்கீல் வராகசுவாமியைக் காண வேண்டியிருந்தது. பின்னர் ஆடிட்டர் அனந்தராமன். காலைப் பொழுது முழுவதும் இவர்களின் சந்திப்பில் கழிந்து போயிற்று

வேகமாகக் காரைச் செலுத்திக் கொண்டு அவள் விஜயா எலக்டிரிகல்ஸ் கட்டிடத்தருகே வந்தபோது



மதிய உணவு நேரம். தொழிலாளிகள் பலர் வெளியே
சாப்பிடச் சென்றிருந்தனர் ஆள் நடமாட்டம் குறைந்து
அமைதியில் மூழ்கிவிட்டிருந்த கட்டிடத்தின் மீது கண்
களை ஓட விட்டுக் கொண்டு சற்று நின்றாள். ஆரம்ப
காலத்திலே இருந்த அதே நிலையில் தான் இன்றுவரை
அது இருந்தது. அதிக மாற்றங்களை அமிர்தலிங்கம்
விரும்பவில்லை. எனினும் அத்துடன் அவளுக்குப் பல
ஆண்டுகளாக ஒரு தொடர்பு. உடம்பிலே உயிர்த்
துடிப்புடன் கூடிய ஏதோ நிலை வாயிற்படியைத்
தாண்டி உள்ளே நுழையுமுன்னர் இனம் விளங்கா ஒரு
துன்ப உணர்வு அவள் நெஞ்சை அடைத்தது ஆபீஸ்
அறைக்குள் சென்று அந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்
டாள். அந்தச் சுழல் நாற்காலி மிகவும் பழையது. கை
களை வைத்து தலையைச் சாய்த்த இடமெல்லாம் பச்சை
வண்ண ரெக்ஸின் தேய்ந்து உள்ளிருந்த பஞ்சு கூட
லேசாகத் தெரியத் தொடங்கிவிட்டிருந்தது. எனினும்
அவளது மாமனார் அமிர்தலிங்கம் உட்கார்ந்து அதி
காரம் செலுத்திய ஆட்சிபீடம். பலமுறை அவள்
கணவன் ராஜசேகரன்கூட அதில் உட்கார்ந்திருக்கிறான்.
பின்னர் அவள்—ஹரி.

இப்படி மூன்று தலைமுறையினரது உபயோகத்திலி
ருந்த அது ரத்ன சிம்மாசனத்திற்கு ஒப்பான உணர்வைத்
தந்தது. நாற்காலியின் கைகளை மெல்லத் தடவிவிட்டு
அறையைச் சுற்று முற்றும் பார்த்துப் பெருமூச்செறிந்
தாள். பின்னர் மேஜைமீது பார்வைக்காக வைக்கப்பட்
டிருந்த பைல்களை சிரத்தையுடன் ஊன்றிக் கவனித்துக்
கையெழுத்திட்டு முடித்தாள்.

ஆபீஸ் பையன் கொண்டு வந்து வைத்துப் போயி
ருந்த பழரச டம்ளரை அவள் தொடவேயில்லை. பைல்
களை அப்பால் நகர்த்திவிட்டு மூக்குக் கண்ணாடியைக்
கழற்றக் கையை வைத்தபோதுதான் கவனித்தாள்.
மேஜைமீது அளவோடு பொருத்தப் பட்டிருந்த

கண்ணாடியின் அடியில் செருகப்பட்டிருந்தது அவளது புகைப்படம். அயல்நாட்டிற்கு புறப்படுமுன் ஹரிதான் அதை அங்கு தன் படத்துடன் கூட அருகில் செருகி வைத்துவிட்டுப் போயிருந்தான்.

மெல்ல விரலால் கண்ணாடியைச் சிறிதளவு தூக்கி விட்டுத் தனது புகைப்படத்தை நகர்த்தி வெளியே எடுத்தாள் கைப்பையைத் திறந்து அதற்குள் போட்டுக் கொண்டு மூடிவிட்டு நிமிர்ந்தாள். ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள். எதிர் சுவரில் ரோஜா மாலை அலங்காரத்தில் கண்ணாடி வழியே படத்திநின்று அவளைப் பார்த்த அமிர்தலிங்கத்தின் கண்களில் ஏளனச் சிரிப்பு! அப்படி ஒரு பிரமையில் அவள் மெய் சிலிர்ந்துப் போனாள். பொங்கிக் கொண்டு வந்த அழுகையைச் சமாளித்துக் கொண்டு எழுந்து வெளியே நடந்தாள்.

ஆபீஸ் பையன் அழகிரி தன் ஆசனத்திநின்று எழுந்து வணங்கினான். சோர்ந்து விட்டிருந்த அவனது முகத்தைப் பார்த்துத் தயங்கினாள். "உன் தங்கச்சிக்கு இப்போ உடம்புக்கு எப்படியிருக்கு?" கனிவுடன் விசாரித்தாள்.

"கொஞ்சம் தேவலை. மருந்துகளுக்குத்தான் ரொம்பச் செலவு பிடிக்குது..." அழமாட்டாக் குறை அவனுக்கு.

கைப்பையைத் திறந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்தாள். "உன் தங்கச்சிக்கு நல்லா சிகிச்சை செய்து உடம்பு குணமானதும் சீக்கிரமா அதனுடைய புருஷன் வீட்டுக்கு அனுப்பிவை. இதைச் செலவுக்கு வச்சுக்கோ. திருப்பித்தர வேண்டாம். என் ஞாபகமாக இருக்கட்டும்."

வியப்பில் விழித்துக் கொண்டு நாக்குழற நன்றி தெரிவிக்க அவன் ஏதோ சொல்லி முடிப்பதற்குமுன் அவள் வெளியே சென்று விட்டாள்.



அவர்களது அண்ணாசாலைக் கடையை அவள் அடைந்த பொழுது பிற்பகல் இரண்டு மணி. பலத்த மனித நடமாட்டம். வியாபார நெரிசல். நேரே அவள் விரைந்து ஏ.சி. அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டாள். மானேஜர் மோகனசுந்தரத்துடன் முக்கியமான விஷயங்களைப் பேசிக்கொண்டு உள்ளே வந்த ஹரிக்கு மிக்க வியப்பு. சில தினங்களாக உடல்நிலை சரியாக இல்லாது வீட்டில் ஓய்வாக இருந்த அம்மா ஏன் திடீரென்று வந்திருக்காங்க?

"உடம்புக்கு முடியாம இருந்தீங்கன்னு கேள்விப்பட்டேன். இப்போ எப்படி இருக்கிறீங்க?" நரித்தலை மோகனசுந்தரம் கூடத் தன் சுபாவமான விஷமத்தை மறந்து யதார்த்தமாக விசாரித்தான். "கொஞ்சம் காய்ச்சல். அவ்வளவுதான். இப்போ நல்லாயிடுச்சு... தாங்க்யூ!" வசுமதி மலர்ந்த முகத்துடன் புன்னகைத்தாள். அருகில் நின்று கொண்டிருந்த ஹரியின் நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. தன் பக்கம் கூடத் திரும்பிப் பாராது அவள் அசட்டையாக அமர்ந்திருந்த கோலத்தைக் காண அவனால் பொறுக்கவே முடியவில்லை.

"இப்பத்தான் வந்தீங்களா?" கேட்க வாய்துடித்தது பேசத் துணிவு இருக்கவில்லை. அகம்பாவத்தினாலும், பிறர் பேச்சுக்குத் தலை சாய்த்த விபரீதப் போக்கினாலும் அவர்களிருவரையும் பின்னிப் பிணைத்துக் கொண்டிருந்த பாசத்தை, அன்பை அடியோடு வெட்டி அவன்தான் வீழ்த்தி விட்டானே? இனி அது எப்படி ஒட்டும்?

துரிதமாகத் தன் வேலைகளை கவனித்துவிட்டுக் கண்ணாடியைக் கழற்றிக் கூண்டுக்குள் வைத்து மூடிக் கொண்டாள் வசுமதி.

"அவ்வளவுதானே? கையெழுத்துப் போடவேண்டிய வேறு முக்கிய கடிதம் ஏதும் இல்லையே—அப்போ நான் போகலாமா?" மானேஜரிடம் அவள் கேட்டாள்.

"மறந்துவிட்டேனே சொல்ல. உங்களைப் பார்க்க வேணும்னு ஷோரூம் கோவிந்தன் காத்துகிட்டு இருக்கிறார்."

"வரச் சொல்லுங்க" உத்தரவிட்டாள் அவள்.

பைல்களைத் தூக்கிக் கொண்டு அவன் நகர்ந்தான். இதுதான் சமயம் என்று ஹரி தாயுடன் பேச வாயைத் திறக்குமுன் கதவைத் தள்ளித் திறந்து கொண்டுகோவிந்தன் உள்ளே வந்து நின்றார். தாயையும், மகனையும் ஒருங்கே பார்த்ததில் அவருக்கு மெத்த மகிழ்ச்சி. கை குவித்து வணங்கினார்.

"சின்ன ஐயாவுக்கு ஏற்கனவே தெரியும். நாலு நாளா அம்மா கடைப்பக்கம் வரலை. அதனால் சொல்ல முடியலை. பெரியவங்க புண்ணியத்திலே என் மூத்த மகனுக்குக் கல்யாணம் கூடி வந்திருக்கு. பெண்ணை அவனும் பார்த்து விட்டான். பிடிச்சுவிட்டது."

"அப்படியா ரொம்ப சந்தோஷம்," வசுமதி புன்முறுவலித்தாள். ஹரியின் தாடைச்சதைகள் இறுகின. வயிற்றில் நொறுங்கிவிடும் போல் பற்கள் நெருங்கின. நெஞ்சிலே நெருப்பை வாரிக் கொட்டிவிட்டது போன்றதொரு பயங்கரத் தவிப்பு. மேஜையைப் பார்த்தபடி தலையைக் குனிந்து கொண்டிருந்தான் அவன்.

கோவிந்தன் தலையைச் சொறிந்து கொண்டார். "பெண் கூட உங்களுக்குத் தெரிஞ்சதுதான். நம்ப பங்களாவுக்கு அடிக்கடி வருமாம். அது படிச்சு முன்னுக்கு வர நீங்கதான் ரொம்ப உதவினீங்களாம். சிவராமன் எல்லாம் விவரமாகச் சொன்னார்."



திடுக்கிட்டுப் போனாள் வசுமதி. "யாரைச் சொல்றீங்க?" மூச்சே நின்றுவிடும் போன்றதொரு படபடப்பு.

"சிந்தாதிரிப்பேட்டை சிவராமன் மகள் மஹிமாவை நான் என் பையனுக்குப் பேசிவிட்டு வந்திருக்கிறோம். அவர் ஒப்புக் கொண்டு விட்டார். நிச்சயதார்த்தத்தை சீக்கிரம் வச்சுக்கலாம்னு ஒரு யோசனை. அதுக்கு அடுத்த மாசம் வாக்கில் எனக்கு லீவு தேவையாக இருக்கு" கோவிந்தன் குழைந்தார். அவர் முகத்திலே மகிழ்ச்சி பொங்கி வழிந்தது.

நெஞ்சை உறுத்திய துன்ப உணர்வை அவள் சமாளித்தாள். "ரொம்ப சந்தோஷம். என் பாராட்டுகள்—மங்கள காரியங்களுக்கு லீவு கேட்க உங்களுக்கு உரிமையுண்டு—கொடுக்க நாங்களும் கடமைப்பட்டவங்க—கவலைப்படாதீங்க—ஏற்பாடு செய்கிறேன்—மஹிமா தங்கமான பெண்." சொல்லிவிட்டு அவள் பையை எடுத்துக் கொண்டு எழுந்திருந்தாள். ஒரே ஒரு கணம் அவள் கண்கள் ஹரியின் பக்கம் திரும்பின. ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளை அள்ளிக் கனலாகக் கொட்டிய அந்தப் பார்வையிலே பொசுங்கி விடுவான் போன்ற ஒரு பயங்கர உணர்வில் அவன் தவித்துப் போனான்.

"அம்மா! வலுவில் வந்த ஸ்ரீதேவியை உதறிவிட்டேனே" என்று அலறி அழவேண்டும் போன்ற வேகம். குத்துக்கல்போல் எதிரே நின்ற கோவிந்தனைக் கண்டு வார்த்தைகள் நெஞ்சிற்குள்ளேயே அடங்கிவிட்டன. திருதிருவென்று விழித்துக் கொண்டு அவன் வாளா உட்கார்ந்திருந்தான்.

வேகமாக வெளியே வந்த வசுமதி எதிர்புறத்திலிருந்த அந்த பிரபல பட்டுப் புடவைக் கடைக்குள் நுழைந்தாள்.

தன் முன் விற்பனையாளர் விரித்துப் போட்ட காஞ்சிபுர பட்டுச் சேலைகளின் மீது கண்களை ஓட்டி னாள். மயில் கழுத்து உடல்—பூராவும் சரிகைப் புட்டா அரக்கு—கரை—புடவை பார்க்க மிக அழகாக இருந்தது. "இந்தப் புடவையையும் ஜோடியாக ரவிக்கைத் துண்டை யும் சீக்கிரம் கட்டிக் கொடுங்கள்.'' உத்தரவிட்டாள் பர பரப்பாக.

குதவை மெள்ளத் தட்டித் திறந்து கொண்டு தூக்க மாட்டாத சாமான் சுமைகளுடன் உள்ளே வந்தாள் வசுமதி. சிவராமனுக்குத் தாங்கொணா ஆச்சரியம்.

"வாங்கோ. உட்காருங்கோ.'' உபசரித்துவிட்டு அவளது சுமையைக் கைநீட்டி வாங்க முடியாத தவிப் பிலே பரபரத்து நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"ஞானா! ஓடியா! அம்மா வந்திருக்காங்க...'' கூவி மனைவியை அழைத்தார். அதுசமயம் வீட்டில் கணவ னும் மனைவியும் மட்டுமேதான் இருந்தார்கள் சமையல் அறையில் அடுப்புடன் போராடிக் கொண்டிருந்தஞானம் ஓடிவந்தாள். நாற்காலியை இழுத்துப் போட்டாள். வசுமதியின் கையிலிருந்த சுமையை இறக்கி மேஜைமீது வைத்தாள். "உட்காருங்கோ, ஏது இந்தப் பக்கம்'' இனிய முகத்துடன் விசாரித்தாள். "கடைக்கு வந்திருப் பாங்க—நம்ப நினைப்பு வந்துவிட்டது...வந்திருக்காங்க. அதுவும் நல்லதாப் போச்சு—அம்மாவுக்கு சூடா ஓவல் ஏதாச்சும் கலக்கிக் கொண்டுவா'' ஏவினார்.

"அதெல்லாம் வேண்டாம். நான் அவசரமாகத் திரும்பணும்...ஒரு சந்தோஷ சமாசாரம் கேள்விப் பட் டேன்'' வசுமதி முடிக்கவில்லை.

"நானும் அதை சொல்லத்தான் வாயெடுத்தேன். வெகு சீக்கிரம் உங்க மஹிமாவின் கல்யாண சாப்பாடு



[illegible]க்குக் கிடைக்கப் போகிறது...'' சிவராமன்மகிழ்ச் [illegible] சிரித்தார். "எல்லாத்தையும் முடிக்குமுன் உங்க [illegible] வார்த்தை கேட்கணும்னுதான் நினைச்சேன். [illegible]மாக நீங்களே இங்கு வந்துட்டீங்க. அந்தப் [illegible] தகப்பனார் உங்கள் கடையில்தான் [illegible]க்கிறாராம். கேள்விப்பட்டவரை யோக்கி [illegible] குடும்பம்னு தெரிஞ்சுது.''

"[illegible]கோவிந்தன் ரொம்ப நாணயமானவர். அவரே [illegible] விஷயத்தை இன்னிக்கு சொன்னார். நான் [illegible] சந்தோஷப்பட்டேன்...''

"அப்படியா!...ஏதோ எங்க நிலைமைக்குத் தக்க [illegible]...பையனும் சம்பாதிக்கிறான். பெண்ணும் சம்பா [illegible]றாள். அதனால் சரின்னு ஒப்புக் கொண்டு [illegible]. எல்லாம் உங்க ஆசீர்வாதம்.''

'மஹிமாவுக்கு முன்கூட்டியே கல்யாணப் பரிசாக [illegible]ல் ஒரு புடவை வச்சிருக்கிறேன். அத்தோடு கல்யா [illegible] செலவிற்கு அவள் பெயருக்கு ஒரு செக் எழுதிக் கூட [illegible]ருக்கிறேன். தயவு செய்து நீங்க இதை எல்லாம் [illegible]ணும், மறுக்கக்கூடாது...''

சிவராமன் கண்கலங்கிப் போனார் "என்னம்மா [illegible]தெல்லாம்? பாக்கு, பழம், மஞ்சள், குங்குமம் மிட்டாய் [illegible]...''

"அண்ணன் தங்கை போல பழகியதின் அடை யாளம் [illegible]வுதான். குழந்தை என் கண்முன் வளர்ந்தவள். [illegible]தான் கொடுத்து வைக்காதவள். அதனால் என்ன? [illegible]ற எங்கே இருந்தாலும் அவள் க்ஷேமமாக இருக்க [illegible] ஆசீர்வதிக்கிறேன்...'' அவள்வார்த்தைகள் தடை [illegible].

"யாருக்கு யார்னு ஆண்டவன் தீர்மானிச்சிருக் [illegible]. நம் கையில் ஒண்ணுமில்லை. ஆமாம். கல்யா

ணத்திற்கு வந்து நீங்கதான் சிறப்பாக நடத்திக்கொடுக்க உதவணும், நன்றி அம்மா!' சிவராமன் குரல் தழதழத் தது.

டம்ளரில் சூடான ஓவலுடன் ஓடி வந்த ஞானாவின் வற்புறுத்தலை மீற முடியாது வாங்கி வேகமாகப் பருகி னாள் வசுமதி. பின்னர் சிறிது பொழுது தங்கியிருந்து விட்டு விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

வேலையில் நாட்டமின்றி குழம்பிக்கொண்டு உட் கார்ந்திருந்த ஹரியின் எண்ணங்கள் எங்கெங்கேயோ வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கிர்கிர் என்று ஒலித்தது டெலிபோன் மணி—திடுக்கிட்டு ரிஸீவரைத்—தூக்கி னான். மறுபுறத்தில் சேனாபதியின் குரல்.

''அம்மா உங்களை இன்னிக்கு கொஞ்சம் முன்ன தாகவே ஆபீசை விட்டு வரச்சொன்னாங்க. என்னவோ முக்கியமான வேலையாம்' சேனாபதி போனை டக் கென்று வைத்துவிட்டார்.

ஆபீஸ் முடியுமுன்பே பறந்துகொண்டு வீட்டிற்கு வந் தான் ஹரி. வசுமதி வெளியே போயிருந்தாள். அவன் அறையில் மேஜைமீது ஒரு கடிதம் இருந்தது. பரபரப் போடு பிரித்தான்.

'இன்று மாலை ஆறு மணிக்குப் புனிதா உன்னைத் தனிமையில் தன் வீட்டில் சந்திக்க ஒப்புக் கொண்டிருக் கிறார்கள். முகவரியை மேலே கொடுத்திருக்கிறேன். வீட்டைக் கண்டுபிடிப்பது சிரமம் அல்ல'—வசுமதி.

# 30

வெகு தொலைவில் இழுத்துச் செல்லப்பட்ட போதிலும் ரோஸியின் உக்கிரமான குரைப்பு தோட்டத்தை அதிரவைத்துக் கொண்டிருந்தது. வந்த வனின் சொந்தத்தை உள்ளுணர்வினால் உணர்ந்து கொண்டதாலோ என்னவோ அதன் குரைப்பு ஓய வில்லை. அம்பாசிடரை விட்டு இறங்கி நின்ற ஹரிக்கு ஏற்பட்ட பிரமிப்பும் சட்டென்று அடங்கிவிடவில்லை.

தன்னைப் பெற்ற தாய் வேறு ஒருத்தி என்ற உண்மையை உணர்ந்து கொண்ட நாளிலிருந்து அவன் மனத்திலே உருவாகி விட்டிருந்தது ஒரு வடிவம். வசுமதி யால் வஞ்சிக்கப்பட்டு, ஏமாற்றத்தில் இடிந்து போய் ஏழ்மையிலே ஒடுங்கிவிட்டிருந்த ஒரு சோகசித்திரம்தான் அவனது கற்பனைத் தாய். முன்பின் பார்த்திராத அந்த வடிவத்தைப் பற்றி எண்ணி, உருகி, பச்சாதாபத்தில் கரைந்து அவன் தவித்த தவிப்பு எத்தனையோ! அதனால் வசுமதியின் மேல் கொண்ட ஆத்திரமும் கொதிப்பும் கொஞ்ச நஞ்சமல்ல. இப்போது? அரண்மனை போன்ற அந்த அலங்கார பங்களாவின் தோற்றம் ஒன்றே அவனைத் திகைக்க வைத்துவிட்டது. அவனைப் பெற்ற வள் அத்தனை பெரிய பணக்காரியா?...

''குட் ஈவினிங்'' நாசுக்காக ஒலித்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தான். சலவைக்கல் வராந்தா விலே நின்று கொண்டிருந்த மதன் முகத்திலே சன்ன மானதொரு புன்னகை.

''அம்மா உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருக்காங்க. ஷூட்டிங்கிலிருந்து ரொம்பக் களைச்சுப் போய் வந் தாங்க. பதினைஞ்சு நிமிஷத்திலே உங்களைப் பார்க்க வருவாங்க. இப்படி வருகிறீர்களா?''

எதிரே நின்ற வாலிபனை ஏற இறங்கப் பார்த்தான் பட்டுக்கரை வேட்டி, சில்க் ஜிப்பா, கழுத்திலே தங்கச் சங்கிலி, பார்த்த முகம் போன்ற நினைவு. யார் இவன்? தயங்கியபடி ஒரு கணம் நின்றான்.

"நடிகை நிஷா தேவியைப் பார்க்க வந்திருக்கும் மிஸ்டர் ஹரி நீங்கள்தானே?" சந்தேகத்தைத் தெளிவித்துக் கொள்ள மதன் கேட்டான்

பிரபல நடிகை நிஷாதேவியா அவன் தாய்? அம்மா இதை ஏன் முன்கூட்டியே சொல்லி அவனை எச்சரிக்கவில்லை. அந்த அதிர்ச்சியில் அவளால் பேச முடியவில்லை.

'ஆம்' தலையை அசைத்துவிட்டு மதனைப் பின் தொடர்ந்து வரவேற்பறை ஆசனமொன்றில் அமர்ந்து கொண்டான்.

"பிலிமோத்சவத்தின் போது அம்மா வெளிநாட்டு நடிகர் ஒருத்தருடன் பேசிக் கொண்டிருந்த சமயம் எடுத்த படம் இது' சினிமா பத்திரிகை ஒன்றை அவன் முன் நீட்டிவிட்டு மதன் மறைந்து விட்டான்

பத்திரிகையின் அட்டையை அலங்கரித்த நிஷாதேவியின் வண்ணப் படத்தை வியப்புடன் உற்றுப் பார்த்த ஹரியின் நினைவிலே பளிச்சிட்டுக்கொண்டுவந்தது அந்த நிகழ்ச்சி.

கல்லூரி மாணவனாக இருந்த காலந்தொட்டு அவனும் நிஷாதேவியின் ரசிகன். ஒரு சமயம் சினிமா பத்திரிகை ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு நிஷாதேவியின் படத்தைப் பார்த்தபடி பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தான் எதேச்சையாக அறைக்குள் வந்த வசுமதிக்கு வந்ததே ஒரு கடும் கோபம்! பத்திரிகையை அவன் கரத்திலிருந்து பிடுங்கி மேஜை மீது விட்டெறிந்தாள்.



"பாடத்தைப் படிப்பதை விட்டு...இதெல்லாமா படிக்கிறாய்? எப்போ இதை வாங்கிக்கொண்டு வந்தே?"

அவளை அந்த மாதிரி ஒரு கோப நிலையில் அவன் அது வரை பார்த்ததேயில்லை நடுநடுங்கிப் போய் விட்டான், "நான் வாங்கலை...சேனாபதி படித்துக் கொண்டிருந்தார். கொஞ்சம் கொடுங்கன்னு கேட்டேன். மன்னிச்சுக்கோங்க அம்மா..." பதறிப் போனான் அவன்.

பத்திரிகையைச் சுருட்டிக் கொண்டு கீழே விரைந்தாள் வசுமதி. சேனாபதிக்கு அன்று சக்கையான மண்டகப்படி.

அந்த சம்பவத்தின் பூரா அர்த்தமும் இப்போதல்லவா ஹரிக்கு விளங்கியது. நிஷாதேவியின்—அவன் தாயின்—படத்தை ஹரி பார்த்து மகிழ்வதைக் கூட வசுமதியால் பொறுக்க முடியவில்லை. தன் கணவன் அன்பை முன்னதாகவே அடைந்து விட்டவள் என்ற ஆத்திரமோ? தான் வளர்க்கும் பிள்ளையைத் தன்னிடமிருந்து தாய் என்ற உரிமையில் பறித்துக் கொண்டு விடுவாள் என்ற பயமோ?

தேர்வின் போது வினாத்தாளை எதிர்பார்த்து உட்கார்ந்திருக்கும் மாணவனைப் போல் நெஞ்சம் படபடக்க, உடம்பெல்லாம் வியர்க்க, விவரிக்க முடியாத வேதனைகலந்த திகிலுடன் அவன் உட்கார்ந்திருந்தான். சரக் சரக்கென்றொரு சப்தம், திடுக்கிட்டுத் திரும்பினான். வரவேற்பறையின் பின்புறக் கதவு வழியே உள்ளே வந்தாள் நிஷாதேவி. அவளுக்கு முன் அவள் வாரித் தெளித்துக் கொண்டிருந்த ஃபாரின் செண்ட் மணம் அறை முழுவதிலும் பரவியது

வேகமாக எதிரே வந்து உட்கார்ந்த அவளை மெல்ல நிமிர்ந்து பார்த்தான் ஹரி. ரோஜா வண்ண [illegible]ப் பட்டுச்சேலை, கழுத்திலும் காதுகளிலும்

கைகளிலும் வைரங்கள் மின்ன இளமை மங்கா அழகுடன் மிடுக்காக அவனை உற்றுப் பார்த்த நிஷாதேவியா அவனைப் பெற்ற அன்னை புனிதா? இதுவரை உள்ளத்திலே குடி கொண்டிருந்த தாய் என்ற அந்தக் கற்பனை வடிவம் கணப் பொழுதில் சுக்கல் தூளாக உடைந்து விழுந்தது. அந்த அதிர்ச்சி, அதனால் ஏற்பட்ட வேதனை, கலக்கம் இவற்றைத் தாளமுடியாது போல் அவன் உடல் அவனையும் மீறி நடுங்கியது. ஓவென்று அழவேண்டும போன்ற துக்கம். நெஞ்சை அறுக்க ஏமாற்றத்தை விழுங்கிக் கொண்டு மெல்ல எழுந்து கை குவித்து வணங்கினான்.

"நீதான் ஹரியா?...பரவாயில்லை. வசுமதி உன்னை நன்றாகவே வளர்த்துவிட்டிருக்கிறாள். உன் அப்பனைப் போல் வாட்டசாட்டமாகத் தான் இருக்கிறே...உட்கார் அப்படி..." ஏளனமான மிடுக்கான குரலில் மெல்லச் சிரித்தாள் அவள்.

சாட்டையால் அடிபட்டது போன்ற வேதனையில் முகத்தைச் சுருக்கினான் ஹரி. பதில் பேசத்தோன்றாமல் மௌனமாக அவளைப் பார்த்தான். எந்த நிமிஷமும் வெடித்து விடும்போல் நெஞ்சு படீர் படீர் என்று அடித்துக் கொண்டது. உடல் முழுவதும் பூத்து நின்ற வியர்வைத் துளிகளால் ஜிப்பா நனைந்து நெஞ்சில் ஒட்டிக் கொண்டது.

"என்னைப் பார்க்க வேணும்னு துடியாத் துடிச்சியாமே! ஏன் வாயடைச்சுப் போய் உட்கார்ந்திருக்கே?" இன்னொரு சாட்டையடி.

முகம் சிவக்க, நெஞ்சு பதற, கைக்குட்டையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டான். துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டான்.

"பெற்ற தாயைப் பார்க்க வேண்டும் என்று பிள்ளைக்கு ஏற்படும் துடிப்பு இயற்கை இல்லையா?"



"பெற்ற பிள்ளையைப் பல காரணங்களால் பார்க்க விரும்பாத மனம் கசந்து போன தாயும் உண்டு. தெரிஞ்சுக்கோ." சினத்துடன் சீறினாள் அவள்.

"இயற்கைக்குப் புறம்பாகப் பேசுகிறீங்க. பெற்ற குழந்தையை வெறுக்கும் தாய் எங்கேயாவது இருக்க முடியுமா?"

"நீ நினைக்கிறபடி உலகத்தில் உள்ள அத்தனை தாய்களும் தாய்மையின் இலக்கணமாக இருந்து விட்டால் அனாதை ஆசிரமங்கள், அதுக்கு நிதிதிரட்ட வேண்டிய பணி இதெல்லாம் ஏற்பட இடமே இருக்காது. 'குப்பைத் தொட்டியில் உயிருடன் கிடந்த பிறந்த குழந்தை' என்று பத்திரிகையில் பார்க்க மாட்டாய். மனிதப் பிறவியின் அடிப்படை உணர்வு தற்காப்பு என்பது அதற்கு ஆபத்து ஏற்படும்போது தாயாவது? பிள்ளையாவது? புரிகிறதா? நீ என்னைப் பார்க்கத் துடிச்சே. ஆனால் நான் உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை, வெறுத்தேன். அது உனக்குத் தெரியுமா?"

ஹரியின் முகம் மேலும் ரத்தமாகச் சிவந்தது. அவமானத்திலே குன்றிப் போனான். "வெறுக்குமளவுக்கு நான் செய்த பிசகு என்னவோ?" தடுமாறினான்.

"திருமணமாவதற்கு முன் என் பாவத்தின் சுமையாக என்னுள் வளர்ந்தாய். சமூகத்தின் முன் தலை நிமிர்ந்து நடமாட அஞ்சி நான் தவித்த தவிப்பு, என் பிற்காலத்தை எண்ணி நான் பட்ட வேதனை, வடிச்ச கண்ணீர் இதெல்லாம் பற்றி உனக்குச் சொன்னாலும் புரியுமா?" பற்களைக் கடித்துக்கொண்டு உறுத்து விழித்தாள்.

ஹரி பேச வாயெடுத்தான். சட்டென்று வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான்...அதைப் புரிந்துகொண்டு விட்டு அவள் இகழ்ச்சியாக உரத்துச் சிரித்தாள். "பிசகு என்னுடையதா என்றுதானே கேட்க நினைச்சே? ஒப்புக்

கொள்கிறேன். தவறு என்னுடையதுதான். அந்தத் தவற்றை அழிக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எத்தனை! பிறந்த உடனேயே உன்னை வேறு ஒருத்தியிடம் கொடுத்து வளர்க்கச் செய்தேன்—அந்தச் செலவை சமாளிக்க முடியாதபோது உன்னை ஆசிரமத்தில் ஒப்படைக்கத் திட்டமிட்டேன். நீ செய்த புண்ணியம், கணவன் விட்டுப்போன கடமையைத் தான் செய்ய வேண்டுமென்ற பிடிவாதத்தில் வசுமதி என்னிடம் வந்து கெஞ்சினாள் உன்னைத் தரும்படி. உன்னை நான் அவளிடம் சும்மா கொடுத்துவிடவில்லை. என் கைச் செலவிற்குப் பணம் வாங்கிக் கொண்டுதான் கொடுத்தேன்."

உடல் சில்லிட்டு, உணர்வுகள் உறைந்து கல்லாகச் சமைந்து போய் உட்கார்ந்திருந்தான் ஹரி.

"என் இளம் பருவத்திலே வேண்டாத குழந்தையாக பிறந்து, என் வாழ்க்கையிலே அவமானச் சின்னமாகப் புகுந்து என்னை அவலப்படுத்தினே! அதற்காக உன்னை அப்போ வெறுத்தேன். இப்போ? நான் சிரமப்பட்டு எனக்கென்று ஒருவாழ்க்கை, கணவன், குடும்பம், நடிகை என்ற புகழ், பதவி, பெயர் எல்லாம் தேடிக்கொண்டு நிம்மதியா வாழ்ந்து கொண்டிருக்கையில் எங்கிருந்தோ பிள்ளையென்று வந்து என் வாழ்க்கையைச் சின்னா பின்னாபடுத்தப் புறப்பட்டிருக்கிறே. உன்னை இப்போ வெறுக்காமல் நான் கொண்டாடவா முடியும்?"

முகத்திலே ஆறாக வழிந்த வியர்வையை மறுபடியும் ...டைத்துக் கொண்டான் ஹரி. "சட்டம், சமூகம், ...வி, பணம் இவைகளுக்கு அப்பாற்பட்டதில்லையா ...மகன் என்ற உறவு?" அவன் குழறினான்.

...க்கும் எனக்கும் என்னடா உறவு வச்சுக் ...தமிழ் படிச்சவன்தானே? பட்டினத்தடிகளின் ...புகப்படுத்திப்பார். எத்தனையூர், எத்தனை



வீடு, எத்தனை தாய், பெற்றவர்கள் எத்தனை, பேர் இட்டு அழைக்க ஏன் என்றேன். அர்த்தம் தெரியுமா? இந்த உடம்பிலுள்ள ஆயிரக்கணக்கான அணுக்கள் ஒவ்வொரு நிமிஷமும் வேலை முடிந்ததும் அழிஞ்சு போகின்றன. மறுபடி புதிதாகப் பல அணுக்கள் பிறக்கின்றன. இந்தக் கணக்கில்தான் ஒரே பிறவியில் மனிதன் செத்துப் பலமுறை பிறக்கிறான் என்பது பாடலின் தத்துவம். ஏதோ ஒரு பிறவியில் புனிதாவின் மகன் நீ அவள் போய் விட்டாள். இப்போ இந்த நிஷா தேவிக்கும் உனக்கும் என்ன சொந்தம்?"

கண்களை மறைத்த நீரைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தான் ஹரி. "இத்தனை கடுமையாக என்னிடம் பேசுவீங்கன்னு நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு துளி கூட உங்களுக்கு என் மேலே அன்பு கிடையாதா?"

"உன்னைப் பொறுத்தவரை என் மனசு ஒரு பூட்டின கதவு."

"அதைக் கொஞ்சம் திறந்து இந்த ஹரிக்கு அதில் ஒரு துளி இடம் கொடுக்க முடியாதா?" துக்கம் தொண்டையை அடைக்கக் கெஞ்சினான்

"பல வருஷங்கள் பாராது பூட்டிக்கிடந்த அறையின் கதவைத் திறந்தால் வௌவால், புழுக்கை நாற்றம், சாமான்கள் மக்கிய வாடை, தேள், கரப்பான், பல்லி, பாம்பு இவைகள்தான் வெளிப்படும். தென்றல் வீசாது! கடந்த கால வாழ்க்கையின் கதவு திறந்தாலும் இதே கதிதான்! புரிஞ்சுக்கோ. வேதனையையும் வெட்கத்தையும் தவிர வேறு ஒண்ணும் வெளிப்படாது. வசுமதி கேட்ட போது முதலில் உன்னைப் பார்க்கவே நான் மறுத்தேன்."

"பின் ஏன் ஒப்புக் கொண்டீங்க?"

"வசுமதியம்மாள் உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிடும் ஒரு முட்டாள். ஆனால் என்னைவிடப் பல வழிக

ளில் உயர்ந்தவள். வாழ்க்கையில் முன்னேற நான் கொள்கைகளை உதறிவிட்டு எப்படியெல்லாமோ திசை திரும்பி விட்டவள். அவள் கணவன் நினைவுக்காக வைராக்கியத்துடன் கடமைகளுக்காகத்துறவு வாழ்க்கை மேற்கொண்ட உத்தமி நன்றிகெட்ட உனக்காக அவள் என்ன செய்தாள் தெரியுமா? குப்பைக்குச் சமமான என் கால்களில் விழுந்து அழுதாள். நான் பதறிப் போனேன். அவள் கண்ணீர் என் கால்களை நெருப்பாகச் சுட்டது. என் கல் மனம் கூடக் கரைஞ்சு போச்சு. அவளுக்காக ஒப்புக் கொண்டேன்.''

திடுக்கிட்டுப் போன ஹரி எழுந்து நின்றான், அவன் நெஞ்சே வெடித்துவிடும் போன்ற வேதனை.

"பெற்றவளுக்கு உன்னால் பெருத்த அவமானம். வளர்த்தவளுக்குத் தலை குனிவு. சே! நீயும் ஒரு பிள்ளையா?''

"மன்னிச்சிக்கோங்கோ. பெரும் பிசகு பண்ணிவிட்டேன்.'' கண்கள் கலங்க, நாத்தடுமாற, கைகூப்பி வணங்கினான் ஹரி.

"மறுபடி இந்தப் பங்களாமீது உன் நிழல்கூட விழக்கூடாது. ஞாபகம் இருக்கட்டும். நீ யாரோ—நான் யாரோ—மதன்!'' கிறீச்சென்று அவளது குரல் கோபத்தில் ஓங்கி ஒலித்தது "ஐயாவுக்கு வெளியே போக வழி காட்டு. ரோஸி கடித்துவிடப் போகிறது'' உத்திரவிட்டு விட்டு வேகமாக உள்ளே சென்றாள்

மேலே நடக்க முடியாமல் தள்ளாடியபடி ஜன்னல் சிலையைப் பிடித்துக்கொண்டு நின்றாள். ரத்த பாசத்திற்கு முன்னால் வேஷம் எம்மாத்திரம்? புயலாக உள்ளத்தை உலுக்கிய உணர்வுகளை கட்டுப்படுத்த இயலாமல் நிஷாதேவி புனிதாவாகிக் குலுங்க குலுங்க அழுதாள்.

# 31

புயலாக எழுந்து உள்ளத்தை உலுக்கிய உணர்வுகளின் வலிமையிலே துவண்டுபோய் விட்டிருந்தான் அவன். பேயறைந்ததுபோல் முகத் தோற்றம். குடி போதையில் தள்ளாடுகிறவன் போல் நடை. உள்ளே வந்தவனைக் கண்டு சேனாபதி திகைத்துப் போனார். 'இந்தப் பையனுக்கு உடம்புக்கு என்ன?' வியப்புடன் ஓடி வந்து ப்ரீஃப் கேஸை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டார்.

நிற்கவோ பேசவோ ஹரிக்கு மனம் இல்லை. ஓடிச் சென்று வசுமதியின் கால்களைக் கட்டிக் கொண்டு கதறி அழவேண்டுமென்ற ஆவேசம்.

"தெரியாமல் செய்துவிட்டேன். உங்களை ரொம்ப மனம் நோகச் செய்துவிட்டேன். மன்னிச்சுக்கோங்கோ'' என்று அலறவேண்டுமென்ற ஆத்திரம். பெற்றவள் பந்து போல் உதைத்து எறிந்து விட்டாளே என்ற அதிர்ச்சியை அவனால் தாங்க முடியவில்லை. ஆறுதலையும், மன்னிப்பையும் தேடிக் கொண்டு, வளர்த்தவளை அவசரமாகப் பார்க்க ஓடோடியும் அவன் வந்திருந்தான். பரபரப்பாக அவனது அறையை நோக்கி நடந்தான்.

"அம்மா வீட்டில் இல்லை' சேனாபதியின் உரத்த குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது. இரவு மணி எட்டாகிவிட்டதை முன்னறைக் கடிகாரம் பாட்டாக முழங்கிக் கொண்டிருந்தது. அந்த வேளையில் சாதாரணமாக அவள் வெளியில் போவது வழக்கமில்லையே? யோசித்தபடி நின்றான்.

"கனகதுர்க்கா அம்மா வந்து அவங்க காரிலே அழைச்சிட்டுப் போனாங்க. வர ரொம்ப நேரமாகலாம்.

அதனால் யாரும் தனக்காகக் காத்திருக்க வேண்டாம்னு
சொன்னாங்க...''

குழம்பிக் கொந்தளித்துக் கொண்டிருந்த அவனது
உணர்வுகள் மீது ஒரு சம்மட்டி அடி. வசுமதி அவனைச்
சந்திக்க விரும்பவில்லை. அவன் திரும்பி வரும்பொழுது
வீட்டிலிருக்கக் கூடாதென்று வேண்டுமென்றே புறப்
பட்டுப் போயிருக்கிறாள்!

விரிந்து விண்டு விடும்போல் நெஞ்சு வேதனையில்
வலித்தது. கண் இமை ஓரங்களைத் துயரம் கண்ணீராகச்
சுட்டது.

''சாப்பாடு தயாராக இருக்கு...''... இருமினார்
சேனாபதி.

''எனக்குப் பசியில்லை. நீங்க போய் சாப்பிடுங்க...''
மெல்லிய குரலில் சொல்லிவிட்டு மாடிக்கு விரைந்தான்.

குளியலறையில் புகுந்தான் ஷவரைத் திருப்பி விட்
டான். சில்லென்று குளிர்ந்த நீர் பூவாகக் கொட்டியது.
புண்ணாகிவிட்ட உடலுக்கும் உள்ளத்திற்குப் எத்த
னையோ இதமாக இருந்தது. வெகுநேரம் அவன் ஷவர்
அடியிலே நின்று கொண்டிருந்தான். இரவு உடைகளை
அணிந்து கொண்டு படுக்கைமீது வந்து சாய்ந்து கொண்
டான். அறையில் விடிவிளக்கு மட்டும் மங்கலாக எரிந்து
கொண்டிருந்தது. மாடிப்படியில் சேனாபதியின் கனத்த
காலடி ஓசை. பரபரப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

பால் டம்ளருடன் அவர் மூச்சு வாங்க உள்ளே வந்து
நின்றார். ''பதமான சூடாக இருக்கு—பாலையாவது
சாப்பிடுங்க...'' உபசரித்த வண்ணம் மேஜை மீது வைத்
தார். எத்தனை இரவுகள் இதே போல வசுமதி அம்மா
வும் அவனைத் தேடிக்கொண்டு பால் டம்ளருடன் வந்தி
ருக்கிறாள்! 'படிக்கிற பிள்ளை. உடம்பைக் கவனிச்சுக்க
வேண்டாமா? பாதித் தூக்கத்திலிருப்பவனை எழுப்பிப்



பரிவுடன் தன் கையால் பாலைக் கொடுத்து உபசரிப்
பாளே அவளது பரிசுத்தமான அன்பைப் புரிந்து
கொள்ளாது...மேலே நினைக்க முடியாது நெஞ்சை
அழுக்கிய துக்கத்தைச் சமாளித்துக் கொண்டான்.

தவிர்க்க முடியாது ஒரே மூச்சாகப் பாலை விழுங்கி
விட்டு டம்ளரை அவரிடம் நீட்டினான். திடீரென்று அது
சமயம் ஏற்பட்ட ஆவலை அடக்க முடியவில்லை.

''ஆமாம்! நீங்க இந்த வீட்டிலே கிட்டத்தட்ட
முப்பது வருஷம் இருக்கிறீங்க இல்லையா?''

தன்னுடன் சரிசமமாக அவன் பேசுவதைக் கண்டு
அவருக்கு மிக்க மகிழ்ச்சி.

''ஆமாம்! உங்கப்பா சின்னப் பையனாக இருந்த
நாளிலிருந்து இருக்கிறேன்.''

''அப்போ என் அப்பாவை உங்களுக்கு நல்லாத்
தெரியுமில்லையா?''

திகைத்துப் போனார் சேனாபதி. திடீரென்று
இவனுக்கு அப்பாவின் நினைவு ஏன்?

''நல்லா தெரியும். தோற்றத்திலே நீங்க அப்பா
வையே உரிச்சுக் கொண்டு வந்திருக்கிறீங்கன்னு சொல்
லலாம். சின்ன வயசில் அவர் உங்களைப்போலவேதான்
இருப்பார். தங்கமான குணம்.''

''தாத்தாவும் அப்பாவும் கடைசியிலே பிரிஞ்சு போய்
விட்டாங்க இல்லையா?''

''பல குடும்பங்களில் நடக்கிற சங்கதிதான். அவர்
களை ஒன்று சேரவிடாமல் கூட இருந்து கடைசி வரை
குழிபறிச்சார் அந்த மகராஜன் வேதகிரி'' ஆத்திரத்தை
அடக்கமாட்டாது அழுத்தமாகச் சொன்னார் சேனாபதி.

ஹரி மௌனமாக இருந்தான்.

"உங்க குடும்பத்திலே பலகாலம் உழைக்கிறேங்கிற உரிமையில் சொல்றேன். அம்மாகூட உங்ககிட்ட இந்த விஷயமெல்லாம் சொல்லியிருக்க மாட்டாங்க. உங்க தாத்தாவிற்குத் தூபம் போட்டு மனசைக் கெடுத்து வச்சவர் இந்த வேதகிரிதான்—இப்போ..." மேலே சொல்லத் தயங்கியபடி ஹரியைப் பார்த்தார். அப் பொழுதுதான் அவருக்கு நினைவு வந்தது. 'மறந்து விட்டேனே! அந்த வேதகிரி உங்களைப் பார்க்க இன்று சாயங்காலம் இங்கே வந்தார்—"

"என்னத்துக்கு?..."

"நாளை காலை உங்களை அவர் தங்கியிருக்கிற ஹோட்டலில் வந்து சந்திக்கச் சொன்னார். என்னவோ பண விவகாரமாம்..." டம்ளரை எடுத்துக் கொண்டு சேனாபதி கீழே சென்றுவிட்டார்.

சினத்துடன் பற்களைக் கடித்துக் கொண்ட ஹரி அறைக்குள் வெகுநேரம் ஆத்திரத்துடன் உலாவிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை. வெளியே செல்லத் தயாராகி விட்ட ஹரி கீழே வந்தான். மறுபடியும் பெருத்த ஏமாற்றம். வசுமதி விடியுமுன்பே ஸ்நானம், பூஜை முதலியவற்றை முடித்துக் கொண்டு வெளியே கிளம்பி விட்டிருந்தாள்.

வழியில் வேதகிரி தங்கி இருந்த ஹோட்டலின் அருகே காரை நிறுத்தினான். ரிஸப்ஷனில் விசாரித் தான்.

"வேதகிரியா? அவர் நேற்றே காலிசெய்துகொண்டு போய்ட்டாரே?"

ஹரிக்கு அடக்கமாட்டாத கோபம். வரச் சொல்லி விட்டு இப்படி ஒரு விளையாட்டா? ஆபீஸிற்கு விரைந்



தான். மும்முரமான வேலை நடுவே போன் மணி காதை அறுத்தது. வேதகிரிதான்.

"நண்பர் ஒருத்தர் வீட்டிலிருந்து பேசுகிறேன். எங்க வீட்டை அடமானம் வைக்கத் தேவையிருக்கவில்லை. என் பிள்ளை பணம் அனுப்பி இருந்தான். உன் கடனை ரொக்கமாக நேத்து உன் மானேஜரிடம் கட்டி ரசீது வாங்கிக் கொண்டு விட்டேன். நேரேயே சொல்ல வந் திருந்தேன். ஒருவழியில் நீ வீட்டில் இல்லாதிருந்தது நல்லதாகப் போச்சு..."

'ஆமாம், நல்லதாப் போச்சு...இல்லாட்டி வார்த்தை கள் தடிச்சிருக்கும்'...பற்களைக் கடித்துக் கொண்டான் ஹரி.

"வெள்ளிக்கிழமை நாங்க மூணுபேரும் அமெரிக்கா வுக்குப் புறப்படுகிறோம். உனக்கு குட்பை சொல்லக் கூடக் குழந்தைகளுக்கு விருப்பமில்லையாம்."

"தேவையில்லை—அன்னிக்கே உங்க எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டுவிட்டேனே..."

"காதலிக்கிறதும்—கழிச்சுக் கட்டுகிறதும் உங்க வம் சத்துக்கு ஒரு விளையாட்டாகிவிட்டது இல்லையா?"

"தகப்பனையும் பிள்ளையையும் பிரிக்கிறது. தாயை யும் மகனையும் மோதவிடுகிறது—இதெல்லாம் உங்களுக் குப் பெரிய விளையாட்டு, இல்லையா மிஸ்டர் வேதகிரி? உங்களை அமெரிககாவில் நான் சந்தித்தது, உங்கள் குடும்பத்தோடு தொடர்பு கொண்டது. என் பிறப்பு ரக சியத்தைத் தேடிக் கண்டுபிடிப்பதாக நீங்க எனக்கு வேப்பிலை அடிச்சு மயக்கினது, அந்த நன்றிக் கடனுக்கு உங்க பேத்தியை நான் மணக்கச்சம்மதிச்சது இதையெல் லாம் நினைத்து நினைத்து ரொம்ப வேதனைப்படுகி றேன். வெட்கப்படுகிறேன்...இத்தோடு தப்பினேனே அதுக்கு சந்தோஷம். உங்களுக்கும் உங்களைச் சார்ந்த

வர்களுக்கும் ஒரு பெரிய கும்பிடு'' டக்கென்று போனை வைத்தான். நெஞ்சு படபடவென்று துடித்துக் கொண்டது. உடலெல்லாம் பதறியது.

மன உளைச்சலை மறக்க வெண்ணி ஆபீஸ் வேலையில் நாள் முழுவதும் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். கடைசி பைலை கவனித்துவிட்டு நிமிர்ந்தபோதுதான் கவனித்தான் எதிரே கோவிந்தன் வந்து நின்று கொண்டிருந்தார்.

''நிச்சயத்துக்கு நாள் வச்சுட்டோம். அடுத்த இரண்டு வாரம் எனக்கு லீவு தேவைப்படும்... அதனால்.'' பற்கள் பளிச்சிட மகிழ்ச்சியோடு அவர் மெல்லச் சிரித்தார்.

உணர்வுகள் உறைந்து கல்லாகிவிட்ட பிரமையில் ஹரியினால் சட்டென்று பேச முடியவில்லை. விழித்தான்.

''எனக்குச் சேர வேண்டிய லீவு கொஞ்சம் பாக்கியிருக்கு...'' நினைவுபடுத்தினார் கோவிந்தன்.

''அதுக்கென்ன, மானேஜரிடம் கேட்டு ஏற்பாடு செய்து கொள்ளுங்க'' முடிவில் மென்று விழுங்கினான். நன்றியுடன் வணங்கி விட்டு அவர் வெளியே சென்றார்.

கண்களுக்கு முன் எல்லாமே இருண்டுவிட்டது போன்றதொரு திகைப்பு. ஊடே தாங்க முடியாத ஆத்திரம். கட்டுக்கொள்ள இயலாத துன்ப உணர்வில் ஏற்பட்ட தவிப்பு. ஹரியினால் அமைதியாக உட்கார்ந்திருக்க முடியவில்லை. ஆபீஸ் பொறுப்பை மானேஜரிடம் அவசரமாக ஒப்புவித்து விட்டு வெளியே விரைந்தான்.

மஹிமா வேலை செய்து வந்த அலுவலகத்தின் வாயில் ஒதுக்குப்புறமாகக் காரை நிறுத்திக் கொண்டு காத்திருந்தான். குற்ற உணர்விலே அவனது உடலும் உள்



[illegible] பதறிக் கொண்டிருந்தன. நகத்தைக் கடித்துக் [illegible] நேரம் வாயிலை ஆவலுடன் பார்த்துப் [illegible] கழுத்துக் கூட வலிக்கத் தொடங்கியது. ஐந்து [illegible] சில நிமிஷங்களில் பெருங் கூட்டமாகத் [illegible] வெளிப்பட்டுக் கொண்டிருந்தனர். [illegible] பல பெண்களும் வெளிவருவதைக் கண் [illegible] ஆவலுடன் அந்தக் கூட்டத்தைக் கண்களால் [illegible]. கடைசியில் கண்டு கொண்டு விட்டான். [illegible] முயற்சியில் ஒரு கணம் தடுமாறிப் போனான்.

[illegible]தானையை இழுத்துப் போர்த்திக் கொண்டு [illegible]மாக நடந்து சென்ற மஹிமாவின் அருகில் காரை [illegible]கக் கொண்டு நிறுத்தினான். திடுக்கிட்டு அவள் [illegible]னாள். வாடிச் சோர்ந்து விட்டிருந்த அந்த [illegible] அவன் நெஞ்சை உறுத்தியது ''மஹிமா! ஏறிக் [illegible]...உனக்காகத்தான் காத்திருந்தேன்.'' காரின் முன் கதவைத் திறந்து விட்டான்.

நெருப்பு விழிகளால் அவள் உறுத்துப் பார்த்தாள். ''[illegible] யூ—எனக்கு வீட்டுக்குப் போக வழி தெரியும்.'' [illegible]றினாள்.

''உன்னிடம் ரொம்பப் பேச வேண்டியது இருக்கு. [illegible] செய்து தர்க்கம் பண்ணாதே...ஏறிக்கொள்.'' [illegible]னான்.

''என்னை மறந்துவிடு, வேறு வாழ்க்கை தேடிக் [illegible]று சொல்லி உறவை அறுத்து எறிஞ்ச பிறகு பேச என்ன இருக்கு?'' அதட்டினாள்.

''விஷயம் பூராவும் ஒளிவு மறைவு இல்லாம சொன்னால் புரிஞ்சு கொள்வாய். ஏறிக்கொள் வண்டியில்''

''முடியாது...நம்ம சந்திப்பிலே ஏற்பட்டதெல்லாம் வெறும் கவர்ச்சி உணர்வு அப்படின்னீங்களே? வேறு பெண்ணை விரும்புகிறேன், என்னை மறந்துடுன்னு உத்

தரவு போட்டீங்களே அன்னிக்கு? இப்போ என் வாழ்க்கையிலே ஏன் குறுக்கிடுகிறீங்க...''

''வீணா பிடிவாதம் செய்யாதே...சொல்வதைக்கேள்'' கெஞ்சிக் கொண்டிருந்த ஹரி திடீரென்று கையை நீட்டி பலங்கொண்ட மட்டும் அவளை இழுத்து உள்ளே தள்ளிக் காரின கதவைச் சாத்தினான். வண்டியைக் கடற்கரைப் பக்கம் ஓட்டினான். சந்தடியற்ற ஓர் இடத்திலே நிறுத்தினான்.

''இப்படி முரட்டுத்தனமா என்னை வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்து தனிமையிலே என்னமோ பேசணுங்கிறீங்களே? யாராவது பார்த்தால் என் கதி?'' கோபமும் துக்கமுமாக அவள் திணறினாள்.

''உனக்கு எந்த கெடுதலும் நேராது. கவலைப்படாதே.''

''நல்ல பேச்சு! என்னை வேறு இடத்திலே கல்யாணம் செய்து கொடுக்க என் அப்பா முடிவு செய்திருக்கிறார். அவர் எழுந்து நடக்க முடியாத நோயாளின்னுட்டுத்தானே என்னை நீங்க இப்படி அவமானப் படுத்துகிறீங்க. அவருக்கு மட்டும் எழுந்து நடக்கமுடிஞ்சால் உங்களை.'' சொல்லி முடிக்காது அழுகையும் ஆத்திரமுமாகப் பார்த்தாள்.

''கேள்விப்பட்டேன். அதனால்தான் உன்னை இப்படிப் பலவந்தமாகக் கடத்திக் கொண்டு வந்தேன் என் மஹிமாவை இன்னொருத்தன் மணப்பதா என்ற ஆத்திரம்...என் முப்பாட்டனுக்கு பாட்டான் என்ன செய்தார் தெரியுமா?''

''உங்க குடும்ப பிரதாபத்தைக் கேட்க இப்போது நேரமில்லை.''

''கேட்க வேணும்னு வற்புறுத்துகிறேன். நீ அந்த கோவிந்தன் மகனுக்கு மனைவியாகப் போவதில்லை. ஹரிதான் உன் கணவன். தெரிஞ்சுக்கோ!''



''என்ன, பயமுறுத்தலா?''

''பயமுறுத்தல் இல்லை...ச த் தி ய ம்.'' கூறிக்கொண்டே தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி அவள் கழுத்திலே அணிவித்து விட்டான்.

''என்ன இதெல்லாம்!''

அவள் திமிறி நகருமுன் ஆர்வத்துடன் அவளைத்தன் அருகே இழுத்துக் கொண்டான். ''மஹிமா! இந்தச் சங்கிலியில் புலிநகப் பதக்கம் இருக்கிறது. எங்க குடும்பச் சொத்து. அர்த்தம் தெரியுமில்லையா? புலிநகப் பதக்கம் தாலிக்குச் சமம். இனி நீ யாரையும் மணக்க முடியாது—என் கதை பூராவும் கேள். பிறகு உனக்கே என் மேல் இரக்கம் வரும்.''

பொழுது அஸ்தமித்து அடி வானத்திலே கடலில் குளித்த தங்கக் குடம் போல் பூரண நிலவு எழுந்து கொண்டிருந்தது. நேரம் தெரியாது பேசிக் கொண்டிருந்தனர்.

''எத்தனை பெரிய முட்டாள் நான்! என் பிறப்பின் ரகசியத்தைத் தெரிந்து கொள்ளச் செய்த முயற்சியில் உன்னையும் அம்மாவையும் பணயம் வைத்தேன். பாவி நான். என்னை மன்னிச்சுவிடு மஹிமா. நீ இல்லாவிட்டால் எனக்கு வாழ்க்கையே இல்லை. இதை நான் புரிந்து கொண்டுவிட்டேன். என்னைப் பற்றிய ரகசியம் தெரிஞ்ச நாளிலிருந்து நான் பட்ட சித்ரவதை சொன்னால் புரியாது மஹிமா...'' அவளது தோள்மீது தலையைச் சாய்த்துக் கொண்டு வேதனையைச் சிந்தி விம்மி அழுதான் ஹரி.

''எத்தனை முயற்சித்தும் என்னாலும் உங்களை மறக்கமுடியாமல் நானும் ரொம்ப துன்பப்பட்டேன். மனசுக்குப் பிடிக்காத ஒருத்தரைக் கட்டிக்கொண்டு

வாழ்நாள் முழுவதும் வேதனைப்படணுமேன்னு எண்ணி நான் வடிச்ச கண்ணீர் உங்களுக்கு தெரியுமா?'' அவனது தோள் மீது அவளும் முகத்தைப் பதித்துக் கொண்டு அழுதாள்.

## 32

கவனிக்கப்படாது பாசி மண்டிக் கிடந்த முற்றத்தில் ஹரி இறங்கினான். மஹிமாவின் கையிலிருந்த நீர்ச் செம்பை வாங்கத் திரும்பிய அவன் கால் சறுக்கியது. மடால் என்று விழ இருந்தவன் ஆதரவுக்காக எட்டிக் கையைப் பிடித்தபடி மஹிமாவின் தோள்மீது சாய்ந்து விட்டான்.

கணவனுக்கு இரவு உணவு பரிமாறத் தட்டைத் தூக்கிக் கொண்டு வந்த ஞானம் பார்த்து விட்டாள். யார் இந்தப் பையன், மஹிமாவின் தோளைப் பிடித்துக் கொண்டு?

அவளுக்குக் கையும் காலும் பயத்தில் பதறின. கால்களைக் கழுவிக் கொண்டு நடையில் மஹிமாவுக்குப் பின்னால் நடந்து வந்தவனை உற்றுக் கவனித்தாள். "சந்தேகமேயில்லை, வசுமதியின் மகன் ஹரி! இந்த நேரத்தில் இவன் இங்கே ஏன் வந்தான்?' விடை காண முடியாத பல கேள்விகள். வேகமாக அறைக்குள்ளே சென்றாள். தட்டை மேஜை மீது வைத்துவிட்டுக் கணவன் அருகே குனிந்தாள். ''அந்தப் பிள்ளை ஹரி! நம்ம மஹிமாவோட வருகிறது.'' ரகசியமாக எச்சரித்தாள். புடவைத் தலைப்பில் பல முறை கையைத் துடைத்துக் கொண்டு கணவன் முகத்தைப் பீதியுடன் பார்த்தாள். '‘ஹரியா?'' சிவராமனுக்கு மிக்க வியப்பு. சிரமப்பட்டு ஒரு கைத் தாங்கலுடன் மெல்ல படுக்கையில்



எழுந்து உட்கார்ந்தார். கதவு அசைந்த போதெல்லாம் பெண்ணின் வரவை எதிர்பார்த்துக் கண் பூத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த அவருக்கு ஒரே குழப்பம்.

மெல்ல உள்ளே வந்து நின்ற மகளை உற்றுப் பார்த்தார். அழுதுவிட்டிருக்கிறாள் என மெல்லியதாக வீங்கியிருந்த கண் இமைகள் சொல்லின. ஆனால் கட்டுக் கொள்ளாத மகிழ்ச்சி முகத்தில் கூத்தாடியது.

''ஏம்மா இத்தனை நேரம்? வேலை முடிஞ்சதும் வீட்டுக்கு நேரே வருகிற பெண்?'' சற்றுக் கடுமையாகவே கேட்டார்.

''ஹரி வந்திருக்கிறார் அப்பா. உங்களைப் பார்க்கணுமாம்'' பயத்துடன் நிலத்தைப் பார்த்தபடி மென்று விழுங்கினாள் மஹிமா. தந்தையின் முகத்தைப் பார்க்கவும் அவளுக்கு அச்சமாக இருந்தது.

''என்னால்தான் தாமதமாகிவிட்டது, மன்னிக்கவும். மஹிமாவும் நானும் இத்தனை நேரம் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.'' கை குவித்து வணங்கிய ஹரி சொன்னான்.

''என்ன சொல்றே?'' வார்த்தைகள் அவரது வாயினின்று வெளிப்படாது குழறின! எழுந்து உட்கார வேண்டுமென்ற ஆத்திரத்தில் மற்றக் கையையும் காலையும் உதறிக் கொண்டு அவர் தவித்துப் போனார்.

''கடற்கரையில் அப்படித் தனியே பேசுவதற்கு என்னப்பா சங்கதி வச்சிருந்தே?'' ஏளனமாகக் கேட்ட அவர் வெட்டிவிடுவதுபோல் அவனை முறைத்தார்.

உட்கார் என்று உபசரிக்காததைக்கூட ஹரி இப்போது பாராட்டவில்லை நின்றபடியே பேசினான். ''கோபப்படாமல் கொஞ்சம் கேளுங்க. உங்கள் மகளை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். நேரிடையா உங்களைக் கேட்கத்தான் வந்திருக்கிறேன்...''

"நல்ல நேரம் சமயம் பார்த்து வந்திருக்கிறே. பேஷ்! பேஷ்! ஏம்மா மஹிமா! நீ கூட இப்படி ஒரு காரியம் செய்வியா? உன் வருங்காலத்தைப்பத்தி ஏற்பாடு கள் நடக்கிறச்சே இவனோட இத்தனை நாழி வெளியே சுத்திக்கிட்டு...சேச்சே! என் மூஞ்சியிலே கரியைப் பூச ணும்னு எத்தனை நாளா இப்படி ஒரு ஏற்பாடு..." மகளைப் பொசுக்கி விடுகிறவர் போல் பார்த்தார்.

"அப்பா!" துக்கம் தாளாது விம்மினாள் மஹிமா.

"உன் வாயாலே என்னைக் கூப்பிடாதே. என் உடம் பெல்லாம் பத்தி எரியுது. நாளைக்கு அந்தக் கோவிந்தன் வருவார். அவர் முகத்தை நான் எப்படிப் பார்க்க முடி யும்? என்ன பதில் சொல்வேன்?" அரற்றினார்.

"நீங்க விஷயத்தை தெரிஞ்சுக்காம ரொம்பக் கோப மாகப் பேசுறீங்க. நானும் மஹிமாவும் ஒருவரை ஒருவர் விரும்புகிறோம். சுமார் ஐந்து வருஷமாக எங்களிடையே வளர்ந்து கொண்டு வந்த விருப்பம் இது."

"இதென்ன புதுக் கதை? மஹிமா! இதெல்லாம் உண்மையா?" சீறிக்கொண்டு உரத்த குரலில் சிவராமன் கத்தினார்.

"ரொம்பக் கத்திப் பேசாதீங்க. அக்கம்பக்கத்திலே கேட்கப்போகுது." கலவரத்துடன் கணவனைச் சமா தானப்படுத்த முயன்றாள் ஞானம்.

"கையும் காலும் விழுந்துவிட்ட நோயாளி மடை யன் நான் அறையிலேயே அடைஞ்சு கிடக்கிறேன். நீ அடுப்புகிட்டேயே கிடக்கிறே. நம்மைத் தவிர இந்தச் சங்கதி ஊரே தெரிஞ்சிருக்கும். நாளைக்கு அங்கே வந்து நாக்கைப் பிடுங்கிறாப்பல கேட்கப் போகிறார்—ஐயோ கடவுளே" படீர் என்று தலையில் அடித்துக் கொண்டு புலம்பினார் அவர்.



ஞானத்தின் கண்களில் கண்ணீர் பொங்கியது. கண வனது கரத்தைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள். "அம்மா இருங்க. இப்படி அலட்டிக் கொண்டா உங்க உடம்புக்கு ஆகாதே..."

"ஏற்கெனவே பாதி உடல் உணர்ச்சி செத்துப் போச்சு. மிச்ச பாதி இந்த அவமானத்தைத் தாங்கிகிட்டு இருக்கணுமா? நோயாளியாகக் கிடக்கிறான் அப்பன். நாம் சம்பாதிச்சு போடுகிறோம்கிற திமிரில்தானே இந்தப் பொண்ணு இவ்வளவு பெரிய காரியத்தை அஞ்சு வருஷமா மறைச்சு வச்சிருந்திருக்கிறா?"

"இல்லையப்பா. அப்படிச் சொல்லாதீங்க. உங்க கிட்ட பேச பயந்து கொண்டிருந்தேன்" விம்மினாள்.

"ஒருவரையொருவர் விரும்பினோம். அதைத் தவிர தவறு ஒண்ணும் செய்துவிடவில்லை. இப்போ உங்களி டம் பெண் கேட்க நானே வலிய வந்திருக்கிறேன். இதில் அவமானப்பட என்ன இருக்கிறது?" ஹரி படபடப்பாகக் கேட்டான்.

"உன்கிட்ட இருக்கிற பணத்தையும் பங்களாவையும் கண்டு மயங்கி நீ கேட்டதும் நான் கொடுத்துவிடுவேனா? உன்மேலே உசிரை வச்சுக் கொண்டிருந்த வசுமதி அம் மாளை நீ பாடாய்படுத்தின சங்கதி எனக்குத் தெரியும். ஐந்து வருஷமா மஹிமா மேலே விருப்பம் வச்சிருந்தவன் அமெரிக்காவிலே ஒரு பெண்ணைப் பார்த்ததும் மனத்தை எப்படி மாற்றிக் கொண்டே? மறுபடி அவளை விட்டு இப்போ இங்கே ஏன் ஓடிவந்தே? உன்னை எவ்வ ளவு தூரம் நம்ப முடியும்?"

"பல காரணங்களால் ஏற்பட்ட தவறு அது. மஹிமா விடம் அதைப் பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறேன். அவள் என்னை நம்புகிறாள். நீங்களும் நம்ப வேண் டும்னு கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்."

''நான் ஏற்கெனவே வேறு இடத்திலே என்
பெண்ணைக் கட்டிக் கொடுக்க ஒப்புக்கொண்டு வாக்குக்
கொடுத்திருக்கிறேனே. உன் காசைக் காட்டி என்
வாக்கை விலை பேசுகிறியா? பணத்துக்கு அடிமையாகிற
ஆசாமியாக நானிருந்தால் இத்தனை காலத்தில் நான்
எப்படியெல்லாமோ வாழ்ந்துக்கிட்டிருப்பேன். எனக்கு
வாக்குதான் முக்கியம்'' உறுமினார் சிவராமன்.

''மஹிமா என்னைக்காதலிக்கிறாள். நீங்கள் அவளை
வற்புறுத்தி வேறு ஒருத்தனுக்கு மணம் செய்து வைக்க
நினைக்கிறது தப்பு.''

''அட சே! வாயை மூடு. நியாயத்தையும் தவறையும்
கண்டுவிட்டவன் பேச வந்துவிட்டான் எனக்கு மட்டும்
கையும் காலும் சரியா இருந்தா இத்தனை நேரம் எனக்கு
வர ஆத்திரத்தில் உன்னைக் கிழிச்சுக் கூறு கட்டியிருப்
பேன். மஹிமா என் மகள், அவளை என் மனசுக்குப் பிடிச்
சவனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பேன், என்?
ஒரு பாழுங்கிணற்றில் வேணுமானாலும் தள்ளுவேன்
அது என் இஷ்டம்.''

''அதெல்லாம் அந்தக் காலம். இப்போ பெண்ணின்
விருப்பத்தையும் தெரிஞ்சுதான் நடந்துக்கணும். வீம்புக்
காக நீங்க கண்டபடி பேசுகிறீங்க. மறுபடியும் உங்க
ளைக் கெஞ்சிக் கேட்கிறேன்...மஹிமாவை எனக்குத் திரு
மணம் செய்து கொடுக்க ஒப்புதல் கொடுத்து ஆசீர்வதி
யுங்கள்' ஹரி திடீரென்று குனிந்து அவரது கால்களைத்
தொட்டுக் கும்பிட்டான்.

''இந்த நாடகமெல்லாம் என்னிடம் செல்லுபடியா
காது. நான் கொடுத்த வாக்கை மீறமாட்டேன். வசுமதி
அம்மா மேலே நான் வச்சிருக்கிற மதிப்புக்காக உன்னு
டன் முகம் கொடுத்து இதுவரை பேசிக் கொண்டிருந்
தேன். நீ மரியாதையாக வெளியிலே போயிடு'' தாங்க
மாட்டாத கோபத்தில் கத்தினார்.



ஹரி இரக்கமாக மஹிமாவைப் பார்த்தான்.
''அப்பா!'' என்று அழுதுகொண்டு அவள் அவரது
காலடியில் தரையில் உட்கார்ந்துவிட்டாள். அவளை
அப்படியே வாரி எடுத்து ஆறுதல் சொல்ல வேண்டும்
என்று ஹரியின் உள்ளம் துடித்தது.
''உங்க மகள் விருப்பத்தை ஒரு வார்த்தை கேட்டுப்
பார்த்தபின் பேசுங்கள்...ப்ளீஸ்...'' ஹரி மறுபடியும்
கெஞ்சினான்.

''என் விருப்பந்தான் அவள் விருப்பம், கேட்கத்
தேவையில்லை...வில் யூ ப்ளீஸ் கெட் அவுட். என் மகன்
உன்னைவிட வயசில் சின்னவன். அவனைக் கூப்பிட்டு
உன்னை வெளியே நெட்டித் தள்ளும்படி நிர்ப்பந்திக்
காதே மானத்தோட வெளியே நட.''
கோபத்துடன் காலால் அருகிலிருந்த முக்காலியை
எட்டி உதைத்தார் சிவராமன். உண்டபின் கைகழுவ
அவருக்காக அதன்மீது வைக்கப்பட்டிருந்த வெண்கல
வட்டி கீழேவிழுந்து அறைக்குள்ளே ஓடிப் பலத்த சப்தத்
துடன் ஒரு மூலையில் போய் நின்றது வீடே தரையில்
விழுந்துவிட்டது போன்ற அதிர்ச்சியில் உணர்வுகள் எல்
லாம் தோய்ந்து தள்ளாடிக்கொண்டு வெளியே வந்தான்
ஹரி.

தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்து
கொண்டு வீட்டின் பின்கட்டை அடைந்தபோது அவ
னுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது சுவரில்
சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த சேனாபதி எழுந்து நின்
றார். சிவந்து விட்டிருந்த அவர் மூக்கையும் கண்களை
யும் கண்டு ஹரி திடுக்கிட்டுப் போனான். அவன் வாயை
திறக்குமுன் ஒரு கடித உறையை அவனிடம் நீட்டினார்.
''அம்மா கொடுத்து விட்டுப் போனாங்க...'' தழதழத்
தது அவர் குரல். கண்களிலிருந்து நீர் பொங்கி
வழிந்தது.

அவசரமாகப் பிரித்தான். படித்தான்.

"நேரிலே பேச மனம் கூசுகிறது. எனினும் என் உண்மை நிலையை விளக்கி விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நெல்லின் உமியை நீக்கிவிட்டு மறுபடி ஒட்ட வைத்து விதைத்தால் முளைக்குமா? அது போலாகி விட்டது நமக்குள் நிலவியிருந்த உறவு நிலை. நீடித்து இதைப் பொறுத்துக் கொண்டு இங்கேயே தங்கியிருக்க மனமின்றிப் போகிறேன்.

என்னைத் தாய் என்று ஏற்க இப்போது உன் மனம் மறுக்கிறது. ஆனால் பல ஆண்டுகள் தாய் மகன் என்ற உறவின் நெருக்கமான பாசப்பிணைப்பில் வாழ்ந்து விட்டிருக்கிறோம். இவ்வளவு காலத்திற்குப் பின் என்னைப் புரிந்து கொள்ள முடியாத நீ இனிமேலா புரிந்து கொள்ளப் போகிறாய் என்ற துக்கத்தில் உடைந்த உள்ளத்துடன் போகிறேன்.

நான் போகும்போது உடுத்திக் கொண்டிருக்கும்என் புடவை மாற்றுக்கு வேண்டிய சில ஆடைகள் மருந்துகள் சில அத்தியாவசியமான பொருள்கள் இவைகளை மட்டுமேதான் எடுத்துப் போகிறேன். உன் பாட்டியின் உயர்ந்த நகைகள் முழுவதையும் உன் தாத்தா எனக்குப் பரிசாகக் கொடுத்து விட்டிருந்தார். அவைகளை நான் கையால் தொட்டது கூட இல்லை. பாங்கியில் அவைகள் பத்திரமாக இருக்கின்றன. இதை உனக்கு விட்டுப் போகிறேன். என் மாமனார் இறக்குமுன் என் பெயருக்குக் கொஞ்சம் தொகையை ஒதுக்கி வைத்துவிட்டுப் போயிருந்தார். வட்டியில் வளர்த்து அது கணிசமாகிவிட்டிருந்தது. அதிலிருந்து பத்தாயிரம் ரூபாய்களை சேனாபதிக்கு என் பரிசாகக் கொடுத்துவிட்டு மீதியை உன் பாட்டனார் நினைவாக கனகதுர்க்கா நடத்திவரும் ஆசிரமத்திற்கு நன்கொடையாக வழங்கி விட்டேன். அந்தம்



மாள் பெரிய மனது பண்ணி என்னை அதில் ஒரு சேவகியாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். என் கடைசி நாட்கள்வரை என்னால் ஆன பணியைச் செய்து அங்கேயே தங்கி விடுவதென்ற ஏற்பாடு. எனது பட்டுச் சேலைகள் உன் தந்தை எனக்கு அளித்த சில நகைகள் இவற்றை [illegible]மாவுக்குக் கொடுக்கும்படி சேனாபதியிடம் ஒப்படைத்திருக்கிறேன். என் முடிவு காலம்வரை கம்பெனியின் பங்குதாரராகப் பெயரளவில் இருப்பேன். கம்பெனியில் வரும் ஊதியம், வீடு மற்ற எல்லாப் பொருள்களும் உன்னையே சேரும். வக்கீல் எடுத்துச் சொல்வார்.

[illegible] மீது ஆசையில்லாத நான் உன்னை ஏன் எடுத்து வளர்த்தேன்? நீ கேட்க வேண்டிய நியாயமான [illegible]

உன் தந்தையை நான் மணந்த போது அவரது [illegible] காலத்தைப் பற்றிய விவரம் எதுவுமே எனக்குத் தெரியாது. என் கணவர் மீது உயிரையே வைத்துக் கொண்டு வாழ்ந்த எனக்கு அவரது திடீர் மரணம் ஒரு [illegible] தாங்க முடியாத துக்கத்தைக் கொடுத்தது. அந்தப் பிரிவைச் சகிக்க முடியாது நான் துடித்துக் கொண்டிருக்கையில் புனிதாவையும் உன்னையும் பற்றித் தெரிந்து கொண்டேன். என் கணவரின் உயிர்த் துடிப்பின் ஒரு துளி குழந்தை உருவில் வளர்வதை உணர்ந்து நான் [illegible] மகிழ்ச்சி? அந்தச் சிறுதுளி உயிருடன் ஒன்றியிருந்தால் துயரம் குறையாதா? கணவனை இழந்த [illegible] பெரும் துக்கத்தைச் சிறிதாவது மறக்க மாட்டோமா என்ற ஏக்கம். அந்த ஆசையில் தான் உன்னைத் தேடிக் கொண்டு வந்தேன். நீ எனக்குக் கிடைத்தாய். உன்னை வளர்த்து மகிழ்ந்தேன்

சூன்யமாகிவிட்ட என் வாழ்க்கையை நிறைக்கச் சுயநலம் காரணமாகத்தான் உன்னை எடுத்து வளர்த்தேன். உண்மையை உன்னிடம் மறைத்தது மாபெரும் தவறு.

அதற்குத் தக்க தண்டனையை இந்தச் சில நாட்களில் பூராவும் அனுபவித்து விட்டேன். உனக்கு இதுவரை நான் இழைத்துவிட்ட துரோகத்திற்காக என்னை நீ மன்னிக்க வேண்டும். கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என் கணவரது புகைப் படத்தை நான் எடுத்துப் போகிறேன். எனக்கு அதுதான் துணை. இது வரை பூஜித்து வந்த அபிராமியை என் உள்ளத்தில் வைத்துக் கொண்டு அவளது திருவுருவத்தை பூஜை அறையிலேயே விட்டுப் போகிறேன். அது உங்கள் குடும்பத்து சொத்து. எத்தனை முயற்சித்தும ரெக்ஸி என்னை விடமாட்டேன் என்று அழுகிறது. வாயில்லாத அந்த ஜீவனின் துயரத்தைக் காணச் சகிக்காது என்னுடன் கூட ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்கிறேன். இதுநாள் வரைக்கும் எனக்கு மகனாக இருந்து என் தாய்மை உணர்வுக்கு நிறைவு தந்து என் மாபெரும் துயரத்தை மறக்கத் துணையாக இருந்து உதவிய உனக்கு நன்றி, மகனே. நன்றி. ஆசிகள் பல!"

"அம்மா!" என்று தன்னையும் மீறி அலறிய ஹரியின் தலை சுற்றியது. அடிவயிற்றை வேதனை புரட்டியது. தள்ளாடிக் கொண்டு பின்கட்டுக் குளியலறைக்கு ஓடினான். சேனாபதி பரபரப்புடன் பின்னால் விரைந்தார்.

சேனாபதி ஓடிவந்து கைத்தாங்கலாகப் பிடித்துக் கொள்ளுமுன் பகல் உண்ட உணவெல்லாம் வாந்தியாக வெளியே கொட்ட, கண்கள் இருள தலை சுழல தடாலென ஹரி மயக்கமாகத் தரையில் விழுந்துவிட்டான்.

# 33

காலை வேளையில் கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்து முடித்தாள் ஞானம். காப்பி பலகாரத்திற்குப் பிறகு பத்திரிகையைப் பிரித்துக் கொண்டு படுக்கைமீது சிவராமன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். அப்பொழுதுதான் அவளுக்குப் பேசத் துணிவு ஏற்பட்டது "மஹிமா உங்ககிட்ட ஏதோ பேசணுமாம்..." மெல்லிய குரலில் சொன்னாள்.

பத்திரிகையை மடிமீது போட்டுக் கொண்டு மனைவியின் முகத்தைப் பார்த்தார் சிவராமன். பலூன் போன்று அவள் முகம் ஊதி உப்பிப் புடைத்துவிட்டிருந்தது. "மஹிமாவிற்கு ஆபீஸிற்குப் போக நேரமாயிச்சே?"

"உடம்புக்குச் சுகமில்லை. வர முடியலை. லீவு வேணும்"னு மூலக்கடை டெலிபோனில் ஆபீஸிற்கு போன் செய்து விட்டாள்.'

சிவராமன் பெருமூச்செறிந்தார். "எப்பேர்ப்பட்ட சிக்கலில் இந்தப் பெண் என்னை மாட்டிவிட்டிருக்கிறாள்! அதைப் பத்திக் கொஞ்சமாவது அவளுக்குப் பொறுப்புணர்ச்சி இருக்கா?"

"எப்படிப்பட்ட சிக்கலையும் நிதானமாகப் பேசிப் பிரிச்சு விட முடியும். எதுக்கும் நீங்க அவகிட்டே நேரேயே பேசிப் பாருங்க..." ஞானம் அறையை விட்டு மெல்ல நழுவினாள்.

தொடர்ந்து மெல்லிய சத்தம் கேட்டதும் அவரது நெஞ்சு படபடத்தது. வருத்தமா, கோபமா என்று புரியாத ஒரு தவிப்பு. மெல்ல உள்ளே வந்து படுக்கையருகே நின்ற மகளின் முகத்தைப் பார்த்ததும் அவர் மனம் துணுக்குற்றார். ஓர் இரவிற்குள் மஹிமா வாடிச் சோர்ந்து துவண்டு போய் விட்டிருந்தாள்.

''அப்பா! உங்ககிட்ட பேசணும்...'' கரகரத்தது அவள் குரல்.

''உம்...''

தரையில் அவரது காலடியில் உட்கார்ந்து கொண்டாள். பேச ஆரம்பிக்குமுன் கண்கள் கலங்கின. வார்த்தைகள் தடுமாறின. மெல்லத் தன் கைகளைத் தன் தந்தையின் பாதங்கள்மீது வைத்துக் கொண்டாள்.

''அப்பா! எனக்குக் கல்யாணமே வேண்டாம். தொடர்ந்து வேலை செய்து நம்ம குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வரும் பணியிலே என் வாழ்நாளைக் கழிக்கிறதுன்னு முடிவு செய்துவிட்டேன். உங்களோடயே எப்பவும் இருக்க எனக்கு அனுமதி கொடுங்க அப்பா...'' அவள் விம்மிக் கொண்டே அவரது கால்களைக் கட்டிக் கொண்டாள்.

அவளது துயரம் சிவராமனின் மனத்தைக் கரைத்தது. அவரது கோபமெல்லாம் பஞ்சாய்ப் பறந்தோடி விட்டது. உணர்வு இழநத கையை நீட்டி மகளது முடியை மெல்ல வருடினார் ''அழாதேயம்மா...வாழ வேண்டிய பெண் நீ இப்படி ஏன் முடிவு எடுக்கணும்?''

நிமிர்ந்து தந்தையைப் பார்த்த மஹிமாவுக்குத் துக்கம் மேலும் பொங்கிப் புரண்டு வந்தது. தடைப் படுத்த முடியாத கண்ணீர் மாலையாகக் கண்களில் வழிந்தோடியது. ''ஐந்து வருஷ காலமாக ஹரியை நான் மனசில் வருங்காலக் கணவராகக் கற்பனை செய்து வாழ்ந்து கொண்டிருந்தேன். இப்போது வேறு ஒருத்தரை நீங்க எனக்குக் கல்யாணம் செய்து வைக்க முடிவு பண்ணியிருக்கிறீங்க. இந்தக் கல்யாணத்தினால் எனக்கும் சுகம் இருக்காது ஒருத்தரை விரும்பிவிட்டு இன்னொருத்தர் மனைவியாக வாழ்கிறோமேன்னு மனச்சாட்சி என்னை சாகும் வரை உறுத்தும். உண்மையைத்



தெரிஞ்சு கொண்டால் நான் தனக்குத் துரோகம் செய்து விட்டதாக அவர் எண்ணி வெறுப்படையலாம். என்னைச் சதா சந்தேகிக்கலாம். அப்பா, என்னால் நினைச்சுப் பார்க்கக்கூட முடியாத பயங்கரம்...'' மேலே பேச முடியாது விம்மினாள்.

''அந்தக் கோவிந்தனுக்குக் கொடுத்திருக்கும் வாக்கு என்னவாவது?'' கலங்கினார் சிவராமன்.

''அந்தப் பையனைப் பிடிச்சுதான்னு ஒரு வார்த்தை என்னை நீங்க கேட்டீங்களா அப்பா? உங்க வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்துத்தான் அவங்க பெண் பார்க்க வந்தபோது நான் மௌனமாக இருந்தேன். என் இஷ்டத்தைக் கேட்காமலே நீங்க வாக்குக் கொடுத்தது நியாயமா? இப்போ நிலைமை உங்களுக்குப் புரிஞ்சு போச்சு. வேறு ஒருத்தரை விரும்பும் உங்க மகளை அந்த கோவிந்தன் மகனுக்கு—விஷயத்தை மூடி வச்சுக் கட்டிக் கொடுக்க உங்க மனசு இடம் கொடுக்குமா? யோசிச்சுப் பாருங்க. உண்மையைத் தெரிஞ்சு கொண்டா அந்தக் கோவிந்தன் உங்க வீட்டிலே சம்பந்தம் செய்து கொள்ள முன் வருவாரா? அதையும் சிந்திச்சுப் பாருங்க.''

''ராத்திரி பூரா யோசிச்சு என் மண்டையே வெடிக்கிறாப்பல வேதனையிலே வெந்து கொண்டிருக்கிறேன். என்னை ரொம்பக் குழப்பறேம்மா, என்ன செய்வேன்.'' புலம்பினார் சிவராமன்.

''உண்மை நிலையைக் கோவிந்தன் வீட்டவங்ககிட்ட நீங்க நேரிடையாகச் சொல்லிவிடுங்க அப்பா. அதுதான் நியாயம்.''

''இப்போ வலிய வந்தவனையும் விரட்டி விட்டேன். பின்னால் உனக்கு...?''

"நீங்க சரின்னு ஒப்புக்கிறவரை ஹரி மீண்டும் மீண்டும் வெட்கத்தைவிட்டுப் பெண் கேட்க வருவேன்னு என்கிட்ட சொல்லியிருக்கிறார். மறுபடி அவர் கட்டாயம் உங்களை பார்க்க வருவார். ஒப்புதல் கொடுப்பதும் கொடுக்காததும் இனி உங்கள் விருப்பம்...'' மஹிமா அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"அவனுடைய பணம், பதவி, அழகு இவைகளெல்லாம் கண்டு மயங்கிட்டியாம்மா?''

'இல்லேப்பா, இல்லை. அவரை நான் அவருக்காகவேதான் விரும்புகிறேன். அவ்வளவுதான்.''

"அந்த அமெரிக்கப் பெண் விஷயம்...?''

"அது எங்கள் வாழ்க்கையில் ஒரு திருஷ்டிபரிகாரம். அதைப்பற்றி அவர் விவரமாகச் சொன்னார். அவரது விளக்கத்தை நான் ஒப்புக் கொண்டு விட்டேன்.''

அப்பொழுதுதான் சிவராமன் கவனித்தார். வைரங்கள் இழைத்த புலி நகப் பதக்கம் ஒன்று புடவைமீது அவளது நெஞ்சில் தங்கச் சங்கிலியில் ஆடிக் கொண்டிருந்தது. "இதென்னம்மா இது! இந்த நகையை நான் பார்த்ததில்லையே?'' வியப்புடன் வினவினார்.

மஹிமாவின் கன்னங்கள் சிவந்தன. நெஞ்சு படபடத்தது. "அவருடைய கழுத்திலிருந்தது. அவங்க குடும்பச்சொத்து. அதை எனக்குப் பரிசாகக் கொடுத்தார்.'' மென்று விழுங்கினாள்.

"இவ்வளவு நடந்த பிறகு நான் எப்படியம்மா மறுக்க முடியும்? மறுபடி ஹரி வரட்டும். சரின்னு ஒப்புக்கிறேன்'' மெல்லச் சிரித்தார்.



"அப்பா!'' ஆனந்தத்துடன் கூவிய மகள் தன் தந்தை [illegible] கால்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு தன் [illegible]தை அவைமீது பதித்துக் கொண்டாள்.

"இனி நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டியவள். ஏன் [illegible]றே? மகராசியாக நல்லா இரும்மா...'' தழதழத்[illegible] அவர் குரல். கண்களில் பனித்த நீரைச் சமாளிக்க [illegible] இருமினார்.

அதுசமயம் கதவை லேசாகத் தட்டிவிட்டுத் தள்ளித் [illegible] நொண்டு உள்ளே வந்து நின்றார் சேனாபதி. [illegible] பதட்டமாகக் காணப்பட்டார்.

"வாங்கோ. உட்காருங்கோ...'' உபசரித்தார் சிவ[illegible]ன்.

மஹிமா சட்டென்று எழுந்து ஒரு நாற்காலியை [illegible]ப் போட்டாள்.

"[illegible]காரவும் பேசவும் நேரமில்லை. ஒரு முக்கிய [illegible] சொல்லவும் உதவி கேட்கவும்தான் வந்திருக்கி[illegible] ஹரி அய்யாவுக்கு உடம்பு சுகமில்லை. ரொம்ப [illegible] நிலையில் இருக்கிறார். உதவிக்கு வீட்டிலே [illegible]ம் இல்லே... அதனாலே...''

"[illegible] உடம்புக்கு என்ன?'' திகைப்புடன் இருவ[illegible]னர்.

"[illegible]மையான காய்ச்சல். அத்தோட ஒரே பேத்தல். [illegible]மான் அவர்கள் போட்டது போட்டபடி இறைஞ்சு [illegible]ப்பா பார்த்துக் கொண்டு எனக்குஉதவி [illegible]...'' முடிக்காமல் சிவராமன் முகத்தைப் [illegible] பார்த்தார்.

"நான் உடனே போய் அவரைப் பார்க்க... எனக்கு ரொம்பப் பயமாயிருக்குப்பா..." பதறி... அவள்.

"ஞானம்!" மனைவியை அழைத்தார் சிவரா... "மஹிமா ஒருசமயம் பங்களா சாம்பவியில் தங்கு... சந்தர்ப்பம் நேர்ந்தாலும் நேரலாம். எதுக்கும் ... டைய சாமான்களை சட்னு தயார் பண்ணிக் ... ஹரிககு ரொம்ப ஆபத்தாக இருக்காம். சீக்கிரம்" தரவிட்டார்.

"பயப்படாதே. மஹிமாவுக்கு நான் துணை... இருப்பேன். பெற்ற மகளைப் போல அவளைப் ப... மாக நான் பாத்துக்குவேன்...இந்த உதவிக்கு ரொ... நன்றி" சேனாபதி குழைந்தார்.

...ய்ச்சலின் வேகத்திலே அரற்றிக் கொ... படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் ஹரி. டா... வாசுதேவன் மருந்துப் பையுடன் உள்ளே நுழைந்... சேனாபதியும் மஹிமாவும் கவலையுடன் வராந்தா... வெளியே காத்துக் கொண்டிருந்தனர்.

டாக்டரைக் கண்டதும் ஹரி படுக்கையில் எ... உட்கார்ந்தான். "டாக்டர், நீங்க சொன்னது உ... யாகப் போய் விட்டது. இல்லாததைத் தேடிக்கொ... இருந்ததை நான் இழந்துட்டேன். அம்மா என்னை... டுட்டுப் போய் விட்டாங்க. என் மஹிமாவும் ... இல்லைன்னு தீர்மானமாயிட்டது...இனி எனக்கு ... என்ன யோக்கியதை இருக்கு? எதுக்கு வாழணும்? ... ஓங்கோ..." புத்தி கலங்கினவன் போல் அலறின... சிறு பிள்ளை போல் விம்மி அழுதான்.

டாக்டர் வாசுதேவன் மௌனமாக மருந்துப் ... டியைத் திறந்தார். ஊசிக் குழாயில் மருந்தை நி...



...தான் பட்டைமீது ஏற்றிவிட்டுக் ... விட்டுக் கொண்டு அவனை முறைத்து...

"இதெல்லாம் என்ன ஆர்ப்பாட்டம்? இ... பிள்ளையில்லை. மனுஷன்னு வளர்ந்... பொறுப்பைப் புரிஞ்சுக்கப் போறே? ... கோடு ஸ்லீப்..." ஓங்கிஓர் அதட்டல்போ... பதி! இவனைக் கவனிச்சுக்கோங்க. ... நேரத்திலே தூங்கி விடுவான். மூணு ... முழிந்ததும் நான் சொல்கிற மருந்தை ... கொடுங்க. சாயங்காலம் மறுபடி வந்து ... கூறிக் கொண்டே வெளியே வந்த வா... கள் மஹிமாவைக் கண்டு ஆச்சரியத்து... 'உள்ளே போய் கவனிச்சுக்கோ' என்ற ... அவளிடம் ஜாடை காட்டிவிட்டுத் தனக்குள்... வண்ணம் அவர் விரைந்தார்.

கை வளைகளின் மெல்லிய ஓசை ஹரிக்கு வி... ழித்தது. அகலக் கண்களை விழித்துப் பா... மையா கனவா என்ற பிரமை. படுக்... மஹிமா நின்று கொண்டிருந்தாள். "நீயா! உ... வந்திருக்கே...?" கூவிக் கொண்டு ஆவலு... நீட்டி அவள் கைகளைப்பற்றி அருகில் இ...

நெருப்பாக அவனது கரங்கள் சுட்டன. "... சலடிக்குது...அதிகம் பேசக் கூடாது. ... கணும். அப்புறம் டாக்டர் கோபிச்சு... கொண்டபடி அருகிலிருந்த நாற்காலி... அருகே இழுத்துப் போட்டுக் கொண்டு அவ... ள்.

"இனி நீ என்னை விட்டுப் போகக் கூட... போகவும் விடமாட்டேன். ஊஹூம்...

முனகிய ஹரி அவளது கரத்தைப் பற்றித் தன் மார்பின் மீது வைத்துக் கொண்டு மருந்தின் மயக்கத்திலே உறங்கத் தொடங்கினான்.

## 34

அன்று காலை விடியும் முன்பே சேனாபதி புறப்பட்டு விட்டிருந்தார். தமது பரம்பரை சொத்துப் போன்று அந்த வீட்டின் சமையலறை மீது அவருக்கு ஏகபோக உரிமை. வீட்டு எஜமானியே வந்து அலமாரியிலிருக்கும் ஒரு பாத்திரத்தைத்தொட்டு விட்டால்கூட அவர் தவித்துப் போய் விடுவார். தமது ஆட்சி பீடமாகக் கருதிய சமையலறையின் கவனிப்பை அன்று காலை அவர் மஹிமாவிடம் ஒப்படைத்துவிட்டுப்போயிருந்தார் அவருக்கு அன்று காலை அத்தனை முக்கியமான வேலை இருந்தது.

''டாக்டர் சொன்னபடி கொஞ்சம் ஓட்ஸ் கஞ்சி மட்டும் ஹரி அய்யாவுக்கு தயார் பண்ணினால் போதும், மற்றபடி காலை பலகார காரியங்களைக் கவனிக்க நான் பறந்தோடி வந்துவிடுவேன்'' மஹிமாவை எச்சரித்து விட்டு ஆரோக்கியத்துடன் அம்பாஸிடரில் கேளம்பாக்கத்திற்குப் புறப்பட்டுவிட்டிருந்தார்.

வசுமதியம்மாள் வீட்டைவிட்டு வெளியேறி பதினைந்து தினங்களுக்கு மேல் ஆகிவிட்டிருந்தன உக்கிரமான காய்ச்சலில் ஹரி படுத்திருக்கிறார் என்ற செய்தியை இரண்டு முறை அவர் பாலர் இல்லத்திற்கு டெலிபோன் செய்துவிட்டிருந்தார். வசுமதியிடம் நேரில் போனில் பேச அங்கே வாய்ப்பு இருக்கவில்லை போனை எடுத்த சேவகி, செய்தியை வசுமதியிடம் சொல்லிவிடுவதாக இரு முறைகளும் உறுதியாக

வில் வளர்ந்துவிட்டதைக் கண்டு ஆனந்தத்தில் அவளை யும் மீறி ஒருநாள் அவள் பேசிவிட்டாள்.

"சேனாபதி! பார்த்தீங்களா? ஹரி ஊருக்குத் திரும் பறதுக்குள்ளே இது பெரிய மரமாகிப் பூத்துக் குலுங்கப் போகிறது. குழந்தை வந்ததும் கைநிறைய இந்தப் பூவை அள்ளி அபிராமி பாதத்திலே போடும்படி சொல் லப் போகிறேன்—"

தோட்டத்திலே பூத்துக் குலுங்கிய பவள மல்லிகை யைப் பார்த்த போதெல்லாம் அந்த நினைவு—கண்களில். அதனால் கலக்கம்.

இரவு படுக்குமுன் மருந்து டப்பாவை எடுத்துக் கொண்டு அவளது அறைக்குள் செல்வார்.

"மறந்துபோய் சாப்பாட்டு மேஜைமேலே இதை வச்சிட்டு வந்துட்டீங்க..." மருந்து டப்பாவையும் தண்ணீர் டம்ளரையும் அருகிலிருக்கும் முக்காலி மீது பவ்யமாக வைப்பார்.

அவள் முகத்திலே கருணையும் கண்டிப்பும் கலந்த அந்த மர்மமான புன்னகை பட்டும் படாததுமான சிரிப்பு. பெற்ற மகளைப் பார்த்த மாதிரி மனம் நிறைந்து மகிழ்ந்து போய் அவர் நிற்பார்—இப்பொழுது அந்த வேளை நீண்டதொரு துயரமிக்க—கடந்தகால நிகழ்ச்சி களை நினைவுறுத்த நெஞ்சை உறுத்திய—தனிமையான பொழுதாக அர்த்தமற்ற வாழ்க்கையின் ஒரு பகுதியாக வல்லவா போய்விட்டது? அவரால் தாங்கவே முடிய வில்லை. வசுமதியை நேரே கண்டு பேசவேதான் அவர் புறப்பட்டிருந்தார்.

ஆரோக்கியம் வண்டியை வேகமாகச் செலுத்தி பொழுது விடியும் தருவாயில் அவர்கள் கேளம்பாக்



கத்தை வந்தடைந்துவிட்டனர். இல்லத்து வாயிலைக் காவல் புரிந்த கூர்க்கா கேட்டுக்களைத் திறந்து காருக்கு வழி விட்டான். நடை பாதையில் விரைந்த கார் ஒரு பெரிய கட்டிடத்தின் முன் போய் நின்றது. விடிவதற்குள் ஆசிரமம் விழித்துக் கொண்டு விட்டிருந்தது. இங்கு மங்கும் சேவகிகளின் நடமாட்டம். சிரிப்பும் கும்மாளமு மாகக் குழந்தைகளின் ஓட்டம். வேலையாட்களிடம் பரபரப்பு.

"வசுமதி அம்மாளைப் பார்க்க வந்திருக்கிறேன். மிகவும் முக்கியமான விஷயம்." சேவகி ஒருத்தியிடம் சொன்னார் அவர்.

"இப்படி வாங்க — அழைச்சிட்டுப் போறேன்." அவள் விரைந்தாள்.

இன்னும் புதிய கட்டிடத்தின் சில பகுதிகள் முடிவு பெறவில்லை. கல், மண் குவியல்களிடையே புகுந்து அவர் நடந்தார். தோட்டத்தின் பின்னால் வெகு தொலைவில் வரிசையாகக் கட்டப்பட்டிருந்த ஓட்டுக் கட்டிடத்தின் ஒரு பக்கம் வந்ததும் அவள் நின்றாள். "இந்த அறையில்தான் அவங்க இருக்கிறாங்க. இப்போ ஸ்நானத்திற்குப் போயிருக்காங்க. வராந்தாவிலே உட் காருங்க—"

"இங்கே வென்னீர் முதலிய வசதிகள் இருக் கல்லவா?..."

சேவகி பற்கள் அனைத்தையும் காட்டிச் சிரித்தாள். "உடம்புக்கு முடியாம இருக்கிற குழந்தைகளுக்குத்தான் வெந்நீர். மத்த எல்லாரும் பச்சைத் தண்ணியில்தான் குளிக்கணும்..."

"அழகான பங்களா—வசதியான குளியலறை இதை யெல்லாம் விட்டுவிட்டு வசுமதியம்மாவுக்கு ஏன் இந்தத் தண்டனை? மார்கழி மாதக் குளிரில் தினம் ஸ்நானப் பழக்கமுள்ள இவங்க...இங்கே வந்து..." அதற்கு மேல் அவரால் சிந்திக்க முடியவில்லை. மெள்ள அறையை எட்டிப் பார்த்தார். தூக்கிவாரிப் போட்டது. ஒரு மர பெஞ்சி. அதன் மேல் ஒரு தலையணை. அலமாரித் தட்டில் சில புத்தகங்கள். ஒரு சாப்பாட்டுத் தட்டு, கண் ணாடி டம்ளர், மூலையில் ஒரு சிறு பெட்டி...

லட்சக்கணக்கில் மதிப்பிடும் சொத்தின் எஜமானிக்கு ஏனிந்த வறுமைக் கோலம்? அவரது வயிறு எரிந்தது. கண்ணீர் இமைகளை நனைத்தது. அது சமயம் காலடி சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். ஸ்நானம் செய்து கூந்தல் இடைவரை புரள, கைத்தறி வெள்ளை நூல் சேலையணிந்து, துடைத்து விட்ட கோயில் சிலைபோல் மேனியில் நகை ஏதுமின்றி வசுமதி வந்து கொண்டிருந் தாள்.

"அம்மா..." தழுதழுத்தது குரல். கைகூப்பி வணங் கினார்.

"ஊருக்குப் போவதைச் சொல்லிக்கொண்டு போக வந்தீங்களா?" விரக்தியாக விசாரித்தாள்.

"உக்ரமான காய்ச்சலில் ஹரி அய்யா உடம்புக்கு முடியாமப் படுத்துக்கிடக்கிறார். சதா உங்க நினைவு புலம்பிக்கிட்டு இருக்கிறார். இந்த சமயம் அவரை அப்படியே விட்டுட்டு எப்படியம்மா போக முடியும்? உங்க வீட்டு உப்பைத் தின்ன கட்டையாச்சே இது?"

வசுமதி மௌனமாக அவரைப் பார்த்தாள்.



"நீங்க இல்லாத வீடு வீடாக இல்லையம்மா ரெண்டு தடவை போன் பண்ணினேன்."

"தெரியும்."

"அப்ப கூட மனசைக் கல்லாக்கிட்டு நீங்க இப்படிப் பாராமுகமாக இருக்கிறது தர்மமா? அம்மா! ஹரி குழந்தை. ரெண்டும் கெட்டான் வயசு. தெரியாம ஏதோ கோணாமாணான்னு நடந்து கிட்டார். உங்க மனசு கடலைப்போல விசாலமானது. மறந்து மன்னிச்சு வந் துடுங்கோ. கார் கூடக் கொண்டு வந்திருக்கிறேன்..." கிழவர் பேச முடியாது குமுறி அழுதார்.

அசைவின்றிக் கல்லாக நின்றாள் வசுமதி.

"சேனாபதி! பந்தத்தையெல்லாம் உதறிவிட்டபின் மனசில் எத்தனை நிம்மதியும் ஆனந்தமும்ஏற்படுகின்றன தெரியுமா? இந்த ரகசியத்தைப் புரிஞ்சு கொண்டு நான் நிம்மதியாக இங்கே இருக்கிறேன். நீர் வந்து ஏன் இப்போ குட்டையைக் குழப்புகிறீர்? பங்களா சாம்பவிக் கும் எனக்கும் இனி சம்பந்தமே கிடையாது." உறுதி யாகச் சொல்லி விட்டு அவள் உள்ளே சென்றுவிட்டாள்.

கஞ்சிப் பாத்திரத்தை மரத்தட்டில் வைத்துக் கொண்டு மஹிமா மேலே சென்றாள். காய்ச்சல் நின்று ஹரி இப்போது ஓரளவு குணமடைந்துவிட்டிருந்தான். குளித்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு படுக்கை மீது சாய்ந்து கொண்டிருந்தான். மரத்தட்டை அவன் அருகே கொண்டு வைத்தாள் மஹிமா.

"இப்படி உட்கார்." நாற்காலி ஒன்றைக் காட்டி னான் அவன். காய்ச்சல் நின்று உடம்பு சிறிது குணமாகி

விட்ட போதிலும் அவன் அடிக்கடி வசுமதியைப் பற்றி ஏதாவது பேசிப் புலம்பிக் கொண்டிருப்பது நிற்க வில்லை,

"ரெக்ஸியைப் பற்றி உனக்குத் தெரியுமா? ஒரு சமயம் நாங்கள் விடுமுறைக்குக் கோடைக்குப் போன போது வழியில் ஒரு சாக்கடை ஓரத்திலே அடிப்பட்டு, செத்துவிடும் நிலையில் கிடந்தது ஒரு நாய்க்குட்டி. காரை நிறுத்தச் சொல்லி அம்மா அதை எடுத்துக் கொண்டு வந்தாங்க சிகிச்சை செய்து அன்பாக வளர்த் தாங்க. அதுதான் எங்கள் ரெக்ஸி. அதைப் போலவே குழந்தைப் பருவத்திலே சாக்கடைக்கு ஒப்பான ஒரு இடத்திலே அழுக்கும் சிரங்கும் புண்களுமாகக் கிடந் தேன். என்னை தூக்கி வந்து அன்புகாட்டி ஆசையோடு வளர்த்தாங்க—எங்க இரண்டு பேருக்குள் எத்தனை வித்தியாசம்! அனாதையான என்னை வளர்த்து ஆளாக் கின அம்மாவை, அனாதையாக்கி ஆசிரமத்துக்கு அனுப்பிவிட்டேஞ். பங்களா வாழ்வை உதறிவிட்டு ரெக்ஸி அம்மாவுடன் ஆசிரமத்துக்குப் போய் விட்டது. நன்றிகெட்ட இந்த ஹரியைவிட ரெக்ஸி எத்தனையோ பங்கு உசந்து விட்டது. மஹிமா, நான் பெரிய பாவி. எனக்கு மன்னிப்பு ஏது?' விம்மி அழுது கொண்டு அவளது தோளைக் கட்டிக்தொண்டான்.

மஹிமா தன் புடவைத் தலைப்பால் அவனது கண் ணீரைத் துடைத்தாள். "சிறு பிள்ளைபோல் மனசைத் தளரவிடாதீங்க. நாம் ரெண்டு பேரும் அவங்களை நேரில் போய்ப் பார்த்து, நமக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்ற சந்தோஷச் செய்தியைச் சொல்லி மனசை மாற்றி அழைச்சிட்டு வந்துவிடுவோம். கவலைப் படாதீங்க" பலபல சொல்லித் தேற்றினாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை இருவரும் புறப்பட் டனர். காலைவேளை. பூஜையை முடித்துக்கொண்டு



பத்திரிகையைப் புரட்டியபடி அறைக்குள்ளே வசுமதி உட்கார்ந்திருந்தாள். பொங்கிக் கொண்டு வந்த பல் வேறு உணர்வுகள் உள்ளத்தைக் குலுக்க, "அம்மா!" என்று கூவியபடி ஹரி அவள் கால்களில் விழுந்து விசும்பி அழுதாள். கண்களில் பொங்கிய கண்ணீரைக் கட்டுப் படுத்திக் கொண்டு மஹிமாவும் விழுந்து கும்பிட்டாள்.

வசுமதி எழுந்து நின்றாள். அவள் முகத்திலே எந்த விதமான சலனமும் இருக்கவில்லை.

கண்களைத் துடைத்துக் கொண்டு ஹரியும் எழுந்து நின்றான். "பங்களா, பதவி, பணம் இவை எதுவுமே எனக்கு வேண்டாம். நீங்கதான் வேணும். இதை நான் புரிஞ்சு கொண்டு விட்டேன். இரண்டுங்கெட்டானாக இருந்த நான் இப்போ பொறுப்பு நிறைஞ்ச மனிதனாக மாறிவிட்டேன். மஹிமாவைக் கல்யாணம் செய்து கொள்ள அவள் அப்பாவிடம் ஒப்புதலும் வாங்கி விட்டேன். நீங்க வீட்டுக்கு வந்து எங்கள் திருமணத்தை நிறைவேற்றி வச்சு எங்களுக்கு வழிகாட்டியாக எங்களு டன் இருக்கணும்...எல்லாத்தையும் மறந்து இந்த ஹரியை மன்னிக்கணும் அம்மா ப்ளீஸ்..." கைகூப்பிக் கெஞ்சினான்.

"அம்மா! உங்கள் மருமகள் என்கிற நிலையில் என் கடமைகளை உங்களுக்கும் செய்ய எனக்கு ஒரு சந்தர்ப் பம் கொடுங்கம்மா...எனக்காக ஹரியை மன்னிச்சிடுங்க" மஹிமா துயரத்துடன் கெஞ்சினாள்.

வசுமதி மெல்லப் பேசினாள் :

"எனக்கு யார் மேலும் கோபமில்லை, ஹரிக்கு எல்லா வசதிகளும் இருக்கு. அன்பான மனைவியாக நீ

விரைவில் அருகில் இருக்கப் போகிறாய். இனி அவனுக்கு நான் தேவையில்லை! இந்த ஆசிரமத்துக் குழந்தைக ளுக்கு வசதிகள் இல்லை. அன்பு காட்ட யாருமில்லை. அதனால் இவங்களுக்கு என்னால் ஆனதைச் செய்து கொண்டு கடைசி காலம்வரை இங்கேயே இருப்பேன்.''

''இப்படி ஏம்மா உங்களுக்கு ஒரு சிறைவாசம்?''

''சிறைவாசமில்லை. இது துறவு நிலை. உனக்குப் புரியாது.''

''எங்கள் திருமணத்தை நடத்திவைக்கக்கூட வர மாட்டீங்களா?''

''தேவையில்லை, சிவராமன்—மற்ற உறவினர், நண் பர்கள் எல்லாரும் கூடிச் சிறப்பாக நடத்துவார்கள். உங் களுக்கு என் மனம் நிறைந்த ஆசிகள்.''

''அம்மா! இதுதான் உங்கள் முடிவான தீர்மானமா? என் தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்து ஒரு நல்ல பிள்ளையாக என் கடமைகளைச் செய்ய எனக்கு ஒரு சந் தர்ப்பம் கொடுக்க மாட்டீங்களா? அந்தளை பெரிய பாவியா நான்?''

ஒரு கணம் வசுமதி அவனை உற்றுப் பார்த்தாள்.

''ஒரு சந்தர்ப்பம் தருகிறேன். என் மரணத்திற்குப் பிறகு, என் இறுதி பயணத்தின்போது உனக்குப் பூரண சம்மதம் இருந்தால்—என் மகன் என்று ஊர் அறிய நெருப்புச் சட்டியைச் சுமந்து கொண்டு முன்னால் நடக் கும் உரிமையை உனக்குக் கொடுக்கும்படி ஆசிரமத்தில் ஏற்பாடு செய்துவிடுகிறேன். அதற்கு மனமில்லாவிட் டால் ஆசிரமத்துக் குழந்தைகளே...''



''அம்மா!...'' என்று அலறினான் ஹரி. மாலையாக கண்ணீர் வழிந்தது மஹிமா அவனது கரத்தை ஆதர வுடன் பற்றிக் கொண்டாள். கல்லாக நின்ற வசுமதி ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள்.

'நீங்கள் போகலாம்' என்பது போலிருந்தது அந்தச் செய்கை.

''குப்பையில் கிடந்த என்னை எடுத்து வளர்த்து வாழ்வு கொடுத்தீங்க. நன்றி அம்மா...இந்தக் கடனை அடுத்த ஜன்மத்திலேயாவது அடைச்சுடுவேன் அம்மா...'' அரற்றியபடி மஹிமாவின் கரத்தை ஆதர வுடன் பற்றிக் கொண்டு துயரத்துடன் ஹரி வெளியே நடந்தான்.

ஆசிரமத்துக் குழந்தைகள் காலைப் பிரார்த்தனைப் பாடல்களை உரத்துப் பாடிக் கொண்டிருந்தனர்.

''மற்றார் யாருளரோ? உயிர் கொண்டு போகும் பொழுது குற்றாலத்துறை கூத்தனல்லாது நமக்குற்றார் யாருளரோ?''

தன் உள்ளத்து எதிரொலி போலிருந்த அந்தப் பாடலைக் கேட்டுக் கொண்டு ஆடாது அசையாது சிலை போல நின்று கொண்டிருந்தாள் வசுமதி.

முற்றும்